# கலைமலர்
# KALAI MALAR



மலர் 44

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை
## KOPAY TEACHERS' COLLEGE
2012 / 2014

T. சிபாராகிணி.

உ
சிவமயம்

# கலைமலர்
# Kalaimalar

## 2012 - 2014

## 44 ஆவது மலர்*

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை
## KOPAY TEACHERS' COLLEGE

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கலைமலர் (மலர் : 44) |
| ஆண்டு | : | 2014 |
| இதழாசிரியர்கள் | : | செ. மோகநாதன்<br>ச. மோகன்ராஜ் |
| பதிப்பாசிரியர்கள் | : | ச. லலீசன்<br>அ. பௌநந்தி |
| வண்ணப்படங்கள் | : | ப. சசிவண்ணன் |
| வெளியீடு | : | கலைமலர்க்குழு (2012 /2014)<br>கோப்பாய் ஆசிரிய கலாசாலை,<br>கோப்பாய். |
| தொலைபேசி இல | : | 021 223 0323 |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>இல. 681, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.<br>தொலைபேசி இல: 021 222 2717 |
| பிரதிகள் | : | 600 |
| பக்கங்கள் | : | 234 |


கலைமலர் சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்.

– இதழாசிரியர்கள்

# மலரின் இதழ்கள்


| | | |
|---|---|---|
| 01. | கலாசாலைக் கீதம் | v |
| 02. | தமிழ்த்தெய்வ வணக்கம் | vi |
| 03. | தமிழ்மொழி வாழ்த்து | vii |
| 04. | ஆசிரியர் கீதம் | viii |
| 05. | ஆசிச்செய்திகள் | ix - xiii |
| | கலாசாலை அதிபர் | |
| | பிரதம ஆணையாளர் | |
| | ஆசிரிய கல்வி நிர்வாகப் பணிப்பாளர் | |
| 06. | பதிப்புரை | xiv |
| 07. | இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து | xvi |
| 09. | சேவை நயப்பு | |
| 10. | கலாசாலை விரிவுரையாளர்களின் ஆக்கங்கள் | 01 – 43 |
| 11. | ஆசிரிய மாணவர்களின் ஆக்கங்கள் | 45 –163 |
| 12. | மன்ற அறிக்கைகள் | 165 – 187 |
| 13. | உறவுகள் மேம்பட | 189 – 210 |



# வலம்புரி அன்னாய் வாழி!

புன்னகை முகமும்

பூத்துப் பொலிந்திடும் அன்பும்

யார்க்கும் கன்னலாய்க் கதைகள் பேசி

களிப்புடன் வழிகள் காட்டும்

கண்ணியன் கணபதிப்பிள்ளை

கவின் வலம்புரிச்சங்கு அன்னான்

அன்பினுக்கு அடிமையானோம்

ஆக்கினோம்

"கலைமலர்" அவர்க்கே!

# கலாசாலைக் கீதம்

**இராகம்: மோகனம்** **தாளம் : ஆதி**

## பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் அரசினர்
ஆசிரிய கலாசாலை வாழ்க!

## அனுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க
ஆசிரிய மாணவர் வாழ்க!

## சரணங்கள்

அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம் (யாழ்)

ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்
ஓரிரண்டாண்டாய் ஓர்ந்திடும் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம் (யாழ்)

தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியில் காப்போம் எம்மானம்
எண்டிசை புகழவெங் கலாசாலை வாழ
இயன்றநற் பணிகளைப் புரிவோம் (யாழ்)

அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனால் என்றும் வாழ்க! (யாழ்)

ஆக்கியவர் : பண்டிதர் சு. இராசையா

# தமிழ்த் தெய்வ வணக்கம்




நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும்
உன்னுதரத்துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

பேராசிரியர் 'மனோன்மணீயம்'
பெ. சுந்தரம்பிள்ளை

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ் கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

– மகாகவி சுப்பிரமணியபாரதியார் –

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்திற் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையிற் சேர்க்கும் பணி எமதே. (முத்து)


அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாய் - அவன்
தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம். (முத்து)

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவை அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம். (முத்து)

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம். (முத்து)

ஆக்கியோன்
பொன். ஸ்ரீவாமதேவன்

# அதிபரின் ஆசிச் செய்தி



திரு. வே. கா. கணபதிப்பிள்ளை
அதிபர்

சமகால - எதிர்கால சவால்களுக்கு எம் மாணவச் செல்வங்கள் முகங்கொடுக்கக் கூடிய தேர்ச்சிகளைப்பெறக் கல்வி முறையில் விரைவான அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அக்கல்வியே வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் முதன்மைக் கருவியாகவும் உள்ளது. மாணவரிடம் இருக்கின்ற எல்லாத் திறன்களையும் ஆற்றல்களையும் இசைந்து வளர்ச்சி பெறச்செய்வது கல்வியே ஆகும். இன்றைய அறிவு மைய - தகவல் மைய நவீன சமுதாயத்தில் கல்வியே பிரதான, முதன்மை வளமாகவும் செல்வமாகவும் விளங்குகின்றது. அத்தகைய கல்விச் செல்வத்தை ஆசிரிய மாணவருக்கு வழங்குகின்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வருடந்தோறும் வெளிவருகின்ற ''கலைமலர்'' சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். பல திசைகளிலிருந்து வரும் அருவிகள் கடலில் ஒருங்கே சங்கமிப்பது போல, நாட்டின் நாலா புறங்களில் இருந்தும் இங்கே ஒருங்கு சேரும் ஆசிரிய மாணவர்களாலும் கல்வியாளர்களாலும் ஆக்கப்பட்டுள்ள ஆக்கங்கள் கொண்ட இச்சஞ்சிகையின் மகத்துவத்தைச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பது இல்லை.

உலகளாவிய ரீதியில் இன்று புதிய கல்வியியற் சிந்தனைகளும், கல்விச் சீர்திருத்தங்களும் வெளிவந்து


கொண்டிருக்கும் நிலையில் நாமும் எமக்கு பொருத்தமானவற்றை உள்வாங்க அப்புதிய போக்குடன் செல்வது காலத்தின் தேவையாக உள்ளது. எமது நாட்டின் குறிப்பாக எமது சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் திட்டமிட்ட முறையில் கல்விச் செயற்பாடுகள் அமைவது அவசியம். **"வாழக்கல்மின்"** என்ற மகுட வாசகத்தைத் தாங்கி நவீன கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ப ஆசிரியவள மேம்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வாண்மைமிக்க ஆசிரியர்களை உருவாக்கி எமது பிரதேசத்தின் ஆசிரியத் தேவைகளை எமது கலாசாலை நிறைவு செய்து வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

நீண்ட கால பாரம்பரிய மிக்க இக்கலாசாலை கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுகளில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான ஆசிரிய கல்விச் சூழலை அமைத்து சிறந்த நல்லாசிரியர்களை உருவாக்கி வருகின்றது. இதற்காக நாம் பட்ட துன்பங்கள், அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் ஏராளம். இது தவிர இக்கல்வியாண்டு 14 கல்வி நெறிகளை உள்ளடக்கியதாக விளங்குவது பெருமைக்குரியது. மேலும் சம காலத்தில் பலாலி ஆசிரிய கலாசாலை பயிற்சி நெறியினையும் எமது கலாசாலையுடன் இணைத்து ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. போதியளவான பௌதிகவள வசதியோ ஆளணிவள வசதியோ உபகரணங்களோ இல்லாத நிலையில் பலசோதனைகள், வேதனைகளுக்கு முகங்கொடுத்தபோதும் "அச்சமென்பது இல்லை" என்று தலை நிமிர்ந்து நின்று பிரகாசமான எதிர்காலத்திற்காக இக்கலாசாலை இன்றுவரை போராடிக் கொண்டிருக்கின்றது. இத்தகைய போராட்டங்களை, சவால்களை ஏற்று பல கருமங்களில் என்னுடன் தோளோடுதோள்நின்று உழைத்தவர்கள் பெருமைக்குரிய பிரதி அதிபர், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஆளணியினர் ஆவர். குறிப்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு, ஆசிரிய கல்வி நிர்வாகப்பிரிவினர் காலத்துக்குக் காலம் கலாசாலைப் பணிக்காகப் பெருமளவு ஒத்துழைப்பினை எமக்குத் தந்துள்ளனர். இவர்கள் எல்லோருக்கும் அதிபர் என்ற வகையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இக்கலாசாலையில் 11ஆவது அதிபராகப் பதவியேற்று இன்றுவரை சேவையாற்றி வரும் என் தலைமையின் கீழ் இயங்குகின்ற இக்கல்விசார் சமூகத்தின் கூட்டிணைவு, அர்ப்பணிப்பு, ஈடுபாடு, அக்கறை, அவதானம் போன்றவையே இக்கலாசாலை இன்றுவரை சமூகத்தின் மத்தியில் தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணமாக விளங்குகின்றன.

44ஆவது இதழாக வருகின்ற கலைமலர் சிந்தனைக்கு விருந்தாகும் பல கட்டுரைகளைத் தன்னகத்தே தாங்கி வருவதுடன் ஆசிரிய மாணவர்களின் எழுத்தாற்றலுக்குக் களமாக அமைந்து கலாசாலையின் வரலாற்று ஆவணமாகவும் திகழ்கின்றது. இந்தச் சஞ்சிகை வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டு உழைத்த அனைத்து விரிவுரையாளர்களும் பாராட்டுக்குரியவர்கள். அவர்களின் பணி என்றென்றும் தொடரவும் சிறந்து விளங்கவும் இறையருள் துணை நிற்க வாழ்த்தி அமைகின்றேன்.

# Message from The Chief Commissioner



**Col. L.M.D. Dharmasena**
*Chief Commissioner*
*Teacher Education Administration,*
*Ministry of Education,*
*Isurupaya.*

I consider it a privilege to send this message of felicitation for "Kalai Malar", a Annual Magazine which is published by the community of Teachers' College, Kopay. It is an excellent effort academic carrier.

The Teachers College of Kopay has a long heredity in field of teacher Education. It was commenced in 1923 and the land was donated by late Sir Pon. Ramanathan. At present there are 459 students on roll and 14 courses are conducted.

The responsibility in moldings teachers depends on a good administration of the Principal Mr. V. K. Kanapathipillai is one such Principal who aims at the creative talents among trainees and guide them to achieve their goal in curricular and co - curricular activities. I congratulate the Principal, Lecturers and the teachers trainees and specially the Editor for this valuable creation. I wish you all success in the noble profession as teachers.

# ஆசிரிய கல்வி நிர்வாகப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

**திருமதி N.F.M. ஹரிஜா**
ஆசிரிய கல்வி நிர்வாகப் பணிப்பாளர்,
கல்வி அமைச்சு - இசுருபாய.

*கோப்பாய் ஆசிரிய கலாசாலை இலங்கையின் மூத்த முன்னணி ஆசிரிய கலாசாலைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. நாடு முழுவதிலும் உள்ள ஆசிரிய கலாசாலைகளில் 2012 - 2014 கல்வியாண்டில் ஆசிரிய மாணவர்கள் கற்கையை மேற்கொண்டு நிறைவுக் கட்டத்தை நெருங்கியுள்ளனர். இவர்களுள் 457 ஆசிரிய மாணவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குரியவர்கள் என்பதில் இருந்து இக் கலாசாலையின் முக்கியத்துவம் நன்கு புலப்படுகின்றது.*

*இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையானோர் பாடசாலைக் கலாசாரத்துள் உள்வாங்கப் பட்டனர். இந்நிலையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதன் தேவையை உணர்ந்து பல கலாசாலைகள் உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணச் சூழலில் மிசனறிமாரின் செல்வாக்கினால் பல கலாசாலைகள் உருவாக்கப்பட்ட நிலையில் 1923 இல் சேர் பொன்.இராமநாதன் வழங்கிய காணியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை உருவாக்கப்பட்டது. இத்தகைய பாரம்பரியச் செல்வாக்கிற்கு உட்பட்ட*

இக்கலாசாலை **"கலைமலர்"** என்ற பெயரில் தனது 44 ஆவது மலரை வெளிக்கொணர்வது பாராட்டத்தக்கது.

மாறிவரும் உலகிற்கு முகங்கொடுக்கவல்ல கல்வியை வழங்குவது இன்றுள்ள ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். இதற்கேற்ப ஆசிரியர்களைத் தயார் செய்து அனுப்புவது ஆசிரியர் கலாசாலைகளின் பாரிய பொறுப்பாகும். எமது கலாசாலைகள் வளப்பற்றாக்குறைகளுடன் தமக்குரிய பணிகளை இயன்றவரை மேற்கொண்டு வருகின்றன.


நடத்தைசார் வெளிப்பாட்டைக் காட்டக்கூடிய பிரதான சாதனம் மொழியாகும். மொழியைக் கையாண்டு பல்வேறு துறைசார்ந்த ஆக்கங்களை "கலைமலர்" வெளிக் கொணர்கின்றது. இதன் வெளியீட்டுக்கு வழிகாட்டும் அதிபரையும் பதிப்பாசிரி யர்களையும் மாணவ இதழாசிரியர்களையும் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

இக்கலாசாலையின் அதிபர் திரு.வே.கா.கணபதிப்பிள்ளை ஆசிரிய கல்வித் துறையில் நீண்ட கால அனுபவம் மிக்கவர். அகவை அறுபதை எய்தும் நிலையில் இருக்கும் அவரது ஆளுமையும் அனுபவமும் கலாசாலையின் பல்வேறு செயற்பாடுகளின் ஊடாகவும் வெளிப்பட்டு நிற்கின்றன.


அத்துடன் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்கள் அர்ப்பணிப்புடன் தமது கடமைகளைச் செவ்வனே ஆற்றும் திறனுடையவர்கள். இவர்களது செவ்விய வழிகாட்டலில் ஆசிரிய மாணவர்கள் தமது கல்வியைப் பெற்றுள்ளனர். இதன் பிரதிபலிப்பு எதிர்காலக் கல்வியில் கணிசமான உயர்ச்சியைக் காட்டும் என எதிர்பார்க்கிறேன்.

புதுமணம் கமழும் கலைமலரின் வரவு இனிதே அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். புத்தெழுச்சியோடு பாடசாலைகளை நோக்கிச் செல்லும் ஆசிரிய தீபங்கள் இனிதே ஒளி வீசிப் பிரகாசிக்க வாழ்த்துகின்றேன்.

# பதிப்புரை



ச. லலீசன்



அ. பௌநந்தி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வெளியீடான "கலைமலர்" 44ஆவது இதழாக மலர்கின்றமை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இம்மலர் 2012-2014 கல்வியாண்டு மாணவர்களுடைய கற்கைக் காலத்தில் வெளிவருவது குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரிய மாணவர்கள், வாண்மைத்துவம் தொடர்பான மற்றும் பாடவிதானம் தொடர்பான தேர்ச்சிகளில் மட்டுமின்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஆற்றலும் ஆளுமையும் மிக்கவர்களாகத் திகழவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அப்போதுதான் மாறிவரும் கல்வியுலகின் சவால் களை எதிர்கொண்டு ஆளுமைமிக்க மாணவர் சமுதா யத்தைக் கட்டியெழுப்புவதற்கு காத்திரமான தமது பங்களிப்பை வழங்கமுடியும். அத்தோடு ஆசிரிய உலகில் தமது இருப்பையும் அடையாளப் படுத்துதல் சாத்தியமாகும்.

ஆசிரியர்கள் தேடல் மிக்கவர்களாகவும் ஆக்க சிந்தனை உடையவர்களாகவும் விளங்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் தமது அறிவை இற்றைப்

படுத்திக்கொள்ள முடியும் என்பதோடு அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான தளமும் வாய்ப்பும் விரிவடையும். வகுப்பறைகளில் கையெழுத்துச் சஞ்சிகையாக்கம், பாடசாலைகளில் சஞ்சிகை வெளியீடுகள் என்பன இன்று பலநிலை களிலும் நடைபெற்று வருகின்றன. அவற்றை முன்வந்து பொறுப்பேற்று வழிநடாத்தக் கூடிய ஆசிரியர்களாக நமது கலாசாலையின் ஆசிரிய மாணவர்களும் திகழ்வதற்கு வேண்டிய ஆளுமையை வளர்த்தெடுக்கும் வகையில் வழிப்படுத்தப்பட்டுள்ளார்கள். சஞ்சிகை வெளியீடு தொடர்பாக அனைத்து நிலைகளிலும் செயற்படுவதற்கான அனுபவங்கள் வழங்கப்பட்டு புடமிடப்பட்டுள்ளார்கள்.

ஆசிரிய மாணவர்களின் ஆக்கங்களையும் நமது கலாசாலை விரிவுரையாளர்களின் ஆக்கங்களையும் தாங்கியதாக இவ்விதழ் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்றன கலைமலரில் உள்ளடக்கப் பட்டுள்ளன. இவ்விதழை வாசிக்கின்றபோது இவர்களின் படைப்பாளுமையைப் புரிந்துகொள்ள முடியும். அத்தோடு ஆசிரிய மாணவர்களுக்கு தன்னம்பிக்கையைக் கொடுத்து தொடர்ந்து எழுதுவதற்கான ஊக்கத்தையும் வழங்கும் என நம்பலாம்.

ஆக்கங்களை எழுதுவது மட்டுமின்றி ஆரம்பநிலை ஒழுங்குகளைத் திட்டமிடுதல், ஆக்கங்களைப் பெற்றுக் கொள்ளுதல், ஒழுங்குபடுத்துதல், நிதி மூலங்களைத் தேடுதல், அச்சுப் பதிப்புத் தொடர்பான வழிமுறைகளை முன்னெடுத்தல், சஞ்சிகை வெளி யீட்டை ஒழுங்குபடுத்துதல் எனப் பல அனுபவங்கள் ஆசிரிய மாணவர்களுக்குக் கிடைத்துள்ளன.

எமது கலாசாலையின் இருப்பையும் தனித்துவத்தையும் அடையாளப்படுத்தும் வகையில் "கலைமலர்" அமையும் என்றே நம்புகின்றோம். கலைமலரின் முகிழ்ப்பில் கரம்பற்றிய அதிபர், பிரதிஅதிபர், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஆளணியினர், ஆசிரிய மாணவர்கள் ஆகியோருக்கு எமது நன்றி. கலைமலர் வெளியீட்டிற்கு ஆதரவு நல்கும் வகையில் விளம்பரங்களைத் தந்துதவிய நல்லுள்ளங்களுக்கும் சஞ்சிகையை அழகுற அச்சமைத்த கரிகணன் தனியார் நிறுவனத்தினருக்கும் எமது நன்றி.

# இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து...



செ. மோகநாதன்



ச. மோகன்ராஜ்

உலக இயங்கு தளத்தின் இயக்கப் பொருள்கள் அனைத்தும் தம் நிலைகளைப் பதித்தே சென்று கொண்டிருக்கின்றன. பதிவுகள், இலக்கியங்கள் எமது பதிவுகளை எமக்குள் ஏற்றிவிடுகின்றன. அந்த வகையில் எமது கலாசாலையும் தனது பதிவுகளை **"கலைமலர்"** ஊடாகத் தாங்கி வருகின்றது. அது இம்முறை 44ஆவது இதழாய் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது கலாசாலை பாரம்பரியமானது, பல விதைகளை விருட்சங்களாக்கி நிலையாய் நின்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. தன் தார்மீகக் கடமைக் குள் இம்மியும் விலகாமல் ஆற்றும் சேவையின் சான்றே இவ்விதழ். இலங்கைத் தீபகற்பத்தின், குறிப்பாக வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல் மாகாணங் களைச் சேர்ந்த 404 ஆசிரிய மாணவர்கள் முகிழ்த்துள் ளார்கள். இது ஒரு கனதியான சக்தியாகவும், உறவுப் பாலமாகவும் உள்ளது. கல்லூரி வாழ்க்கையை சிலர் இரண்டு வருட கற்கை பீடமாக மாத்திரம் கொள்ளும் நிலையே பொதுவாக உண்டு. ஆனால் பல்கலை, கலாசார, பண்பாட்டினைப் பரிமாற்றும் தளமாகவும்,

ஆளுமைப் பயணத்தின் படிக்கட்டாகவும் உறையும் இடம் கலாசாலை என்றால் அது மிகையாகாது.


எமது கலாசாலை அதிபர் கல்விச் செயற்பாடுகளில் மாத்திரமன்றி எமக்குள் ஆழ்ந்து கிடக்கும் திறன்களைத் தூண்டியும், எம் துலங்கல்களைப் பாராட்டியும் ஊக்கமளிப்பவர். உப அதிபர் அந்நிலையில் சிறப்பான ஆற்றல்களுடன் எம்மை வழிநடத்துபவர். அதேபோல் எம் மதிப்புக்குரிய விரிவுரையாளர்களும் எம் அசைவு களுக்கு எம்முடன் நின்று புடம் போடுபவர்கள். எனவே அத்தகைய அளப்பரிய சேவையை "கலைமலர்" இதழ் வெளியீட்டிற்கும் நல்கியுள்ளார்கள். குறிப்பாக எமது ஆசிரிய மாணவர்களின் ஆக்கங்களைச் சரியாக தெரிவுகளுக்குட்படுத்தியும், ஆற்றுப்படுத்தியும் உள்ளார்கள்.

எமது இவ் இதழின் பதிப்பாசிரியர்களான விரிவுரையாளர் திரு.ச.லலீசன் அவர்களும், விரிவுரையாளர் திரு. அ.பௌநந்தி அவர்களும் எம்மைச் சிறப்பாக வழிநடத்தியுள்ளார்கள். இதழ் ஒன்றை வெளியிடும்போது ஆக்கங்களைத் திரட்டுதல், தெரிவு செய்தல் உட்பட இதழ் வடிவமைப்பின்போது ஏற்படும் இடர்களின்போது எமை அரவணைத்து பதிப்பகத்தாருடன் சிறந்த உறவினையும் ஏற்படுத்தி இவ்வெற்றிக்குப் பாரிய பங்களிப்பினை நல்கியுள்ளார்கள். அவர்களுக்கு எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறான கூட்டிணைப்பின் வடிவமான "கலைமலர்" இதழின் இதழாசிரி யர்களாக இருப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். மேலும் "கலைமலர்" குழுவினருக்கும், உதவி நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளையும் தெரி வித்துக் கொள்கின்றோம்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நீண்ட பெருந்தூண் திரு. நடராசா சுப்பிரமணியம்

திரு.வே.கா. கணபதிப்பிள்ளை
அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



*05.03.1975* இல் நாட்சம்பள அடிப்படையில் இணைந்து கொண்டு *12.06.1979*இல் நிரந்தர நியமனம் பெற்று இக்கலாசாலையின் கல்விசாராப் பதவியணியில் இணைந்து கொண்ட திரு. நடராசா சுப்பிரமணியம் *30.06.2014*இல் தமது 35ஆண்டுகாலம் ஆற்றிய அரசசேவை யிலிருந்து ஓய்வு பெறுவது மிகுந்த வருத்தமளிக்கின்றது.

அதிபர்கள் பலர் தமது பணிகளை அலங்கரித்த இக்கலாசாலையில் குறிப்பிடத்தக்க அதிபர்கள் பலரது காலத்தில் இவரது பணி மிகவும் ஒப்பற்றதாக இருந்தமையை நான் நன்கறிவேன். தான் பணியாற்றும் காலத்தில் அதிபர்களுக்கு விசுவாசமானவராகவும், நேர்மையானவராகவும் செயற்பட்டுள்ளார். கடமையுணர்வும், அர்ப்பணிப்பும் மிக்கவராக மட்டுமன்றி கலாசாலையின் மீது பற்றுறுதிமிக்கவராகவும் செயற்பட்டமை அவரது சிறப்பியல்பு என்றே கூறலாம். சமூக இசைவாக்கம் மிக்கவராகவும் பிறரோடு நெருங்கிப் பழகுபவராகவும் காணப்படுகின்றார். பல வருட ஆசிரிய மாணவர்களது காலத்தில் பணியாற்றியது மட்டுமன்றி அவர்களது அன்பினைப் பெற்றுக் கொண்டவராகவும் விளங்கியுள்ளமை நாம் அனைவரும் அறிந்ததே.

அவர் ஓய்வின் பின்னர் தனது குடும்பத்தாருடன் சகல சுகங்களுடன் வாழ இறைவன் அருள்புரிய வேண்டுகின்றேன்.

# நமது அதிபர்




வே. கா. கணபதிப்பிள்ளை ( S.L.E.A.S - Class II )

## உப அதிபர்




வீ. கருணலிங்கம் (S.L.T.E.S - Class III)

# இணைப்பாளர்கள்

கல்வி நிர்வாகம்



த. கோபாலகிருஷ்ணன்
( S.L.T.E.S - Class III )

கல்வி அபிவிருத்தி



ச. லலீசன்
( S.L.T.E.S - Class III )

இணைபாடவிதான செயற்பாடுகள்



பொ.சற்குணநாதன்
( S.L.T.E.S - Class III )

நிதி முகாமைத்துவம்



திருமதி. சத்தியா றஞ்சிற்
( S.L.T.E.S - Class III )

## கல்விசார் ஆளணியினர்



**(இ - வ) இருப்போர் :-** திருமதி சி. ராதாகிருஷ்ணன், திருமதி. க. அன்பரசி, திருமதி. ச. றஞ்சித், த. கோபாலகிருஷ்ணன், வ.சி. குணசீலன், வீ. கருணலிங்கம், (பிரதி அதிபர்) வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), ச. லலீசன், பொ.சற்குணநாதன், எம். இராஜரட்ணம், செல்வி. நா. வேலுப்பிள்ளை, செல்வி. வி. கந்தசாமிஐயர், திருமதி எம். ஜே. எஸ். முத்துக்குமாரசாமி **(இ - வ) நிற்போர் :-** கா. குகபரன், ஆர். எம். சத்தியகுமார், திருமதி. பொ. பஞ்சலிங்கம், செல்வி. இ. தம்பிமுத்து, செல்வி. மு. ஜெயக்குமாரி, திருமதி ச. ஆனந்தராஜா, திருமதி எம். எச். ஏ சஜீவனி, செல்வி அ. நிரூபராணி, செல்வி ப. மாலதி, செல்வி. சி. ரஜிதா, திருமதி. ஜெ. சிவசக்தி, திருமதி. பி. ஆர். ஜெ. பீரிஸ், ச.பேரின்பநாயகம், சி.குகன்

**(இ - வ) நிற்போர் :-** அ. பௌநந்தி, எம். ஏ. பைசர், தி. சிவகுமார், பா. வாசுதேவன்

# கல்விசாரா ஆளணியினர்



**(இ - வ) இருப்போர் :-** ந. சுப்பிரமணியம், செல்வி. சி. நாராயணி, செல்வி. த. சுபாராகினி (D.O) வீ. கருணலிங்கம் (பிரதி அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) திருமதி வ. கேதாரநாதன் (P.M.A - II), செல்வி சி. மேகிலா (D.O), ஐ. ஞானச்சந்திரன், த. மனோகர்.

**(இ - வ) நிற்போர் :-** க. தயாரூபன், ஐ. ரவிச்சந்திரன், ந. கேதீஸ்வரநாதன், செ. செந்தில்குமார், பே. தில்லைநாதன், ஐ. உலகநாதன், த. பரமேஸ்வரன், ச. தேவராசா

கலாசாலை

விரிவுரையாளர்களின்

# ஆக்கங்கள்

# வினைத்திறனான கணிப்பீட்டு உத்திப்பிரயோகமும் சமநிலை ஆளுமை மேம்பாடும்

இலங்கைப் பாடசாலை முறைமையானது மதிப்பீட்டுக் கலாசாரத்தில் இருந்து கணிப்பீட்டுக் கலாசாரத்தினுள் நுழைந்து பதினைந்து வருடங்கள் கடந்த நிலையில் இன்றைய மாணவர்களின் சமநிலை ஆளுமையை மேம்படுத்துவதில் கணிப்பீட்டுச் செயன்முறையின் பங்கும் பணியும் அனைத்துத் தரப்பினரதும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளமை அவதானிக்கப்படுகிறது.

பாடசாலைக் கல்வியினூடாகத் தனியாள் ஒருவரின் பண்புத்தரம் இன்று முக்கியத்துவம் பெற்ற எண்ணக்கருவாக கல்வியியலாளர்களினால் இனங்காணப்பட்டுள்ளது. இப் பண்புத்தர விருத்தி என்பது முக்கியமாக பாடசாலைக் கல்வியின் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சரியான முறையில் மாணவர்களைக் கணிப்பீடு செய்து பிள்ளையை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச்செல்லும் படிமுறைச் செயன்முறையாகும். பாடசாலைக் கற்றல் கற்பித்தல் செயன்முறையினூடாக ஒவ்வொரு தனி மாணவனும் வெளிக்காட்டுகின்ற ஒவ்வொரு ஆற்றுகைகளும் சரியான முறையில் அளவிடப்படுமாயின் மட்டுமே சமநிலை ஆளுமையுடைய மனிதனைப் பாடசாலைக் கல்வியினூடாக சமூகத்திற்கு வழங்கமுடியும்.

பாடசாலைகளில் தற்போது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் இளம் சந்ததியினர் பல்வேறு வழிகளில் அறிவைத் தேடிக் கொள்வதற்கும். தேடிப்பெற்ற அறிவினூடாக தமது உள்ளத்தில் சுயநம்பிக்கைகளை உருவாக்கி அந்த நம்பிக்கைகளினூடாகப் பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ளத்தக்க ஆற்றலைக் கொண்டவர்களாக உருவாக்குவதன் மூலம் உலகில் ஏற்பட்டுவரும் மிகவேகமான மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து தமது இருப்பை உறுதிப்படுத்துபவர்களாக வளர்த்தெடுக்கப்படவேண்டும். இதனடிப் படையிலேயே தற்போது இலங்கைப் பாடசாலைகளில் தேர்ச்சிமையக் கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்மையமான செயற்பாட்டினூடான கற்றலை வேண்டி நிற்கின்ற தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தினைப் பாடசாலைகளில் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தும் நோக்கில் 5 E கற்றல் கற்பித்தல் மாதிரிகை எனும் செயற்பாட்டுத் தொடரகம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரிகையானது கட்டுருவாக்கவாதம் எனும் நவீன கோட்பாட்டில் இருந்து செயல்வடிவம் பெற்றது. இம் மாதிரிகையின் அமுலாக்க வெற்றி என்பது கற்றல், கற்பித்தல், கணிப்பீடு ஆகிய மூன்று செயல்க்கிரமங்களை ஏககாலத்தில் வகுப்பறையில் நிகழ்த்துவதற்காக சிறந்த முறையில் மேற்கொண்ட செயற்பாட்டுத் திட்டத்தில் தங்கியுள்ளது. அத்துடன், இச் செயன்முறைக்கூடாகப் பெற்றுக் கொண்ட பண்புசார் அளவறிசார் தரவுகளைக் கொண்டு மாணவர்கள் சார்பாக, பொருத்தமான முடிவுகளை மேற்கொள்ளுதல் என்கின்ற பாரிய பணியையும் உள்ளடக்கி நிற்கின்றது.

கணிப்பீடு எனும் பதம் Assidara எனும் இலத்தீன் மொழியில் இருந்து வருவிக்கப் பட்டதொன்றாகும். இச்சொல்லின் உட்கருத்து 'அருகில் இருத்தல்' என்பதாகும். அதாவது, மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது ஆசிரியர் மாணவர்க

ளோடு கலந்துரையாடி அவர்களது பலங்கள், பலவீனங்கள், விருப்பம், விருப்பமின்மை, இயலுமை, இயலாமை என்பவற்றினை அறிந்து அந்த இடத்திலேயே பரிகாரச் செயன் முறைகளைச் செயற்படுத்துவதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சி மட்டத்தை நோக்கி மாணவர்களை அழைத்துச் செல்வதாகும். சுருங்கக்கூறின் கணிப்பீடு என்பது கற்றல் கற்பித்தல் செயன்முறையின்போதான உடனடியான, சந்தர்ப்பத்திற்கேற்ற கற்றல் உதவியாகும். இப்பதம் கல்வியுலகத்திற்குப் புதியதொன்றாக இருக்கலாம். ஆனால், பாட சாலை முறைமைக்கு முந்திய கல்விமுறை களிலிருந்தே செயற்பட்டு வந்துள்ளமை புலனாகிறது. ஆரம்பக் கல்வித்துறையில் இதைத் தெளிவாக அவதானிக்கலாம். ஆரம்பக்கல்வி ஆசிரியர் விரும்பியோ விரும்பாமலோ அவர்களைப் பிள்ளைகள் வகுப்பறைச் செயன்முறையில் ஒவ்வொரு கட்டத்திலும் கணிப்பீட்டுச் செயன்முறைக் குள் வலிந்து அழைப்பதை அறிந்துகொள்ள லாம்.

மாணவரின் கற்றல் அடைவுகளை மேம்படுத்துதல் எனும் விடயம் தொடர்பாக 1990களில் எல்லோருக்கும் கல்வி பற்றிய ஜொம்ரின் (Jomtein) மகாநாடு செய்த பரிந் துரைகளின் பிரகாரம் கணிப்பீட்டுக்கு வழங் கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். கணிப்பீடானது கற்றலை மேம் படுத்துவதற்குப் பயன்படுத்தப்படல் வேண்டும் எனவும், கற்றல் அடைவுகளைக் கணிப்பிடுதல் மூலம் கிடைக்கும் விளைவு களை ஆசிரியரும் மாணவரும் முகாமைத்துவ மும் பின்னூட்டலுக்குப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதோடு சாத்தியமானவிடத்து இக்கணிப்பீட்டு முறைகள் உள இயக்கம் மற்றும் மனவெழுச்சிசார் முடிவுகளையும் அறிவுசார் விளைவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும் எனவும் இப்பரிந்துரையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

கற்றல், கற்பித்தல் செயலொழுங்கை வினைத்திறனாக்குவதற்காக இலங்கையில் பாடசாலைமட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டம் (SBA) ஆனது எல்லோருக்கும் கல்வி எனும் இலக்கை அடையும் பொருட்டு முன் வைக்கப்பட்டுள்ள ஒருமுக்கியமான விடய மாகும். அது ஒருவகையில் கட்டாயக்கல்வி மற்றும் பொதுக்கல்வியை இலவசமாக வழங் குதல், கல்வியில் நியாயத்தன்மை நிலவுதலை உறுதிசெய்தல் ஆகிய விடயங்களுக்கு முதன்மை வழங்குதலை நோக்கமாகக் கொண்டது எனக் கருதலாம்.

இலங்கையில் 1997இல் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தமானது பாடசாலை மட்டக்கணிப்பீட்டுக்கு முதன்மை வழங்கி இருந்தமையை அவதானிக்கத்தக்க தாக உள்ளது. (General Education Retorms 1997) கற்றல், கற்பித்தல் செயன்முறைகளில் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கணிப் பீட்டிற்கு இந்த அறிமுகம் வழிகோலியது எனலாம். தேசிய கல்வி நிறுவகத்தின் கணிப் பீட்டுக்கிளை 1994ஆம் ஆண்டில் 50 பாட சாலைகளில் முன்னோடி நிகழ்ச்சித் திட்டமாக பாடசாலைமட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டத்தை அறிமுகம் செய்தபின்னர் 1998 இல் வெளியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 1998/04இன் படி இலங்கையில் உள்ள அனைத் துப் பாடசாலைகளிற்கும் இவ்வேலைத் திட்டமானது அமுல்ப்படுத்தப்பட்டது.

பாடசாலைமட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டமானது சமநிலை ஆளுமையை விருத்திசெய்ய வேண்டும் என்பது எதிர்பார்ப் பாகும். எனவே, வகுப்பறையில் மாணவர்கள் ஈடுபடும் பணிகளுக்கு ஊடாக அவர்களு டைய இயலுமை மற்றும் இயலாமையைக் கண்டறிவதன் மூலம் மாணவர்கள் அடைய வேண்டும் என எதிர்பார்க்கும் தேர்ச்சி மட்டத் தினை எய்துவதற்கு வழிகாட்டுவது ஆசிரி யரின் கடமையாகும். இன்னொருவிதமாகக்

கூறுவதாயின் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மாணவரின் விருத்திக்கும் வழிகாட்டும் விடயமாக இக்கணிப்பீடு அமைந்திருப்பினும் மறுபுறத்தில் அவர்களுடைய நுண்மதியின் அடிப்படையில் அல்லது ஆற்றலின் அடிப்படையில் ஒப்பிடுகின்ற ஒரு செயன்முறையாக பாடசாலைமட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டம் அமையவில்லை என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பாடசாலைமட்டக் கணிப்பீட்டுத் திட்டமானது பின்வரும் நான்கு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது (Navaratne 1999)

1. மாணவரின் கற்றல் செயன்முறையை மேம்படுத்தல்.
2. ஆசிரியரின் கற்பித்தல் செயன்முறையை மேம்படுத்தல்.
3. வினைத்திறனும் விளைதிறனும் கொண்ட கற்றல், கற்பித்தல் செயன்முறையை வடிவமைத்தல்.
4. பாடசாலையை மதிப்பீட்டுக் கலாசாரத்தில் இருந்து கணிப்பீட்டுக் கலாசாரத்திற்கு மாற்றுதல்.

இவ்வாறான நோக்கங்களைத் திருப்திகரமானதாக நடைமுறைப்படுத்த முனையும் போது பாடசாலை மட்டத்தில் செயற்படுகின்ற ஆசிரியர்களின் நேர் மனப்பாங்கு பின்வரும் இரு விடயங்களை அடிப்படையாகக் கொண்ட அளவீட்டு நுட்பங்களில் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**1. சமநிலை ஆளுமையுடன் இணைந்துள்ள விடயங்கள்.**

- அறிக்கை சார் ஆற்றல்கள்
- மனவெழுச்சிப் பண்புக் கூறுகள்
- உள இயக்கத்திறன்களும் சமூகத்திறன்களும்
- கற்றலுடன் தொடர்புடைய ஆளுமைப் பண்புக் கூறுகள்

**2. கற்றலைப் பாதிக்கும் ஏனைய விடயங்கள் (காரணிகள்)**

- நுண்மதி
- உடலியல் பண்புகள்
- ஊக்குவிப்பு
- தனியாள் வேறுபாடுகள்
- கற்றல் வேகம்
- நுழைவுத் தேர்ச்சிகள்
- எதிர்பார்ப்பு மட்டம்
- கற்கும் ஆற்றல்
- சமூக பொருளாதாரப் பின்னணி

காலம் காலமாக நிலவி வருகின்ற மதிப்பீட்டுக் கலாசாரத்தில் சோதனையொன்றைத் தயாரித்தல், நிருவகித்தல் (நடத்துதல்) புள்ளிகளை வழங்குதல், புள்ளிகளுக்கு விளக்கமளித்தல் (சோதனைத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்) என்கின்ற வேலை ஒழுங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனால் மாறாக கணிப்பீட்டுக் கலாசாரம் வேண்டிநிற்பது என்னவெனில் மாணவர்கள் வகுப்பில் எவற்றைக் கற்றுள்ளனர். மாணவரால் என்ன விடயங்களைச் செய்ய முடியும் எவற்றை செய்ய இயலாது என இனம் கண்டு கொள்ளுதல் முனைப்புப் பெற்று இருக்கின்றமையை அவதானிக்கலாம்.

பாடசாலைமட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் மூலம் வகுப்பறையில் நிகழவேண்டிய விடயங்களைக் கணிப்பீட்டுக் கையேடு விளக்கமாகப் பட்டியல்ப்படுத்தியுள்ளமையைக் கீழ்வருவனவற்றுக்கூடாக அவதானிக்கலாம். மாணவர்கள் எல்லோரும் கற்பிக்கப்படக் கூடியவர்கள்.

- மனனம் செய்யும் கற்றலில் இருந்து அர்த்தமுள்ள கற்றலுக்கு மாணவரை இட்டுச் செல்லல்.
- வகுப்பறைச் செயற்பாடுகளில் மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்குதல்.

- வினைத்திறனும் பயன்பாடும் உள்ள கற்றல் அனுபவங்களை மாணவர் பெற்றுக் கொள்ள வழிகாட்டுதல்.
- வகுப்பறை அனுபவங்களை யதார்த்த பூர்வ மாகத் தமது வாழ்க்கையில் பிரயோகித்தல்.

கணிப்பீட்டுக் கலாசாரத்திற்குள் நுழைந் துள்ள ஆசிரியர்களிடம் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கொள்கையை வலியுறுத்துவது யாதெனில், வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் செயன்முறை சார்ந்த கற்றலில் ஈடுபடும் வேளையில் கணிப்பீடும் நிகழுதல் வேண்டும். இவ்வாறு கணிப்பிடும் போது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கால ஒழுங்கின் அடிப்படையிலின்றி மாணவர் ஆயத்தநிலை, ஒரு குறித்த செயற்பாட்டில் மாணவர் ஈடுபடுவதற்கான ஆற்றல், மாண வரது அடைவு மட்டம், வகுப்பறையில் கற்கும் விடயங்களை உண்மையான வாழ்க்கையில் பிரயோகித்தல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கக்கூடியதாக இருக்கும். ஆனால், நடை முறையில் நியமம்சார் கூட்டுச்சோதனை களைப் பயன்படுத்தி வெறும் எழுத்துப் பரீட் சைகள் மூலம் அறிவுசார் விடயங்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமையானது மாணவர்களை வினைத்திறன்மிக்க சிந்தனை யாளர்களாகவும், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் உள்ளவர்களாகவும் உருவாக்க முயலும் கணிப் பீட்டின் நோக்கம் தவறுகின்றமையை அவதா னிக்கக் கூடியதாகவுள்ளது.

புத்தாக்க அறிவையும் பன்முக ஆற்ற லையும் வேண்டிநிற்கும் இன்றைய உலகில் மாணவரது அடைவு தொடர்பான கணிப்பீடு மாணவர்கள் முகங்கொடுக்கும் சவால்களை எதிர்கொள்ளத்தக்கதாக பெருமளவில் மாற்றத் துக்குட்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் உல களாவிய பொருளாதாரத்தில் கல்வியின் அடிப் படைகள் எனக் குறிப்பிடப்படுவதை மாண வர்கள் விளங்கிக்கொள்வதோடு தீர்க்கமாக சிந்திக்கவும் பகுப்பாய்வு செய்யவும் அனுமானங் களை மேற்கொள்ளவும் பயனுறுதி வாய்ந்த முறையில் தொடர்பாடவும் வேண்டிய தேவை எழுந்துள்ளது.

கற்றல் பற்றிய தற்கால எண்ணக்கரு அர்த்தமுள்ள கற்றலுடன் சம்பந்தப்பட்ட உயிரோட்டமான அறிவுசார்ந்த ஆக்கபூர்வ மான செயன்முறைகளுக்கு முக்கியத்துவமளிக் கிறது. அத்துடன் மாணவர்கள் அறிந்துள்ள வற்றை எடுத்துக்காட்டும் வகையிலும் புதிய கணிப்பீட்டு முறைமையையும் அது வேண்டி நிற்கின்றது. ஜிப்சு (Gipps 1994) எனும் கல்வியி யலாளர் வலியுறுத்துவதுபோல், அறிவை மாத்திரம் செறிவாக்கும் கணிப்பீட்டு மாதிரி யைப் பயன்படுத்துவது உண்மைகளை அறிவ தையும் அவற்றை நினைவுக்குக் கொண்டு வரு வதற்கும் உதவும். ஆனால், இதற்கும் அப்பால் நினைவுக்குக் கொண்டு வந்த தகவல்களை விளங்கிக்கொள்வதன் படிமுறைகளையும் கணிப்பிடல் அவசியமாகின்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் போன்ற பல்வேறு தரப்பினர்கள் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் தொடர்பான எண்ணக்கருவை திருத்தமாக விளங்கிக்கொள் வதில் உள்ள இடையூறுகள் காரணமாக இவ் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தி பதினைந்து வருடங்கள் கடந்த நிலையிலும் இதன் நோக்கம் எதிர்பார்த்தளவு நிறைவேறாத் தன்மையைப் பாடசாலைத்தொகுதியினுள் காணக்கூடியதாக உள்ளது. இதற்குக் காரணம், இவ்வேலைத்திட்டத்துடன் தொடர்பான பல் வேறு தரப்பினர் இவ்வரிய வேலைத்திட் டத்தைக் கற்றல், கற்பித்தல் செயன்முறையை வலுவூட்டும் கருவியாக நோக்குவதற்குப் பதி லாக, இது மாணவர்களைப் பரீட்சிக்கும் இன்னுமொரு வகையான மாற்று நுட்பம் எனப் புரிந்துவைத்திருப்பது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான புரிந்து கொள்ளலின் விளைவைப் பாடசாலைத்

தொகுதியினுள் ஒரு தசாப்த காலம் கடந்த நிலையில் இவ்வேலைத்திட்டத்தின் மீதான பல்வேறு கண்டனங்களைக் கீழ்வருமாறு கல்வியியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

- தீர்க்கமான சிந்தனை, பிரச்சினையை தீர்க்கும் ஆற்றல், தொடர்பாடல் ஆற்றல்கள் ஆகியவற்றைக் கொண்டதாக தற்போதைய கணிப்பீட்டின் உள்ளடக்க எல்லைகள் விரிவாக்கப்பட்டிருக்கவில்லை.
- மாணவர்களிடமிருந்து சிக்கலானதும் சவால் நிறைந்ததுமான உளச்செயன் முறையை எதிர்பார்ப்பதாக அமையவில்லை.
- மாணவர்களின் எண்ணக்கருக்களுக்கு இடையேயான தொடர்புகளையும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இணைப்புக்களை வருவிக்கும் ஆற்றலையும் எடுத்துக் காட்டுவதாக அமையவில்லை.
- பாடவிடயத்துடன் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் செயல்களை மாணவர்கள் மேலோட்டமாக அறிந்துள்ளமையை அளவிடுவதைக் காட்டிலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான அடிப்படைக் கோட்பாடுகளையும் கோலங்களையும் இனம்காணும் ஆற்றலைக் கொண்டுள்ளனரா என்பதை அளவிடுவதாய் அமையவில்லை.

மாணவர்கள் பின்வருவனவற்றைச் செய்ய இயலுமானவர்களாக உள்ளனரா என்பதைத் தீர்மானிக்கும் கருவியாக அமையவில்லை.

- தத்தமது ஆற்றல்களைச் சுயமாக விளங்கிக் கொள்ளும் தன்மையைக் கண்காணித்தல்.
- வினாக்களை விளங்கிக் கொள்வதற்கான உபாயங்களைக் கையாளுதல்.
- பெறத்தக்க அறிவின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடல்.
- தமது சுயதீர்வுகளைச் செவ்வைபார்த்தல்.

இவ்வாறான கண்டனங்களைத் திருத்தியமைப்பதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கு பாடசாலைமட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டத்திற்குரிய எண்ணக்கரு தொடர்பான முறையான விளக்கமொன்றை எதிர்வரும் காலங்களில் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயன்முறைகளின் பங்குதாரர்களான ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்குவதோடு அதிபர்கள், பெற்றோர்கள், கல்வி நிர்வாகிகள் போன்ற வழிகாட்டுநர்களுக்கும் தெளிவுபடுத்துவதனூடாக எதிர்பார்த்த இலக்கை இலகுவில் அடைந்துவிடலாம் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

**துணைநூற்பட்டியல்**


- கருணாநிதி. க (2008) கற்றல் கற்பித்தல் மேப்பாட்டிற்கான வழிமுறைகள், சேமடுப் பதிப்பகம்.
- பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் (2003) ஆய்வு அபிவிருத்திக்கிளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் கொழும்பு
- Freeman. R. (2005) Planning and Implnmentating Assessment, Roulette Falmet. UK http ll www.kurwongbss. qlt.etu. qu
- ஜெயராசா, ச. (2008) கல்வியியலும் கணிப்பீட்டியலும் சேமடு பதிப்பகம் கொழும்பு



**பொ. சற்குணநாதன்**

*விரிவுரையாளர்,*

*கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

08

# அழகியற்கல்வியும் ஆசிரியரும்

மனிதன் என்ற உயிரி இவ்வுலகில் இனங் காணப்பட்ட காலத்தில் இருந்து அவனோடு இணைந்து வருவது கலையாகும். இக்கலையானது ஒரு பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்குகிறது. தெய்வீக தரிசனம் சுய விசாரணை, விருப்பு வெறுப்புக்களின் வடிகால், சுதந்திர உணர்வு எனப் பலவகைப்பட்ட கருத்துக்களையும் அவை பற்றிய விவாதங்களையும் தன்னகத்தே உள்ளடக்கியது கலைத்துறையாகும். கலைத்துறையில் பல்வேறு பரிமாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவையே அழகியற் கலையென்று கூறப்படுகின்ற சித்திரம், நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், சிற்பம் போன்றனவாகும். 1972ஆம் ஆண்டு அழகியற்கலைகள் என்ற நிலையில் சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய மூன்றும் இலங்கைப் பாடசாலைக் கலைத் திட்டத்தில் உட்புகுத்தப்பட்டது.

அழகினை நுகர்ந்து சுவைத்தல் நமது மன உணர்ச்சிகள், மனவெழுச்சி ஆகியவற்றுடன் இணைந்த திறனாகும். அழகினை சுவைத்தலில் அனுபவங்கள் மேலோங்கிக் காணப்படுகின்றன. மனிதவாழ்வில் அழகியலுணர்வு இயல்பான ஒன்றாகக் காணப்படுகின்றது என்பதுடன், அழகியல் அனுபவங்களைப் பெறுவதன் மூலமாக மாணவன் முழுமை, நிறைவு போன்றவற்றைப் பெற முடியும். ஒரு நபர் தனது அழகியல் பயிற்சியின் மூலம் பெறும் அனுபவம், படைப்பு, படைப்பாளியின் ஆளுமையாகவும் அவற்றின் வாயிலாகத் தன்னையும், தனது நெருங்கிய உறவுகளையும் அறியமுற்படுகின்றது. கலைத்துறையின் பொதுக் கருத்தாக்கத்தையும் சமூக உறவுகளையும் பற்றி படைப்பாளிக்கும், பார்வையாளருக்கும் ஒரு தெளிவை ஏற்படுத்துவதாக அமைகிறது.

அழகியல் கலைகளானவை சிறந்த கல்வித் தளத்தை உடையதாக இருக்கவேண்டும். எனவேதான், அது கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. ஆடலாக, பாடலாக, ஓவியமாக, சிற்பமாக, இலக்கியமாக, நாடகமாக அழகியற் கல்வியானது வரன்முறையான கல்விச் செயற்பாட்டிலே ஒன்றிணைக்கப்பட்ட வேளை இவ்வாறான கலைவடிவங்களை அடியொற்றி அழகு சார்ந்த சிந்தனைகளைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளும் வளர்ந்து வரலாயின. லியானோடாவின்சி ஓவியத்தின் வழியாக தமது அழகியற் கல்விச் சிந்தனைகளை முன்வைத்தார். ஓவியக்கலையைத் தெய்வீகக் கலையாகவும், மெய்ப் பொருள்காணும் செயற்பாடுகளை ஒத்ததாகவும் முன்மொழிந்த இவர் மறுமலர்ச்சிக் காலத்திலேயே அழகியற் கல்வித் தளத்தை வலியுறுத்தி உள்ளார்.

அழகியற் கல்வியானது மனிதனின் சமநிலையான ஆளுமையை வளர்ப்பதோடு அதனைச் செம்மைப்படுத்த உதவுவதுடன் சமூக உறவுகளைப் புரிந்து கொள்ளவும் உதவுகின்றது. இப்புரிந்துகொள்ளலுக்கான தேவைப்பாடாக அமைவது இரசனை அனுபவமே. நல்லனவற்றை இரசிக்கவும் அதனைத் தனது வாழ்வனுபவமாக மாற்றவும் கற்றுக் கொடுத்தல் முக்கியமானது. இதற்கான அடிப்படையை மாணவனுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டதே அழகியற் பாடங்களாகும். உயரிய நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட பாடமானது துரதிஸ்டவசமாக சில

பரிமாணங்கள் நோக்கிழந்து பாராமுகமாகக் காணப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அழகியற் கலைகளைப் போதிக்கும் கல்வியாளர்கள் வளர்ந்து வருகின்ற வாழ்க்கை முறைமைக்கு ஏற்ப சமூகத்தில் நேர்மனப்பாங் கோடு தொழிற்படக் கூடிய தலைமைத்துவம் மிக்க தனிநபர்களை உருவாக்குவதற்கு அழ கியற் பாடங்களே முதன்மையாகின்றன. அதற் கேற்றவகையில் பிள்ளைகளின் ஐம்புலன் களுக்கும் இதமூட்டக் கூடிய விதமாக அவர் களுடைய எண்ணங்கள், கருத்துக்கள், அறி வியல் என்பவற்றைத் தூண்டத்தக்க வகையில் கலை ஆக்கங்களின் மதிப்பினைப் பிள்ளை களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். அத்த கைய அழகியல் ஆக்கங்களை நேரடியாகப் புலக்காட்சிபெற வைப்பதோடு, அவற்றை ஆக்குவதற்கும் வழிகாட்டவேண்டும். இச் செயலானது பிள்ளையின் எதிர்காலத்திற்கு இன்றியமையாதது. இரசனை, அனுபவம் வாழ்க்கையைப் பிரகாசிக்கச் செய்யும் தன்மை கொண்டது. நல்ல எண்ணங்களினால் உடலும் உள்ளமும் புத்துயிர் பெறுதலே இதற்குக் காரணமாகும். சுழலும் சக்கரம்போல் என்றும் ஒரே மாதிரியான வாழ்க்கையை அனுப விக்கும் மனிதன் அழகியல் இரசனை அனுப வம் மூலமாகத் தான் ஆறுதல் பெறுகின்றான். அழகியல் என்பது வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணி போன்றது. அச்சாணி இல்லாத வண்டி குடைசாய்வது போல அழகியற் சுவை காணா மனிதன் இயந்திரமயமாகி மனிதாபி மானம் அற்றவனாய் இருளில் தள்ளப்படு கின்றான்.

எனவே, கால மாற்றங்களுக்கும் பொருளாதார அரசியல் காரணங்களினாலும் கலைத் திட்டங்களினாலும் மாற்றங்கள் மாணவர்களிடம் காணப்படும் இயல்பான ஆக்கத்திறன்களை வெளிக்கொணர்ந்து மாணவனுக்கும் சமுதாயத்திற்கும் பயன்பெறச் செய்வதே உண்மையான ஆசிரியரின் பணி என நோக்கப்பட்டு அத்திறன்களை வெளிக் கொண்டுவர அளிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் மாணவர்களை ஒழுக்க முடன் வாழ வழிகாட்டும் என நம்பப்பட்டது. எனவே மாண வனையும் சமுதாயத்தையும் மையமாகக் கொண்டு நோக்குங்கால் அழகியற்கலையின் இன்றியமையாமையை கலைத்திட்டம் உள்வாங்கிக் கொண்டது.

இதனடிப்படையில் அழகியல் ஆசிரி யர்கள் பிள்ளையின் நுணுகி ஆயும் ஆற்றலை வளர்ப்பதற்கு கலை விஞ்ஞானப் பாடங்கள் அவசியமாய் இருப்பதுபோல அவர்களது நயப்பு உணர்வை வளர்ப்பதற்கு அழகியற் கல்வி அவசியமாக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் ஓவியம், இசை, நடனம், நாடகம், சிற்பம் முதலிய அழகியல் படைப்புக்களை நயக்கும் ஆற்றல் உடைய வராய் இருத்தல் வேண்டும் எனவும், அப் படைப்பாற்றலை வளர்ப்பதில் மிகுந்த நாட்ட முள்ள பிள்ளைகளின் கலைத்திறமையை விருத்தி செய்வதற்கான வசதிகளை ஆசிரியர் கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அழகி யல் துறையை விருத்தி செய்வதற்காக பாட சாலைகள் மூலம் பல்வேறு வசதிகளை அரசு திட்டமிட்டு வருகின்றது. நாட்டினுடைய இறைமை, கலாசாரப் பண்பாடு இன ஒற்றுமை என்பவற்றை வளர்க்கின்ற நிலையிலே அழ கியற்கலைகள் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை ஒவ்வொரு ஆசிரியர்களும் உணர்ந்து புதிய புதிய பரிமாணங்களினூடாக சமூகத் திற்கு வழங்கவேண்டும். இன்று விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பன்னாட்டு கலை, கலாசார நிலமைகளை அறிவதனூடாகப் புதிய புதிய அணுகுமுறை களில் அழகியல்துறையை மேம்படுத்த வேண்டும்.

இன்று உலகளாவிய ரீதியில் அழகியல் துறையானது வளர்ச்சி கண்டுள்ள நிலையில் எமது கலைப் பொக்கிசங்களைப் பாதுகாப்பது

10

மட்டுமல்லாமல் எதிர்காலச் சந்ததியினர் அவற்றைப் பரிமாற்றம் செய்யக்கூடிய விதமாக ஒவ்வொரு தனிமனிதரையும் ஊக்குவிக்க வேண்டும். பாடசாலைகளிலேயே அதிக நேரம் மாணவர்கள் தொழிற்படுவதனால் இப்பணியானது ஆசிரியர்களின் அளப்பெரும் அர்ப்பணிப்பிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர் கள் உயர்வான எதிர்பார்க்கையோடு புதிய புதிய தேடல்களின் வாயிலாக சர்வதேச ரீதியிலும் இணையக்கூடியவகையில் அழகியற் கலையை வளம்படுத்த வேண்டும். மனிதன் மனிதனாக வாழ்வாங்கு வாழ்வதற்கு அழகியற் கலைகளே பெரும்பங்கு வகிப்பதனால் அதனைப் போதிக்கும் ஆசிரியர்கள், கலை ஞர்கள், கல்வியியலாளர்கள் மன உறுதியோடு தொழிற்படுவோமாக இருந்தால் நாடு சுபீட்ச மடையும் என்பது வெளிப்படையாகும்.

**வீ. கருணலிங்கம்**
*பிரதி அதிபர்,*
*கோப்பாய் ஆசிரிய கலாசாலை*

---

* ஆரம்பக் கல்வி 5 வருட வயதில் ஆரம்பித்து 5 ஆண்டு காலத்துள்ள மூன்று கட்டங்களின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படும்.

தரம் 1 - 2 முதன்மை நிலை - 1
தரம் 3 - 4 முதன்மை நிலை - 2
தரம் 5 முதன்மை நிலை - 3

* க. பொ. த. உயர்தரத்தில் 2013ஆம் ஆண்டில் அறிமுகப்படுத் தப்பட்ட தொழில்நுட்பத் துறையில் உள்ள பாடங்கள்

1. பொறியியல் தொழில்னுட்பம் / உயிரியல் முறைமைக்கான தொழினுட்பம்
2. தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்
3. பொருளியல் / புவியியல் / மனைப்பொருளியல் / ஆங்கிலம் / தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்னுட்பம் / சித்திரம் / வணிகக் கற்கை / விவசாய விஞ்ஞானம் / கணக்கீடு (பத்துப் பாடங்களுள் ஒன்று)

---

# கலைமலர்க்குழு



(இ - வ) இருப்போர் :- ச. மோகன்ராஜ் (இதழாசிரியர்), பொ.சற்குணநாதன் (விரிவுரையாளர்), வ.சி.குணசீலன் (சஞ்சிகை முகாமையாளர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர், தலைவர்), வே. கணபதிப்பிள்ளை (அதிபர், காப்பாளர்), ச.லலீசன் (பதிப்பாசிரியர்), அ. பௌநந்தி (பதிப்பாசிரியர்) திருமதி. சிவசக்தி ஜெயராசா (விரிவுரையாளர்), செ.மோகநாதன் (இதழாசிரியர்)

(இ - வ) 1 ஆம் நிரல் :- செல்வி ப. சுகிர்தா, திருமதி.யூ.ஸ்ரெல்லா ஜீவநாயகி, திருமதி. ச. சசிகலா, திருமதி. சு. பேபி, திருமதி .அ. மேரிஇமெல்டா, திருமதி. த. அருளரசி திருமதி. ந. கஜானி, செல்வி. அ. மேரிகீத்தா, திருமதி. அ. மேரிமக்டலின், திருமதி. M.N.F பாஸிலா

(இ - வ) 2 ஆம் நிரல் :- இ. அன்ரன்விமலதாஸ், சி .ரஜனிகாந், சி. சிவதாஸ், கு. ஜெயந்தன், த. சகிலன், த. சுபாஸ்

# சுவடுகளிடையே தூரத்தை சமன் செய்தல்

தற்காலத்தில் சரிநிகர் சமத்துவம் என்ற விடயம் எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. விளையாட்டுத் துறையிலும் இவ்வெண்ணக்கரு மேலோங்கியுள்ளது. இந்நிலையில் போட்டிகளில் அனைவருக்கும் நியமத்தன்மை பேணப்படுவது அவசியமாகிறது. அதற்கு அமைவாக மெய் வல்லுநர் நிகழ்ச்சிகளில் சுவட்டின் வழியே வீரர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டுகின்றனர். எனவே, சுவட்டு நிகழ்வுகளில் பொதுவாக 6 தொடக்கம் 8 சுவடுகள் பயன்படுத்தப்படுகின்றன. பயன்படுத்தப்படுகின்ற சுவடுகள் சமதூரமுடையதாக அமைய வேண்டும். அதற்குப் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

1. வட்டப்பாதையில் வழங்கப்படும் தூரம் சமன் செய்தல். (Stagger)
2. மூலை விட்டத்திற்கு அமைவாக வழங்கப்படும் தூரம் சமன் செய்தல் (Diaganal Excess)
3. வளைகோட்டில் ஆரம்பிக்கும் நிகழ்ச்சிக்கு வழங்கப்படும் தூரம் சமன் செய்தல் (Curves)

**1. வட்டப்பாதையில் வழங்கப்படும் தூரம் சமன் செய்தல்**

இங்கு வழங்கப்படும் தூரம் சுவட்டின் அகலத்திலும் மைதானத்தின் தன்மையிலும் தங்கியுள்ளது. அதாவது, மைதானம் இரண்டு வகைப்படும். 1. நியம மைதானம், 2. நியமற்ற மைதானம். முதலில் நியம மைதானத்திற்கு தூரம் சமன் செய்தல் தொடர்பாக நோக்குவோம்.

$= W (N-1) - 0.10 \times 2\pi$ என்ற சமன்பாடு பயன்படுத்தப்படுகின்றது.

W = சுவட்டின் அகலம்

N = கணிக்க வேண்டிய சுவடு

$= \frac{22}{7}$

இச் சமன்பாட்டைப் பயன்படுத்திச் கணிக்க முடியும். உதாரணமாக, சுவட்டின் அகலம் 1.22m என வைப்போம். 2ஆம் சுவட்டினதும் 3ஆம் சுவட்டினதும் சமன் செய்தூரத்தைக் கணிக்கும்போது,

2ஆம் சுவடு

$= w (N-1) - 0.10 \times 2$

$= 1.22 (2-1) - 0.10 \times 2$

$= 1.12 \times \frac{22}{7}$

$= 7.04$ m

3ஆம் சுவடு

$= w (N-1) - 0.10 \times 2$

$= 1.22 (3-1) - 0.10 \times 2$


$= 2.34 \times \frac{22}{7}$

$= 14.71$m

இதே போல் 4,5......8 சுவடுகளின் சமன் செய் தூரம் கணிக்கப்படுகின்றது.

**2. மூலை விட்டத்திற்கு அமைவாக வழங்கப்படும் தூரம் சமன் செய்தல்.**

இங்கு 200m மைதானத்தில் 400m ஓட்டம் நடைபெறுவதாகக் கொள்வோம்.




மூன்றாம் சுவட்டில் ஓடும் வீரர் எனில், RQ தூரத்தை மேலதிகமாக ஓடுகின்றார். RQ

தூரத்தைக் கணிக்க.

$$PR = \sqrt{PQ^2+PQ^2} = \sqrt{37^2 + 2.44^2}$$
$$= 38.08 \text{ m}$$

RQ = 0.08m எனவே, இத்தூரத்தை மேலதிகமாக வழங்க வேண்டும்.

**3. வளைகோட்டில் ஆரம்பிக்கும் ஓட்டங்களுக் கான தூரத்தை சமன் செய்யும்போது.**

இங்கு மைதானத்தின் எவ்வளவு பங்கு வளைவாகக் காணப்படுகின்றது என்பதை கணிக்க வேண்டும். உதாரணமாக, 200m மைதானத்தில் நேரிய அளவு 64m ஆகவும், வளைவான அளவு 136m ஆகவும், காணப் படும் பொழுது 1500m நிகழ்வில் வரையப் படும் வளைவானது வளைவுப் பகுதியின் 1/8 பங்கை எடுத்து வளைவு வரையப்படும். அதாவது 16m தூரத்தில் வைத்து வளைவு வரையப்படும். 12 பேருக்கு மேற்பட்ட வீரர்கள் பங்கு பற்றும்போது இரண்டு வளைவு ஆரம்பக் கோடுகள் பயன்படுத்தப்படும்போது (Double are start) 8 சுவடுகள் காணப்படும் போது முதல் 4 சுவடுகளுக்கும் 1/8 வளைவு பகுதியுடன் கணிக்கப்பட்டு வளைவு வரையப் படும். ஏனைய 4 சுவடுகளுக்கும் 1/8 பங்கு வளைவுப் பகுதியுடன் அரைவட்டத்திற்கான சமன் செய்தூரத்தையும் மூலைவிட்ட சமன் செய் தூரத்தையும் கூட்டி வளைவு வரையப் படும்.

எனவே, மைதானத்தில் தூரம் சமன் செய்யும் சந்தர்ப்பங்களில் வட்டப்பாதையில் வழங்கப்படும் சமன் செய் தூரத்தையும் மூலை விட்டத்திற்கு வழங்கப்படும் சமன்செய் தூரத்தையும், வளைவு கோட்டில் வழங்கப் படும் சமன்செய்தூரத்தையும், கருத்தில் கொண்டு சுவடுகளை அமைக்கும்போது அனைத்து வீரர்களுக்கும் சம வாய்ப்புக்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், வீரர்களுக்கு சாதகமான சில சுவடுகள் தவிர்க்கப்பட்டு வீரர்கள் தங்கள் உண்மையான திறனை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

**உசாத்துணை**

IAAF (2014 - 2016)

**பா. வாசுதேவன்**
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

---

பாடசாலைக் கல்வியை வழங்குவதில் தொடர்புடைய அமைச்சு கல்வி அமைச்சு தொழினுட்ப கற்கை நெறிக்காக இளைஞர் விவகார மற்றும் தேர்ச்சிகள் அபிவிருத்தி அமைச்சும் இணைந்துள்ளது.

---

# ஆசிரிய மாணவர் மன்றம்



(இ - வ) **இருப்போர்** :- க. துற்ஜெயந்தன் (செயலாளர்), சி. சிவரூபன் (தலைவர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), பொ. சற்குணநாதன் (காப்பாளர்), திருமதி. சௌ. பத்மநிதி (தலைவி), சி. சிவகாந்தன் (பொருளாளர்)

**(இ - வ) 1ஆம் நிரல் :-** எஸ். சத்தியகாந்தன், திருமதி நி. ஜெயசீலி (செயலாளர்), பி. புஸ்பகுமாரி, பாத்திமா பர்வின், வி. வத்சலா (உப தலைவி) ஹெ. மேரிறோசா, ப. ஸ்ரீசங்கர், ஆ. டேவிற்சன் (உப தலைவர்), **(இ - வ) 2ஆம் நிரல் :-** சி. ரஜனிகாந், கி. திருச்செல்வம், க. செல்வரத்தினம், சி. சிவதாஸ்

# பரத நாட்டியத்தில் ஆன்மிகம்

மனிதனின் இயல்பான அங்க அசைவுகள் அழகானவை; அர்த்தமுள்ளவை. இவை ஒழுங்குபடுத்தப்பட்டு நிரந்தரமான பொருண்மை நிறைந்த அசைவுகளாக மாற்றப்படும்போது நடனம் தோற்றம் பெறுகிறது.

இந்துக்கள் நிறைந்த இந்தியா முதல் இலங்கை வரையான நாடுகளில் நடனக்கலை இறை அனுபவங்களுடன் கூடியதாக ஆன்மிகத்துடன் ஒன்றிணைந்ததாக ஆடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் பரதநாட்டியம் முதன்மை உடையது. மிகவும் பழைமை வாய்ந்ததுமாகும். பரதமுனிவரால் எழுதப்பட்ட நாட்டிய சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது.

பரதம் என்ற சொல் பொதுவான இந்திய நாடகம், நடனம் குறிப்பாக, தமிழக சாஸ்திரிய நடனத்தைக் குறிக்கப் பயன்படுகின்றது.

நடனத்திலே அபிநயம் பிரதானமானது. அபிநயம் என்று ஆங்கிகம், வாச்சிகம், ஆகார்யம். சாத்வீகம் என நான்கு வகைப்படும். இசை நடனத்திற்கு அவசியமானது. பாவங்கள் பற்றிய அறிவு அடிப்படையானது.

இத்தகைய பண்புகளையுடைய நடனம் தமிழகத்தில் ஆதிகாலம் முதல் வழக்கில் இருந்தது என்பதற்குச் சாசனங்கள், இலக்கியங்கள் காரணங்களாகும். குறிப்பாக சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை, பத்துப் பாட்டில் நடனங்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. நடராஜன் நடனம் ஆடுவதாலேயே உலகம் முதலாக அண்ட சராசரங்கள் இயங்குவதாக இந்து மதம் நம்புகிறது.

தொல்காப்பியத்திலே வள்ளிக்கூத்து, களநிலைக்கூத்து என்பன பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இவற்றுள் வள்ளிக்கூத்து என்பது ஒருவர் முருகனின் நாயகியாகிய வள்ளி போலப் பாவனை செய்து ஆடுவதாகும்.

நான்காம், ஐந்தாம் நூற்றாண்டிலேயே ஆகமநெறியிலமைந்த ஆலய வழிபாடு தமிழக மெங்கும் பொது வழக்காக இருந்தது. ஆலய வழிபாட்டிலே நடனத்திற்கு முக்கியமான இடம் கொடுக்கப்பட்டிருந்தது.

தேவாரங்களிலும், ஆழ்வார் பாடல்களிலும் தமிழ்நாட்டுக் கோயில்களிலே வழி பாட்டுக் காலங்களில் பெண்களால் ஆடலும் பாடலும் நிகழ்த்தப்பட்டமை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

நாட்டியக்கலை சோழர் காலத்தில் பெருவளர்ச்சி கண்டதாக சான்றுகள் கூறுகின்றன. நாட்டிய சாஸ்த்திரத்திலுள்ள 108 கரணங்களையும் சிற்பங்களாக இராஜராஜ சோழன் தஞ்சைக் கோயிலிலே ஏற்பாடு செய்திருந்தான். கோயிலின் விமானத்தின் உட்புறத்தில் 81 கரணங்கள் சிறப்பாக சிற்பங்களாக வடிக்கப்பட்டன. ஏனையன ஏதோ காரணங்களால் இடங்கள் ஒதுக்கப்பட்டும் வடிக்கப் படாமை துரதிஷ்டமாகும்.

12ஆம் நூற்றாண்டிலே கும்பகோணத்து சாரங்கபாணிக் கோயிலில் 108 கரணங்களும் ஒழுங்கின்றி அமைக்கப்பட்டிருப்பினும் அவற்

றின் கீழ் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பாகும்.

சிதம்பரத்திலே 108 கரணங்களும் உரு வாக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 13ஆம் நூற்றாண்டிலே தென்னிந்தியாவிற்கு வருகைதந்த சீனப் பிரதிநிதியான சென் - ஜீகுவர் மூவாயிரம் நடனமாதர் சோழரின் அரண்மனையில் நாள்தோறும் மாறிமாறிப் பணிபுரிந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

விஜய நகர நாயக்கர் ஆட்சி 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடைபெற்றது. இக்காலத்தில் நடனமாதருள் ஒரு சாரார் இராசதானிகளிலும் சமஸ்தானங்களிலும் வாழ்ந்தனர். இன்னோர் பிரிவினர் கோயில்க ளோடு சம்பந்தப்பட்டவர்களாக இருந்தனர்.

நவராத்திரி விழாக்காலத்தில் அரண் மனைகளிலும் கோயில்களிலும் ஒன்பது தினங் களும் காலையில் கடவுள் படிமங்களின் முன் நீண்ட நேரம் நடனமாடுவது வழக்கமா யிருந்தது.

இக்காலத்தில் கோயில்களில் தங்கி யிருந்து தேவதாசிகள் நித்திய, நைமித்திய கிரி யைகளின் போது உபசாரமாக நடனமாடுவது வழக்கமாக இருந்துள்ளது. தேர்த்திருவிழாவின் போது தேர் இழுத்துச் செல்லப்படும் போது நடனம், சங்கீதம், வாத்தியம் இடம்பெற்று ள்ளது. திருவாரூர்த் தேர்த்திருவிழாவின் போது 30 தேவதாசிகள் நடனமாடியதாக இம்மானு வேல் வெய்சூ எனும் ஜெசூற் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். இது போன்று 100 இற்கும் மேற்பட்டோர் குறிப்பிட்ட நேரங்களில் கடவுட் படிமங்களின் முன் ஆடினர் என பார்போஸா கூறியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் நடனக்கலை மறுமலர்ச்சி பெற்று உலகெங்கும் புகழ் பெற்றது. எது எவ்வாறாயினும் ஆரம்பம் முதல் இன்று வரை பரத நாட்டியக் கலையானது இந்து மதத்தின் ஆன்மிக அலைகளை ஆங்காங்கே இடைவிடாது எழுப்பி ஆன்மிக நெறிக்கு முக்கிய பங்கினை வகித்து வருவது மறுக்க இயலாத விடயமாகும்.

**ரஜிதா சின்னத்துரை**
*விரிவுரையாளர்,*
*கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

## இலங்கையின் பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்கள் பரம்பல்

| வகை | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அரச | 9731 | 3973847 | 219909 |
| தனியார் | 98 | 121764 | 5804 |
| பிரிவேனா | 738 | 62861 | 6129 |
| மொத்தம் | 10547 | 4158472 | 231824 |

(கல்வி அமைச்சு School Census - 2012)

# முத்தமிழ் மன்றம்



**(இ -வ) இருப்போர் :-** க. சுதேஸ் (தலைவர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே.கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), ச. லலீசன் (காப்பாளர்), அ. பௌநந்தி (உப காப்பாளர்), இ. ரமணன் (செயலாளர்). **(இ - வ) நிரல்1 :-** திருமதி வி.பிரவீனா, திருமதி. ஜெயதா லக்ஸ்மன், செல்வி. கோ. பத்மினி, திருமதி த. விஜயதர்சினி (உப செயலாளர்), யூ.மலர்மகள் (உப தலைவர்), செல்வி.க. கஜேந்தினி, திருமதி அ.மேரிமக்டலின், கே. ரோகினி, இ. சகுந்தலை, ச. நர்மலா, செ.பத்மாசினி **(இ - வ) நிரல் 2 :** ப. சசிவண்ணன், சி.ரஜனிகாந், அ.பிரதீபன், ச. கருணாகரன், மா. ஜெயக்குமார், ச. ஏகாட்சரம், பொ. காண்டீபன் (பொருளாளர்) தி. திவாகரன்.

# THE PROBLEMS OF TEACHING ENGLISH IN SCHOOLS

"I believe that education is the key to success for young students. As a teacher, I hope to motivate students in ascertaining their inner strengths and abilities and discovering what truly inspires them del to provide a stimulating learning environment that encourages students to trust their own opinions, while fostering confidence to realize their full potential"

-Linda Conway.

English holds a place of status in our country, even after more than six decades since Britishers left. Noway day it is still an urgent to discuss, what to teach and how to teach a foreign language taking into account the objective, social and professional needs of future specialists in our country. Besides businessmen, tradesmen, engineers, scientists and scholars all over the world must know English because it is the international means of exchange of information and experience. The students have to learn foreign language because students of any subject, any discipline must learn a foreign language. It is necessary to formulate its actual and realistic aims and tasks. Statistical evidence, experts' opinions affirm irrefutably that the system of teaching English in schools during the past two decades or more has been an ineffective exercise.

Whenever we come across any result we see the crucial role of English in decreasing the result. About 75% of school children continue to fail in English at the G.C.E [O/L] examination each year. The targeted beneficiaries of the whole system would therefore be the 75% failures who depend wholly on it. The impact on them has been virtually zero. Mostly the students who are in grade 11 find difficult to write a few grammatically correct sentences. The ten years of English teaching learning process becomes in question. The way English is taught in our schools today is to a great extent responsible for the failure. The aims of English education and teaching are certainly very lofty and there are inadequate means to realize them. The policy makers have forgotten that English is not the mother-tongue of Sri Lankans. We must accept I that the standard of its teaching has fallen vastly and that is why it is essential to know the problems of teaching English in Sri Lanka at undergraduate level in the Universities It is a curious situation that in the earliest stages of second language teaching in our schools the tremendous disparity between the "Learner's investment " in the first language and that in the second language is totally unrecognized At the time reading and writing in the native language Tamil or Sinhala are formally introduced in schools at about 5years of age consider the quantum of Learner's investment. The learner already has at his or her disposal and vast vocabulary. The child is able to name almost every object that he sees will know hundreds of verbs with their tenses

adjectives and adverbs. On the other hand when English is formally introduce as it used to be at about eight years this aspect of the "Learner's investment" is virtually zero. In the case of the native language the symbols in print the letters are familiar sounds the words have already been heard and spoken are meaningful. In the second language English every symbol in print and their sounds are strange and meaningless.

Let's see the Problems of Teaching English as a Second Language in detail.

Psychological Problems: - It is a widespread misunderstanding amongst students that English the most difficult of all subjects. The result and the failure candidates act as evidence to prove this fact. Hence most of the students look at this subject with a prejudiced vision and bear the fear through the year. The psychological depression results in poor performance at the end of the year.

Learning Methods: - The primary aim of teaching English at this stage should be to concentrate on the fundamental skills of the language ability of the student namely listening, speaking, reading and writing. It is of paramount importance that the teacher should know what his task is and what he is trying to achieved by teaching English. They go on with their job of teaching without knowing the difficulties of the learner. The teacher should be fully aware of the fact that his student's proficiency in English is not up to mark owing to the deteriorating standard of teaching in schools. Our objectives of teaching English should be practical and in keeping with the standard of proficiency achieved by our students. We should emphasize on the main aims of teaching English to develop the ability of students to read and understand. It is an overall practice to use Artificial or Indirect Method instead of Natural or Direct Method of teaching English. The beginning is in fact contrary to the most fundamental principles of language acquisition. We all learn our mother tongue very easily because we use Natural or Direct Method of learning. We follow this sequence 1. Listening. 2. Speaking. 3. Reading. 4. Writing. i.e. from the easiest skill to a difficult one. But in learning English as a foreign language we follow this sequence. 1. Writing. 2. Reading. 3. Speaking. 4. Listening. i.e. from the difficult skill to an easy one. The students do not cope with it. They switch themselves off and remain in that condition for ten years and unless they special attention eventually fail at the GCE[O/L] Examination even as testified by the results.

Translation Method: - Translation method is widely used in rural areas. It helps the learner to understand the content of the text but bars from learning the language. The main purpose of teaching the language is kept aside and the teaching of content and theme is given importance. Translation method is thus a great problem in learning English.

Mother Tongue Interference: - Most of the problems arise due to the interference of mother tongue in speaking English. Both the teachers and the students are very fluent in talking their own mother-tongue. But they forget the essence of pure language. When they speak in their mother-tongue they sometimes use English words in the midst of the sentences. They forget that every

language differs in stress, intonation and pronunciation.

Difference in English: - English is pronounced in a very different way from almost all other languages of the world. Every region of the world where English is spoken has a different accent. When you are teaching English as second language, you must bear in mind that your students will not know the difference between US English, Queen's English and the entire sundry English's of the world. This could lead to confusions.

By "lack of real method" It means that lessons must be restricted to what is called the "communicative method" or "communicative approach," based on a doctrine that is hard to describe because it is so fuzzy, but which seems to espouse "real life" versus "grammar and spelling," with the result that students never learn either proper grammar or proper spelling. Teachers spend their time on pointless dialogue as a fashionable teaching method, while students derive an illusory pleasure from the fact that they can easily become very fast speakers of very bad English.

Lack of quality and committed Teachers of English It is true that the quality of most teachers of English in terms of language competence leaves much to be desired. But blaming them will not solve the problem. The absence of a formal recruitment of English teachers has given away and exploited by political leaders by appointing their own supporters as teachers of English. University English department are helping to produce teachers of English for the nation but they were doing nothing instead they are producing experts in English literature. The "so called experts" fly away abroad in search of money and higher education.

Unfair distribution of schooling facilities and text books. Unfair distribution of schooling facilities are found between urban and rural sectors. The schools in rural areas remain understaffed as qualified teachers prefer to work in urban sectors. After implementation of 1997 reforms a new subject that is General English is introduced for GCE[A/L] from September 1999. This is a two year course with 450 teaching periods. As a result most of the trained teachers are allowed to teach the higher classes and at the same time non English teachers are allowed to teach at the primary level. It is neglected at the beginning. In addition the text books that are in use do not seem entirely suitable for the children. The text books in 80% of the cases are thus a constraint rather than a support.

No flexibility in teaching. The mastering of skill cannot be put into time based units unlike sections of factual information that can be imparted in given time. Departmental officials some principals and even parents demand that a given number of units be covered in a given period of time. The teachers' dilemma is the choice between disregarding their moral obligation to the students or disregarding departmental instructions. As a result teachers mostly remain passive and they can produce evidence of having done their part in the form of annual schemes, term notes and lesson plans to pacify the principals and the visiting officials. A successful learning experience not only depends on careful

planning,selecting of teaching techniques, strategies and an overall method, but on selecting appropriate instructional material. Critical evaluation and selection of materials may have a positive impact on motivation and performance. Moreover the teacher should be familiar with the interests, achievement. The ideal way to overcome these problems "Think in English and speak in English "and in the same way "Teach English through English" and it has to be practiced on activity based –learning by doing. As Nihal Cooray's advice -"provide teacher freedom to make changes" teaching English becomes easy and successful at the same time enjoyable too.

**S. Jeyarajah,**
*Lectruer,*
*Kopay Teachers' College.*

---

* இலங்கையில் உள்ள கல்வியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை 18.

| | |
|---|---|
| 1. ஊவா | 2. நில்வல |
| 3. மாவலி | 4. சாரிபுத்த |
| 5. சியன | 6. வவுனியா |
| 7. ஸ்ரீபாத | 8. அட்டாளைச்சேனை |
| 9. மட்டக்களப்பு | 10. பஸ்துன்ரட்ட |
| 11. புலதிசிபுர | 12. வயம்ப |
| 13. றுவன்புர | 14. றுகுணு |
| 15. யாழ்ப்பாணம் | 16. தர்கா நகர் |
| 17. ஹாபிற்றிகம | 18. பெனிதெனியா |

* ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை 08 (தற்போது இயங்குபவை)

| | |
|---|---|
| 1. கோப்பாய் | 2. மட்டக்களப்பு |
| 3. அட்டாளைச்சேனை | 4. கொட்டகல |
| 5. மகரகம | 6. பலப்பிட்டிய |
| 7. ஹிராகம | 8. உணவட்டுன |

(இவற்றின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்படுகின்றது)

# இந்து மாமன்றம்



(இ - வ) இருப்போர்:- த. கதிர்காமநாதன் (செயலாளர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), த. கோபாலகிருஸ்ணன் (காப்பாளர்), தி. நடனசபை (தலைவர்) **(இ - வ) 1ஆம் நிலை :-** திருமதி ஜெ. இ. அமலடன்ஸ்ரன், ஸ்ரீ. ரவிச்சந்திரன், பே. சுதாகரன் (உப செயலாளர்), திருமதி. அ. நளாயினி, திருமதி. ச. சசிகலா, திருமதி. சு. அரவிந்தன், றெ. வரதகிறிஸ்துராஜா **(இ - வ) 2ஆம் நிலை :-** ந. அகிலன், சி. சிறிகுமார், த. நாகநாதன், த. வித்தியானந்தன், ஸ்ரீ. ஸ்ரீபவான், ச. நகுலேஸ்வரன், சி. சத்தியகாந்தன், பா. உமாமகேஸ்வரசர்மா, திரு. செ. சபேசன்

# விளைதிறன் மிக்க பாடசாலை முறைமை மேம்பாட்டிற்கான புதிய சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் தொடர்பான செல்நெறிகள் - ஓர் நோக்கு

பாடசாலை ஒன்றின் விளைதிறன் என்பதன் கருத்து, பாடசாலை ஒன்றினால் தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதாகும். எனவே, பாடசாலையானது எதிர்பார்க்கும் இலக்கை அடைந்து கொள்ளுமாயின், அப்பாடசாலை விளைதிறன் மிக்க பாடசாலை எனலாம்.

இலக்குகளை அடைந்துகொள்ளும் போது அங்கு காணப்படும் பௌதிக மற்றும் மானிட வளங்களை வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்தல் அவசியமாகும். இதற்குச் சிறந்த திட்டமிடலும், பாடசாலையுடன் தொடர்பு படுகின்ற அனைவரினதும் பங்களிப்பும், அர்ப்பணிப்புமிக்க சேவையும் வேண்டப்படுகின்றது.

**விளைதிறன்மிக்க பாடசாலை பற்றிய கல்வியியலாளர்களின் வரைவிலக்கணங்கள்.**

விளைதிறன்மிக்க பாடசாலை என்பதற்கு காலத்துக்குக் காலம் பல்வேறு கல்வியியலாளர்களினால் விரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

♦ கெலின்ஜர் (1987) என்பவர் விளைதிறன் மிக்க பாடசாலை ஒன்றின் 07 பண்புகளைக் குறிப்பிட்டுள்ளார்.

i. தெளிவான இலக்கு இருத்தல்.
ii. நன்கு திட்டமிடப்பட்ட கலைத்திட்டம் ஒன்றின்மூலம் மாணவரின் திறன்விருத்தி செய்யப்படல்.
iii. ஆசிரியர் குழாமின் உயர்ந்த எதிர்பார்க்கையும், உயர்வான அர்ப்பணிப்பும் காணப்படல்.
iv. அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்ல தூண்டப்படக் கூடிய கவிநிலை நிலவுதல்.
v. பாடசாலைக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு உயர்மட்டத்தில் காணப்படல்.
vi. பாடசாலையின் பிரச்சினைகள் தீர்க்கப்படல்.

♦ Perkey and Smith (1983) (பர்க்கி, ஸ்மித்) என்போர் இவற்றுக்கு மேலதிகமாகப் பின் வரும் பண்புகளைக் குறிப்பிடுகின்றனர்.

i. பாடசாலை சிறப்பாக முகாமை செய்யப்படல்.
ii. ஆசிரியர் குழாமின் உறுதிப்பாடு காணப்படல்.
iii. ஆலோசனை வழங்கும் தலைமைத்துவம் இருத்தல்.
iv. கலைத்திட்டத்தைப் போதிக்கும் முறைமையான ஒழுங்கமைப்பு காணப்படல்.
v. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி நிலவுதல்.

♦ பீட்டர் மோட்மோர (UK, 1988) என்பவர் தனது ஆய்வின் மூலமாக விளைதிறன் மிக்க பாடசாலையின் பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

i. அதிபரின் நோக்கமும் தலைமைத்துவமும்.
ii. பிரதி அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும்.

iii. ஆசிரியர்களுக்கிடையிலான சிறந்த இடைவினையுறவு.

iv. அறிவு விருத்தியை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தலும், செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சூழலும்.

v. ஆசிரியர் - மாணவர் சிறந்த இடைவினையுறவு.

vi. அறிக்கையிடும் நடைமுறை.

vii. பெற்றோரினதும் பொதுமக்களினதும் ஒத்துழைப்பு.

viii. பாடசாலையின் ஆக்கபூர்வமான நிலைப்பாடு ஒன்று நிலவுதல்.

◆ எச். லெவின் மற்றும் ஈ. லொக்ஹீட் (1993) என்போர் பின்வரும் பண்புகளை முன்வைக்கின்றனர்.

i. பாடசாலையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படல்.

ii. ஆசிரியர்களின் பங்கு பற்றல்.

iii. சிறந்த தலைமைத்துவம்.

iv. மாணவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படல்.

v. வளமுகாமைத்துவம்.

vi. பாடசாலையின் சிறந்த கல்வி நிலை.

இவ்வாறு விளைதிறன் மிக்க பாடசாலை தொடர்பான பல்வேறு பண்புகள் குறிப்பிடப்படுகின்ற போதிலும், இலங்கைப் பாடசாலைகளில் குறிப்பிட்ட சிலவற்றில் மட்டும் இப்பண்புகள் காணப்படுகின்றது ஆயினும் பெரும்பாலான பாடசாலைகளில் இப்பண்பு நிலைகளில் மேலும் மேம்பாடு ஏற்பட வேண்டிய நிலை புலப்படுகின்றது. காலத்துக்குக் காலம் இலங்கையில் பல்வேறு கல்விச் சீர்திருத்தங்கள் மூலமும், கல்விச் சட்ட ஏற்பாடுகள், சுற்றுநிருபங்கள் மூலமும் விளைதிறன்மிக்க பாடசாலைக் கலாசாரத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் திட்டமிடல்களும் முன்வைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. ஆயினும், முழுமையான இலக்கினை அடைந்துகொள்ள முடியவில்லை. இலவசக் கல்வி, இலவச மதிய உணவு, இலவசச் சீருடை, புலமைப் பரிசில்கள் எனப் பல்வேறு நலன்புரிச் செயற்பாடுகள் அரசாங்கத்தினால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட போதிலும் க. பொ. த. சாதாரண தரம், உயர்தரம் என்பவற்றில் ஒரு பாடமேனும் சித்தி பெறத் தவறிய மாணவர்கள் இன்னும் கணிசமான அளவில் இருப்பதற்கான புள்ளி விவரங்கள் எமக்கு வெளிப்படுத்துகின்றன.

இதனால் ‘‘விளைதிறன்மிக்க பாடசாலை’’ எனும் இலக்கை அடைந்துகொள்வதில் இலங்கையில் இன்னும் பல்வேறு தடைகளும் சவால்களும் காணப்படுவது கண்கூடு. கல்வியில் சமவாய்ப்பு என்ற கோட்பாடு வெறும் கருத்தளவில் காணப்படுகின்றதோ? என்ற ஐயம் பல்வேறு மட்டத்தினரிடையேயும் நிலவுகின்றது.

இதனால், கல்வி அமைச்சு, இலங்கையின் சகல பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியின் பயனாக அதிசிறந்த பணபுசார், தரமிக்க கல்விக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான, தேசிய கல்விக் கொள்கைச் சட்டத்தின் ஊடாகப் பாடசாலை மட்டத்தில் தீர்மானங்களை எடுப்பதற்காக, பாடசாலைகளை மேலும் பலப்படுத்தும் நோக்கில் 2014.01.01 முதல் செயற்படும் வண்ணம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்புரீதியான, அளவுரீதியான, கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான 07/2013 இலக்க புதிய சுற்றுநிருபம் மற்றும் வழி காட்டலை வழங்கியுள்ளது.

இதன்மூலம் கல்வியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் உட்பட முழுப் பாடசாலைச் சமூகத்தையும் உள்ளடக்கிய வெளிப்படைத் தன்மை கொண்ட பங்கேற்பு முகாமைத்து

வத்தின் மூலம் விளைதிறன் மிக்க பாடசாலை முறையை உருவாக்குதல் என்ற இலக்கு எதிர் பார்க்கப்படுகின்றது.

இச்செயல்முறையின் முன்னோடியாக, இதுவரை காலமும் பாடசாலைகளின் அபி விருத்தி நோக்கில் வெளியிடப்பட்ட பின் வரும் சுற்றுநிருபங்கள் இரத்துச் செய்யப்படு கின்றன.

1) 1982 மார்ச் 30 ஆம் திகதிய 1982/2 இலக்க முடைய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தொடர்பான சுற்றுநிருபம்.
2) 2002.02.04 ஆம் திகதிய 2002/30 (HRD/PM/2002/30) இலக்கம் கொண்ட கல்வித் தரஉள்ளீடுகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் தொடர் பான சுற்றுநிருபம்.
3) 2006.03.21 ஆம் திகதிய 2006/16 ஆம் இலக்கமுடைய கல்வித்தர உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோ கித்தல் உயர்மட்டக் கல்விச் செயற்பாடு களுக்காக நிதியைச் செலவளித்தல் தொடர் பான சுற்றுநிருபம்.
4) 2008.09.15 ஆம் திகதிய 2008/35 ஆம் இலக்கமும் கொண்ட பாடசாலை மேம் பாட்டு வேலைத்திட்டம் தொடர்பான சுற்றுநிருபம்.

2014.01.01 முதல் புதிய சுற்றுநிருபமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச் சுற்றுநிருபத்தின் நோக்கங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

1) தகவல்கள், விபரங்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் திட்ட மிடல் செயற்பாடுகள் ஊடாக அபி விருத்தியின் பாடசாலைகளை வழிப் படுத்தல்.
2) பாடசாலைகளின் அடிப்படைத் தேவை களை முன்னுரிமைப்படுத்தி அத்தேவை களைப் பூர்த்தி செய் வதற்கு வழிப்படுத்தல்.
3) பாடசாலைக் கல்வியின் பண்புசார் தரத்தை விருத்திசெய்வதற்காக, பாடசாலையில் உள்ள வளங்களைப் பயன்மிக்கதாகப் பயன்படுத்தல்.
4) பாடசாலையின் முழுமையான வினைத் திறனையும் உற்பத்தித்திறனையும் மேம் படுத்தல்.
5) பங்கேற்பு முகாமைத்துவத்தின் மூலம் சுய தீர்மானங்களை எடுக்க பாடசாலைகளை வலுவூட்டுவதற்குப் போதுமான நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிதி ரீதியான அதி காரத்தைப் பாடசாலைகளுக்குப் போதி யளவு வழங்குதல்.
6) பாடசாலை முகாமைத்துவத்தில் வெளிப் படைத் தன்மையையும் நெகிழ்வுத் தன்மை யையும் உறுதிப்படுத்துவதன் மூலம் பாட சாலையின் வகை கூறல் மற்றும் பொறுப் புக்களை உறுதிப்படுத்தல்.
7) பாடசாலை அபிவிருத்திக்காகவும் சிறந்த நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் பாடசாலைகள் மற்றும் சமூகத்திற்கிடை யேயான பரஸ்பர நல்லுறவினைப் பலப் படுத்தல்.

**கட்டமைப்புரீதியான மாற்றங்கள்**

விளைதிறன் மிக்க பாடசாலை முறைமை மேம்பாட்டிற்கான புதிய செல்நெறிகளூடாக பல்வேறு கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் ஏற்படும் அவையாவன:

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (பா.அ.ச.)**

இது தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக, பாடசாலையில் கல்வி பயன்பெறு வோரின் கல்வி எதிர்பார்ப்புக்கள் மற்றும் நோக்கத்தினை நிறைவேற்றக்கூடியவாறும், பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தில் சமூக, கலாசார மற்றும் பொருளாதார ரீதியில் விளை திறன்மிக்க மாற்றங்களை ஏற்படுத்துவதிலும் அனுசரணையாக இருக்கும் விதத்தில் ஸ்தாபிக் கப்படும். இதில் பின்வரும் அடிப்படைக் கட்டமைப்புக் காணப்படும்.

1) அதிபர் (தலைவர்)
2) ஆசிரியர்கள் - ஒரு ஆசிரியர் பொருளாளர்.
3) பெற்றோர்கள்/ பாதுகாவலர்கள். இவர் களில் ஒருவர் செயலாளர்.

4) பழைய மாணவர்கள்
5) வழிகாட்டுபவர் என்ற வகையில் வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது கோட்டக் கல்விப் பணிமனையின் பிரதிநிதி.

இதன்மூலம் அங்கத்துவம் பரவலாக் கப்படுத்தப்பட்டுள்ளது.

**அங்கத்துவக் கட்டணம்**

அதிபர், ஆசிரியர்கள், வலயக் கல்விப் பிரதிநிதி தவிர்ந்த ஏனைய அங்கத்தவர்கள் அனைவரும் வருடத்திற்கு 50 ரூபாவுக்கு குறை யாதவாறும் 600 ரூபாவிற்கு மேற்படாத வாறும் அங்கத்துவப் பணம் செலுத்தப்படல் வேண்டும். இதன்மூலம் அடிப்படை நிதி வாய்ப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

**பாடசாலை அபிவிருத்திக்குழு (பா.அ.கு.)**

இதில் பாடசாலை அதிபர், ஆசிரிய பிரதிநிதிகள், பெற்றோர் பிரதிநிதிகள், பழைய மாணவர் பிரதிநிதிகள், வலயக் கல்விப்பணி மனைப் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் அங்கத்து வம் பெறுவர்.

**செயலாளர்**

- பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெரும்பான்மை விருப்பின் பேரில் பெற்றோரில் ஒருவர் நியமிக்கப் படுவர்.

**பொருளாளர்**

- ஆசிரியர் ஒருவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினைத் தழுவும் வகையில் நியமிக்கப்படுவர். இவர் பல்வேறு ஆவணங்கள், அறிக்கைகளை முறையாகப் பேணுவதுடன் பரி சீலனைக்குக் கோரும்போது சமர்ப் பிக்கக் கூடிய நிலையில் இருத்தல் வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திக் குழுவானது (SDC) பாடசாலையைத் திட்டமிடல், பாட விதானங்கள், இணைப்பாட மற்றும் பாட வெளிக்களச் செயற்பாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பாடசாலையின் மூலதனச் சொத்து முகாமைத்துவம் சமூகத் தொடர்புகளைக் கட்டியெழுப்பல் போன்ற வற்றை விளைத்திறனுடன் மேற்கொள்ள வேண்டும்.

**கணக்காய்வு**

இங்கு உள்ளகரீதியான சமூகக் கணக் காய்வு வெளியகரீதியான அரச கணக்காய்வு எனும் இரண்டு கணக்காய்வுகள் மேற்கொள் ளப்படும். இதன்மூலம் கணக்குகளில் நம்பிக்கைத் தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பாடசாலை முகாமைத்துவக் குழு (SMC)**

பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் தயாரிக்கப்பட்ட வியூகத் திட்டமிடல்கள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், செயற் றிட்டங்கள் என்பவற்றை நிறைவேற்றக் கூடியவாறு உருவாக்கப்படுகின்ற அமைப்பே இதுவாகும்.

இக்குழுவானது பின்வருமாறு உள்ளடக் கத்தைக் கொண்டிருக்கும்.

1) அதிபர் - தலைவர்
2) நிர்வாகம் மற்றும் அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதி அதிபர்கள்.
3) உதவி அதிபர்கள் / பிரிவின் பொறுப் பாளர்கள்/ பாடப் பொறுப்பாளர்கள்.
4) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆசிரிய உறுப்பினர்கள்.

இக்குழுவில் உயர்ந்த பட்சம் 12 அங்கத் தவர்கள் காணப்படுவர். பாடசாலை முகாமைத் துவக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் செயலா ளராக நியமிக்கப்படுவர். பாடசாலையின் பல்வேறு தரங்கள் பிரிவுகளுக்கேற்ப பிரதி நிதிகள் தெரிவு செய்யப்படுவர். இதன்மூலம் வினையாற்றல் மிக்க முகாமைத்துவக் கட்ட மைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**வகுப்பு வட்டம், உபகுழு மற்றும் செயற்றிட்டக்குழு**

பாடசாலையில் அறியப்பட்ட பிரச் சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்படி குழுக்கள்

ஸ்தாபிக்கப்படும். இதன்மூலம் ஏற்படுகின்ற பிரச்சினைகள், தடைகள், சவால்களுக்கு உடனுக்குடன் தீர்வுகாண சந்தர்ப்பம் ஏற்படுத் தப்பட்டுள்ளது.

**முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்**

பாடசாலையின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற அபி விருத்தித் திட்டம், வேலைத்திட்டம் செயற் றிட்டம் என்பவை தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் வருடாந்தம் கூட்டப்படுதல் வேண்டும். இது பாடசாலையினால் மேற் கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கான பிரதிபலிப்பினை அறிவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பாடசாலை நிதி முகாமைத்துவம்**

பாடசாலையின் நிதிச் செயற்பாடுகளை ஒழுங்கான முறையில் நிறைவேற்றுவதற்காக பாடசாலை அபிவிருத்திக் கணக்கு என்ற பெயரில் இதுவரை காணப்பட்ட சகல வங்கிக் கணக்குகளும் நிறுத்தப்பட்டு இப்புதிய வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு நிதிமுகாமைத்துவம் மையப்படுத்தப்பட்டுள்ளது.

**பாடசாலை நிதி மூலங்களாக பின்வருவன குறிப்பிடப்படுகின்றன.**

1) மத்திய அரசின் மற்றும் மாகாண சபையின் நிதி
2) வெளிநிதி (அரசசார்பற்ற நிறுவனங்கள், பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும் பிகள் அன்பளிப்புக்கள்)
3) ஏனைய வகைகளில் இருந்து கிடைக்கும் நிதிகள் (பாடசாலைக் காணிக் கட்டட வருமானம், அங்கத்துவம் உற்பத்தி செய்யப் பட்ட கற்றல் உபகரண விற்பனை வரு மானம்)

* **பாடசாலை நிதிப்பயன்பாட்டுத் துறைகள்**

பாடசாலை நிதிப்பயன்பாட்டுத்துறை களாக மீண்டெழும் செலவினம், மூலதனச் செலவினம் என இருவகைகளில் செலவின விடய இலக்கம் மற்றும் விபரங்களுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் நிதி அறிக்கைகள் ஒருமுகப்படுத்தப்பட்டு நிதி முகாமை இலகுபடுத்தப்பட்டுள்ளது. இத்த கைய விளைதிறன் மிக்க பாடசாலையின் மேம்பாட்டுக்காகப் பல்வேறு கட்ட மைப்பு ரீதியான திட்டங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. இதன்மூலம் பின்வரும் மேம் பாடுகள் பாடசாலைகளில் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

1) மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை விருத்திசெய்து கொள்வதன் மூலம் பொருத் தமான கற்றற் சூழலை உருவாக்கல்.
2) பாடசாலையின் முழுமையான முன்னேற் றம் பற்றிய சமூக விழிப்புணர்வு.
3) சமூகத்தின் தேவைப்பாடுகளுக்கு மிகவும் பொருந்தக்கூடிய பாடசாலையாக உரு வாதல்.
4) பாடசாலை மீதான அபிமானம் கொண் டுள்ள செயற்றிறன் மிக்க பாடசாலைச் சமூ கத்தினை உருவாக்கல்.
5) வெளிப்படைத் தன்மையும் நெகிழ்வுத் தன் மையும் கொண்ட முகாமைத்துவம்.
6) அறிவை அடிப்படையாகக் கொண்ட தொழிற் தேர்ச்சியைத் தொடர்ந்து இற்றைப் படுத்தி வருகின்ற பண ரீதியாகச் செயற்படு கின்ற ஆளணியினரை உருவாக்கல்.
7) பாடசாலையின் ஆளணியின் தரத்தை நாளாந்தம் மேலும் விருத்தி செய்வதற்கான உள்ளக மதிப்பீடு மற்றும் பின்னூட்டல் வேலைத்திட்டம்.
8) ஆசிரிய அபிவிருத்தி வேலைத் திட்டம் செயல்வழி ஆய்வு உள்ளிட்ட புத்தூக்க வேலைத்திட்டங்கள்.
9) பாடசாலை மாணவர்களின் கல்விப் பிரச் சினைகளை இனங்காண்பதன்மூலம் வேலை உலகுக்குப் பொருத்தமான வகை யில் கல்வி தொழில் மற்றும் ஆலோச னைகள் வழங்கும் வேலைத்திட்டம் உள்ளிட்ட கல்விப் பேறுகளைப் பெற உதவுதல், வழிகாட்டல்கள்.

10) நம்பிக்கைத் தன்மையுள்ள நிதி முகாமை யும் மேற்பார்வையும்
11) பிரச்சினைகளை உடனுக்குடன் பரிசீலனை செய்து பரிகாரம் காணும் ஆற்றல்.

**முடிவுரை.**

தொகுத்து நோக்குகையில் இலங்கையில் விளைதிறன்மிக்க பாடசாலைகளை உருவாகுவதற்கு காலத்துக்குக் காலம் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதற்காகப் பல்வேறு சுற்றுநிருபங்களும், வழிகாட்டல்களும், செயலமர்வுகளும் மேற்கொள்ளப்பட்டு பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டன. இந்தவகையில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய செல்நெறிகள் அனுபவங்கள், ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இதற்காக பல்வேறு கட்டமைப்பு முறைகளில் பல்வேறு உபாயங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய விளைதிறன் மிக்க பல திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இதன்மூலம் பல முன்னேற்றங்கள் பாடசாலைகளில் ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும், பாடசாலைகளின் வினையாற்றல் மிக்க செயற்பாட்டின்மூலமும், அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடு, சமூகத்தின் பாடசாலை மீதான அக்கறையும் விழிப்புணர்வும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான சிறப்பான இடைவினையுறவும், சகலரும் ஒன்றுசேர்ந்து பங்குபற்றும் நிலையும் மேம்பாடு அடையும்போது தான் சகல பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியின் பயனாக அதிசிறந்த பண்புசார் தரமிக்க கல்விக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்று 'விளைதிறன் மிக்க பாடசாலை முறைமையை மேம்படுத்தல்' என்னும் கருத்துநிலை செயல் மிக்கதாக அமையப் பெறும். இல்லையெனில் அது வெறும் கனவு நிலையாகவே அமைந்து விடும்.

**உசாத்துணை நூல்கள்**

1. சின்னத்தம்பி, மா. (2009) பாடசாலை முகாமை செய்தல் சமகால அணுகுமுறை, சேமமடு பொத்தகசாலை, கொழும்பு.
2. தனராஜ், தை. (2010) தேசிய கல்வி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் உள்ளடக்கம், அகவிழி, கொழும்பு.
3. கல்வியின் புதியபோக்கு (2010), கல்வி அமைச்சு, கொழும்பு.
4. பாஸ்கரன். க. (2014 தை, பங்குனி) கடல், மதிகலர்ஸ் நிறுவனம், யாழ்ப்பாணம்.
5. சந்திரசேகரன். சோ. (2011 டிசெம்பர்), இலங்கையில் பாடசாலைக் கல்விச் செலவு, ஆசிரியம், கொழும்பு.
6. மன்சூர், எம்.கே.எம், (2005), கல்வித்தத்துவங்கள், அக்கரைப்பற்று.
7. கல்வியின் அடிப்படைகளும் பாடசாலை முகாமைத்துவமும் கைந்நூல், (2010), தேசிய கல்விநிறுவகம், மகரகம.
8. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியிலான, அளவு ரீதியிலான, கட்டமைப்பு ரீதியிலான அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டற் கைந்நூல், (2014), கல்வி அமைச்சு, கொழும்பு.

**த. கோபாலகிருஷ்ணன்**
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# கிறிஸ்தவ மன்றம்



**(இ - வ) இருப்போர் :-** ஜெ. தவக்குமார் (தலைவர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்) வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), திருமதி. பி. ஆர், ஜெ. பீரிஸ் (காப்பாளர்), திருமதி. அ. மேரிமெக்டலின் (செயலாளர்)

**(இ - வ) 1 ஆம் நிரல் :-** திருமதி அ. யேசுநேரன்குரூஸ், லெ. சியாமளா, ரா. லூர்த்துமேரி, ப. யமுனா, ஹொ. மேரிறோசா, ஜெ. தர்சினி, எ.கற்பகம், செல்வி. யோ. ஜெயராலின் தனுசியா (உப தலைவி), செல்வி. ஜெ. ஜெறோமி

**( இ - வ) 2 ஆம் நிரல் :-** திருமதி. ஒ. துஷ்யந்தி, செல்வி. இ. மரியநீடா, திரு.ரா. செல்வநாதன், சூ. பரஞ்சோதி, அ. யஸ்ரீன், ஜே. யூட்நிறஞ்சன் (உப செயலாளர்), தி. ஜெ. செ. செல்வச்சந்திரன், ப.ஸ்ரீசங்கர் (பொருளாளர்), வி. காசினி, கோ. ஸ்கொலஸ்ரிகா ரெஜினா

# விஞ்ஞான முகாமைத்துவ அணுகுமுறையினூடாகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையை அடையாளப்படுத்துதல்

**முகாமைத்துவக் கோட்பாடுகள் ஓர் அறிமுகம்**
**Introduction to the Management Theories**

இன்று முகாமைத்துவம் என்பது பொதுவான பணியாகும். இது குடும்பம், பாடசாலை, வைத்தியசாலை என மனிதருடன் தொடர்புபட்டிருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் தொடர்புற்றிருக்கின்றது.

முகாமைத்துவம் தொடர்பாகக் கிரேக்க காலந்தொட்டு இன்றுவரை பல்வேறு அறிஞர்களும் தங்கள் கருத்துக்களை முன் வைத்து வருகின்றனர். ஆயினும் முகாமைத் துவக் கோட்பாடுகள் என்ற ரீதியில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஐரோப்பா விலும் ஐக்கிய அமெரிக்காவிலும் கோட்பாடு கள் தோற்றம் பெற்றன. இது கைத்தொழி லாக்க நடைமுறையில் புதியவைகளை அறிந்து கொள்ள எத்தனிக்கின்ற பல்வேறு நடை முறைகளைக் கொண்டிருந்தது. இதனடிப் படையில் முகாமைத்துவ அணுகு முறைகளை

- பண்டைய அணுகுமுறை
- நடத்தை அணுகுமுறை
- முகாமை விஞ்ஞான அணுகுமுறை
- முறைமை அணுகுமுறை
- நிகழ்தகு அணுகுமுறை
- ஜப்பானிய அணுகுமுறை


என வகைப்படுத்தி நோக்கமுடியும். இவற்றுள் பண்டைய அணுகுமுறையை (Classical Approach) மேலும் மூன்று வகுதிக்குள் நோக்குவர். அவையாவன

- விஞ்ஞான அணுகுமுறை (Scientific Approach)
- நிர்வாக முகாமை அணுகுமுறை (Admini - strative Approach)
- அதிகார அணுகுமுறை (Bereaucratic Approach)

என்பனவே அவையாகும்.

இங்கு எவ். டபிள்யு. ரெயிலர் (1856 1915) கூறிய விஞ்ஞான அணுகுமுறை குறித் தும் அதனைப் கோப்பாய் ஆசிரிய கலாசாலை யில் பிரயோகிப்பது குறித்தும் வாதிக்கப்படு கின்றன.

**விஞ்ஞான முகாமைத்துவ அணுகுமுறை குறித்து ரெயிலரின் கருத்துக்கள்**
**Tailor's Theory on Scientific Management Approach**




விஞ்ஞான முகா மைத்துவம் தொடர்பான கருத்தை முதன் முதலில் முன் வைத்தவர் Fredrick Winslow Taylor என்பவராகும். இதனால் இவர் "விஞ்ஞான முகா மையின் தந்தை" (Father of Scientific Management) என்று போற்றப்படுகின் றார். 1856ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பென்சில்வேனியா எனும் இடத்தில் பிறந்த இவர் 1878ஆம் ஆண்டி லிருந்து நிறுவனங்களில் பணியாற்றத் தொடங்கினார். இவர் முதலில் இயந்திர இயக்குநராகவும் பின்னர் முகாரியாகவும் அடுத்து பிரதம லிகிதராகவும் ஈற்றில் முகாமை ஆலோசகராகவும் கடமையாற்றினார். இவர் பல்வேறு கம்பனிகளில் பணியாற்றிய காரணத் தால் பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டதுடன் பலவகையான அனுபவங்களையும் பெற்றிருந்தார்.

தனது சொந்த வாழ்வில் பெற்ற அனுபவத்தைப் பயன்படுத்தியே விஞ்ஞான முகாமைத்துவத்துவங்கள் "(The Principle of Scientific Management) எனும் நூலை எழுதினர். இதனூடாக அறிவியல் ரீதியான முகாமைத்துவக் கருத்துக்களை முன்வைத்தார். முகாமையானது தெளிவற்ற எண்ணங்களில் தங்கியிராது ஒரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டமைய வேண்டும் என முதன் முதலில் வாதாடியவர் F.W.Taylor என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் நேர இயக்கப்படிப்பு (Time and Motion Study) மீது மிகுந்த கவனம் செலுத்தினார். ஒரு நிறுவனத்தில் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாடுகளும் முறையான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படின், சரியான முறைகளையும் சரியான நியமங்களையும் சரியான நேரகாலத்தையும் கண்டறிய உதவும். ஒரு முகாமையின் கடமையானது தொழிலாளர்களைத் தெரிவுசெய்து, பயிற்சியளித்து, அவர்கள் வேலைகளை சரியாக மேற்கொள்வதற்கு உதவுவதாகும். புதிய முறைகளை ஏற்றுக் கொள்வதும் அதற்கேற்ப செயற்பாடுகளை மேற்கொள்வதும் தொழிலாளர்களின் பொறுப்பாகும். விஞ்ஞான அணுகுமுறையானது ஒவ்வொரு வேலையையும் சிறுசிறு வேலைகளாகப் பிரித்து அதனை நிபுணத்துவ மிக்க வெவ்வேறு ஊழியர்களிடம் ஒதுக்கிக் கொடுப்பதை அடிப்படையாகக் கொண்டது. இங்கு தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்படுவதனால், தேவையற்ற பௌதிகரீதியான விரயங்கள் நீக்கப்பட்டு மிக வினைத்திறனாகச் செயற்படமுடிகிறது.

நிறுவன செயற்றிறனானது குறிப்பிட்ட செயற்பாட்டுடன் தொடர்புடைய நேரத்தையும் இயக்கத்திறனையும் இழிவுபடுத்துவதன் மூலம் அடையப்படமுடியும் என்பதனை வலியுறுத்துகிறார். எனவே, இவரது கருத்தின் படி கொடுக்கப்பட்ட கடமை ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளின்படி நிறைவேற்றப்பட முடியும் என நம்பினார் என்றும் அதில் ஒரு வழி மட்டும் பொருட்களினதும் மனிதர்களினதும் நேர் இயக்கத்தினையும் இழிவுபடுத்தும் என்பது இவரது முடிவு ஆகும்.




F.W.Taylor ஐத் தொடர்ந்து Henry L. Gantt, Frank, Lillian Gilberth ஆகியோரும் விஞ்ஞான முகாமைத்துவக் கருத்துக்களை முன்வைத்தனர். விஞ்ஞான முகாமைத்துவ அணுகு முறையானது, விஞ்ஞான முறைமையிலான வேலைப் படிப்பு, கருவிகள், செயல் திறன் நியமம் என்பவற்றினூடாக வினைத்திறனான செயற்பாட்டை விருத்திசெய்தலை அடிப்படையாகக் கொண்டது. முகாமை முறையை விருத்தி செய்வதற்காக அவதானம், அளவீடு, பரிசோதனை, பகுப்பாய்வு, பிரதான கருவிகளுக்கான காரணத்தன்மை, நியாயத்தன்மை என்பவற்றை F.W.Taylor வலியுறுத்தினார். F.W.Taylor ஆல் பிரேரிக்கப்பட்ட விஞ்ஞான முகாமைத்துவத்தின் அடிப்படை மூலங்கள் பின்வருமாறு:

I. செயற்றிறனுக்கான நியமங்களைத் தீர்மானித்தல் - Determination of Standards of Performance
ii. தொழிற்பாட்டு ரீதியான மேற்பார்வை functional Foremanship
iii. முகாமையின் பொறுப்புக்கள் - Responsibilities of Management
iv. கூலிக் கொடுப்பனவில் வேறுபடுத்தப்பட்ட துண்டுக்கூலி முறைமை - Differentials Piecework System of Wage Payment

செயற்திறனுக்கான நியமங்களைத் தீர்மானித்தல் Determination of Standards of Performance

ஒரு மணித்தியாலத்தில் அல்லது ஒரு நாளில் எட்டு அல்லது பத்து மணித்தியாலங்களுக்குள் எவ்வளவு வேலை செய்யப்பட வேண்டும் எனத் தொழிலாளர் எவரும் அறிந்திருக்கவில்லை என்பதை F. W.Taylor தனது அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்டார். நியம செயற்றிறன் தீர்மானமானது ஒரு சராசரித் தொழிலாளியால் செய்யப்படுகின்ற வேலையின் அளவைத் தீர்மானிப்பதற்கு அல்லது ஓர் அளவு கோலாகத் தொழிற்படுவதற்கு அடிப்படையாக அமைகிறது. Midvale Steel Company எனும் நிறுவனத்தில் F.W. Taylor முகாரியாகப் பணியாற்றிய காலத்தில் தற்போது புகழ் பெற்றிருக்கும் "நேர இயக்கப் படிப்பு" முறையை அறிமுகஞ் செய்தார். நேர இயக்கப்படிப்பு என்பது எல்லா செயற்பாடுகளினதும் பகுப்பாய்வுடன் தொடர்புடையது. இயக்கம் அல்லது அசைவு என்பது ஒவ்வொரு வேலையுடனும் தொடர்புடையது. பகுப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் நேரக்கணிப்பீட்டின் பொருட்டு ஒவ்வொரு வேலையினது அசைவும் ஒரு நிறுத்தற் கடிகாரத்துடன் இணைக்கப்படுகிறது. செயற்றிறன் நியமங்கள் ஒவ்வொரு வேலைக்கும் எடுக்கப்பட வேண்டிய நேரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. இது ஒவ்வொரு வேலைக்கும் தேவைப்படுகின்ற நேரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றமையால் தேவையற்ற தாமதங்கள் தவிர்க்கப்படுகின்றன. இயக்கப் பகுப்பாய்வானது ஒவ்வொரு செயற்பாட்டினையும் இனங்காணலுக்கு வழிகாட்டுவதுடன் தேவையற்ற அசைவினை இல்லாமல் செய்கின்றது.

### தொழிற் பாட்டு ரீதியான மேபார்வை
### Functional Foremanship

ஒவ்வொரு தொழிலாளியும் தனது விருப்பத்திற்கேற்ப தனது வேலையைத் திட்டமிட்டு நடாத்தியமையால் தொழிற் சேதாரமும் வினைத்திறனின்மையும் ஏற்படுகின்றது என F.W.Taylor தான் பணியாற்றிய நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட அனுபவத்திலிருந்த அறிந்து கொண்டார். இதனால் கடுமையான மீள் ஒழுங்கமைப்பு அல்லது மேற்பார்வையை வலியுறுத்தினார். இவரது முறைமை இரு எண்ணக்கருக்களை உருவாக்கியது.

i. செயற்பாட்டை மேற்கொள்வதிலிருந்து திட்டமிடலை வேறுபடுத்தல்.

ii. தொழிற்பாட்டு ரீதியான கட்டுப்பாடு

ஒவ்வொரு தொழிற்பாட்டு முகாரியும் ஒரு குறிப்பிட்ட வகையான வேலையிலேயே நிபுணத்துவமிக்கவராக இருத்தல் வேண்டும். தொழிலாளி வேலையைச் செய்பவராகவே இருப்பார். அவரது வேலை பல்வேறு தொழிற்பாட்டு முகாரிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு வேலையைச் செய்ய முன்னரே அதனை நன்கு திட்டமிட வேண்டும் என F.W. Taylor வலியுறுத்தினார். இதன் பெறுபேறாக திட்டமிடல் செயற்பாட்டைச் செய்ய முடிவதுடன், தொழிற்சாலைப் பொறியியலாளர்கள், தரக்கட்டுப்பாட்டு நிபுணர்கள், பாதுகாப்பு நிபுணர்கள் போன்ற நிபுணத்துவம்மிக்கவர்களால் செய்யப்படுகின்ற வேலையை மேற்பார்வை செய்யவும் முடிகிறது. இது முகாமைக் கிரயத்தை அதிகரித்தாலும்கூட செயற்பாட்டுக் கிரயத்தைக் குறைக்கின்றது.

### முகாமையின் பொறுப்புக்கள்
### Responsibilities of Management

திட்டமிடல், நெறிப்படுத்தல், ஒழுங்கமைத்தல் போன்ற கருமங்களை முகாமையாளர்கள் பொறுப்பேற்க வேண்டுமென F.W.Taylor விரும்பினார். மேலும் மேற்படி கருமங்கள் விஞ்ஞான முறைப்படி முகாமையாளர்களால் செயற்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டார். அவையாவன,

i. எல்லா செயற்பாடுகளையும் முகாமையாளர் பகுப்பாய்வு செய்து விஞ்ஞான முறையிலான செயற்பாட்டு முறைகளை விருத்திசெய்தல் வேண்டும். இதனை ஒவ்வொரு செயற்பாட்டிலும் அடங்கும்

ஒவ்வொரு அம்சத்துக்கும் விருத்திசெய்வ தால் இது செயற்றிறன் அளவுகோலுக்குப் பதிலீடாக அமையும்.

ii. விஞ்ஞான முறைப்படி தொழிலாளர் ஆட்சேர்ப்பு நடாத்தப்பட்டு, பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.

iii. விஞ்ஞான முறைப்படி விருத்தி செய்யப் பட்ட முறைமைக்கு அமைவாக வேலை செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தொழிலாளர்களிடையே இயைபாக்கம் கொண்டுவரப்படல் வேண்டும்.

iv. எல்லா வேலைகளையும் முகாமையாளர் கவனத்தில் கொண்டு அதில் எவை சிறப் பாகப் பொருந்தி வருகின்றது எனக் கவனித் தல் வேண்டும்.

இவையனைத்தும் திட்டமிடல், ஒழுங் கமைத்தல் மற்றும் நெறிப்படுத்தலுடன் தொடர்புடையனவாகும்.

**கூலிக் கொடுப்பனவில் வேறுபடுத்தப்பட்ட துண்டுக்கூலி முறைமை**

**Differentials Piecework System of Wage Payment**

தொழிலாளர்களிடமிருந்து உத்தம உற்பத் தியைப் பெற்றுக்கொள்வதற்காக "வேலைப் படிப்பு" (Work Study) எனும் விஞ்ஞான முறை F.W.Taylor ஆல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி உற்பத்தியை மேற்கொள்வதற்கான புதிய முறைகளும் அதற்குத் தேவைப்படும் நேரங்களும் வரையறுக்கப்படும். நிறுவனத் திலுள்ள இயந்திரங்களுக்கும் மூலப்பொருட் களுக்கும் ஏற்ப தொழிலாளர்களின் எண் ணிக்கை வரையறுக்கப்படும்.

கடுமையாக உழைக்கும் தொழிலா ளிக்கு உரிய வேதனம் கொடுக்கப்படவில்லை என்பதைக் கண்டு கொண்ட F.W.Taylor "துண்டுக் கூலி" முறையை அறிமுகப்படுத்தினார். இதன் பிரகாரம் ஒரு தொழிலாளிக்கு அவரால் உற்பத்தி செய்யப்படும் அலகுகளுக்கு ஏற்பவே கூலி வழங்கப்படும். கூடிய அளவில் உற்பத் தியை மேற்கொள்ளும் தொழிலாளி அதிக கூலி யைப் பெற்றுக் கொள்ள இது வழி வகுக்கப்படு வதுடன் நிறுவனத்தின் விளைதிறனையும் இம் முறைமை அதிகரிக்கும். இம் முறையினால்,

a) ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவரது ஆற்றலுக்குப் பொருந்தக்கூடிய வகையில் ஆகக்கூடிய தரத்திலான வேலையை வழங்கல்.

b) ஒவ்வொருவருக்கும் ஆகக் கூடியளவு வேலையை வழங்கல். இதில் சிறப்பானவர் சிறப்பாக வேலையைச் செய்வார்.

c) சிறப்பாகப் பணியாற்றிய தொழிலாளிக்கு சராசரியிலிருந்து 30 % தொடக்கம் 100 % வரையான வேதன அதிகரிப்பை வழங்கல்.

மேற்படி முறையே இந்நாளில் ஊக்கு விப்புக் கொடுப்பனவு (Incentive Payment) என நடைமுறையிலுள்ளதைக் காணலாம். இம் முறையின் மூலம் நிறுவனத்தின் உற்பத்தியும் இலாபமும் அதிகரிக்கும்.

**F.W.Taylor இன் விஞ்ஞான முகாமைத்துவத் தத்துவங்கள்.**

1. ஒருவரது வேலையுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் விஞ் ஞான முறைப்படி புதிய முறைகளைக் கண்டறிவதும், அவற்றிற்கேற்ற நியம நேரத்தை வகுத்துக் கொள்ளல்.
2. விஞ்ஞான முறையிலே ஆட்சேர்த்தல் கருமத்தை மேற்கொள்ளல். இதன்படி கல்வி, அனுபவம், விவேகம் ஆகியவை கவனத்தில் கொள்ளப்பட்டு ஒருவருக்கு வேலை வழங்கப்படும். இவர்களுக்கு விஞ்ஞான முறையில் பயிற்சியளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தல். இதன் படி ஒருவருக்கு ஒரு வேலையை ஆற்று வதற்கான பயிற்சி மட்டும் தொடர்ந்து வழங்கப்படும்.
3. முகாமைக்கும் ஊழியர்களுக்கும் இடையே நல்லுறவுகளைக் கட்டியெழுப்பல். இதனால்

முதலாளி தொழிலாளி நல்லுறவு மேம்படுவதுடன் முரண்பாடுகள் இயலு மானவரை குறைக்கப்படும்.

4. முகாமையாளருக்கும் தொழிலாளருக்கும் இடையே வேலையையும் பொறுப்பையும் சமனாகப் பகிர்தல். வேலைப் படிப்பு, கருவிகள், பொருளாதார ஊக்குவிப்புக்கள் ஊடாக உற்பத்தியின் வினைத்திறனை மேம்படுத்தல்.

**F.W.Taylor இன் விஞ்ஞான முகாமைத்துவத் தத்துவங்களைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பிரயோகித்தல்**

கோப்பாய் ஆசிரிய கலாசாலை தற்போது (2012 - 2014 கல்வியாண்டிற்காக) 407 ஆசிரிய மாணவர்களை 13 கற்கை நெறிகளுக்காக உள்வாங்கியுள்ளது. இங்கு கல்விசார் நிரந்தர ஆளணியினராக எழுவர் மட்டும் கடமையாற்றுகின்றனர். ஏனைய பத்தொன்பது பேர் பாடசாலைகளில் இருந்து இணைக்கப்பட்ட விரிவுரையாளர்கள் ஆவர். இன்னும் ஐவர் பகுதிநேர ஆளணியினர் ஆவர். "மிகுந்த சிறப்புத் தேர்ச்சி ஒரு குறிப்பிட்ட தொழில் நுட்பத்திறனை விருத்தி செய்யும்" என்பது Taylor இன் கருத்தாகும். இதன்படி ஆசிரிய கலாசாலைகளுக்கென சிறப்புத் தேர்ச்சி பெற்ற இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையைச் சேர்ந்தவர்கள் என்றவகையில் ஐவரே கடமையாற்றுகின்றனர். ஆசிரிய கலாசாலைகள் மீது அரசு முழுமையான கவனத்தைச் செலுத்தாமையையே இது சுட்டி நிற்கின்றது. இங்குள்ள தகுதியானவர்களுக்கு அவர்களை இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவைக்குள் உள்வாங்க ஆவன மேற்கொள்ளப்படவேண்டும். அல்லது குறிப்பிட்ட திறன் பயிற்சிகளை வழங்கி ஆசிரிய கல்வியாளர் சேவைக்குள் உள்வாங்கப்படவேண்டும். Time and Motion Study என்பதில் Tailor அதிக அக்கறை செலுத்தினார். "நிறுவன செயற்றிறன் ஆனது குறிப்பிட்ட செயற்பாட்டுடன் தொடர்புடைய நேரத்தையும் இயக்கத்தையும் இழிவுபடுத்துவதன் மூலம் அடையப்பட முடியும்" என்பதை வலியுறுத்துகின்றார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையைப் பொறுத்தவரையில் இங்கு சில குறிப்பிட்ட பாடங்களைப் போதிப்பதற்கு விரிவுரையாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். குறிப்பாக சிங்களம், மின் ஆவணப்படுத்தல், வரலாறு, இந்து சமயம் என்பவற்றைக் கற்பிப்பதற்காக வருகை தரும் விரிவுரையாளர்கள் காலை வேளைகளில் தொடர்ச்சியாகத் தங்கள் கடமைகளை மேற்கொண்டு நிறைவு செய்து விட வேண்டும் என விரும்புகின்றனர். இதனால், இவர்களுக்குரிய வகுப்புக்களை வழங்கிவிட்டு முழுநேர விரிவுரையாளர்கள் ஓய்வறையில் இருக்கின்றனர். இத்தகைய மனிதவலு வீண்விரயம் ரெயிலரின் அணுகுமுறையின் பிரகாரம் பாரதூரமானது. பகுதி நேர விரிவுரையாளர்களுக்குப் பதிலாகப் பொருத்தமான விரிவுரையாளர்களை வேறு கலாசாலைகளில் இருந்து இணைப்பதன் ஊடாக பொருத்தமான ஆளணி விகிதத்தைக் கைக்கொள்வதன் ஊடாக இந்நிலைமையை மேம்படுத்த முடியும்.

"கடுமையாக உழைக்கும் தொழிலாளிக்கு உரிய வேதனம் கொடுக்கப்பட வேண்டும்" என்ற F.W. Taylor இன் கொள்கைக்கு அமைவாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த கல்விசாரா அமைய ஊழியர்களின் சம்பளம் வழங்கப்பட்டால் வேலையின் அளவை வினைத்திறனாக்கலாம். அதாவது மிகக் குறைந்த ஆளணியுடன் இவர்கள் அதிகளவான வேலைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளனர். இவர்கள் செய்யும் வேலையின் அளவுக்கேற்ப அவர்களின் ஊதியம் தீர்மானிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவரது ஆற்றலுக்குப் பொருந்தக்கூடிய வகையில் ஆகக் கூடிய தரத்திலான வேலையை வழங்கினால் நிறுவனம் உச்சப் பயனைப் பெறுவதுடன் அத் தொழிலாளியின் திறமைக்கேற்ற வேதனமும்

கிடைக்க வழிசெய்யப்படும். மேலும் சிறப்பாகப் பணியாற்றும் தொழிலாளிக்கு சராசரிச் சம்பளத்திலிருந்து 30 % தொடக்கம் 100 % வரையான வேதன அதிகரிப்பை வழங்கினால் குறைந்தளவான தொழிலாளர்களைக் கொண்டு அதிகளவான வேலையைச் செய்யலாம். இதே வேளை உற்பத்தித்திறன் குறைந்த தொழிலாளர்கள் வேறு வேலைகளையும் கண்டு பிடித்துக் கொள்ள வழிகிடைக்கக்கூடும்.

விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாடு "ஒவ்வொரு வேலையையும் சிறுசிறு வேலைகளாகப் பிரித்து அதனை நிபுணத்துவம் மிக்க ஊழியர்களிடம் ஒதுக்கிக் கொடுப்பதை" வலியுறுத்துகின்றது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வேலைப் பங்கீட்டுமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதிபருடைய முகாமைக்கு வசதியாக சிறுசிறு வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதனால் குறித்த தொழில்துறையில் தொழில் வாண்மை பெற்ற ஊழியர்களைக் காணமுடிகின்றது.

செயற்றிறனுக்குரிய நியமங்களைத் தயாரிப்பதன் அடிப்படையாக ஒவ்வொரு ஊழியரும் குறித்த நேரத்திற்குக் கடமைக்குச் சமூகமளிப்பது அவசியமாகும். இதற்காக Time Punch Machine System நடைமுறையில் உள்ளது. ஊழியர்கள் தமது வரவை இதனூடாகவே பதிவு செய்கின்றனர். காலத்திற்கேற்ப Calender அமுல்ப்படுத்தப்படுவதால் குறித்த வேலையைக் குறித்த காலத்தில் செய்து முடிப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது. ஆனால்,இது திட்டமிடலுக்கு அப்பால் சரியாக நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. காலதேச சூழ்நிலைக் காரணிகள் இதனை நடைமுறைப்படுத்துவதில் ஆதரவளிக்காத நிலை காணப்படுகின்றது. ஆனால் நிறுவன வெற்றிக்கு திட்டமிடலை சரியாக அமுற்படுத்த வேண்டும். ஒரு மனிதன் தனது வேலையைச் செய்ய முன்னர் சரியாகத் திட்டமிட வேண்டும் என Taylor கருதினார்.

திட்டமிடல் நெறிப்படுத்தல் ஒழுங்கமைத்தல் போன்ற கருமங்களுக்கான பொறுப்பை முகாமை கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தினார். இக்கூற்றை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பின்பற்றப்படுவதனைக் காண முடிகிறது. திட்டமிடலுக்கான பொறுப்பைக் கலாசாலையின் முகாமைத்துவக் குழு கொண்டிருக்கின்றது. நடைமுறைப்படுத்துவதில் இறுக்கத்தன்மை பின்பற்றப்படுவதில்லை. நெகிழ்ச்சித் தன்மையே பின்பற்றப்படுகின்றது. இது ரெயிலருடன் பொருந்தாவிடினும் ஒரு வகையில் பார்க்கின்றபோது தந்திரோபாய முகாமைத்துவ அணுகுமுறையாகக் காணப்படுகின்றது.

"வேலைப்படிப்பு Work Study" என்பதற்கு ரெயிலர் முக்கியத்துவம் கொடுத்தார். தொழில் வாண்மை குறித்த பயிற்சிகளை கல்வி அமைச்சின் ஆசிரிய பயிற்சிக்கிளை மேற்கொள்கின்றது. ஆயினும் கல்விக் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் ஆசிரிய கலாசாலைக்கு வழங்கப்படுவதில்லை. கல்விக் கல்லூரிகளின் ஆசிரிய கல்வியாளர்கள் அடிக்கடி வலுவூட்டல் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றனர். கலாசாலைகளுக்கு இவ்வாறான வசதிகள் வழங்கப்படுவதில்லை. ஆயினும் கலாசாலை மட்டத்தில் துறைசார் வல்லுநர்கள் அழைக்கப்பட்டு அவர்களது கருத்துக்கள் கேட்டறியப்படுகின்ற ஏற்பாடுகளைக் கலாசாலை முகாமை நிதி ஒதுக்கீடுகள் இல்லாத நிலையிலும் சேவை அடிப்படையில் பெற்றுக்கொள்கின்றது.

நிறைவாக Taylor இன் கருத்துக்கள் காலங்கடந்தவையென இன்றைய முகாமைத்துவவாதிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எது எவ்வாறாயினும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முகாமைத்துவக் கட்டமைப்புடன் பொருந்தி நோக்கத்தக்க நிலையில் விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாட்டின் பல அம்சங்கள் காணப்படுவதை நோக்கமுடிகின்றது.

**உதவியன.**

*01.* ரதிராணி யோகேந்திரராஜா, முகாமைத்துவத் தத்துவங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, *2011*

*02.* வல்லிபுரம் கனகசிங்கம், நவீனமுகாமைத்துவ நடைமுறைகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, *2013*

*03.* வேல்நம்பி.தி., வலுவூட்டல் முகாமைத்துவம், குருவெளியீடு, யாழ்ப்பாணம், *2008.*

*04.* சந்திரசேகரன், சோ, கருணாநிதி.மா, முகாமைத்துவக் கொள்கைகள் ஓர் அறிமுகம், சேமமடு பதிப்பகம், *2008.*

*05.* http://en.wikipedia.org/wiki/Frederick_Winslow_Taylor

**ச. லலீசன்**
*விரிவுரையாளர்,*
*கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

## சங்கீதக் கலையைப் பற்றிய நூல்களும் இயற்றியவர்களும்

| சங்கீதநூல் | இயற்றியவர் |
|---|---|
| 01. நாட்டிய சாஸ்திரம் | பரதர் |
| 02. தத்திலம் | தத்திலர் |
| 03. பிருஹத்தேசி | மதங்கர் |
| 04. ஸங்கீத ஸமய ஸாரம் | பார்ச்வதேவர் |
| 05. அஷ்டபதி | ஜயதேவர் |
| 06. ஸங்கீத மகரந்தம் | நாரதர் |
| 07. ஸங்கீத ரத்னாகரம் | சாரங்கதேவர் |
| 08. ஸங்கீத ஸுதாகரம் | ஹரிபாலா |
| 09. ஸங்கீத ஸாரம் | வித்யாரண்யர் |
| 10. ராக தரங்கிணி | லோசன கவி |
| 11. தாஸர் பதங்கள் | புரந்தரதாஸர் |
| 12. ஸ்வர மேளகளாநிதி | ராமாமாத்யா |
| 13. ராகவிபோதம் | ஸோமநாதர் |
| 14. ஸங்கீத ஸுதா | கோவிந்ததீஷிதர் |
| 15. சதுர்தண்டிப்ரகாசிகை | வேங்கடமகி |
| 16. ஸங்கீத பாரிஜாதம் | அஹோபிலர் |
| 17. கிருஷ்ண லீலா தரங்கிணி | நாராயணதீர்த்தர் |
| 18. பதங்கள் | க்ஷேத்ரக்ஞர் |
| 19. ஸங்கீத ஸாராம்ருதம் | துளஜா மகாராஜா |
| 20. கோவிந்தாசாரியார் | ஸங்கிரஹ சூடாமணி |

# பியாஜேயின் அறிகை விருத்திப் பருவங்களும் மொழியாற்றலும்

**அறிமுகம்**

ஒவ்வொரு பிள்ளையும் ஆற்றலும் ஆளுமையும் மிக்கவனாகத் திகழ வேண்டும் என்பது பலரதும் வலுவான எதிர்பார்ப்பாக மாறியுள்ளது. இந்நிலையில் பிள்ளை பற்றிய ஆய்வுகளும் பலநிலைகளில் முனைப்புப் பெற்று வருகின்றன. கல்வியுலகில் அண்மைக்காலமாக "மாணவர் மையக்கல்வி" என்ற சிந்தனை காத்திரமாக மேலோங்கியுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது. பிள்ளையின் விருத்தியில் பரம்பரை, சூழல் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதே வேளை பிள்ளையின் மொழியாற்றலும் அவனது அறிவாற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அறிவாற்றல் விருத்திக்கும் மொழி விருத்திக்கும் இடையில் நேர் நிலைத் தொடர்பு காணப்படுகின்றது எனலாம்.

"மனிதர்கள் தமக்கிடையே கருத்துக்களையும் உணர்வுகளையும் எண்ணங்களையும் தொடர்புறுத்தும் முறையே மொழியாகும்" என்பர். ஒருவன் ஒலி வடிவமாகவோ, வரிவடிவமாகவோ வெளியிடும் விடயத்தை விளங்கிக் கொள்வதற்கு மொழியே கருவியாகிறது. அதாவது மனிதனது உள்ளார்ந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிக்கொண்டு வர மொழி பயன்படுகின்றது. மொழி விருத்தி குன்றிய பிள்ளை தனது எண்ணங்களைச் சரிவர வெளியிடுவதென்பது சிக்கலானது. ஏனெனில், மொழி என்பது கருத்துக்களினதும் ஒலிகளினதும் வடிவங்களினதும் ஒழுங்கமைப்புக் கோர்வையாகும்.

பிள்ளையிடத்தில் வளர்ச்சி ஏற்படுகின்ற போது மொழி விருத்தியும் படிப்படியாக



ஏற்படுகின்றது. பிள்ளைகளிடத்தில் மொழியும் சிந்தனையும் எவ்வாறு விருத்தியடைகின்றது என்பதை உளவியலாளர்கள் ஆய்வு செய்துள்ளனர். சோம்ஸ்கி (Chomsky), விகொட்ஸ்கி (Vygotsky), கிரெசன் (Krashen), புரூணர் (Bruner), கார்டினர் (Gardner), பியாஜே (Piaget) போன்றோர் அந்த வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். பிள்ளை பிறந்தது முதல் ஐந்து வருடங்கள் வரை மொழி (சொற்களஞ்சியம்) விருத்தி எவ்வாறு படிப்படியாக வளர்ந்து செல்கின்றது என்பதை மெடேனா ஸ்மித் என்பவர் ஆய்வு செய்துள்ளார் அதனை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| வயது | தெரிந்திருக்கும் சொற்களின் தொகை |
|---|---|
| 12 மாதங்கள் | 03 |
| 18 மாதங்கள் | 22 |
| 24 மாதங்கள் | 272 |
| 30 மாதங்கள் | 446 |
| 36 மாதங்கள் | 896 |
| 42 மாதங்கள் | 1222 |
| 48 மாதங்கள் | 1540 |
| 54 மாதங்கள் | 1870 |
| 60 மாதங்கள் | 2072 |

**மொழி பற்றிய சில வரைவிலக்கணங்கள்**

மொழிக்கும் சிந்தனைக்கும் இடையிலான தொடர்பினை விளங்கிக் கொள்வதற்கு மொழிபற்றி அறிஞர்கள் முன்வைத்த கருத்


துக்கள் சிலவற்றை அறிந்துகொள்வது பயனுடையதாக அமையும்.

- மனிதன் பேசும் விலங்காவான். அவனது கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் வழியே மொழியாகும்.
  - ஃபேர்டினன்ட்த சொசீய-
- மொழி மனிதனின் உள் மனத்தோடு எப்பொழுதுமே ஒன்றிச் செயற்படுகின்றது. அது அவனது உள்ளக்கிடக்கையைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் வெளிக்கொணர்ந்து பல்வேறுபட்ட ஆசைகளை, எண்ணக்குவியல்களை, உணர்ச்சி வெள்ளத்தை, கொள்கை, கோட்பாடுகளை வெளிப்படுத்தும் கருவியாகும்.
  - சோம்ஸ்கி -
- மொழி செய்திப் பரிமாற்றக் கருவி, பொருள் உணர்த்தும் கருவி மட்டுமல்ல. அதுவே ஒரு பொருள்தான்.
  - ஃபிஸ்மன் -
- மொழியானது கருத்து வெளிப்பாடு, விளக்கம், சமிக்ஞை, நியாயித்தல் ஆகிய நான்கு பணிகளைச் செய்கின்றது.
  - லோபரஸ் எக்கில்ஸ் -
- மொழி முழுமையான ஒலிக் குறியீடுகளின் தொகுதி ஒன்றையும் எண்ணக்கரு சார்ந்த சிந்தனைகளையும் மனிதனுக்கு உடைமை ஆக்கியுள்ளது.
  - லான்கே லெக்னர் -

இங்கு குறிப்பிடப்பட்ட விடயங்கள் மொழியை அடிப்படையாகக் கொண்டே ஒருவன் சிந்திக்கமுடியும். அது பல்வேறு தொழிற்பாடுகளையும் ஆற்றுகிறது என்பதையும் காட்டுகின்றன.

**பியாஜேயின் அறிகை விருத்தி**

சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான பேராசிரியர் ஜீன் பியாஜே (Jean Piaget 1896-1980) அறிகை விருத்தி பற்றிய தனது கோட்பாட்டை முன்வைத்தார். அறிவைத் தேடிப்பெறல், நிலைநிறுத்தி வைத்தல், பயன்படுத்தல் ஆகியவற்றோடு சம்பந்தப்படுகின்ற உளச் செயற்பாடுகளைக் குறிக்கும் ஒரு பதமாகவே "அறிகை" அமைகின்றது என அவர் கூறினார். அவர் கூறிய அறிகை பயன்பாட்டைப் பின்வருமாறு காட்டலாம்.




பிள்ளை உலகுடன் இடைவிடாது செயலூக்கத்துடன் இடைவினை கொள்வதன் மூலம் அறிகையை விருத்தி செய்துகொள்கின்றது எனவும் வளரும்போது அதிக அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் போதும் உலகுடன் இடைவினைகொள்ளும் முறைகளையும் வியாக்கியானம் செய்யும் முறைகளையும் மாற்றியமைத்துக் கொள்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் மொழி தொடர்பான பொருத்தமான அனுபவங்களை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குவதென்பது அவசியமானதாக அமைகின்றது. இந்த அனுபவங்களை வழங்குவதில் பெற்றோரும் ஆசிரியர்களும் முனைப்புடன் கவனம் எடுக்கவேண்டியவர்களாக உள்ளனர். அதனை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு பியாஜே அறிவாற்றல் தொடர்பாக முன்வைத்த பருவங்கள் பற்றியும் அப்பருவங்களில் பிள்ளை காட்டும் மொழியாற்றல் பற்றியும் அறிந்துகொள்வது அவசியமானதாகும்.

**பியாஜே கூறிய அறிகை விருத்திப் பருவங்கள்**

1. புலனியக்கப் பருவம் (Sensory Motor Stage) பிறப்பு முதல் 2 வயது வரை.

2. தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவம் (Pre Operational Stage) 2 - 7 வயதுவரை.
   i. முன் எண்ணக்கருப் பருவம் (Pre Conceptual Stage) 2 - 4 வயது வரை.
   ii. ஆக்க சிந்தனைப் பருவம் (Intuitive Stage) 4 - 7 வயது வரை.
3. தூலசிந்தனைப் பருவம் (Concrete Operational Stage) 7 - 11 வயதுவரை.
4. நியமசிந்தனைப் பருவம் (Formal Operational Stage) 11 வயதுக்கு மேல்.

தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவத்தை மேலும் இரண்டு உபபிரிவு (அவத்தை) களாகப் பிரித்துள்ளமையை அவதானிக்கலாம்.

மேலே கூறப்பட்ட பருவங்களில் பிள்ளைகளிடம் ஏற்படும் மொழி வளர்ச்சி இயல்புகளை அறிந்துகொள்வதன் மூலம் பிள்ளைக்கு ஏற்ற கற்றல் அனுபவங்களைப் பொருத்தமாக வழங்கமுடியும் என்பதோடு சிந்தனை வளர்ச்சிக்கும் உதவமுடியும்.

**1. புலனியக்கப் பருவம் (Sensory Motor Stage)**

இப்பருவம் பிறந்தது முதல் இரண்டு வயது வரையான காலப்பகுதியைக் கொண்டதாகும். குழந்தை பிறந்தவுடன் சிந்தனைத் தொழிற்பாடு அற்ற நிலையிலேயே காணப்படுகின்றது என்றும் தன்மயமாக்கல், தன்மயமாதல் ஆகிய தொழிற்பாடுகள் மூலம் படிப்படியாகச் சூழலுடன் இயைபுபடுகின்றது எனவும் பியாஜே கூறுகின்றார். ஆரம்பத்தில் எல்லாச் செயல்களும் தெறிவினைகளாகவே காணப்படுகின்றன. கையை அசைத்தல், விரலை வாயில் வைத்தல், சூப்புதல் ஆகியன கூட தற்செயலாக நடைபெற்று பின்னர் ஒன்றிணைக்கப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடாக திரளமைப்புப் பெறுகின்றது. இப்பருவப் பிள்ளைகளுக்கு விளையாட்டு முக்கியமான - பயனுள்ள செயற்பாடாக அமைகின்றது.

**மொழிச் செயற்பாடுகள்**

- பிள்ளை பிறந்தது முதல் தனது சூழலில் கேட்கும் ஒலிகளைக் கேட்பதோடு தானும் போலச் செய்கின்றது. இவ்வாறு, போலச் செய்தல் மூலம் மொழியைக் கையாள முற்படுகின்றது.
- பிள்ளை இப்பருவத்தின் ஆரம்பநிலையில் ஆ, ஊ, கா, தா... போன்ற ஒலிகளை வாயைத் திறத்தல், மூடுதல் மூலம் இயல்பாகவே எழுப்புகின்றது. அதன் தொடர்ச்சியாக பேச முற்படுகின்றது.
- அண்ணளவாகப் பத்து மாதம் அளவில் சிறிய, தனிச் சொற்களைக் கூறத் தொடங்கும்.
- ஆரம்பத்தில் பிள்ளை தனக்கருகில் உள்ள, தனது புலனியக்கத்திற்கு உட்படுகின்ற பொருட்களையும் நபர்களையும் பெயர் குறித்துப் பேச ஆரம்பிக்கின்றது.
- ஒன்றரை வயதை அண்மிக்கின்றபோது ஒரு குழந்தைக்கு அண்ணளவாக 22 சொற்களைப் பேச முடியுமாக இருக்கும். இரண்டு வயதை அடைகின்றபோது ஏறத்தாழ 272 சொற்களைப் பேசக் கூடியதாக இருக்கும்.
- சில பிள்ளைகள் சொற்களை இணைத்து சிறுசிறு வாக்கியங்களாகப் பேச ஆரம்பிப்பதையும் காணலாம்.
- பிள்ளைகள் இப்பருவத்தில் சில பொருட்களையும் நபர்களையும் பெயர் குறிப்பிட்டு அழைக்கின்றபோது அது அடையாளப் படுத்துவதாக அமையுமே அல்லாமல் பொருள் விளக்கமுடையதாக அமையாது என்றே கூறலாம். எடுத்துக்காட்டாக 'அம்மா' என்பது ஒரு நபரைக் குறிக்கப் பயன்படும் சொல்லாகவே பிள்ளையால் கையாளப்படுமே அல்லாமல் அச்சொல் உணர்த்தக்கூடிய முழு அர்த்தத்தையும் அல்லது விளக்கத்தையும் அப்பிள்ளையால்

புரிந்துகொள்ள முடியாது என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். சில வேளைகளில் அம்மா அல்லாதவர்களையும் அம்மா என்று அழைப்பதையும் அவதானிக்கலாம்.

- இப்பருவப் பிள்ளைகள் சொற்களைத் தவறாக உச்சரித்தாலும் நாம் சரியாக உச்சரிக்க வேண்டும். எடுத்துக் காட்டாகப் பிள்ளை 'சோச்சா / சோச்சி' என்று கூறும் போது நாமும் அவ்வாறு பிள்ளைக்குத் திருப்பிக் கூறாது சோறு என்று பின்னூட்டலை வழங்கவேண்டும்.

**2. முன் எண்ணக்கருப் பருவம் (Pre-perational Stage)**

முன் எண்ணக்கருப் பருவம் என்பது 2-4 வயது வரையான காலப்பகுதியை உள்ளடக்கியதாகும். புலனியக்கப் பருவத்தின் இறுதியில் பிள்ளையின் செயல்கள் உள்ளத்தில் திரளமைப்பாக மாறுகின்றபோதும் சரியான எண்ணக் கருக்கள் உருவாகின்றன என்று கூறமுடியாது. சரியான எண்ணக்கரு தோன்றுவதற்கு முற்பட்ட பருவம் என்பதால் முன் எண்ணக்கருப் பருவம் எனப்படுகின்றது. பல அனுபவங்களைத் தொகுத்து பொதுமையாக்கம் செய்யும் வல்லமை இவர்களிடம் காணப்படாது. தன்னிடம் தோன்றும் கருத்துக்களை, குறிப்பான நிலைமைகளை விளக்குவதற்கு பயன்படுத்தும் ஆற்றலும் இவர்களிடத்தில் வளர்ச்சியடைந்திருக்காது.

**மொழிச் செயற்பாடுகள்**

- இப்பருவத்தில் பிள்ளைகள் உரையாடுவதில் அதிக அக்கறை, விருப்பம் காட்டுவர்.
- உரையாடும்போது அதிகமாக வினாக்களைக் கேட்டல், மீண்டும் மீண்டும் கேட்டல் ஆகியவற்றைச் செய்வர். அவர்கள் பொருத்தமற்ற வினாக்களைக் கேட்கிறார்கள் என்று சலிப்படைந்து நாம் விடைகூறாது விடுவதோ விலகுவதோ கடிந்து கொள்வதோ அவர்களது மொழி விருத்தியைத் தடைப்படுத்தும் செயல்களாகவே அமையும்.
- இப்பருவத்துப் பிள்ளைகள் சூழலில் உள்ள பொருட்கள், உபகரணங்களின் பெயர்களை அறிவதிலும் கூறுவதிலும் ஆர்வம் காட்டுவர்.
- உயரம், நிறை, நிறம் போன்ற எண்ணக் கருக்களைச் சொற்களில் கூறத் தொடங்குவர் என்பதால் அவை தொடர்பான உண்மை எண்ணக்கருக்களை வழங்குவதில் கவனமெடுத்தல் வேண்டும்.
- கதை கேட்பதிலும் பாடல்களைக் கேட்பதிலும் இப்பருவத்தினர் அதிக ஆர்வம் காட்டுவர். எனவே, சிறுவர் கதைகளைக் கூறுதல், சிறுவர் பாடல்களைப் பாடுதல் ஆகியன பொருத்தமானதாக அமையும். அவர்களுடைய வயதுக்கு ஏற்பவும் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்யக்கூடிய வகையிலும் அவை அமைதல் வேண்டும்.
- புதிய சொற்களை அறிமுகம் செய்யும் போது ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அச்சொல்லைப் பயன்படுத்துவது சிறந்த உத்தியாக அமையும்.
- போலச் செய்வதிலும் இப்பருவத்தினர் அதிக ஆர்வம் காட்டுவர் என்பதால் கதைகளைக் கூறும்போதும் பாடல்களைப் பாடும் போதும் அவற்றில் வரும் பாத்திரங்களாக நடித்துக் காட்டுவது சிறப்பானதாகும். அவ்வாறு நடித்துக் காட்டுவதைப் பிள்ளைகளும் பின்பற்றிச் செய்வதில் ஆர்வம் காட்டுவர். அதிகநேரம் அவர்களோடு உரையாடுவது அவர்களிடத்தில் மொழி விருத்தியை ஏற் படுத்தும்.
- அவர்களது வயதுக் குழுவினருடன் விளையாடுவதற்கு சந்தர்ப்பமளித்தல் அவசியம்.
- படங்களோடு கூடிய புத்தகங்களைப் பார்ப்பதில் அதிக ஆர்வம் காட்டுவர். படங்களில் உள்ள தமக்குத் தெரிந்த பொருட்கள், உபகரணங்களைக் கூறுவர்.

எனவே, வண்ணப்படங்களோடு கூடிய புத்தகங்களைக் கொடுத்தல் சிறப்பானது. அப்படங்கள் அவர்களது அனுபவங்களுக்கு உட்பட்டதாக அமைவது மேலும் பொருத்தமானது.

- இப்பருவத்துப் பிள்ளைகள் நான்கு வயதாகும்போது மொழியைப் பயன்படுத்தி வழங்கப்படும் அறிவுறுத்தல்களை விளங்கிப் பின்பற்றக் கூடியவர்களாக விளங்குவர் என்பதால் அவர்களுக்கு வாய்மொழி மூலமான அறிவுறுத்தல்களை வழங்குவது அவசியமானதாகும்.

**3. உள்ளுணர் பருவம் (Intuitive Stage)**

இப்பருவம் நான்கு முதல் ஏழு வயது வரையானதாகும். முன்பள்ளிப் பருவம், பாடசாலையின் முதன்மைநிலை ஒன்றுக்குரிய பருவம் ஆகியன இவ்வயதுப் பிரிவினுள் அடங்கும் என்பதால் முக்கியமான பருவமாம். சூழல்பற்றிய மேலோட்டமான புலக்காட்சியைப் பெற்றிருப்பர். இவர்களிடத்தில் அர்த்தபுஷ்டியான கருத்துக்கள் தோன்ற ஆரம்பித்திருக்கும். எனினும் ஏககாலத்தில் பலவிடயங்களை இவர்களால் அவதானிக்க முடியாது. அதாவது ஒரு பொருளின் ஒரு பரிமாணம் மட்டுமே இவ்வயதுப் பிள்ளையின் புலக்காட்சிக்கு உட்படும். இவர்களிடம் சிந்தனையின் "பின்திரும்பும் இயல்பும்" ஏற்பட்டிருக்காது.

**மொழிச் செயற்பாடுகள்**

- இப்பருவப் பிள்ளைகள் பிறருடன் உரையாட, கலந்துரையாட அதிகம் விரும்புவர் என்பதால் அவர்களது ஆர்வத்தைத் தடுத்து அமைதியாக இருக்கும்படி பணிப்பது பொருத்தமானதாக அமையாது. அவர்கள் உரையாடுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதே ஏற்புடையதாக அமையும்.
- சூழலில் காணப்படும் பிராணிகளின் பெயர்கள், பொருட்களின் பெயர்களைக் கேட்டறிவதிலும் கூறுவதிலும் அக்கறை காட்டுவர்.
- இப்பருவத்தினரால் ஓரளவு தெளிவாகக் கருத்துக்களை வெளியிட முடியும்.
- சுயாதீனமாகக் கருத்துக்களைக் கூறமுற்படுவர். அதாவது, பிறர் சொல்லிக்கொடுப்பதை நிராகரித்து தாமாகவே கூற முற்படுவர்.
- மொழியைப் பயன்படுத்தி செய்திகளைப் பரிமாறிக்கொள்வர். பொருட்களைத் தழுவிச் சிந்திப்பதற்கு முற்படுவர்.
- நேற்று, இன்று, நாளை, காலை, மாலை, இரவு போன்ற எண்ணக்கருக்களை விளங்கிக்கொள்ளக் கூடியவர்களாகக் காணப்படுவர் என்பதால் அவை தொடர்பான உரையாடல்களைச் செய்வது பொருத்தமானதாக அமையும். எனினும், காலம் பற்றிய முழுமையான எண்ணக்கரு உருவாக்கம் பெற்றிருக்காது. எடுத்துக்காட்டாக தன்னிலும் இரண்டு வயது கூடிய தனது அண்ணா தன்னிலும் இரண்டு வருடம் முதல் பிறந்தவர் என்பதையோ மூன்று வருடங்களின் பின்னர் அவர் இப்போது இருக்கும் வயதை தான் அடைந்து விடுவேன் என்பதையோ விளங்கிக் கொள்ள முடியாது.
- படங்களுடன் உள்ள பெரிய எழுத்துக்களை வாசிப்பதற்கு வாய்ப்பளிப்பது சிறந்ததாகும். எழுத்துப்பிழைகள் அற்ற படங்களை வழங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- படங்களையும் அவற்றின் பெயர்களையும் இணைத்தல் போன்ற செயற்பாடுகளை வழங்குதல் சிறப்பானது.
- எழுத்துக்கள், சொற்கள் தொடர்பான பார்வைப் பிரித்தறிகை சார்ந்த செயற்பாடுகளை வழங்குவதும் பொருத்தமானதாக அமையும்.
- சொற்களை உருவாக்கும் சக்கரங்களை வழங்கலாம்.

- ஒத்த ஓசைச் சொற்களை வழங்கி சொற் களஞ்சிய விருத்திக்கு உதவலாம்.
- எழுத்துக்களை அடுக்கி, பொருத்தி சிறிய சொற்களை ஆக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்துவது பொருத்தமானதாக அமையும்.
- ஆரம்பக் கல்விப்புலத்தில் முதன்மைநிலை ஒன்றிற்குரிய மொழிசார்ந்த தேர்ச்சிகள் இப்பருவத்திற்குரியன.

**4. தூலசிந்தனைப் பருவம்/ பருப்பொருட் சிந்தனைப் பருவம் (Concrete Operational Stage)**

இப்பருவத்தினர் ஏழு முதல் பதினொரு வயதுக்கு உட்பட்டவர்களாக அமைவர். உண்மைப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்பவர்களாக அமைவர். இவர்களால் ஒரு நேரத்தில் ஒரு பொருளின் அல்லது நிகழ்வின் ஒன்றுக்கு மேற்பட்ட பரிமாணங்களை ஒரே நேரத்தில் சிந்திக்க முடியுமாக இருக்கும். இவர்களிடத்தில் "பின் திரும்பும் இயல்பு" ஏற்பட்டுவிடும். பொருட் கள், நிகழ்வுகளிலே காணப்படும் ஒத்த இயல் புகள், வேறுபட்ட இயல்புகள் பற்றி இவர் களால் கவனம் செலுத்த முடியும். எனினும், உண்மைப் பொருட்களின் துணையின்றிச் சிந்தித்தல் கடினமாக அமையும்.

**மொழிச் செயற்பாடுகள்**

- தாம் சூழலில் காண்பவற்றையும் கேட்ப வற்றையும் பற்றி விபரிப்பர்.
- படங்களைக் கொடுத்து வினாக்களை வினாவுதல், வாக்கியங்களை அமைக்கும் செயற்பாட்டை வழங்குதல் போன்றன பொருத்தமானதாக அமையும்.
- இவர்களால் நிறை, நீளம் போன்ற எண்ணக் கருக்களை மொழியின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும் என்பதால் அவை தொடர் பாக உரையாடுவது பொருத்தமானது.
- உறவுமுறைகள் தொடர்பாக விளங்கிக் கொள்ள முடியுமாக இருப்பர்.
- கலந்துரையாடுவதில் அதிக ஆர்வம் காட்டுவர் என்பதால் குழுச்செயற்பாடு களுக்கு முக்கியத்துவமளிப்பது அவசியம்.
- அவர்களுடைய அனுபவங்களைக் கூறுவ தற்கும் எழுதுவதற்கும் ஏற்றவகையில் கற்றல் சந்தர்ப்பங்களை வழங்கவேண்டும். களப்பயணம், சுற்றுலா போன்றவற்றை ஏற் பாடு செய்வதோடு அவைபற்றிய அனுப வங்களை வினாவுதல் போன்றனவும் மொழி விருத்தியை ஏற்படுத்தும்.
- கதைகேட்பதில் மட்டுமன்றி கதை வாசித் தல், கதை சொல்லுதல் ஆகியவற்றிலும் ஈடுபாடு காட்டுவர். கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் நான்கிலும் ஓரளவு ஆற்றல் கொண்டிருப்பர் என்பதால் அவை தொடர்பாக செயற்பாடுகளை வழங்க வேண்டும்.
- வினாக்கேட்டல், விடையளித்தல், பாடல் களைப் பாடுதல், கிரகித்தல், விளக்கத்து டன் வாசித்தல், விளக்கத்துடன் பார்த்து எழுதுதல், ஞாபகப்படுத்தி எழுதுதல், சிறிய பாடல்கள், கதைகளை ஆக்குதல், ஒரு கதையினைத் தொடர்ந்து கூறுதல், புதிர் கள், நொடிகள் கேட்டல் ஆகிய மொழி யாற்றல்களும் இவர்களிடத்தில் காணப் படும்.
- ஆக்க சிந்தனைக்கு வழிவகுப்பதோடு அவர்களது அனுபவங்களை வாக்கியங் களாக, கட்டுரைகளாக எழுதுவதற்கும் வாய்ப்பளித்தல் பொருத்தமானது. படத் தைக் காட்டி வினாக்களைக் கேட்டல், ஞாபகப்படுத்தி எழுதுவதற்கு வாய்ப்பளித் தல் ஆகிய செயற்பாடுகள் பொருத்தமான தாக அமையும்.
- ஆரம்பக் கல்விப்புலத்தில் முதன்மைநிலை இரண்டு, மூன்றிற்குரிய மொழிசார்ந்த தேர்ச்சிகள் இப்பருவத்திற்குரியன.

**5. நியமசிந்தனைப் பருவம் (Formal Poperational Stage)**

11 வயதுக்கு மேற்பட்டவர்கள் நியம சிந்தனைப் பருவத்தினர் ஆவர். இவர்களால் உண்மைப் பொருட்களின் அனுபவங்கள் இன்றியும் சிந்திக்க முடியும். தர்க்க ரீதியாகச் சிந்தித்து தீர்வைப் பெறும் ஆற்றல் வளர்ச்சி பெறும். தூலசிந்தனைப் பருவத்தில் பிள்ளை பெற்றுக்கொண்ட உளத்தொழிற்பாடுகளை ஆதாரமாகக் கொண்டே நியம சிந்தனைப் பருவ உளத்தொழிற்பாடுகள் விருத்தியடைகின்றன.

**மொழிச் செயற்பாடுகள்**

- பொருட்கள், உபகரணங்கள் இல்லாத போதும் சொற்கள் மூலம் சிந்தித்தல் இப் பருவப் பிள்ளைகளுக்கு முடியுமானதாக அமையும். அதாவது பருப்பொருட்கள் இல்லாமலே சிந்திக்க முடியும். எடுத்துக் காட்டாக சுதந்திரம், ஜனநாயகம், நீதி, கனவளவு, அடர்த்தி போன்றவற்றை சொற்களின் மூலமே உணர்ந்துகொள்ள முடியுமாக இருக்கும்.
- வெவ்வேறு விடயங்களின் கீழ் வாசித்து விளங்கிக்கொள்ளக் கூடியவர்களாக அமைவர். பாடசாலையிலும் வீட்டிலும், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றை வாசிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வது இப்பருவப் பிள்ளைகளின் மொழி விருத்திக்கு அவசியம்.
- இவர்களின் வாசித்தல் அறிதலோடு மட்டுமன்றி மகிழ்ச்சியடைதலுடனும் ஈடுபாடு கொண்டதாக அமையும் என்பதால் சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், கட்டுரைகளை வாசிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- ஒப்படைமுறை போன்றவற்றின் மூலம் தேடிக் கற்பதற்கும் கற்றல் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் வேண்டும்.
- பல்வேறுவகையான கட்டுரைகளை எழுதுதல், துண்டுப் பிரசுரம் எழுதுதல், விளம்பரம் எழுதுதல், பாடல் எழுதுதல், கவிதை எழுதுதல், கதை எழுதுதல் போன்றவற்றிலும் பிள்ளைகளை ஈடுபடுத்துதல் பொருத்தமானதாகவும் பயனுடையதாகவும் அமையும்.
- நடித்தல், பாட்டுப்பாடுதல் போன்றவற்றில் ஆர்வம் காட்டுவதோடு அவற்றைப் பொருளுணர்ந்து வெளிப்படுத்தவும் முற்படுவர்.
- இலக்கியங்களை உசாவி விளக்கம் பெறுவதில் ஆர்வம் காட்டுவதோடு மொழியைப் பயன்படுத்தித் தர்க்கிப்பதிலும் ஈடுபாடு காட்டுவர்.
- இலக்கியங்களைக் கற்பதற்கும், பேச்சு, விவாதம் போன்றவற்றில் ஈடுபடுவதற்கும் ஆசிரியர் வாய்ப்பளிப்பது அவசியமாகும்.
- இப்பருவத்தினரால் மொழி மூலம் கற்பனை செய்ய முடியுமானதாக அமையும்.
- இடைநிலை வகுப்புக்களுக்குரிய மொழி சார்ந்த தேர்ச்சிகள் இப்பருவத்திற்குரியன.

**நிறைவுரை**

உளவியல் ஆய்வாளர்கள் பலரும் மொழி பற்றித் தமது கவனங்களைச் செலுத்தியுள்ளனர். மொழி கருத்துப்பரிமாற்ற ஊடகமாக மட்டுமன்றி, சிந்தனைக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். பிள்ளைகளின் அறிகை விருத்தி தொடர்பாகத் தனது ஆய்வு முடிவுகளை முன்வைத்த பியாஜே அவர்கள் கூறிய விருத்திப் பருவங்களின் செயற்பாடுகளுக்குப் பொருத்தமாக மொழி ஆற்றல், மொழி ஆளுமை, சொற்களஞ்சிய விருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது பொருத்தமானதாக அமையும். பிள்ளையின் இயலுமைக்குப் பொருத்த மான மொழிச்செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் அறிவாற்றல் விருத்திக்குப் பங்களிப்புச் செய்யமுடியும். தேர்ச்சியை மையமாகக் கொண்ட நடைமுறைக் கலைத்திட்டத்தில் ஒவ்வொரு வகுப்புக்குமுரிய மொழித்தேர்ச்சிகளை

வடிவமைப்பதிலும் பியாஜேயின் கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை அவதானிக்கலாம். பெற்றோரும் ஆசிரியர் களும் அவற்றை உள்வாங்கிக்கொண்டு மொழி தொடர்பான கற்றல் அனுபவங்களைப் பிள்ளைகளுக்கு வழங்குவது ஆரோக்கிய மானதாக அமையும். குறிப்பாக, மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் வயதுப் பருவங்களை விளங்கிக் கொண்டு அவர்களுக்கு உண்மைப் பொருட்களுடனான கற்றல் சந்தர்ப்பம், கற்பனைப் பொருட்களுட னான கற்றல் சந்தர்ப்பம், விவாதித்தல், தர்க்கித்தல், எழுத்தாக்கம் என பல அனுபவங் களையும் வழங்கக்கூடிய வகையில் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள பியாஜேயின் அறிகை விருத்திப் பருவங்கள் பற்றியும் அப்பருவத்து மொழியாற்றல் பற்றியும் அறிந்திருப்பது அவசியமானது.

**உசாத்துணை நூல்கள்**

1. சின்னத்தம்பி, க., சுவர்ணராஜா, க. (2011) அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும். கொழும்பு - 11: சேமமடு பதிப்பகம்.
2. முத்துலிங்கம், ச. (2002). கல்வியும் உளவியலும். கொழும்பு - 12: லங்கா புத்தகசாலை
3. ஜெயராசா, சபா. (2008) கற்றல் உளவியல். கொழும்பு - 11: சேமமடு பதிப்பகம்.
4. தனபாலன், பா. (2010) கல்விப் பிரயோக உளவியல். கொழும்பு - 10: குமரன் புத்தக இல்லம்.
5. தேசிய கல்வி நிறுவகம். (2012). தாய்மொழி - தமிழ் கற்றல் வளத்திரட்டு. தேசிய கல்வி நிறுவகம்.

**அ. பௌநந்தி**
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

**இலங்கையில் மொழிவாரியான கற்கைகள் இடம்பெறும் பாடசாலைகள்**

| | |
|---|---|
| சிங்களம் மட்டும் | 6368 |
| தமிழ் மட்டும் | 2914 |
| சிங்களமும் தமிழும் | 39 |
| சிங்களமும் ஆங்கிலமும் | 403 |
| தமிழும் ஆங்கிலமும் | 152 |
| சிங்களம், தமிழ், ஆங்கிலம் | 29 |

# குழந்தையினுடைய கல்வி வளர்ச்சியில் பரம்பரைச் சூழல் காரணிகளின் செல்வாக்கு

**அறிமுகம்**

இன்றைய குழந்தைகளே நாட்டின் நாளைய தலைவர்களாக விளங்குவார்கள். அத்தகைய குழந்தைகள் கல்வியறிவு பெற்று ஆளுமை மிக்கவர்களாக விளங்க வேண்டியது அவசியம். எனவே இக்குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் காரணிகளாக பரம்பரை நிலையும், சூழ்நிலையும் விளங்கு கின்றன. உயிரிகள் எல்லாம் கருவில் ஒரே தன்மையானவையெனினும், அவை வளர்ச்சி அடையும் தன்மையில் வேறுபாடுகள் காணப் படுகின்றன. குழந்தைகள் பிறந்தவுடனேயே அவர்களின் உடல் பருமன், உடல் அசைவு, மனவெழுச்சி ஆகிய பண்புகளில் வேறுபாடு களைக் காணமுடிகிறது. வளர்ச்சிப்போக்கில் இத்தனியாள் வேறுபாடுகள் மேலும் அதிகரிக் கிறது. இவ்வேறுபாடுகளுக்குக் காரணம் பரம்பரை எனச் சிலரும் சூழல் என வேறு சிலரும் கூறுவதுண்டு. மனித வளர்ச்சியில் இவ்விரு காரணிகளுள் எது மிகமுக்கியமானது என்பதைப் பற்றி அறிஞர்களிடையே தீவிர கருத்து வேற்றுமைகள் உள்ளன. மனிதனை உருவாக்குவதில் அவனது மரபு நிலைக்குப் பெரும்பங்கு உண்டு எனச் சிலர் கூறுவர். நல்ல பரம்பரையில் தோன்றிய குழந்தைகள் நல்ல முறையில் வளரும், இழிந்த குடும்பத்தில் தோன்றும் குழந்தைகள் எவ்வளவு சிறந்த சூழ்நிலையில் வளர்க்கப்பட்டாலும் தமது பரம்பரைப் பண்புகளைக் கொண்டே வளர்வர் என்று மரபுநிலைவாதிகள் வாதிடுவர். ஆனால் பரம்பரை, சூழல் ஆகிய இரு காரணிகளினதும் இணைந்த செல்வாக்கே மனித வளர்ச்சியாகும். இதனடிப்படையில் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் பரம்பரை, சூழல் ஆகிய இரண்டினதும் பங்களிப்புக்களை நோக்குவோம்.

**பரம்பரை**

பரம்பரை என்பது ஒரு கருவுற்ற முட்டையில் ஒடுங்கிநிற்கும் எல்லாப் பண்புக் கூறுகளையும் குறிப்பதுடன் பெற்றோர், முன்னோர் ஆகியவர்களிடமிருந்து கருவி லேயே ஒரு குழந்தை பெறும் உடற்கூறுகளும் அதன் பரம்பரையாக வந்தவையாகும். அதன் அடிப்படையிலேயே குழந்தைகள், பெற்றோர் களின் உடலமைப்பில் காணப்படுகிறார்கள். இதனை உயிரியல் மரபு என்றும் குறிப்பிடுவர்.

ஆண், பெண் உயிரணுக்கள் ஒவ் வொன்றிலும் எண்ணற்ற ஜீன்கள் காணப்படு கின்ற போதிலும் கருவுறும் முட்டையில் இணைவுறும் ஜீன்களின் தன்மைக்கேற்பவே சகோதரர்களிடையே வேறுபாடுகள் காணப் படுகின்றன. பிறப்பவை பெற்றோரை ஒத்துப் பிறப்பதற்குப் பரம்பரை காரணமாவதுடன் சில வேற்றுமைகளுக்கும் பரம்பரை காரண மாக அமைவதுண்டு. பரம்பரை வழிவந்த பண்புகளில் சிறிது பின்நோக்கம் காணப் படுகிறது. அதாவது இப்பண்புகள் பெற்றோரிடம் காணப்படும் அளவில் பிள்ளை களிடம் காணப்படுவதில்லை. சிறிது குறைந்தோ அல்லது கூடியோ காணப்படு கின்றன. எடுத்துக் காட்டாக அறிவிற் சிறந்த பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தை அறிவுத் திறன் அதிகம் பெற்றிருப்பினும், தாய் தந்தையர் போன்று அத்துணை அறிவு பெற்ற வர்களாக இருப்பதில்லை. அதேபோன்று அறிவில் குறைந்த பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தை அறிவுத்திறனில் அவ்வளவு தாழ்நிலை யில் இல்லாமல் பெற்றோர்களைவிடச் சிறிதள வாவது உயர்ந்திருப்பதையும் காணலாம்.

சூழல்

மரபுநிலைக் காரணிகள் தவிர்ந்த குழந்தையின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் ஏனைய அனைத்தும் சூழலின் தாக்கத்தினால் விளைந்தவையாகும். சூழல் ஒரு பிள்ளையினது வளர்ச்சியையும், நடத்தை முறையினையும், அதற்குப் புறத்தேயிருந்து கட்டுப்படுத்தவும் ஆற்றுப்படுத்தவும் செய்கின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவனைப் பாதிக்கும் எல்லா வகைத் தூண்டல்களின் தொகுப்பும் சூழ்நிலையுள் அடங்கும். இச்சூழ்நிலை ஏதுக்கள் ஒருவனது வளர்ச்சியை ஊக்குவித்தோ தடுத்தோ செயற்படலாம். சூழ்நிலையைப் பலவகையாகப் பிரிக்கலாம். தாயின் வயிற்றுள் குழந்தையானது வளரும் நிலையிலேயே சூழ்நிலை அதைப் பாதிக்கிறது. இதனைப் பிறப்புக்கு முன்னுள்ள சூழ்நிலை என்பர். தாய் உண்ணும் உணவின் தன்மை, அவளது உடல் நிலை, உள்ளத்தில் எழும் மனவெழுச்சிகளின் தன்மை போன்றன யாவும் குழந்தையின் "பிறப்புக்கு முன்னுள்ள சூழ்நிலையில் அடங்குவனவாம். குழந்தை பிறந்தபின் அதைப் பாதிக்கும். சூழ்நிலைச் சக்திகள் பிறப்புக்குப் பின்னான சூழ்நிலை" ஆகும். இதனுள் இயற்கைவளம், தட்ப வெப்பநிலைகள் குடும்பம், பாடசாலை, சமய நிலையங்கள் போன்ற சமூகச் சூழ்நிலையாகவும் அடங்கும்.

குழந்தைகள் நெறிபிறழ்வடைவதற்கும் பின்னர் குற்றவாளிகள் ஆவதற்கும் அவர்களது சூழலே முக்கிய காரணங்களாகும். தீயபண்புகளை உடைய பெற்றோர்கள் வறுமை நிலை, கட்டுப்பாடின்மை, தீய நட்பு போன்றன காணப்படும் சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே பெரும்பாலும் நெறிபிறழ்வடைகின்றனர். ஆதலால் அறிவு, ஒழுக்கம், மனப்பான்மைகள் கல்வி ஆகியவற்றின் வளர்ச்சியில் சூழலின் செல்வாக்கு முக்கியமானதாகும். மற்றும் பரம்பரை வழியே ஒருவன் பெற்றுள்ள குறைபாடுகளை ஓரளவேனும் மாற்றக்கூடிய வலு சிறந்த சூழலுக்குள்ளது என்பதும் கண்டறியப்பட்டது. சிறப்பான பண்புகள் உள்ள சூழல் ஒருவனது கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும் குறைபாடுள்ள சூழல் கல்வி வளர்ச்சியைத் தடைசெய்து நெறிபிறழ்வினைத் தோற்றுவிப்பதாகவும் அமையும்.

**பரம்பரை, சூழல் இரண்டினதும் தாக்கம்**

குழந்தைகள் பிறந்தவுடன் வேறுபாடுகள் தோன்றுகின்றன. அக்காலங்களில் இவற்றின் செயற்பாடுகள் அதாவது உடல் அம்சங்கள் குணாம்சங்கள் போன்றவைகளில் பரம்பரை சூழல் என்பவற்றின் செல்வாக்கு வெளிப்படுகிறது. குழந்தைகளினுடைய பிற்கால வாழ்க்கையும் ஆளுமையும் அது பிறந்த பின்னரோ அல்லது வளர்ந்த பின்னரோ மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. கரு உற்றபோதே இவைகள் பல தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன. தந்தை தாயினுடைய பண்புகள் குழந்தையின் உருவாக்கத்தில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன குழந்தை என்னென்ன பண்புகளுடன் வளரும் என்பதை நிச்சயித்து விடுகின்றன. தாய் தந்தையினுடைய உடல் சார்ந்த அம்சங்கள் கூடுதலாகப் பரம்பரை அலகினால் தீர்மானிக்கப்படுகின்றன. குழந்தை பிறக்கும்போது தன்னுடைய பெற்றோர்களின் இயல்புகளைக் கொண்டு பிறக்கிறது. மரபு தவிர்ந்த ஒரு குழந்தையினுடைய வளர்ச்சிக்குக் காரண மாக இருப்பதும் மற்றும் அனைத்தும் சூழலின் தாக்கத்தால் உருவானவையாகும்.

குழந்தை ஒரு முழுமனிதனாக மாற்றம் பெற வேண்டுமானால் உடல்வளர்ச்சி மனவளர்ச்சி, சமூகவளர்ச்சி, ஆளுமைவளர்ச்சி, கல்விவளர்ச்சி ஆகிய அனைத்தும் வளர வேண்டும். இவைகளின் வளர்ச்சி நிலையை குழந்தைகள் மரபுவழியே பெற்றிருந்தாலும் அவ்வாற்றல்களின் வளர்ச்சியையும், தரத்தையும் நிர்ணயிப்பது சூழலாகும். எனவே பிள்ளையின் வளர்ச்சிக்கு மரபு மட்டுமோ அல்லது சூழல் மட்டிலுமோ தங்கியிராமல் அவை இரண்டும் இணைந்து செயற்படுவது அவசிய

மாகும். சூழல் மரபு இவையிரண்டின் கூட்டு விளைவே மனித வாழ்க்கையாகும். பொது வாகப் பெற்றோர்களுடைய உடலமைப்புடன் தொடர்புபட்டவகையிலே குழந்தைகளின் உடலமைப்பு காணப்படுகிறது.

ஆனாலும் சூழல் என்பது குழந்தை களினுடைய சகலவிதமான வளர்ச்சிகளையும் நடத்தை முறைகளையும் அவற்றுக்குப் புறத் தேயிருந்து கட்டுப்படுத்தவும், ஆற்றுப்படுத் தவும் செய்கின்றன. குழந்தைகளினுடைய நுண்மதியாற்றல் பரம்பரை மட்டுமல்லாமல் சூழலிலேயே பெருமளவில் தங்கியுள்ளது. ஒரு குழந்தையின் வாழ்க்கையைச் சிறப்பாக அமைப் பதன் மூலம் பரம்பரையில் ஏற்படுகின்ற சில குறைபாடுகளைக் கூட நிவர்த்தியாக்க முடி கிறது. அவர்களுடைய எல்லாவிதமான ஆற்றல்களும் நல்ல பண்புகளும் முழுவளர்ச்சி பெறக்கூடியதாகக் கற்றல் சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுத்தல் ஆசிரியர்களின் கடமையாகும்.

குழந்தைகளின் மத்தியில் நல்ல கல்விச் சாதனைகளைத் தீர்மானிப்பதிலே சூழல் பெரும்பங்கு வகிக்கிறது. பாடசாலைச் சூழல் சிறப்பாக அமைகின்ற போது குழந்தைகள் மிக விருப்புடன் கல்வி கற்கின்றார்கள். எனவே பாடசாலை நிர்வாகம் சிறந்த பாடசாலைச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அவசிய மாகும். அவர்கள் ஓடி ஆடி விளையாடுவதற் குரிய இடம் பூந்தோட்டம் அழகிய தளபாடங் கள், அழகுப் பொருட்கள் போன்றவைகள் அவர்களுடைய மனதிற்குப் பெரும் மகிழ்ச்சி யைப் பெற்றுக் கொடுக்கின்றன. சூழலானது குழந்தைகள் கல்வி கற்பதற்குப் பொருத்தமாக அமைய வேண்டும். பெற்றோர்களின் வளர்ப்பு அன்பு, பாதுகாப்பு, போசாக்கு, கல்வி ஊட்டம் போன்ற பல செயற்பாடுகள் சிறந்த சூழலை ஏற்படுத்துகின்ற போதிலும் முன்பள்ளி நிலை யங்களும் நல்ல சூழலை ஏற்படுத்த வேண்டும். முன்பள்ளி நிலையங்கள் மிகவும் ஒதுக்குப் புறமாகவோ அல்லது மிகவும் சனசந்தடி கூடிய இடங்களிலோ இருக்கக்கூடாது. அதற்குப் பொருத்தமான இடம் ஒன்றினைத் தெரிந் தெடுப்பது அவசியமாகிறது.

பொதுவாகக் குடும்பங்களில் பல்வேறு வகைப்பட்ட சூழலை குழந்தைகளுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும். குடும்பம் என்பது ஒரு அடிப்படைச் சமூக நிலையமாகும். குடும் பத்தில் பெற்றோர்களும் ஏனைய அங்கத்தவர் களும் வெகு அவதானத்துடன் செயற்பட வேண்டும். குழந்தைகளின் சூழல் தொடர்பாக குடும்பத்தின் பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- கல்விக்கான சூழல்
- மொழி வளர்ச்சிக்கான சூழல்
- சமூகப் பொருத்தப்பாட்டுக்கான சூழல்
- பொழுது போக்குக்கான சூழல்
- சமய நிகழ்வுகளுக்கான சூழல்
- உடல் வளர்ச்சிக்கான சூழல்
- அழகுணர்ச்சியை மேம்படுத்துவதற்கான சூழல்
- சமூக விழுமியங்களைப் புரிந்து வாழ்வதற் கான சூழல்
- எதிர்காலம் பற்றிச்சிந்திப்பதற்கான சூழல்
- பாதுகாப்பாக வாழ்வதற்கான சூழல்
- அன்பைப் பரிமாறுவதற்கான சூழல்

இதேபோல ஒவ்வொரு குழந்தையும் பரம்பரையிலே பெற்றிருக்கும் உள்ளார்ந்த ஆற்றல் அனைத்தும் முழுமையாக வெளிப் படுத்துவதற்கு வளமான சூழல்களைப் பள்ளி யிலே ஆசிரியர் அமைத்துக் கொடுத்தல் வேண்டும். ஒரு மாணவனின் மோசமான கல்வி அடைவுக்குக் காரணம் சூழலிலுள்ள பிரச்ச னைகள் தான் என்றால் அவற்றைக் களைவ தற்கு ஆசிரியர் முயலுதல் வேண்டும். கிரா மப்புற ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் வள மான கற்றல் சூழலையும், வகுப்பில் கனிவான உணர்வுச் சூழலையும் மாணவருக்கு உருவாக்

கியளித்தல் வேண்டும். கிராமப் புறங்களிருந்து வரும் மாணவர்களுக்கு மொழி, கணக்கு ஆகியவற்றில் சிறப்பு வகுப்புகளை நடாத்து தல் வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் வீட்டில் சிறந்த கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுக்குமாறு ஆசிரியர் பெற்றோர்களை ஊக்குவிக்க வேண்டும்.

**முடிவுரை**

குழந்தைகளின் நடத்தையிலும் கற்றல் வளர்ச்சியிலும் அவன் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் இயற்கை மற்றும் சமுதாய சூழ்நிலையின் வலுவான செல்வாக்கினை ஆசிரியர் மறுக்கவியலாது. இதனை கல்விச் சமூகவியல் சுட்டிக்காட்டுகின்றது. கற்றலானது முறைப்படி பாடசாலை வகுப்பறைகளில் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வகுப்புக்கு வெளியே சமூகச் சூழலில் நடை பெறுகின்றது. போது பல இதன் செல்வாக்கு வகுப்பு கற்பித்தலின் செல்வாக்கினை விட வலுவானதாக உள்ளது. வகுப்பறையில் இன்று ஆசிரியர் பல கடினமான பொறுப்புக்களை வெற்றியுடன் நிறைவேற்றும் தேவை எழுந் துள்ளது. சமூக மாற்றங்களுக்கு ஏற்ப புதிய மனப்பான்மைகளைத் தோற்றுவிப்பதும் அவரது தலைமைப் பொறுப்புகளில் ஒன்றாக உள்ளது. மற்றும் மாணவர்களை எதிர்காலத் தலைவர்களாக உருவாக்குதலும் அவரது கடமையாகிறது. இத்தலைமைப் பொறுப் புடன் இணைந்து கற்பித்தல் பொறுப்பு செயற்படுகிறது. அடுத்து அவருக்கு வழிகாட் டுதலிலும் அறிவுரை பகிர்தலிலும் பல பொறுப்புக்கள் உள்ளன.

நல்லொழுக்கம் அறிவு மற்றும் கடமை உணர்ச்சியுடன் பணிபுரிதல் அவசியமானது. அத்துடன் பாடசாலைச் சூழலையும் சிறந்த முறையில் உருவாக்குவது ஆசிரியர்களதும் பாடசாலை நிர்வாகத்தினரதும் கடமையாகும். நல்ல சூழலில் வளரும் பிள்ளைகள் நல்ல பண்புகள் கொண்ட பிள்ளைகளாக வளருவர். ஒரு பிள்ளை கூடிய நுண்மதி கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. அதனை விருத்திசெய்ய அவனுக்கு நல்ல குடும்பச் சூழலும் பாட சாலைச் சமூகச் சூழலும் அமைதல் வேண்டும். இயல்பாக நுண்ணறிவினைப் போதியளவில் பெற்றிராத குழந்தைகளும் பல்வேறு சிறப்பு முறைகளின் வழியே கற்பிக்கப்படின் கல்வி யில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெறு கின்றனர் எனும் கருத்தினை இன்று கல்வியியலாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். நல்ல சூழல் ஒருவன் நற்பண்புகளைப் பெற உதவுவதாகும். சூழலைச் சிறப்பாக அமைப் பதன்மூலம் மாணவர்கள் நற்பண்புகளைப் பெற்று சீரிய வளர்ச்சியடைய ஆசிரியர்கள் உதவமுடியும். எனவே பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பரம்பரை, சூழல் இரண்டும் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்:**


(1) ஜெயராசா, ச. (2009). குழந்தை உளவியலும் கல்வியும், கொழும்பு: பூபாலசிங்கம் புத்தக சாலை

(2) சந்தானம், எஸ். (1993). கல்வியில் மனவியல் சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்

(3) சிவானந்தமூர்த்தி, க. (2002) உளவியல் ஓர் அறிமுகம் - புத்தூர்: அம்பாள் வெளியீட்டகம்

(4) பெனடிக்ற் பாலன், யோ. (1999). கல்வி உளவியல் அடிப்படைகள் சென்னை: த்வனி



**சி. குகன்**

விரிவுரையாளர்,

கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# நேரம் ஒதுக்குங்கள்



வாழ்க்கை முழுவதும் அனுபவிக்க நேரம் ஒதுக்குங்கள்
இது வெற்றியின் இரகசியம்

சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது ஆற்றலின் ஆணிவேர்

விளையாடுவதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது இளமையின் இரகசியம்

வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது மகிழ்ச்சியின் பிறப்பிடம்

கனவு காண்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது ஆன்மாவை நட்சத்திரங்களுடன் பிணைக்கின்றது

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது வாழ்க்கைத் துன்பங்களை நீக்க உதவும்
ஆன்மாவின் இன்னிசை

இறைவனுக்காக நேரம் ஒதுக்குங்கள்
இது ஒன்றே வாழ்வின் நிலையான முதலீடு

தியானம் செய்வதற்கு நேரம் ஒதுக்கங்கள்
இது மனவலிமையின் உயர்ச்சி

பிரார்த்தனை செய்ய நேரம் ஒதுக்குங்கள்
இது வாழ்க்கையின் உயரிய இன்பம்

வேலை செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது வெற்றிக்கான வெகுமதி.

# ஆரம்பக்கல்வி மன்றம்



**(இ - வ) இருப்போர் :-** த. சகிலன் (தலைவர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), செல்வி விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் (காப்பபாளர்), திருமதி. லி. நிமலகுமார் (செயளாளர்) **(இ - வ) 1ஆம் நிரல் :-** திருமதி. முஹமட்சிறாஜ் சித்தி ஹலீமா (பத்திராதிபர்) , ஜே. தெய்வேந்திரராஜா (உப தலைவர்), ந. இடபாரூடன், நி .கதிர்காமர், ந. அரவிந்தன், தா. கீதாகிருஷ்ணன், செல்வி. ஜலின் குரூஸ் அம்புறோஸ், ந. சுதாகரன், கா.ஸ்ரீகாந், வா. ரமேஷ், ஜெ. யூட்நிரஞ்சன் **(இ - வ) 2ஆம் நிரல் :-** நா. பிரபாகரன், ச. மோகன்ராஜ் (உப பத்திராதிபர்), ச. ஏகாட்சரம் (பொருளாளர்), மு. பிரியந்தன், சீ. சிவனேசன் (உப செயலாளர்), சி. சிவகாந்தன் (போட்டி இணைப்பாளர்), க. மோகனராஜ்

கலாசாலை

ஆசிரிய மாணவர்களின்

# ஆக்கங்கள்

# நவீன கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்

தற்போதைய காலம் தகவல் தொழில் நுட்பயுகம் எனப்படுவதால் அனைத்துத் துறைகளும் தகவல் தொழில்நுட்பத்துறையி லுள்ள சகல நுட்பங்களையும் வளங்களையும் தமக்குள் உள்வாங்கி தமது அன்றாட பிரச்சினைகளுக்குரிய தீர்வை இலகுவாகப் பெற்றுக்கொள்கின்றன. அந்தவகையில் கல்வித்துறையும் குறிப்பாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள், நுட்பங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி உச்சப்பயனைப் பெறல் இன்றி யமையாத ஒன்றாகும்.

கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கை பின்வரும் உபதலைப்பு களில் நோக்கமுடியும்.

1. பாடத்திட்டம், பாடக்குறிப்பு என்பன வற்றைத் தயார் செய்தல்.
2. பாடவிடயங்கள் சம்பந்தமாக தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்.
3. பாட முன்வைப்புக்களைத் தயாரித்தல் (Presentation)
4. மதிப்பீடு செய்தல்.
5. தொலை நிலைக் கல்வி.

### பாடத்திட்டம், பாடக்குறிப்பு என்பனவற்றைத் தயார் செய்தல்

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக ஆசிரியர் ஒருவர் திட்டமிடுகையில் மிகவும் கடினமானதும் அதிகநேரம் எடுப்பதும் பாடத் திட்டம், பாடக்குறிப்பு என்பனவற்றைத் தயாரித்தலாகும். இதனை நேர்த்தியாகவும், பிழையின்றியும், குறுகிய நேரத்திலும் செய்து முடிப்போமாயின், கற்பித்தலில் 50 % வேலை பூர்த்தியடைந்துவிடும். பாடத்திட்டம், பாடக்குறிப்புகள் தயாரிக்கையில் இதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மென் பொருட்களை பயன்படுத்தமுடியும். எனினும் கணினி அறிவினை சரிவரப்பெற்ற ஆசிரியர் Microsoft நிறுவனத்தின் தயாரிப்புக்களாகிய

Micro soft word
Micro soft excel
Micro soft access

ஆகிய மென்பொருட்களைப் பயன் படுத்தி அவற்றில் காணப்படும் கருவிகளாகிய அட்டவணைகள், பல்வேறு எழுத்துருக்கள் ஆகியவற்றினைப் பயன்படுத்தி தமது பாடத் திட்டங்களை குறுகிய காலத்தில் நேர்த்தி யுடன் தயாரிப்பதுடன் எதிர்காலத்தில் சிறிய மாற்றங்களுடன் மீளவும் பயன்படுத்தலாம் (Reusability).

### பாட விடயங்கள் சம்பந்தமாகத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்

தரம் 6 - 11 வரையான வகுப்புகளுக்கு பாடநூல்களை அரசாங்கம் இலவசமாக வழங் கிய போதிலும் விஞ்ஞான, கணிதம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் ஒருவர் மேலதிக விடயங்களைத் தேடுவதும், தேவைப்பட்ட விடயங்களை மாணவர்களுக்கு வழங்குவதும் பரீட்சையில் வினாவப்படும் வினாக்களுக்கு விடையளிப்பது மாத்திரமன்றி பாடம் சம்பந்த மான மேலதிக அறிவினை வளர்ப்பதற்கும் ஏதுவாகின்றது. மேலதிகத்தரவுகள் எனக் குறிப் பிடப்படுகின்ற போது அவை எழுத்துவடி விலோ படமாகவோ, காணொளிகளாகவோ இருக்கலாம். சிக்கலான எண்ணக்கருக்களை விளக்குவதற்கு (ஞாயிற்றுத் தொகுதியின் மாதிரி, அணுக்களின் அமைப்பு) காணொளி

கள் மிகச் சிறந்தவை மேலதிக தரவுகளை எழுத்துருவில் பெறுவதற்கு www.wikipedia.org படங்களைப் பெற்றுக்கொள்ள Google image, காணொளிகளைப் பெற்றுக்கொள்ள www. youtube.com ஆகியன மிகப்பிரசித்தமான web தள முகவரிகளாகும். இது தவிர Forum discussion, Social Network (Face book, twitter) என்பனவற்றையும் பயன்படுத்தலாம். அத்துடன் www answers.yahoo.com என்ற web தள முகவரியில் எமக்குச் சந்தேகமான விடயங்களை வினாவாக வழங்கினால், உலகத்திலுள்ள பிரசித்தமான நிபுணர்களிடம் இருந்து விடைகள் சில நிமிடங்களில் இலவசமாகப் பெறலாம்.

**பாட முன்வைப்புக்களைத் தயாரித்தல்**

ஆசிரியர் ஒருவர் பாடம் சம்பந்தமான முழு அறிவைக் கொண்டிருந்தாலும் அதனை சரியான முறையில் மாணவர்களுக்கு முன்வைக்காவிட்டால் கற்றல் கற்பித்தல் செயற்பாடு வெற்றிகரமாக அமைவதில்லை. இதற்காக microsoft power point, adobe flash, maya, 3D max போன்ற மென்பொருட்களைப் பயன்படுத்தி சிக்கலான எண்ணக்கருக்களை இலகுவில் விளக்கும் presentation, models, animation என்பனவற்றைக் கணினித் துறையில் கை தேர்ந்த ஆசிரியர் பொருத்தமான நிற, ஒலி பின்னணிகளுடன் தாமே தயாரித்துக் கொள்ளலாம். அல்லது இவை கிடைக்கும் web தளங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**மதிப்பீடு**

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் கற்பித்த விடயங்கள் மதிப்பீடு செய்யப்படாத பட்சத்தில் பூரணத்துவம் அடைவதில்லை. மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்குள் மாணவர்களை மதிப்பிடுதல் ஆனது பொதுவாக ஆசிரியர்களுக்கு சவாலான ஒரு விடயமாகும். இதனை இலகுபடுத்த Java Script, HTML, PHP, Visual basic, Java, Csharp போன்ற கணினி நிறவாக்கம் செய்யும் மொழிகளை Computter programing Languages ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு மாதிரிகளை Multimedia இல் காட்சிப்படுத்தி Wire Less Mouse, Keyboard என்பனவற்றை மாணவர்களுக்கு வழங்கி அவற்றினூடு அவர்கள் விடையளிக்கச் செய்து வினாவை எழுதும் நேரத்தைக் குறைப்பதுடன் அதிக மாணவர்களை குறுகிய நேரத்தில் பல கோணங்களில் மதிப்பிடலாம்.

**தொலை நிலைக்கல்வி**

உலகமயமாக்கல் என்பது உலகத்தின் இரு அந்தங்களுக்கிடையிலான இடைவெளியைக் குறைப்பது என்று பொருள் சொல்லலாம். இந்தவகையில் Distance Education என்பது தற்போது Online Education என பொருள் படக்கூறலாம். மாணவர்கள் தமக்கு விரும்பிய துறைகளில் விரும்பிய பல்கலைக்கழகங்களில் அல்லது விரும்பிய Course Provider களிடமிருந்து கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக தற்போது LMS (Learning Management System) VLE (Virtual Learning Environment) என்ற நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி பாடநெறிகளை உருவாக்குதல், முன்வைப்புகளை வழங்குதல், மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக Moodle என்ற CMS என்ற மென்பொருள் ஆனது (Content Management System) தற்போது Colombo, Morattawa ஆகிய பல்கலைக்கழகங்கள் பயன்படுத்தப்படுகிறது.

ஆகவே மேலுள்ள விடயங்களை எமது கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளிலும் உட்புகுத்துவோமாயின் மரபுரீதியான கற்றல், கற்பித்தலிலிருந்து எம்மை விலக்கிக் கொள்வதுடன் நவீன சமுதாயத்தை இனிவரும் சந்ததிகளின் தேவைகளை நிறைவு செய்யும் குடிமக்களைக் கொண்ட நாட்டை உருவாக்க முடியும்.

**கயானி நந்தரூபன்**
*விஞ்ஞான நெறி*

# வணிக மன்றம்



**( இ - வ ) இருப்போர்** :- சிறி .சிறிகுமார், வீ. கருணலிங்கம் ( உப அதிபர் ), வே. கா. கணபதிப்பிள்ளை ( அதிபர் ), திருமதி ர. சத்தியா ( காப்பாளர் ) செல்வி ச. மேரிஅனஸ்ரா **( இ - வ ) 1ம் நிலை** :- ந. நர்த்தனன், திருமதி ச. பாரதி, அ. நளாயினி, ச. பாலகௌரி, செல்வி சோ. ரேணுகா, த. சுபாஸ்
**( இ - வ ) 2ம் நிலை** :- சி. சிவகாந்தன், ச. ராஜ்குமார், பா. கிருஸ்ணரூபன்.

# ஆக்கச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் சவால்கள்

ஆக்கச் செயற்பாடுகள் என்பது பிள்ளையினது உள்ளார்ந்த ஆற்றல்களை உயிர்த் துடிப்புடன் பிரதிபலித்துக் காட்டும் ஒரு செயன்முறையாகும். இத்தகைய செயன் முறையானது பிள்ளைகளின் உடல், உள மனவெழுச்சிப் பண்புகளை மேலோங்கச் செய்து சமநிலையின் ஆளுமைத் தன்மையை வளர்த்தெடுக் கின்ற செயற்பாடுகளை ஆக்கச் செயற்பாடு என அழைக்கின்றோம். இதனால் தான் ஆரம்பப் பிள்ளைகளுக்கு இது கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டும் என்ற நிலையில் ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இச் செயற்பாடுகளை வகுப்பறையிலே முன்னெடுப்பதற்கு அழகியல் உணர்வுள்ள ஆசிரியர்களே வேண்டப்படுகின்றனர். அப்போதுதான் திட்டமிட்ட அடிப்படையில் உயர்ந்த வினைத்திறனுடன் செயலாற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் துலங்கல்கள் வெளிக்காட்டப்படும். அழகியல் லயப்பட்டவர்களும் குழந்தைகளின் உள்ளங்களை உளவியல் ரீதியில் அறிந்து அதற்கேற்ப பரிகாரம் காணக்கூடியவராகவும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் விளங்க வேண்டும். அப்போது தான் உயிர்த்துடிப்புள்ள மகிழ்ச் சிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வகுப்பறையில் ஆக்கபூர்வமாக மேற்கொள்ள முடியும்.

இன்று கல்வி வரலாற்றில் அதன் வளர்ச்சியானது உலகமயமாதல் தாக்கத்திற்கு ஈடு கொடுக்கக் கூடியதாக வியாபித்து நிற்கின்றது. அதற்கு கல்வியைப் போதிக்கின்ற ஆசிரியர்கள் நிதானமாகவும் செயலுறுதியுடனும் செயற்பட வேண்டியுள்ளது. இங்கு ஆரம்பக் கல்வியை எடுத்து நோக்குகின்ற போது ஒரு ஆசிரியரே எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டும். அதனால் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அழகியல் பற்றிய பூரணமான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் இன்று அநேக ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வியில் ஆக்கச் சித்திரப்பாடம் கற்பிக்கின்ற போது இடர்படுகின்ற நிலையை அவதானிக்க முடிகின்றது. பாடத்தில் விருப்பமின்மை காணப்பட்டால் பிள்ளைகள் கற்றலில் தவறுகளையே சந்திக்க நேரிடும். ஆதலால் அவர்கள் பாடத்தில் விருப்பத்தையும் இரசனையையும் ஏற்படு த்தக் கூடிய வகையில் ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும். அப்போது தான் வகுப்பறையும் மகிழ்ச்சிகரமானதாக அமையும்.

எனவே ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்திலும் தேடியறிந்து வினைத் திறனான செயற்பாடுகளை முன்மொழிய வேண்டும். ஆக்கச் சித்திரப் பாடமானது சூழலை மையமாகக் கொண்டு திட்டமிடப் பட்டிருப்பதனால் சூழலை இரசிக்கச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். சூழலை நேரடியாக அவதானிப்பதன் மூலம் சூழல் பற்றி புலக் காட்சி கிடைக்கின்றது. இதுவே ஆக்கத்துக் கான தூண்டுதலாக அமைந்து விடுகின்றது. அத்தகைய நிலமைகளை உணர்ந்து செயற்படுகின்ற ஆசிரியர்களே ஆரம்ப வகுப்பறைக்குத் தேவைப்படுகின்றனர். இதனால் தான் ஆரம் பக்கல்வி ஆசிரியர்கள் ஞான விளக்குகளாகச் சமூகத்தில் மதிக்கப்படுகின்றனர்.

ஆனால் இன்று அநேக ஆசிரியர்கள் ஆக்கச் செயற்பாட்டிற்கு பாடத்தின் அடிப்

படைகளை விளங்கிக் கொள்ளாமையினால் செயற்பாட்டைப் போதிக்கும்போது கடும் சவால்களை எதிர்கொள்கின்றனர். இவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகள், உத்திகள் நவீன மாதிரிகள், தொடர் பயிற்சிகள் என்பவற்றை காலத்திற்குக் காலம் பெற்றுக் கொள்வதன் மூலம் நல்லதோர் ஆசிரியர் என்ற இடத்தை அதாவது மாணவர் விரும்பும் ஆசிரியர் என்ற இடத்தை அடைய முடியும்.

எனவே ஆரம்பக்கல்வியில் ஆக்கச் சித்திரம் கற்பிக்கும் போது உருவங்களையோ காட்சிகளையோ அல்லது அலங்காரங் களையோ வரைந்து காட்டுகின்ற போது பிள்ளைகளுக்குப் புரிந்து கொள்ளக் கூடிய தாக புலன்களை மேலும் கூர்மையடையக் கூடிய விதமாக சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாக வும் கற்கக் கூடிய விதமான செயற்பாடுகளை வழங்குதல் வேண்டும். அதுவும் பிள்ளையின் வயது, வகுப்பு, முதிர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் திட்டமிட்டு வழங்குதல் வேண்டும். அவ்வேளைதான் பிள்ளையினது மூளையில் ஆழப்பதிந்து விடுகின்றது. ஆக்கச் செயற்பாட்டுப் பாடமானது வெறுமனே கொள்கைரீதியில் போதிக்கப்படக் கூடிய தன்று. அது அவதானிப்பு, பரிசோதனை, பயிற்சி, ஆக்கம், நுண்நோக்கு என்பவற்றின் ஊடாக மாணவர்கள் தாம் வாழும் சுற்றாட லைக் காண உதவுவது ஆகும்.

எனவே ஆரம்பக்கல்விப் பாட விதானத் திலும் ஆக்கச் செயற்பாடானது சுற்றாடலை மையமாகக்கொண்டு சுற்றாடற் பாடத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் பாடத்திலும் சிறப் பாக தொடர்புபடுத்திக் கற்பிக்க முடிகின்றது. ஒவ்வொரு பாட அலகுகளையும் கற்பிக்கின்ற போது உருவப்படங்கள் வரைய வேண்டிய தேவை இன்று கட்டாயமாக எழுந்துள்ளன. காட்சிகள், படங்கள் செயற்பாடுகள் என்பவற் றின் மூலமே மனதில் நிலை நிறுத்தப்படு கின்றன. எனவே அவற்றை வெளியிட, அனுபவத்தைத் திரும்பத்திரும்பப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். இந்த அனுபவம் இரசனைக்கு உட்படுத்தப் படுவதால் அறிவு இரசனையுடன் கற்பனை உருவாக்கம் பெற்று ஆக்கமாக நிலை நிறுத்தப் படுகின்றது.

ஆகவே ஆக்கப்பாடத்திற்கு ஆயத்த மாகும் ஆசிரியர்கள் அதற்கான வினை யாற்றலைப் பெற்றிருக்க வேண்டும். அப் போதுதான் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியதாக இருக்கும். ஆக்கச் செயற்பாடு களைக் கற்பிக்கின்றபோது உருவங்களை வரை வதற்கு அவற்றின் அடிப்படை வடிவங்களுக் கான பயிற்சிகளைத் திரும்பத் திரும்ப வழங்கு தல் வேண்டும். அப்போது தான் கைகளின் அசைவுகள் சுதந்திரமாக ஆக்குவதற்கு வழி வகுக்கும். இப் பயிற்சிகளின் வழியில் அவற்றை இனங்காண்பதன் மூலமாகவோ அல்லது தொகுப்பதன் மூலமாகவோ எடுத்துக் கொள்ளப்பட்ட உருவத்தைக் காண முற்படுவர். இதனை மிகவும் இலகுவாகவும் ஆறுதலாகவும் இரசனையுடன் செய்விப்பதன் மூலமே பிள்ளைகள் இலகுவாகக் கற்க வழி ஏற்படும்.

பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்ற அடிப்படைக் குறியீட்டு வடிவங்கள் நாளாந் தம் அவர்களது புலக்காட்சிகளுக்கு உட்பட்ட வையாக இருத்தல் வேண்டும். அப்போது தான் பிள்ளை இலகுவாக வரைய முடியும். ஆசிரியர்கள் வரையும் திறனைப் பயிற்சி பெற்று அவற்றைப் பிள்ளைகளுக்கு வெளிக் காட்டுவதன் மூலம் பிள்ளைகளது மூளையில் அவை நிலை நிறுத்தப்படுகின்றன. ஆசிரியர் கள் இவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கற்றல் கற்பித்தல் மகிழ்ச்சிகரமாக அமையும்.

**விசுவாசம் சகாயமேரி**
ஆரம்பக்கல்வி - D

# மனித ஆளுமை வளர்ச்சியில் பரத நாட்டியம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள், ஆதிதொட்டு இன்றுவரை அனைவரையும் அசைந்து, இசைந்து ஆட வைக்கும் கலை பார் போற்றும் பரதக் கலையாகும். பாவ உணர்வும் இராக வளமும் தாளலயமும் இணையும் போது உருவாகும் அழகுக் கோலம் கண்ணுக்கு விருந்தாக, மனதுக்கு மருந்தாக, பக்தியோடு பக்குவமும் பண்பும் கலந்து பரதக் கலையாக மிளிர்கின்றது. நாட்டியம், இசை முதலிய கலைகளின் உறைவிடமாக விளங்குவது நடராஜர் மூர்த்தம். இவ்வுருவில் நாம் காண்பது நாட்டியக்கலை, இசைக்கலை, மெய்ஞானக் கலை என்பனவாகும். இதனால் கலையே வடிவான எம்பெருமான் எண்ணற்ற கலைகளாலும் கலைகளைக் கடந்து விளங்கும் கலாஜீவ பரம்பொருளாயிருக்கின்றார் என்பதை உணரலாம். இவ்வாறு தெய்வீக நிழலிலே நன்கு தத்துவக் கருத்துக்களையும் உலகிற்கு வெளிக்காட்டும் காலக்கண்ணாடியாகத் திகழ்கின்றது. தற்போது உலகளாவிய ரீதியிலே பல்லாயிரக்கணக்கானவர்கள் இதனை விரும்பிக் கற்பதோடு இதன் சிறப்பு சூரியன் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. இந்தவகையில் இன்று, இலங்கையின் கல்விப் பாடவிதானத்தில் அழகியற்கல்வி மிக முக்கிய மானதோர் இடத்தை வகிக்கின்றது.

மனித ஆளுமை வளர்ச்சியில் நாட்டியக் கலையின் பங்களிப்பை நோக்கினால், உடல் அசைவு நிலை, கை அமைப்பு, கண் சுழற்சி முதலிய எல்லாம் கூடியது. உடல் ஜடமது அசைய வேண்டுமானால் நரம்பு அசைய வேண்டும். நரம்பு அசைய மனம் அசைய வேண்டும். மனம் அசைய உணர்வு அவசியம். உணர்வே உயிரின் தன்மை, உயிர் இறைவனுக்கு அடிமை. நாட்டியமும் இசையும் இணைந்தே இறைவன் திருவுருவில் இயங்குகின்றான். நடனக் கலைஞன் தன் உள்ளம் நிறைந்த எல்லோர் உள்ளத்திலும் கலையைக் குடியேற வைத்து நல்லெண்ணத்தை வளர்ப்பதுடன் மனநிறைவையும் கொடுத்து உயர்ந்த உண்மைகளையும் நோக்கத்தையும் புலப்படுத்துகின்றான். இற்றைக்கு இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கிரேக்க தத்துவ ஞானியான பிளேட்டோ (PLATO) என்பவர் "இசை, நடனம் போன்ற கலைகளின் தேர்ச்சி பெற்றவனே கல்விமான் ஆவான்" எனக் கூறியுள்ளார். கல்வி என்பது குழந்தைகளிடமிருந்து முழு மனிதனை வெளிக் கொணர்வது. முழு மனிதனை உருவாக்குவது அவனுடைய ஆளுமை ஆகும். எனவே மனிதன் உடல், உள்ளம், ஆன்மா, இருதயம் என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமையடையச் செய்வதே கல்வியின் பயனாகும் என்பதே காந்தியடிகளின் கல்வித் தத்துவ விளக்கமாகும்.

ஆளுமை என்பது ஒருவருடைய தோற்றம், மனப்பாங்கு, தலைமைதாங்கும் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியது எனலாம். மேலும் ஒரு தனிநபரிடம் காணப்படும் எல்லாக் குணங்களும் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்தது தான் ஆளுமை எனவும் கூறுவர். அதாவது ஒவ்வொரு தனி மனிதனும் திறமை, அடைவு ஆகியவற்றில் மாத்திரமன்றி, மனவெழுச்சி, கவர்ச்சிகள், மனப்பாங்குகள், பற்றுக்கள் ஆகியவற்றிலும் வேறுபடுகின்றான். இவ்வியல்புகள் எல்லாம் ஒன்றிணைந்த ஒரு முழுமையான தன்மையே ஒருவனின் ஆளுமையாகும்.

ஒரு தனி மனிதனின் ஆளுமை வளர்ச்சியில் நடனத்தின் பங்களிப்பை நோக்கும் போது, பரதக் கலையானது ஒருவரின் உடலையும் உள்ளத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகின்றது எனலாம். தாளத்திற்கேற்ப பாதங்கள் நர்த்தனம் செய்வதும் ஒரு கட்டுக் கோப்புக்குள்தான் நடைபெறுகின்றது. இதனைத்தான் லயம் என்கிறோம். லயத்துடன் ஆட வேண்டும் என்றால் உள்ளம் லயித்துப் போக வேண்டும். மனமானது உடலைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும். ஆகவே இவ்விரு அம்சங்களிலும் நடனம் ஒருவரின் ஆளுமை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் முதலில் குழந்தையாக இருந்து பின்னர் கட்டிளம் பருவத்தையடைந்து, அதன் பிறகு முதிர்ச்சி அடைந்த மனிதனாக வளர்கிறான். குழந்தையாக இருக்கும் பொழுது பல இசை, நடன நிகழ்ச்சிகளைப் பார்த்தும், கேட்டும், இரசித்தும் இரஸ ஞான விருத்தியைப் பெறுகின்றான். பாலர் அபிநயப் பாடல்களைக் கற்றுக்கொள்ளும் போது, ஆக்கத்திறன் உண்டாக வாய்ப்பு ஏற்படுகின்றது. குழந்தைகள் கற்பனை வளம் மிக்கவர்கள். இக் குழந்தைகள் வளர வளர அவர்களது கற்பனைத் திறனும் ஆக்கத்திறனும் வளர்ச்சியடைகின்றன. இதன்போது ஒவ்வொரு குழந்தையிடமும் ஆளுமை விருத்தியடைகின்றது.

பரதம் பயில்வதால் ஒருவனுடைய திறன்கள் விருத்தியடைகின்றன. உடல் விருத்தி, உள விருத்தி வளர்ச்சியடைவதோடு, பிறரை மதிக்கும் தன்மை, குழு மனப்பான்மை, பகுத்தறி வோடு நடந்து கொள்ளுதல், ஒற்றுமைத்திறன், அறிவாற்றல், கருத்துக்களை விருப்பு வெறுப் பற்று ஆராயும் திறன் ஆகியன விருத்தி செய்யப் படுகின்றன. மேலும் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கும் இக்கலை துணையாக உள்ளது. மற்றவரின் திறமைகளைப் போற்றவும் இரசிக்கவும் தூண்டுகோலாய் அமைகின்றது. ஒவ்வொரு கலைஞனிடமும், ஆசிரியரிடமும் ஒரு தனித்துவம் காணப்படுகின்றது. ஒருவர் நடனத்தை சுத்தமாகக் கற்பிப்பதில் கவனஞ் செலுத்தி அதில் பாண்டித்தியம் உடையவராகக் காணப்படுவார். இன்னொருவர் ஆக்கத்திறன் உள்ளவராக விளங்குவார். மற்றொருவர் குழு நடனங்களைச் சிறப்பாக அமைக்கும் திறமை உள்ளவராக இருப்பார். இன்னும் சிலர் நாட்டிய நாடகங்களை வெகு நேர்த்தியாக வடிவமைப்பதில் தமது சாமர்த்தியத்தை வெளிக்காட்டுவர். இவ்வாறு ஒவ்வொரு நடன ஆசிரியரிடத்திலும் ஒவ்வொரு தனித்துவம் காணப்படுகின்றது. மற்றைய ஆசிரியர்களிடமும், கலைஞர்களிடமும் காணப்படுகின்ற திறமைகளைக் கண்டு அழுக்காறடையாது அவற்றைப் போற்றிப் பெருமைப்படுத்துவதற்கும் பரதக் கலை வழி சமைக்கின்றது.

நாட்டியக் கலையானது உள்ளக் கிளர்ச்சிகளையும் குணசீலங்களையும் விருத்தியடையச் செய்கிறது. மனநிலை அதாவது திடசித்தத்தையும் பொறுமையையும் விடாமுயற்சியையும் கடைப்பிடிப்பதற்கு உதவி புரிகின்றது. கல்வி ஸ்தானங்களிலே குரு சிஷ்யர் இடையே சுமூகமாக இசைந்து வாழும் தன்மையையும் நல்லெண்ணத்தையும் கொடுக்கின்றது. இலக்கியம், சமயம் போன்ற துறைகளை அறிய உறுதுணையாய் இருக்கிறது. சமூகத்துடன் இணைந்து வாழ வழி வகுக்கின்றது. சிறந்த ரசனையுடைய, ஆளுமையுடைய மனிதனாக வாழ வழி செய்கிறது. எனவே நாட்டியக் கலை புனித ஆன்மீக வளர்ச்சியுள்ள நற்பண்புகள் பொருந்தியுள்ள, சிறப்பாற்றலுள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

**சசிகலா சதானந்தன்**

நடன நெறி

# கணித, விஞ்ஞான மன்றம்



(இ - வ) இருப்போர் :- சி. மகேஸ்வரன் (தலைவர்), சி. குகன் (வகுப்பு விரிவுரையாளர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்),
வ. சி. குணசீலன் (வகுப்பு விரிவுரையாளர்), செல்வி அ. நிரூபராணி (வகுப்பு விரிவுரையாளர்), திருமதி. த. அருளரசி (செயளாளர்)

**(இ - வ) 1ஆம் நிரை :-** ஸ்ரீ. ஸ்ரீபவான் (பொருளாளர்), கா. சுதாகரன், திருமதி யூ. சிந்துஜா, ம. அன்ரனி ஸ்மித் (உப தலைவர்), மு. பிரியந்தன் (உப செயளாளர்)

# ஆரம்பக் கல்வியும் அரங்க விளையாட்டுக்களும்

எதிர்கால உலகை உருவாக்கும் விஞ்ஞானிகள் தத்துவஞானிகள், கவிஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் எல்லா வகையான மனிதவளங்களாக அபிவிருத்தியடைபவர்கள் ஆசிரியர்களிடம் கல்வி கற்ற சிறுபிள்ளைகளாவர். அவர்களிடம் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு உரித்தான எதிர்கால உலகை வெளிப்படுத்துவது ஒவ்வொரு ஆசிரியரினதும் அதிபரினதும் பெற்றோரினதும் கடமையாகும். சிறுவர்கள் எதிர்காலத்தில் அவர்கள் முகங்கொடுக்கவிருக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளை வெற்றிகரமாக சந்திக்கக் கூடியவாறும் அதற்குத் தேவையான சக்தியைப் பெறக்கூடியவாறும் கற்பித்தலை அமைக்க வேண்டும்.

இந்த வகையில் சிறுவர்களின் திறமைகளை வளர்க்கவும், அவர்களின் சிறப்பான ஆற்றல்களை இனங்காணவும் உள நெருக்கடியில் இருந்து அவர்களை மீட்டெடுக்கவும் அவர்களது பலம் பலவீனங்களை அவர்களே கண்டறிந்து அதற்கேற்ப தம்மைத் தயார் படுத்தவும், வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் செயற்படவும் சிறுவர்களது கற்பனைவளம், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்படுத்தும் ஆற்றல், அவதானம், கருத்தூன்றல், கிரகித்தல், விட்டுக்கொடுப்பு, பொறுமை போன்ற நற்செயற்பாடுகளை சிறுவர்களிடம் வளர்த்தெடுக்க மாணவர்களிடையே காணப்படும் அச்சம், பயம், கூச்சம் போன்ற தன்மைகளை அகற்றுவதற்கும் சிறுவர் அரங்கவியலாளர்களும், கல்வியியலாளர்களும் பயன்படுத்துகின்ற ஒரு சாதனமே அரங்க விளையாட்டுக்கள் ஆகும்.

இவ் அரங்க விளையாட்டுக்கள் சிறுவர்களிடையே இறுக்கமான நிலையினைக் களைவதற்கும் இலகுவான அல்லது இலேசானதும் சுதந்திரமானதுமான மனநிலையை சிறுவர்களிடையே ஏற்படுத்துவதற்கும் உகந்தவை இவ்வகையில் இவ்விளையாட்டுக்கள் மாணவர்களின் தேர்ச்சியினை அதிகரிக்கக்கூடிய தயார் நிலையை மாணவர்களுக்கு ஏற்படுத்த உதவுகிறது. இது மட்டுமல்லாது. இவ்வரங்க விளையாட்டுக்கள் ஊடாக சிறுவர்களது உடலை தளர் நிலையில் வைத்திருக்கவும், உளச்சமநிலையைப் பேணவும் தொடர்பாடல் திறனை வளர்த்தெடுக்கவும் நாடகப் பயிற்சிகளை வினைத்திறன் உள்ளதாக மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றன.

சிறுவர்களை மகிழ்வூட்டுதலையே இந்த அரங்க விளையாட்டுக்கள் அடிநாதமாகக் கொண்டிருத்தல் வேண்டும். இருப்பினும் மறைமுகமான முறையில் அறிவூட்டலும் இடம் பெறலாம். மேலும் இந்த அரங்க விளையாட்டானது உடனடியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய செயற்றிறனையும் ஏற்படுத்துகின்றது. மாணவர்களிடையே பிணைப்பையும் நற்பண்புகளையும் முதிர்ச்சியையும் ஏற்படுத்தி ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் கலையையும் கற்பனையையும் அழகியல் ஆற்றல்களையும் வளர்த்தெடுப்பதற்கும் எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளையை பிள்ளை போல செயற்பட வைப்பதற்கும் ஆசிரியருக்கு உதவுகின்றன.

பாடவிதானம் சார்ந்த நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தக்கூடியன கணிதம், மொழி, சுற்றாடல் ஆகிய பாடங்களில் பல படிகளைக் கற்றல் அனுபவத்தை இவ்விளையாட்டுக்கள் மூலமாக மாணவர்களுக்கு அடையச் செய்யமுடியும். மேலும் சிறுவர்களிடையே கணித சிந்தனை, விளையாட்டுத் தீர்வுகளைக் காணல், அடிப்படைகளை இனங்கண்டு விடைகாணப் பழகுதல், துரித செயற்பாடுடையவர்களாக செயற்பட்டு ஞாபக சக்தியை வளர்த்தல் என்பவற்றை கணிதம் சார்ந்த அரங்க விளையாட்டுக்கள் மூலம் மொழியை ஒரு கல்வியாகக் கொள்ளாது ஒரு திறனாகக் கருதப் பழகுதல், துரிதமாக மொழியைக் கையாளப்பழகுதல், மொழியின் முழுமையினை தொடர்பாடலுக்கு பயன்படுத்தல், உணர்வுகளைப் புரிந்து உரையாடல் போன்ற பல்வேறு தன்மைகளை மொழி தொடர்பான அரங்க விளையாட்டுக்கள் மூலம் மாணவர்களிடையே ஏற்படுத்த முடியும்.

"பிள்ளைக்கேற்றவாறு செயற்படவும், பிள்ளையின் ஆத்மாவினுள் பிரவேசிக்கவும் கூடியவர்களாக மூத்தவர்கள் இருக்க வேண்டும் என்ற யூரி அசாரோச்சின் கூற்றுக் கேற்ப பிள்ளைகளிடத்தே ஆசிரியர் வசதியளிப்பவர் ஒரு பங்குபற்றும் நெறியாளர். கற்றல் செயற்பாட்டை நன்கு திட்டமிட வேண்டியவர் ஆகின்றார். இதேவேளை ஆசிரியர் பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய பக்குவ நிலையினை அவ்வாசிரியர் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாறான நிலையிலேயே பிள்ளைகள் குறிப்பாக கவனிக்கப்பட்டு உரிய தேர்ச்சிகளை உச்ச அளவில் பெற்று பாண்டித்திய நிலையினை அடைவர். அதுமட்டுமல்லாது இத்தகைய ஒரு பக்குவநிலையிலேயே மனிதத்துவத்தை உருவாக்கக் கூடிய கல்வி அனுபவம் பிள்ளைகளிடத்தே சென்றடையும். இவ்வாறான ஒரு நிலையை ஆசிரியரிடத்தேயும் மாணவரிடத்தேயும் ஏற்படுத்துவதற்கு இவ் அரங்க விளையாட்டுக்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

**ஷாம்சன் ஜெறாட் தனசீலி**
*கிறிஸ்தவ நெறி*

---

* இலங்கையில் ஓர் ஆசிரியருடன் மட்டும் 71 பாடசாலைகள் இயங்குகின்றன. அநேக பாடசாலைகளில் 10 - 25 ஆசிரியர்கள் உள்ளனர்.

* இலங்கையில் 50 மாணவர்களுக்கு உட்பட்டு 1652 பாடசாலைகள் உள்ளன. 5000 மாணவர்களுக்கு மேல் 11 பாடசாலைகள் உள்ளன.

* தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கை 342
மாகாணப் பாடசாலைகள் 9563

(கல்வி அமைச்சு School Census - 2012)

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணி

தமிழ் அன்னை செய்த அருந்தவப் பேறாய் ஈழவள நாட்டின் பசுந்தீவு எனப் போற்றப்படும் நெடுந்தீவில் இஸ்ரனிஸ்லாஸ் என்னும் கணபதிப்பிள்ளைக்கும் சிசில் இராசம்மா அம்மையாருக்கும் அடிகளார் *02.08.1913*இல் அருந்தவப் புதல்வனாய் வளர்ந்த இவர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தமது ஆரம்பக் கல்வியையும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் தமது உயர் கல்வியையும் திறமையுடன் கற்றுத் தேர்ந்தார்.

தொடர்ந்து கொழும்பு புனித பேனாட் குருக்கள் கல்லூரியில் நான்கு ஆண்டுகளும் உரோமாபுரியில் ஊர்பான் போற்திபிக்கல் பல்கலைக்கழகத்திலும் பயின்று *1938*இல் தமது மறையறிவை நிறைவு செய்து பங்குனி மாதம் *19*ஆம் திகதி பேரருட்தந்தை றுகிலியா ஆயர் அவர்களால் இனிய குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டார். ஈழமணித் திரு நாட்டின் ஒளிவிளக்கு "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்த பெருந் தொகை செந்தமிழ்" இன்தமிழ், தண்டமிழ், வண்டமிழ், தீந்தமிழ், அருந்தமிழ், உயர்தமிழ், செழுந்தமிழ், கோதில் தமிழ், தேன்தமிழ் என்றெல்லாம் இனிதிசைந்து தமிழன்னையை அரியணை ஏற்றிய வல்லாளன். நற்றமிழ் என்னும் நல்லதொரு தூணிலே சிற்றுளி வேலை செய்திட்ட சிற்பியவர். தெய்வப் புகழ் பரப்பித் திகழ்ந்த தமிழின் ஒளி. சத்திய நெறி கண்டு சன்மார்க்க வித்திட்டு முத்தி நகரின் முடி கண்ட மெய்ஞானி. பாரினிற் பயிலும் பன்மொழிகளையும் ஆராய்ந்து வேரை அகழ்ந்து விதை கண்ட மாமேதை. மாதுறவு வேண்டாமல் மண் பொன்னைத் தீண்டாமல் மாலுறவு பூண்ட மனிதப் புனிதகுரு, வாழும் தலைமுறைக்குக் கிடைத்தவொரு நூல்நிலையம் நெயில் நிமிர்ந்துயர்ந்த மேருமலை அறிஞர் குழாம் திரண்டு ஆராயும் பொன்னேடு. வாழ்வில் தனி ஒரு நாயகமாக விளங்கிய தனிநாயகம் திருநாடலங்கரிக்கக் காலமாகி விட்டார் என்பது கற்பனையே காலமதாய் மாறிவிட்டார் என்பது பேருண்மை.

இறைவனின் பேரருளின்றிக் கல்வியின் பயனை அனுபவிக்க முடியாதென்பது அவரின் அசைக்க முடியாத கொள்கை தான் கண்ட இயற்கை, செயற்கை யாவையும் இறைவனின் திருநூலாம் திருவிவிலியத்துடன் இணைந்து இன்பம் துய்த்தார். தான் பெற்ற இன்பத்தைத் தம்முடன் சேர்ந்தாருடனும் பகிர்ந்து கொண் டார். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் "மேலை நாட்டவர்கள் தத்தம் தாய் மொழிகளை ஏற்றிப் போற்றுகிறார்களே! அப்படியானால் நம் தாய் மொழியாம் கன்னித் தமிழ் அவர்கள் மொழிகளுக்குக் குறைந்த தல்ல" என்பதை ஆணித்தரமாக கூறிவைத்த உத்தமர். வணிகத்துக்கு ஆங்கிலமென்றும், காதலுக்கு இத்தாலி என்றும், தத்துவத்திற்கு கிரேக்கம் என்றும் சட்டத்திற்கு டச்சு என்றும் கூறுகின்றார்களே! நான் கூறுவேன் தமிழ் பக்தியின் மொழி என்று! இது ஒன்று போதும் அவரின் தமிழ்ப் பற்றுக்கு.

'என்னை நன்றாக இறைவன் படைத் தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே' என்பதே தனிநாயகத்தின் தமிழ்ப் பெருமை யாகும். சேக்கிழாரின் செய்யுள் நடையில் செந்தமிழ் பேசும் தமிழ்த் தலைவன் 1939இல் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரநாதன்

தோன்றிய தூத்துக்குடியில் புனித திரேசாள் கல்லூரியில் நல்லாசிரியராகவும், அதிபராகவும் இருந்து 1940-1945வரை ஆங்கிலம், தமிழ், வரலாறு போதித்து தொண்டாற்றினார். தமிழ் அன்னையே! உன் பண்பாட்டின் மேம்பாட்டின் புகழைப் பாடிவரும் வண்டாக நான் பறப்பேன் என்று சொல்லிக் கொண்டு 1950-1951இல் வட, தென் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்களின் தமிழ் மொழியின் மாண்பையும், தமிழ் இலக்கியத்தின் இனிமையையும் எடுத்தியம்பிய முதல் இலங்கையர் என்ற பெருமையைத் தமதாக்கிக் கொண்டார். இவரின் பெருமையை அறிந்த மலாயா அடிகளாரை வருந்தியழைத்ததால் அங்கும் சென்று கல்வித் தொண்டாற்றினார்.

தனிநாயகம் அடிகள் தனது ஒப்பியல் அறிவு கொண்டு தமிழின் பெருமையைத் தமிழ் இலக்கியத்தின் சிறப்பைத் தம் பண்பாட்டின் மேம்பாட்டை உலகெங்கும் பரப்பினார். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கிய பெருமை அடிகளாரைச்சாரும். அரசுகள், அரசியல்வாதிகள், பல்கலைக்கழகங்கள் செய்ய முடியாததை தனியே 'தனிநாயகமாக' நின்று செய்யற்கரிய காலத்தால் அழியாத சேவையைச் செய்து உயர்ந்தார். இவர் இத்தாலி நாட்டில் இருந்த பொழுது தன்நாட்டுக் கலையையும், பண்பாட்டையும் நன்கு அறிய வேண்டும் எனத் தாயகம் திரும்பி தென்னிந்தியா சென்று பண்டிதரிடம் ஆரம்பத்தமிழ் பயின்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம் புகுந்து தமிழ் படித்து தமிழாராய்ந்து தமிழாராய்ச்சிப் பட்டங்கள் பெற்றார். 1951-1955ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தென்கிழக்காசிய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு கல்விச் சுற்றுலாக்களையும், தமிழ்த்தூதையும் மேற்கொண்டார். 1955ஆம், 1957ஆம் ஆண்டுகளில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் கல்வித் துறையில் ஆராய்ச்சி செய்து தனது இரண்டாம் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். பண்டைய ஐரோப்பிய இந்திய சிறப்பாகத் தமிழ்க் கல்வி முறைகளின் ஒப்பீடு என்பதே அவரது இலண்டன் பட்டத் துக்கான ஆராய்ச்சிப் படைப்பாகும். 1960ஆம் ஆண்டு வளர்ந்தோர் கல்வி முறைகளைப்பற்றி ஆராய்வதற்காக ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, இத்தாலி, ஸ்கன்டினேவியா, ரஷ்ய நாடுகளுக்குக் கல்விச் சுற்றுலாவை மேற் கொண்டார். 1964ஆம் ஆண்டு ஜேர்மனிக்குச் சென்ற சொற்பொழிவுச் சுற்றுலாவை மேற் கொண்டார். 1967ஆம் ஆண்டுகளில் கடல் கடந்து வாழும் தமிழ் இனத்தாரைப் பற்றி ஆராய்வதற்காக ஆபிரிக்கா, மேற்கிந்தியா, மொரிசியஸ் நாடுகளுக்குச் சென்றார்.

1964ஆம் ஆண்டு அனைத்துலக தமிழ் அறிஞர்கள் மாநாடு புதுடில்லியில் நடை பெற்றது. இம் மாநாட்டின் பின், ஏழாம் நாள் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் அடி களாரின் முயற்சியால் நிறுவப்பட்டது. எனவே அதன் செயலாளராக அடிகளாரே பணியாற்றி னார். 1966ஆம் ஆண்டிலே மலேசியாவிலும், 1968ஆம் ஆண்டு சென்னையிலும், 1970ஆம் ஆண்டு பாரிசிலும், 1974ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்திலுமாக ஒன்றன் பின் ஒன்றாக நான்கு தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்தினார். இவற்றை நடாத்துவதிலும் அடிகளாருக்குப் பெரும் பங்கு இருந்தது. எனவே அனைத்துலக ஆராய்ச்சி மன்றம் அடிகளாரின் குழந்தை யாகும். 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழாராச்சி மாநாடு நடைபெற்றது. இம் மாநாடு தொடங்குவதன் முன்னர் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைக்குப் பெரிய சோதனை ஏற்பட்டது. அரசாங்கத்தின் பலத்த தடைகளுக்கும், பல உயர் மட்டங்களின் எதிர்ப்புகளுக்கும் மத்தியிலும் தமிழாராய்ச்சி மாநாட்டை அடிகளார் நடாத்தி முடித்தார். ஆனால் இத்தகைய தடைகளின் நடுவே குழந் தையைத் தவிக்க வைத்து விட்டுச்சென்று விட்டாரென அடிகளார் மீது பலர் பழி சுமத்த

முயன்றனர். அக்குழந்தையை ஆபத்திலிருந்து தப்ப வைக்க அடிகளார் அயராது உழைத்தார். இக்குழந்தையின் வளர்ச்சியே தமது இலட்சியம் என்பதை நான்காவது மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசிய போது உலகறியச் செய்தார்.

தனிநாயகம் அடிகள் தனியாகத் தமிழை மட்டும் ஆராயவில்லை. தமிழ் இலக்கியத்தின் சிறப்பியல்புகளைப் பிறமொழி இலக்கியங்க ளோடு ஒப்பிடும் ஆராய்ச்சித்துறையிலும் ஒப்பற்ற பணிபுரிந்தார். வேற்று நாடுகளில் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராய்ச்சித் துறையைத் தோற்றுவிப்பதற்காக அயராது உழைத்து அளப்பரிய வெற்றியையும் ஈட்டி னார். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி இந்தியத்துறையாராய்ச்சியிலும், தமிழா ராய்ச்சியிலும் ஈடுபடுகின்ற பண்பாட்டு ஆரா ய்ச்சி அறிஞர் அனைவரையும் உலகளாவிய தமிழாராய்ச்சி இயக்கமொன்றில் இணைப் பித்த பெரும் இயக்குநர் தனிநாகயம் அடிகள். இவர் இது வரை நடாத்திய மாநாடுகள் மூலம் சாதித்தவைகளோ ஏராளமானது. தமிழ் இலக்கியம் பற்றி ஆராயும் உரிமை தமிழைத் தாய்மொழி யாகக் கொண்டவருக்கே உரிய தென்ற கொள்கையைத் தகர்த்தெறிந்து விட்டார்.

தமிழாராய்ச்சி குறுகிய எல்லைக்குள் கட்டுப்பட்டிராது பரந்து விரிந்து பல துறை களிலும் விருத்தியடைகின்றது. தமிழ் இலக்கியம் பற்றியும், தமிழ் இலக்கணம் பற்றியும் ஆராய்ச்சி மட்டுமே தமிழாராய்ச்சி என்ற நிலைமாறித் தமிழ் மக்கள் வரலாறு, தமிழ் மக்கள் மனிதவியல், தமிழ் மக்கள் சமயங்கள், தத்துவங்கள் தமிழ் தொல்பொருளியல், தமிழ் நாட்டவர் பிற நாட்டவரோடு கொண்ட தொடர்புகள் தமிழ்க்கலை, தமிழ் மொழியில் இன்னோரன்ன துறைகளிலும் ஆராய்ச்சி பரந்து சென்றிருக்கிறது. இவரின் முயற்சியின் பயனாக தமிழ் ஆராய்ச்சி வெகு வேகமாக விரைந்து சென்றிருக்கிறது. **1965**ஆம் ஆண்டில் மலேசியாவில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய மலேசியப் பிரதமர் துஜ்கு அப்துல் றகுமான் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "எமது பல்கலைக்கழகம் இந்திய கலாசார இயல் பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விரிந்த மனப்பான்மையுடைய ஓர் அறிஞரைத் தலைவராகப் பெற்றமை எமது பல்கலைக் கழகத்தின் பெரும்பேறாகும். நான் இங்கு குறிப்பிடுவது பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரையே ஆகும்". எனக் கூறினார்.

இவ்வாறு அரும்பணியாற்றியும் அவர் மனம் நிறைவு பெற்று விடவில்லை. மக்கள் அறியாமையைப் போக்கி, அறிவொளி புகட்டப் பல மாத ஏடுகளை வெளியிட்டும், நூல்கள் அச்சிட்டு வெளியிட்டும், மக்கள் பயன்பெற உதவினார். தமிழில் "இயற்கைக் காவியங்கள்" "தமிழ்தூது" எனும் கட்டுரைக்கொத்து "தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும்" "அகில உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பேருரைகள் " என்பன இவரது நூற் தொகுப்புக்களும் சொற் பொழிவுகளுமாகும். இவற்றால் பயனடை யாதோர் யாருமிலர்.

வரலாறு இந்த நாயகத்தை இந்தத் தந்தையை இழந்துவிட்டது. ஆயினும் தமிழ் வாழும் உலகெங்கும் தனிநாயகம் வாழும் என்பது உறுதி "அன்புடையார் என்புமுரியார் பிறர்க்கு" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் திரு மறைக்கும் தமிழ் மொழிக்கும் அர்ப்பணித்த அடிகளார் 1980 செப்டெம்பரில் இறைவனடி சேர்ந்தார். ஆசிய ஜோதி அணைந்தது. அகிலம் போற்றும் தமிழ் ஞானி மறைந்தார். நெடுந்தீவின் தனிநாயகம் எம்மவர்க்கும் உலகவர்க்கும் நித்திய ஜோதியாய் ஒளிரட்டும்.

**ஆசீர்தேவதாஸ் டேவிற்சன்**

*தமிழ்நெறி*

# சீதனம்

ஆண்டாண்டு காலமாய் ஆட்சி புரிகின்ற
பெண்கள் வாழ்வில்,
வேண்டாத விருட்சமாய் வளர்ந்து நிற்கும்
உழைத்து நிற்க முதுகெலும்பற்ற
ஆண்கள் கேட்டிடும் பிச்சைக்காசு....

ஆயிரம் எண்ணங்கள் மனதோடு இருக்க
ஆவலோடு காத்திருக்கும் பெண்
இரு மனம் சேரும் திருமணத்தில்
இணையவும் வேண்டுமா? சீதனம்...
மணவறை கண்ட பெண்
மாங்கல்யம் பெறும் தருணம்
கோலத்தை மாற்றி விடுகின்ற
கொடிய புயலே சீதனம்...

கண்கள் பார்த்து வளர்ந்த காதலில்
காதலியைக் கைபிடிக்க
காதலன் கேட்கின்ற ஓர்
கனமான வெகுமதியே சீதனம்...

அருகில் நின்று பார்த்த மச்சான்
உருகி உருகி அருகில் வர
சொந்தங்கள் கைகூடும் வேளைதனில்
பதற வைக்கும் கொடிய
விஷமே சீதனம்...

**கஜேந்தினி கனகசபாபதி**
*ஆரம்பக்கல்வி - A*

*மறுவீடு போகும் பெண்ணின்*
*தாய்வீட்டைக் காலி செய்யும்*
*மிகவும் கடுமைமிக்க*
*ஆயுதமே சீதனம்...*

*காலங்கள் கழிந்தாலும்*
*கோலங்கள் மறைந்தாலும்*
*மாறாது இந்நிலை...*
*மீண்டும் வருமோ வாழ்வு என்று*
*மாண்டு கிடக்கும் பெண்ணின்*
*வாழ்வைத் தட்டியெழுப்பும்*
*நாள் எங்கே.............?*



ஆன்மீக இலட்சியத்தைப் புறக்கணித்து விட்டு மேலைநாட்டு நாகரிகத்தின் பின்னால் நீ செல்வாயெனில் அதன் விளைவாக மூன்றே தலைமுறைகளில் உன்னுடைய இனம் அழிந்து விடும்.

– சுவாமி விவேகானந்தர்

# தமிழில் அயற்குறியீடுகள்

இன்று தமிழில் பயன்படும் எண்கள் அயலிலிருந்து வந்தவை என்பதனை நாம் அறிவோம். மாத்திரைக்குறிகள் (அரைப் புள்ளி, காற்புள்ளி, முற்றுப் புள்ளி, வினாக்குறி, ஆச்சரியக்குறி, மேற்கோட்குறிகள் ஆகியன) மரபுத் தமிழில் இல்லாதன. இன்று அவை யின்றி தமிழில் சரிவர எழுதமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றின் அயற்தன்மை யைப் பற்றித் தனித் தமிழ்வாதிகளும், மரபின் காவலர்களும் அதிகம் கவலைப்படுவதில்லை. தமிழின் ஒலியியற் பிரச்சினையைத் தீர்க்க மேலதிக எழுத்துக்கள் தேவை என்றால் மட்டும் இவர்களுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்துவிடும். மரபுத் தமிழால் இயலாதது எதுவுமில்லை என்று போர்க்கொடி தூக்கு வார்கள்.

தமிழில் விஞ்ஞானக் கலைச் சொற்களைப் புனைவதில் பல பிரச்சினைகள் இருந்தன. இரசாயன மூலகங்களை குறிக்கத் தமிழில் இருந்த சொற்கள் தமிழருக்குப் புதியனவாக உலோகங்களைக் குறிக்கப் போதாமையால் அவற்றின் ஆங்கிலச் சொற்களையே (சோடியம், மக்னீசியம், குறோமியம், சிலிக்கன்) என்றவாறு தமிழ்ப்படுத்திக் கொண்டோம். இரும்பு, செம்பு, நாகம், கந்தகம் போன்ற சொற்கள் மூலகங்களைக் குறிக்கப் பொருத்த மானதாக இருந்த போதும் கூட்டுப் பொருட் களைக் குறிக்கும்போது ஏற்படக் கூடிய பிரச்சினைகளை மனதில் கொண்டு அயம், கொப்பர், சிங்கு, காபன், சல்பர் என்றவாறு கலைச் சொற்கள் இலங்கையில் புனையப் பட்டன. இவை மேலதிகமான சொற்களாக (தமிழ் வழக்கில் இருந்து வந்து சொற்களுக்குச் சமனாகவும், அவசியமான போது பிரதியீடு களாகவும்) அமைந்தமை தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தின் சில சிக்கல்களைத் தீர்க்க உதவியது.

இவற்றால் பிற சிக்கல்கள் எழாமல் லில்லை. ஆயினும் சிக்கல்களே இல்லாத தீர்வுகள் எளிதானவையும் அல்ல. எப்போதும் சாத்திய மானவையும் அல்ல. இதனைக் கூடச் சிறிது சிரமத்துடன் தமிழின் தூய்மைவாதி களால் ஜீரணிக்க முடியும். இந்த மூலங்களதும் அவற்றின் கூட்டுப்பொருட்களினதும் விஞ்ஞானக் குறியீடுகள் உரோமன் இலக்கத்தி லேயே சர்வதேச ரீதியாக ஏற்கப்பட்டுள்ளன. சீனாவும், ரஷ்யாவும், ஜப்பானும் அவற்றை ஏற்றுள்ளன. இந்திய மொழிகளிலும் இரசாயனக் குறியீடுகள் உரோமன் எழுத்து வடிவிலேயே ஏற்கப்பட்டுள்ளன. அளவு களைக் குறிக்கும் அலகுகளும் (M, Kg, Kw) போன்று ரோமன் அல்லது கிரேக்க எழுத்துக் களிலேயே பயன்படுகின்றன. இவற்றிற்குரிய தமிழ்ப்பிரதியீடுகள் அசாத்தியமானவை எனக் கருதமுடியாது. ஆயினும் தமிழ்க் குறியீடுகள் பயன்படுமாயின் அதன் விளைவு தமிழரதும் தமிழினதும் நலன் பேணுவதாக இராது என்பது உறுதி. இதுபற்றி மரபுவாதிகளின் எண்ணம் எதுவோ தெரியவில்லை.

எண் கணிதத்திலும், கேத்திர கணி தத்திலும் 'நாம் குறிப்பிட்ட எண் X எனக'. அல்லது முக்கோணம் abcயின் புயங்கள் போன்ற சொற்றொடர்களைக் காணுகின் றோம். அந்த அளவிற்கு ரோமன் எழுத்துக்கள் தமிழில் உயர்கல்விக்கு அத்தியாவசியமான வையாகிவிட்டன. இவற்றைவிட முக்கிய மாகத் தமிழிற் பிரதியிடவே முடியாத முறை யில் ஆங்கில ஊடுருவில் கணிதச் சமன்பாடு களிலும், விஞ்ஞானச் சூத்திரங்களிலும் நிகழ்ந் துள்ளது. இது தமிழில் முக்கோணம் கசட பற்றியும் "ல என்ற எண்" பற்றியும் பேசி செம்பைச் "செ" என்ற எழுத்தாற் குறித்தும் காட்டுவது அகற்ற இயலாத ஒரு அடிப்படை யான அயற்தன்மையாகும்.

*08-01=7* என்ற சமன்பாடு

$C+O_2 = CO_2$ என்ற சூத்திரமும் தமிழ் இலக்கணத்திற்கு முரணான அமைப்புக்களா கும். சமன் அடையாளமும் அம்புக்குறியும் வினைச்சொற்கள் (அல்லது சொற்றொடர்கள்) இங்கு பயன்படுத்தப்படும் சகல அடையாளங் களும் இலக்கண ரீதியான கூறுகளாகும். எனவே எளிய சமன்பாடுகளையும், சூத்திரங்களையும் ஆங்கில வசனங்களாகவே நாம் வாசிக்க முடியும். தமிழில் இவற்றை எழுதுவதனால் எட்டிலிருந்து ஒன்றைக் கழித்து வருவது ஏழுக்குச் சமன் என்ற விதமாக வரவேண்டும். எனவே கழித்தல், கூட்டல் சமன், அம்புக்குறி அடையாளங்கள் தமிழ் வசனத்தில் வரும் இடங்கள், சமன் பாட்டிலும் சூத்திரத்திலும் வரும் இடங்களல்ல.

*8, 1-7=* என்றும்

$C,\ O_2\ +CO_2 \rightarrow$ என்றும் அல்லது தமிழுக்கு மேலும் விசுவாசமாக அ, க - எ = என்றும், கா, ஒஉ +காஒஉ என்றும் எழுதித் தூய தமிழைக் காப்பாற்ற எவரும் முனைய வில்லை.

கணித விஞ்ஞானக் குறியீடுகளின் இலக்கணம் தமிழிலக்கணத்தினின்று வேறு பட்டதொன்று. அதைத் தமிழ் மூலம் விஞ்ஞா னம் கற்பிக்கும் நூல்களில் தாராளமாக உலாவ விடுகின்றோம். அதுபற்றிய கவலை ஏதும் நமது மரபின் மாவீரர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. Shakespeare ஐ மட்டும் "ஷேக்ஸ்பியர்" என்று எழுதினால் இல்லை "செகப்பிரியர்" என்றுதான் எழுத வேண்டும் என்று முரண்படுவார்கள். இது அவர்கள் தமிழராய்ப் பிறக்காத பாவம். தமிழினத்தின் தலைவிதி.

**சத்தியகலா கமலகாந்தன்**
*தமிழ்நெறி*

////////////////////////////////////////////////////////////////////////////////

* (கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எல்லாமாக 6 பாடசாலைகள் 2013இல் தேசியப் பாடசாலைகள் ஆக்கப்பட்டுள்ளன. எனவே தற்போது இதன் எண்ணிக்கை 348 ஆகும்.)

* அரச பாடசாலைகளில் ஆசிரிய மாணவர் விகிதம் 18 ஆகும். இது

| | |
|---|---|
| 1 AB பாடசாலைகளில் | ***23 : 1*** |
| *1* C பாடசாலைகளில் | ***18 : 1*** |
| Type *2* பாடசாலைகளில் | ***13 : 1*** |
| Type *3* பாடசாலைகளில் | ***18 : 1*** |

////////////////////////////////////////////////////////////////////////////////

# மொழித் தேர்ச்சிக்கு வாசிப்பின் அவசியம்

இன்றைய நவீன உலக மயமாக்கலில் தொடர்பு ஊடகங்கள் அறிவைப் பெறுவதற்கான சாதனங்களாக உள்ளன. ஒருவரது அறிவு வளர்ச்சியடைய வேண்டுமெனின் சிந்தனை உயர்வானதாக அமைந்திருத்தல் வேண்டும். சிந்தனை சிறக்க வேண்டுமெனின் சொற்கள், அவை குறிக்கும் பொருள் அனைத்தும் அறிந்திருக்க வேண்டும். தாய் மொழியில் சொல் குறிக்கும் பொருள் விளங்குமெனில் அதனை உணர்ந்த அனுபவ, சிந்தனை விருத்தி வேண்டும். அப்போது தான் கற்றவற்றை இடம், காலம் உணர்ந்து பயன்படுத்த முடியும். இவ்வாறு இடம் காலம் உணர்ந்து உரிய முறையில் பயன்படுத்துவதற்கு வாசிப்பின் அவசியம் பற்றி இக்கட்டுரை வரையப்படுகிறது. எந்தவொரு சொல்லும் இடம், செயல், காலம் அறிந்து பயன்படுத்தும்போது தான் அதன் பெறுமதி வலுப்பெறுகின்றது.

தமிழ்மொழி கற்பித்தலின் நோக்கங்களில் முதன்மையானவை தமிழ்மொழி வினைத்திறன்மிக்க தொடர்பாடற் கருவியாக பயிலுதல், மொழி வாயிலாக நயக்கும் திறனும், ஆக்கும் திறனும் கொண்ட அடிப்படை திறமையை வளர்த்துக் கொள்ளல், சமூகங்களுடன் இணைந்து வாழ்வதற்கும். தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் தேவையான மனப்பாங்கை வளர்த்தல், மொழியூடாக ஆளுமையை வளர்த்துக் கொள்ளல் என்பனவாகும். தற்போது காணப்படும் அறிவுப் பிரவாகம் பாடசாலைச் சிறார்களின் அறிவு மட்டத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் காரணமாகவும், தகவல் ஊடகங்களின் வளர்ச்சி காரணமாகவும் இன்றைய மாணவர்கள் கூடிய அறிவாற்றல் கொண்டவர்களாகவும் அறிவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிமுறைகளைத் தெரிந்தவர்களாகவும் உள்ளனர்.

எனினும் மாணவர்களின் மொழியறிவு, மொழியைக் கையாளும் வல்லமை மொழியின் நுணுக்கங்களை அறிந்து அவற்றைத் தமது ஆக்கங்களில் பயன்படுத்தும் ஆற்றல் என்பவை திருப்திகரமாக காணப்படாமை உள்ளது ஒரு முக்கிய குறைபாடாகும். பதின்மூன்று வருடங்களாகப் பாடசாலையில் கற்றும், மொழித் தேர்ச்சி பாராட்டக்கூடிய அளவில் இல்லாமையை நாம் கண்ணூடாகப் பார்க்க முடிகிறது. இதனாலேயே புதிய கல்விச் சீர்திருத்தங்களில் ஆரம்பக்கல்வியில் மொழி கற்பித்தல் தொடர்பான புதிய அணுகுமுறைகள் கையாளப்படுகிறன.

மொழித்தேர்ச்சிக்கு வாசிப்பு மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. வாசித்தல் என்பது வரிவடிவத்தை அறிதல், ஒலித்தல், பொருள் உணர்தல் ஆகிய மூன்று கூறுகளை அடக்கிய பொருள் உணர்வதற்கு தொடர்ச்சியான அவசியம் பயிற்சியேயாகும். எனவே மொழித் திறன்களை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளை வாசிப்புத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை அதிகம் வழங்குவதன் வாயிலாக மொழித் தேர்ச்சியில் முழுமையான வளர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கு உதவ முடியும்.

அதிக ஆர்வமுள்ள கதைகளை வாசித்துக் காட்டல், வாசிப்பு தொடர்பான மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், புத்தகக் கண்காட்சி, வாசிப்பு தொடர்பான

விளையாட்டு, புத்தகங்களைப் பரிசாக வழங்குதல் இத்தகைய செயற்பாடுகள் ஊடாக வாசிப்பில் விருப்பத்தை ஏற்படுத்தலாம். வாசிப்பே ஒருவனை முழு மனிதனாக்கும். வாசிப்பில் ஆர்வம் காட்டும் அளவுக்கு ஒருவரது அறிவு விரிவடைவதோடு மனப்பாங்கும் மாற்றம் ஏற்படும். முக்கியமாக மொழித் தேர்ச்சிக்கு மாணவர்கள் அதிக அளவிலான நூல்களை வாசிக்க வேண்டும். அன்னம் போல நல்ல நூல்களையும், நல்ல விடயங்களையும் தேடிக் கற்றல் இன்றியமையாததாகின்றது. நல்ல நூல்களை நல்ல நண்பர்களாக்கிக் கொள்ளல் வேண்டும். அதன் வாயிலாகக் கிடைக்கும் ஆனந்தத்திற்கு அளவு ஏதுவுமே கிடையாது.

மாணவர்களின் வாசிப்புத் திறன்களை வளர்க்கப் பொருத்தமான சூழ்நிலையை வகுப்பறையில் உண்டாக்குவது ஆசிரியருக்கே உரிய கடமையாகும். மாணவர்கள் விரும்பக் கூடிய முறையில் வாசிப்பை ஆரம்பித்து நீண்டகாலம் நிலைபெறக் கூடிய வாசிப்பில் ஆர்வத்தை உண்டாக்குவது மிக அவசியம். மாணவரின் வயதின் அடிப்படைக்கேற்ப வாசித்தல் செயற்பாட்டை அமைத்துக் கொள்ள வேண்டும். இத்துடன் சிறிய பாடல்களை வாய்விட்டுப் பாடுவதற்குப் பயிற்சி அளிப்பதும் ஒவ்வொரு நாளும் செய்தித்தாளிலுள்ள தலைப்புச் செய்திகளை உரக்கப் படிக்க வகுப்பறையில் செய்தலும் சிறந்த பயிற்சியாகும். உரத்துப்படித்தல் நாவுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது. அதன் பயனாக நல்ல தமிழ் ஒலிப்புப் பயிற்சி கிடைக்கின்றது. உரக்கப் படிப்பதால் எந்த இடத்தில் நிறுத்த வேண்டும். வாசிக்க எந்த இடத்தில் சேர்த்து வாசிக்க வேண்டும், என்ற தெளிவு ஏற்படுகின்றது. இப்பயிற்சி எழுத்துப் பிழையின்றி எழுதுவதற்கும் வழிசமைக்கின்றது.

ஒருவரது கருத்தை, உணர்ச்சியை வெளிப்படுத்தும் கருவியே மொழியாகும். எழுத்தை மாறுபட ஒலித்தால் சொல்லும், பொருளும் வேறுபடும். ஆரம்ப வகுப்புக்களில் சொல்லையும், எழுத்தையும் சரியான ஒலியுடன் சொல்லுவதற்குக் குழந்தைகளுக்குப் பயிற்சி சரியான முறையில் வழங்கப்படாமையே காரணமாகும். ஆகவே உரத்து வாசித்தலை ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் கட்டாயம் பயன்படுத்த வேண்டும். எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்காதவர்களுக்கு ஒலிப்பு முறைப் பயிற்சி அவசியம்.

உரத்து வாசித்தல் நீண்டகாலம் படிப்பதற்கு பொருத்தமற்றது. குறித்த காலம் வரை உரத்து வாசித்தல் பின்னர் மௌன வாசித்தலே முறையாகும். உரத்து வாசிப்பதன் மூலம் ஒலித் தெளிவு, ஒலிமயக்கம் தரும் எழுத்து, சொற்களின் பொருள் வேறுபாட்டுத்தெளிவு என்பவற்றைப் பெற்றவுடன் மௌன வாசிப்பு சிறந்தது. இவ்வாசிப்பானது விரைவில் வாசிக்க முடியும். பரீட்சைக் காலத்தில் இப் பயிற்சி பெரிதும் உதவும் மௌன வாசிப்பில் குறுகிய காலத்தில் அதிகம் வாசிக்க முடியுமாகையால் அறிவு பெருகும். இம்முறையே நூலகங்களில் பின்பற்றப்படுகின்றது.

மேலும் சொல்முறை, வாக்கிய முறை என்ற ஒழுங்கில் வாசிப்புப் பயிற்சி அளித்தல் நன்று. அப்போது இடர்படும் மாணவனுக்கு உதவுவதற்கு வாய்ப்பாக அமையும். சொல் வட்டம் மூலமும் வாசிப்புப் பயிற்சி வழங்கலாம். தடித்த அட்டையில் இரு வேறு அளவுடைய வட்டங்களை அமைத்து பெரிய அட்டைக்குள் சிறிய வட்டத்தைப் பொருத்தும்படி கேட்கலாம். வாசிப்பை ஆரம்பிக்கும் போது பிள்ளைகள் விரும்பத்தக்கனவான சம்பவங்கள், விகடத்துணுக்குகள் போன்றவற்றைக் கொடுத்து வாசிக்கச் செய்தல் நன்று. ஒரு விடயம் தொடர்பாகப் பல வாக்கியங்களை வாசிக்கச் சொல்லி கருத்தினைக் கிரகிக்கப் பயிற்றுவிக்கலாம்.

கருத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து புரிந்துணர்வுடன் வாசித்தலே சிறந்த வாசிப்பு. இதற்குரிய முன் பயிற்சிகளை கொடுத்தல் மிக அவசியமானதாகும். மாணவர்களின் விருப்பத்திற்கும் முதிர்ச்சிக்கும் உரிய முறையில் ஆர்வத்

துடன் கூடிய வாசித்தற் செயற்பாடொன்றை அமைத்துக் கொள்ளுதல் மூலம் வாசிப்பை நீண்ட காலம் நிலைபெறக்கூடியதாக அமைத்துக் கொள்ளலாம்.

இன்றைய நவீன உலகில் வாசிப்பதற்கு நேரமில்லை என்ற கருத்து அனைவராலும் இன்று எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்தாகும். நேரத்தை நாமே ஒதுக்கிக் கொண்டு வாசிப்பினை மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் அதிக நேரத்தை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கே செலவிடுகிறார்கள். நேரமில்லை என்ற சாக்குப் போக்கை விடுத்து வாசிப்புக்கு நேரத்தை செலவிடப் பழகுவோமாயின் மகிழ்ச்சியின் கதவை நாமே திறந்தவராவோம்.

ஆகவே மொழியறிவைப் பெறுவதற்கும், எமது அனுபவத்தைத் தெளிவாக விளக்கவும் சிந்தனை விருத்திக்கும், செயலாற்றலுக்கும் அறிவுக் களஞ்சியத்தை வளர்த்துக் கொள்ளவும், அதிக நூல்களை வாசிக்க வேண்டும். அதிக நூல்களை வாசித்து சிந்தனையை பரந்து படச் செய்பவனே முழு மனிதனாவான். இதனாலேயே வாசிப்பு ஒருவனை முழு மனிதனாக் கின்றது என்பர். ஆகவே மாணவர்களை வாசிப்பில் ஈடுபடச் செய்து அவர்களைச் சிறந்த ஆளுமையுடையோர்களாக்குவது இன்றைய முக்கிய தேவைகளில் ஒன்று என்பதை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டியது மொழி ஆசிரியர்களது கடமையாகும்.

**துவாரகை குமாரசுவாமி**
ஆரம்பக்கல்வி - D

---

* 2012ஆம் ஆண்டில் தரம் 1, 2இல் மாணவர் அனுமதி : 339, 142

* ஏறத்தாழ ***3 1/2*** லட்சம் மாணவர் பாடசாலைகளுக்குள் உள் நுழையும் அதே வேளை 35000 பேர் வரையிலேயே பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்றனர்.

* இலங்கையின் எழுத்தறிவு வீதம் ***96.4%***
  கணனிசார் அறிவு வீதம் ***36%***

* இலங்கையில் கட்டாயக் கல்விக்குரிய வயது 5-16

* ஆரம்ப வகுப்புக்களில் நடைமுறையில உள்ள கலைத்திட் டத்தின் பெயர் - செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒன்றிணைந்த கலைத்திட்டம்.

# உடலாளர் மன்றம்



**(இ - வ) இருப்போர் :-** க. மயில்வானம் (தலைவர்), பா. வாசுதேவன் (காப்பாளர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே.கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), திருமதி .சி. ராதாகிருஸ்ணன் (காப்பாளர்), திருமதி. க. அன்பரசி (காப்பாளர்), திருமதி. சு.டெய்சி (தலைவி) **(இ - வ) 1ஆம் நிரல் :-** ந. அகிலன், செல்வி. ஜெ. ஜெரோமியா, திருமதி. தெ. ஜேன்பிரியதர்சினி (மெய்வல்லுநர் தலைவி) அ. ச. பரீஹா, மு. கவிதா, ப. கவிதா(செயலாளர்), செல்வி. ம. தமிழ்ச் செல்வி, திருமதி. ச.பாலகௌரி (பொருளாளர்), சு. ரேணுகா, ச. கயல்விழி, திரு. இ. கிருஸ்ணசேகரன் **(இ - வ) 2ஆம் நிரல் :-** ச.மோகன்ராஜ், ஐ. சிவசங்கரலிங்கம், பா. சதீஸ்வரன், சி. திருமாவளவன் (மெய்வல்லுநர் தலைவர்), த. ஜெயகரன், ம. வினோகாந்தன் (செயளாளர்), றெ. தேவசீலன், தி. ஜெ. செ. செல்வச் சந்திரன் (பொருளாளர்), பொ. ஜெகநேசன்

# கற்பு...?

சீமாட்டிகளே... சீமான்களே.... கொஞ்சம் நில்லுங்கோ சீமாட்டிகளே.... கொஞ்சம் நில்லுங்கோ சீமான்களே.... நான் ஒரு கதை சொல்லப்போறன். சீமாட்டிகளே... சீமான்களே எனக்குக் கதை எழுத வேணும் எண்டு சரியான ஆசை பாருங்கோ. கதை எழுதி பிரபலமான ஆக்கள் கனக்க இருக்கினம் என்ரை பிள்ளை சொன்னவள் பேப்பரிலை, புத்தகங்களிலை வாற நல்ல நல்ல கதையள் எல்லாத்தையும் என்ரை பிள்ளை வாசிச்சுக் காட்டிறவள். அதில இருந்து எனக்கும் கதை எழுத வேணும் எண்டு ஆசை.

ஆனா நான் கனக்கப் படிக்கேல்ல. என்னை நல்லாப் படிப்பிச்சு விட என்ரை அப்பு, ஆச்சியிட்டை அப்ப வசதியிருக்கேல்லை. அதாலை எனக்கு எழுத்து வாசிப்பு சரியாய் வராது. எழுத்துக் கூட்டிக் கூட்டி கொஞ்சம் வாசிப்பன். ஆனா பிழை இல்லாமல் சரியா எழுத வராது.

இழுனாக்களுக்கை, இவானாக்களுக்கை, ஒற்றைக் கொம்புக்கை, இரட்டைக் கொம்புக்கை, அரவுகளுக்கை எல்லாம் பிழை விடுவன். எனக்கு அந்த கே. ஆர். டேவிட்டின்ரை வரலாறு அவனைத் தோற்று விட்டது, பாலமனோகரனின் நிலக்கிளி, தாமரைச்செல்வியின்ர சுமைகள் எண்ட கதை எல்லாம் நல்லாய் பிடிக்கும். அதை எல்லாம் என்ரை பிள்ளை வாசிச்சுக் காட்டினவள்.

அப்படி ஒரு கதை தான் நான் சொல்லப் போற கதையும்.... இது உண்மையில நடந்த நான் கண்ணால கண்ட கதை பாருங்கோ. ஆராவது நல்லாய் கதை எழுதிய ஆக்கள் இருந்தால் இந்தக் கதையையும் எழுதிப் பேப்பருக்கு அனுப்புங்கோ. உங்களுக்கு நல்ல பாராட்டுக் கிடைக்கும். எழுதப்படிக்கத் தெரியாத நான் சீமாட்டிகளே, சீமான்களே எண்டு எல்லாம் எப்படிச் சொல்லுறன் எண்டு நினைப்பியள் அதை எல்லாம் என்ரை பிள்ளை தான் சொல்லித் தந்தவள்.

பள்ளிக் கூடத்திலை ஆங்கில வாத்தியார் படிப்பிக்கிறவராம். பொம்பிளையளை லேடீஸ் எண்டு சொல்ல வேண்டும். ஆம்பிளையை ஜென் டில்மேன் எண்டு சொல்ல வேணும். லேடீஸ் எண்டால் சரியான தமிழ் சீமாட்டிகளாம் ஜென்டில்மேன் எண்டால் சீமான்களாம். நல்லாய் படிச்ச மரியாதைக்குரிய ஆக்களை அப்பிடித்தான் கூப்பிட வேணுமாம். வெள் ளைக்காரன் அப்படித்தானாம். அதாலைதான் சீமாட்டிகளே சீமான்களே எண்டு உங்களைக் கூப்பிடுறன்.

சரி, கதைக்கு வருவம், நான் சொல்லப் போற கதையின்ர கதாநாயகியின்ரை பேர் என்னெண்டால்.... உண்மைப் பேரைச் சொல்லக் கூடாது. சரி நாயகியின்ர பெயர் கண்ணகி எண்டு வைப்பம். கதாநாயகன்ரை பேர்... பெடியன் வேதக்காரப் பெடியன். சரி அமல் எண்டு வைப்பம். இந்தக் கண்ணகி பாவம் ஒரு ஏழைக்குடும்பத்துப் பெண். ஆனா இப்பதான் ஏழை. காதலிச்சுக் கலியாணம் கட்டினபிறகுதான் ஏழை. இன்னும் சரியாச் சொல்லப்போனால் கண்ணகி தாய், தகப்பன் ஒரு பெரிய இடத்தில கலியாணம் பேசி இவனைத்தான் கட்டவேணும் எண்டு கட்டளை போட்ட உடனை தான் பள்ளிக் கூடத்திலை படிக்கேக்கை காதலிச்சவனை மறக்கேலா மல்... அவனுக்குத் துரோகம் செய்ய மனம் வராமல்... அவனோடை ஓடின பிறகுதான் ஏழை. அதுக்கு முதல் அவளும் ஒரு பணக்கார வீட்டுப் பொம்பிளைப் பிள்ளைதான்.

தகப்பன், தமையன்மாரிட்டை லொறியள், மினிபஸ் எல்லாம் நிக்குது. கனபேர் வெளிநாட்டிலையும் நிக்கினம். சாவகச்சேரியிலை இருந்து புத்தூருக்குப் போகேக்கை கனகம் புளியடிச்சந்தி வருகுது. ஐந்து றோட்டுச் சந்தி, இந்தச் சந்தியிலை இருந்து புத்தூர்ப்பக்கம் போகேக்கை கிட்டத்தட்ட ஒரு கட்டை தூரம் போன உடனை முத்துமாரி அம்மன் கோயில் வருகுது. இந்த முத்துமாரி அம்மன் கோயில் வீதியிலை திரும்பி ஒரு முந்நூறுயார் போனால் வாற முதல் முடக்குக்கு கொஞ்சம் பின்னாலை இடப்பக்கமாய் இருக்கிற ஒரு குச்சு ஒழுங்கையிலை திரும்பினால் கண்ணகியின்ரை வீடு வரும். கண்ணகியின்ரை புருசன் ஒரு கஸ்ரப்பட்ட குடும்பத்துப் பெடியன். ஆனால் நல்ல குணமான பெடியன். இந்தத் தமிழ்ச் செல்வியின்ர வீட்டிற்குப் பக்கத்திலை தான் என்ரை வீடும் இரண்டும் ஓலை வீடுகள் தான். நான் கூலி வேலை செய்யிறன் கண்ணகியின்ரை புருசன் கட்டுக்காசிலை ஓட்டோ ஒண்டு எடுத்து ஓடுறான். கண்ணகிக்கு மூண்டு பொம்பிளைப் பிள்ளையள். முதல்ப் பிள்ளை இப்பத்தான் பள்ளிக்கூடம் போகுது. மற்ற இரண்டு குழந்தையள் இந்தப் பெட்டை பாவம்.... புருசன் ஓட்டோக்கட்டுக் காசையும் கட்டி வீட்டுச் சிலவையும் சமாளிக்கும். பெரிய இடத்திலை பிறந்த நல்ல வடிவான பெட்டை காதலிச்சவனோட ஓடி வந்ததால் இப்ப இப்படிக் கஸ்ரப்படுகுது.

இப்படியே கண்ணகி குடும்பம் நடத்திக் கொண்டிருக்கேக்குள்ள... எனக்கு வடிவாய் கதையைச் சொல்ல வருகுதில்ல பாருங்கோ... நடந்ததைச் சுருக்கமாகச் சொல்லுறன். நீங்கள் அதை சரியாய் ஒழுங்குபடுத்தி கதையை எழுதுங்கோ. ஒரு நாள் கண்ணகியின்ர புருசன் ஒட்டோவிலை யாழ்ப்பாணத்துக்கு ஒரு "அயர்" போட்டு வரேக்கை நாவற்குழி பாலத்தடியிலை ஒரு லொறிகாரன் கண்ணகியின்ரை புருசனை அடிச்சுப் போட்டு ஓடிட்டான் அதுவும் இரவு நேரத்திலை ஒட்டோ முட்டை மாதிரி உடைஞ்சு போட்டுதாம். பெடியன்ரை உடம்பும் முட்டைக்கரு மாதிரி சிதைஞ்சுபோச்சாம். பெடியனுக்கு இப்ப கடுமை. யாழ்ப்பாணத்திலை ஏதோ ஐ.சி வாட்டிலை கிடக்குது. அறிவு நினைவு வந்து வந்து திரும்பிப் போகுதாம். தலையிலை பிடரிப்பக்கத்திலை ஒரு ஒப்பறேசன் செய்ய வேணுமாம். அதுவும் கொழும்புக்குக் கொண்டு போயாம். அதைச் செய்யாட்டி பெடியன்ரை கை, கால் வழங்காமல் போயிடுமாம்.

அந்தப் பெட்டை பாவம் உதவி இல்லாமல் ஓடித்திரிஞ்சது. காசு தேடி அலைஞ்சு கொண்டு ஒரு நாள் விதானையார் வீட்டை வந்தது. இந்த விதானையைப் பற்றியும் உங்களுக்குச் சொல்ல வேணும். கனகன் புளியடிச் சந்தியிலை இருந்து, புத்தூர்ப்பக்கம் போகேக்கை வலது பக்கத்திலை வாற மூண்டாவது வீடுதான் விதானையார் வீடு. பெண்சாதி செத்துப் போனா. பிள்ளையள் இரண்டு வெளிநாட்டிலை, இரண்டு கொழும்பில பெரிய உத்தியோகத்திலை குடும்பமாய் இருக்குதுகள் உடையார் வீடு, வாசலை விட மனமில்லாமல் தனி ஆளாய் வீட்டோடை இருக்கிறார். வேலைக்காரர் தான் சமையல், சாப்பாடு, வீட்டு வேலை எல்லாம். காசெண்டால் அவரிட்டை சக்குப் பிடிச்ச காசு கிடக்குது. ஒருநாள் விதானையார் வீட்டில தான் பின்பக்கத்திலை தென்னம் பிள்ளைக்கு அதர் வெட்டிக் கொண்டு நிக்கேக்கை இந்தப் பெட்டை விதானையாரைத் தேடி வந்தது. புருசன்ரை விசயத்தைச் சொல்லி அழுதது. கொஞ்சக் காசு வேணும் எண்டு கேட்டுது. விதானையார் கொஞ்சம் யோசிச்சுப் போட்டு அடுத்த நாள் பின்னேரம் ஐஞ்சு மணி போல வரச்சொன்னார்.

அடுத்த நாளும் நான் விதானையார் வீட்டிலை தான் அதர் வெட்டிக்கொண்டு நிக்கிறன். இந்தப் பெட்டையும் வந்தது. நான் வீட்டுக்குப் பின்னாலை நிக்கிற விசயம் பெட்டைக்குத் தெரியாது. விதானையார் பெட்டையை உள்ளை கூப்பிட்டார். உள்ளை

கூப்பிட்டு அவர் பெட்டைக்குச் சொன்ன விசயம் தான் பாருங்கோ எனக்குக் காதுக்கை ஆணி வைச்சு அடிச்சமாதிரிக் கிடக்குது. பிள்ளை... நான் காசு தாறன் பிரச்சினையில்லை. அதை நீ திருப்பியும் தரவேண்டாம். திருப்பித்தரவும் உன்னட்டை வசதி இல்லை. இந்தக் காசு கிடைக்காட்டில் உன்ரை புருசன் தப்ப மாட்டான். மண்ணோடு மண்ணாய் போய் விடுவான். ஏன்...நீயும் நானும் கூட ஒரு நாளைக்குச் சாகத்தான் போறம். மண்ணுக்கை போகப் போற இந்த உடம்பை ...மண் தின்னப் போற இந்த உடம்பை.... கொஞ்சம் மனுசன் திண்டால்...

அங்காலை எனக்குச் சொல்ல ஏலாமல் கிடக்குது பாருங்கோ. எண்டாலும் கொஞ்சத்தைச் சொல்லுறன்... நீ அதுக்குச் சம்மதித்தால் ....சும்மா கற்பு, கற்பு எண்டு எல்லாரும் கத்துறாங்கள்... இந்த விசயம் காதும் காதும் வைச்சது மாதிரி... ஒருத்தருக்கும் தெரியாது... நீ சம்மதித்தால்... உனக்குப் புருசன் உயிரோடை வேணும் எண்டால்... உனக்கு அவனிலை உண்மையான அன்பு இருந்தால்... அவனைக் காப்பாத்த வேணுமெண்டால்... கொஞ்ச நேரம் பெட்டை அழுகிற சத்தம் கேட்டுது. பிறகு சத்தமே இல்லை. நானும் அதர் வெட்டியதை நிப்பாட்டிப் போட்டன் கை, கால் உடம்பெல்லாம் விறைச்சு அப்படியே தென்னை மரத்துக்கை இருந்திட்டன்.

ஒரு அரைமணித்தியாலம் சத்தமே இல்லை. அதுக்குப்பிறகு பெட்டை முகத்தைத் துடைச்சுக் கொண்டு வெளியிலை வந்தது. விதானையார் வந்து காசு நீட்டுறார். இந்தா.... இதிலை ஒரு லட்சம் கிடக்கு. உடனை ஒரு வானைப்பிடிச்சு அவனை கொழும்புக்கு கொண்டு போ. வெள்ளவத்தையில "கில்மன்" (Killman) எண்டு ஒரு ஆஸ்பத்திரி இருக்கு அங்கை கொண்டு போ. நான் என்ரை பெடியனுக்கும் போனில சொல்லுறன். அவனுக்கு அங்கை எல்லா டாக்குத்தர்மாரையும் தெரியும். கவலைப்படாதை அழாதை. நாளைக்கே கொண்டு போ. என்ன பிரச்சனை எண்டாலும் கொழும்பிலை என்ரை பெடியனிட்டைச் சொல்லு.

பெட்டை காசு வைச்ச ஒரு சீலைப் பையோடை வீட்டை போகுது. நானும் பெட்டைக்குத் தெரியாமல் மெல்ல மெல்ல பின்னாலை போறன். விதானையாரிட்டை இண்டைக்கு முற்பணமாம் ஒரு ஆயிரம் ரூபாய் கேட்க வேணும் எண்டு இருந்தனான். நாளைக்கு என்ரை மகள் எங்கையோ சுற்றுலா போக பள்ளிக் கூடத்துக்குக் கட்ட வேணும் எண்டு கேட்டவள். அதையும் மறந்து போய் பேய்பிடிச்சவள் மாதிரி பின்னாலை போறன். பாவம் பெட்டை சீலையாலை அடிக்கடி கண்ணைத் துடைச்சுக் கொண்டு தான் போகுது.

போற வழியிலை மருதடிப்பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்திலை இருக்கிற வாசிகசாலையிலை நவராத்திரி விழாவும் பட்டிமன்றமும் நடக்குது. மேடையிலை ஒரு படிச்ச பண்டிதர் பேசிக் கொண்டிருக்கிறார். கண்ணகியா, மாதவியா, கற்பில் சிறந்தவள்? தன் புருசனை அநியாயமாகக் கொன்றதற்காக மதுரையையே எரித்தாளே அந்தக் கண்ணகி... அவள் தான் கற்பில் சிறந்தவள். இதையும் கேட்டுக் கொண்டுதான் அந்தப் பெட்டை போகுது.

சீமாட்டிகளே ...சீமான்களே நான் படிக்கவில்லைத்தான். ஆனால் உங்களை ஒண்டு கேக்கிறன் தன் புருசனை அநியாயமாகக் கொன்றதற்காக மதுரையையே எரிச்ச அந்தக் கண்ணகி கற்பில் சிறந்தவள் எண்டால்... தனது புருசன் உயிர் பிழைக்க வேணும் என்பதற்காக கொஞ்சநேரத்திற்கு முன் விதானையார், வீட்டில் இந்தப் பெட்டை தன்னையே கொஞ்ச நேரம் உயிருடன் எரித்தாளே... இவள் கற்பு இழந்தவளா? என்ன ஐயா அது.....

**நடேசன் சிறிதரன்**

*தமிழ்நெறி*

# ஆரம்பக் கல்வியும் விளையாட்டு முறைக் கற்பித்தலும்

ஆரம்பநிலையில் உள்ள மாணவர்களுடைய அதாவது (5வயது தொடக்கம் 11வயது வரை) உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களது ஆளுமையை விருத்திசெய்வதற்கான அனுபவங்களை வழங்குதலே ஆரம்பக்கல்வி என்று சிறப்பாகக் கூறப்படுகின்றது. அந்த வகையிலே ஒரு மாணவனுடைய பாடசாலையோடு தொடர்புடைய ஓர் அனுபவமாக இருப்பதால் பல நாடுகளும் ஆரம்பக்கல்விக்கு மிக முக்கியமானதொரு இடத்தினை வழங்கியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த கல்வி கலாசார ஸ்தாபனம் (யுனஸ்கோ) உலகிலே எழுத்தறிவைச் சகல இனமக்களுக்கும் பரப்புவதற்காக சர்வதேச ஆரம்பக் கல்வித் திட்டத்தினை 1960ஆம் ஆண்டிலிருந்து முக்கியமாக மூன்றாம் உலக நாடுகளில் அமுற்படுத்தி வருகின்றது. இதனுடைய முக்கிய நோக்கம் உலகில் உள்ள அத்தனை மக்களுக்கும் குறைந்த பட்சம் எழுத்தறிவையாவது ஆரம்பக் கல்வியின் மூலம் வழங்க வேண்டும் என்பதாகும் இந்த வகையில் ஒரு வீட்டிற்கு அத்திவாரம் எவ்வளவு முக்கியமானதாக விளங்குகின்றது. அதுபோல ஒருவனுடைய கல்வியின் அத்திவாரமாக விளங்குவது ஆரம்பக்கல்வியே என்றால் மிகையாகாது எனவே இந்தக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தைகள் சரியான முறையில் கற்க வேண்டும். சரியான முறையில் கற்காது விட்டால் அவர்களின் எதிர்காலம் ஒரு கேள்விக் குறியாக மாறிவிடும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை என்றே கூறலாம்.

ஒரு பிள்ளையானது பிறந்து பாடசாலைக்கு வருமுன் காலப்பகுதியில் தனது வீட்டுச் சூழலிலேயே வாழ்ந்து வருகின்றது கற்பனை உலகிலே சஞ்சரித்து வளர்கின்ற பருவத்தில் வாழ்ந்து வருகின்ற குழந்தையானது பாடசாலைக்கு வருகின்றபோது அதனுடைய சூழல் முற்றுமுழுதாக மாற்றமடைந்தே காணப்படுகின்றது. பயந்த தன்மை, ஏக்கம், அச்சம் என்பன பிள்ளையிடம் காணப் படவே செய்யும். எனவே இதனைப் போக்க பாடசாலைச் சமூகம் பிள்ளைக்கு உதவ வேண்டும்.

எனவே ஒரு புதிய உலகிற்கு வருகின்ற அந்த மாணவனைச் சரியான முறையில் ஆற்றுப் படுத்துவது ஒரு ஆரம்பக்கல்வி ஆசிரியரின் முக்கிய கடமையாக விளங்குகின்றது. குழந்தைகளின் மனம், வாக்கு, காயம், என்னும் மூன்றையும் சிறந்த முறையில் பயன்படுத்தி அவற்றை விருத்தி செய்யும் பெரும்பணி ஆசிரியரையே சார்ந்தது. ஆசிரியருடைய குணம் செயல்களே மாணவரிடம் அதிகமாக அமைந்து விடுதல் உண்மை.

ஆகவே ஆசிரியர் மலர்ந்த முகமும் மகிழ்ச்சியான தோற்றமும் உடையவராக இருத்தலோடு மாணவர்களை அன்பாக வழி நடாத்துதல், அவர்களுக்கு இரக்கம் காட்டுதல், இனிய எளிய சொற்களோடு அவர்களுடன் உரையாடுதல், ஒழுக்கம் சுத்தம் உடையவராக இருத்தல், குழந்தைகள் தருகின்ற கஷ்டங்களைப் பொறுத்தல், சமய பக்தி உள்ளவராக இருத்தல், சாதிமத பேதமின்றி வழி நடாத்துதல் என்பனவற்றில் மாணவர்களுக்கு சிறந்ததொரு வழிகாட்டியாக விளங்க வேண்டும். தந்தை தாய் என்றால் ஆசிரியர் தான். வீடென்றால் பாடசாலை தான். எல்லாம் ஒன்றுதான்

என்று எண்ணும் மனப்பாங்கு உண்டாக்குவதில் ஆசிரியர் சித்தி பெறவேண்டும். பிள்ளைகளோடு தானும் ஒருவராக வாழ்ந்து அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு அன்போடும் ஆதரவோடும் பதில்கூற வேண்டும் சுருக்கமாகக் கூறின் குழந்தைகளின் அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்தெடுக்க வேண்டிய பெரும்பணி ஒரு ஆசிரியரையே சாரும்.

இந்த வகையிலே ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு மிகவும் பொருத்தமான கற்பித்தல் முறைகள் பல உண்டு எனினும், ஆரம்பவகுப்பு மாணவர்கள் பெரிதும் விரும்புகின்ற முறையாக விளையாட்டு முறை விளங்குகின்றது. 'கார்வெல்குக்' எனும் ஆங்கில நாட்டு அறிஞர் இம் முறையில் கற்றலை அமைக்கலாம் என்று கூறுகிறார். பிள்ளைகளுக்கு நாட்டமும் விருப்பமும் இல்லாத ஒரு பாடத்தை வலிந்து கற்பிப்பதால் பயன் ஏதும் இல்லை. பிள்ளைகள் தாம் கற்கும் விடயத்தில் விருப்பத்துடனும் மனமகிழ்வுடனும் ஈடுபடுத்தல் வேண்டும். பிள்ளைகளின் உடலும் உள்ளமும் ஒருங்கு செயற்படுவதன் மூலமே உண்மையான கற்றல் நடைபெறுகின்றது. இக்காரணத்தினாலேயே கிண்டகார்டன் முறையிலும் மொண்டசூரி முறையிலும் விளையாட்டுக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகின்றது. விளையாட்டு மூலம் கற்றலும் கற்பித்தலும் நடைபெறுவது நல்ல பயனைத் தரும் என்று அனுபவமூலம் அறிந்து கொண்டவர் கார்வெல்குக். இவர் விளையாட்டு முறை ஒரு விளையாட்டு அல்ல. அது சிரமமான வேலையையும் மகிழ்வுடன் செயற்படுவதற்குக் கையாளப்படும் ஒரு வழி என்று விளக்கியுள்ளார்.

இவ் விளையாட்டு முறையானது பிள்ளையின் இயல்பான நடத்தையை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறையாகும். விளையாட்டு மூலம் பிள்ளை பிற்கால வாழ்வுக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றான். விளையாட்டு முறை பிள்ளைகளுக்கு உள்ள மேலதிகக் குறும்பு செய்யும் முறைகளையும் குறைப்பதற்கு உதவுகின்றது. அத்துடன் உள வளர்ச்சிக்கு உதவுகின்றது மற்றும் பிள்ளைகளின் சமூக விருத்திக்கு பிறருடன் சேர்ந்து வாழவும் செய் கருமங்களில் பயின்று ஈடுபடவும் உதவுகின்றது. மேலும் ஒத்துழைப்பு, தலைமை தாங்கும் பண்பு, பின்பற்றுதல் ஆகிய சமூகத்திறன்களைப் பயின்று கொள்கின்றார்.

நாம் வாழுகின்ற சமூகத்துடன் ஒப்புரவாகுவதற்கும் விளையாட்டு முறை உதவுகின்றது. அதுமட்டுமல்ல பொதுவாகக் கூறின் ஆளுமை விருத்திக்கு விளையாட்டு முறை உதவுகின்றது. பிள்ளையின் சமூக நுண்ணறிவு விருத்திக்கு கற்பித்தல் அனுபவங்கள் மாணவர்களுடைய அறிவு, திறன், மனப்பாங்குகளை நிரந்தரமாக்குகின்றன.

எனவே இன்றைய கல்வி உலகினைப் பொறுத்தவரையில் ஆரம்பக்கல்வியானது ஒரு மாணவனுக்கு மிக மிக முக்கியமான ஒன்றாக அமைகிறது என்றால் மிகையில்லை. இக் கல்வியே ஒரு மாணவனுடைய அத்திவாரமாக விளங்குகின்றது. எனவே அவன் கல்வியைக் கசடறக் கற்க வேண்டும். ஏனெனில் சிறு வயதிலே அவன் கற்கும் விடயங்கள் அவனுடைய மனத்திலே மிக ஆழமாகப் பதிந்து விடுகின்றன. எனவே அவனை பெற்றோர் ஆசிரியர்கள் தகுந்த முறையில் வழி நடாத்தல் இன்றியமையாத ஒன்றாகும்.

எனவே இக்கல்வியை அவன் விளையாட்டு முறைகள் மூலம் கற்பதனால் அவன் இலகுவாகக் கற்க முடிவதோடு இக் கற்றல் அனுபவங்களை அவனுடைய மனத்திலே ஆழமாகப்பதித்தும் விடுகின்றன. எனவே ஆரம் பக்கல்வி விளையாட்டு முறைகள் மூலமாகவே கற்றல் கற்பித்தல்கள் சிறப்பாக

நடைபெறுவதைப் பாடசாலைகளில் நாம் அன்றாடம் காணக் கூடியதாக இருக்கின்றது. எனவே மாணவர்கள் இம்முறையின் ஊடாக சுதந்திர மாக சந்தோசமாகக் கற்க முடிகின்றது. எனவே ஆரம்பக்கல்வி விளையாட்டு முறைக் கற்பித் தல் மிகமிக அவசியமானது என்று கூறிக் கொள்ளலாம்.

**புவனேந்திரராசா செல்வலட்சுமி**
*ஆரம்பக்கல்வி - D*

////////////////////////////////////////////////////////////////

* 1921ஆம் ஆண்டில் இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்பட்டது. (Universtiy College Ceylon)

* 1942இல் முதலாவது பல்கலைக்கழகம் University of Ceylon நிறுவப்பட்டது. (கொழும்பு) தொடர்ந்து 1949இல் பேராதனையும் 1959 வித்திபோதய (தற்போதய ஜெயவர்த்தனபுர) 1959 வித்தியாலங்காரவும் (தற்போதைய களனி) 1972இல் கட்டுபெத்தவும் (தற்போதைய மொறட்டுவ) 1974இல் யாழ்ப்பாண வளாகமும் நிறுவப்பட்டன. 1980இல் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

* Sri Lanka Institute of Information Technology (SLIIT) -விஞ்ஞான தொழினுட்ப அமைச்சினாலும்; ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் -பாதுகாப்பு அமைச்சினாலும்; தேசியக் கல்வி நிறுவகம் - கல்வி அமைச்சுடன்தொடர்புபட்டும் பல்கலைக் கழகங்களுக்கு சமமாக அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை வழங்குகின்றன.

* இலங்கையில் தற்போது பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதில் முன்னணி வகிக்கும் செயற்றிட்டம் ஆயிரம் பாடசாலை வலையமைப்புக்கான அபிவிருத்தி செய்யப்பட்ட இடைநிலைப் பாடசாலைகள் 1000 உருவாக்குதல் செயற்றிட்டம் ஆகும்.

////////////////////////////////////////////////////////////////

# சமூக விஞ்ஞான மன்றம்



**(இ - வ) இருப்போர்** :- வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), ஆர். எம். சத்தியகுமார் (வகுப்பு விரிவுரையாளர்), த.சற்குணராஜா (தலைவர்) **(இ - வ) 1ஆம் நிரல் :-** திருமதி. து. வசந்தி, ர. தவரூபி, ர.மாலா (செயலாளர்), செல்வி செ.நிருபா, திருமதி அ. வாசுகி, ஜெ.விஜயகலா, செல்வி. அ. மேரிகீதா, திருமதி ஜீ. தீபசோபனா, ர. வான்மதி (உப தலைவர்), பி. கிறிஸ்ரா, செல்வி. பொ. டேனிற்றா டோமினிற்றா. **(இ - வ) 2ஆம் நிரல்** :- த. நாகநாதன், சி. ரஜனிகாந் (உபசெயலாளர்), ஐ. சிவசங்கரலிங்கம், வே. திருக்குமரன் (பொருளாளர்), செ. ரவிச்சந்திரன், பூ. பிரகாஸ், கு. ஜெயந்தன், மு. சசிகுமார்

# பெரியாழ்வார் கண்ட பேதைக்குழவி

இறைவனிடம் ஆழ்ந்த அடியார்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்படுகின்றனர். சுவையும் இசையும், கனிவும் தெளிவும், இனிமையும் பயக்கும் இனிய தமிழ்ப் பாக் களை இயற்றி இறைவனுக்கு அர்ப்பணிப்பதில் ஆழ்வார்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் தம் உள்ளங்களில் எழும் உணர்ச்சி களைக் கவிதைகளாக வடித்து இறைவனுக்குக் காணிக்கையாக்கினர். இவ்வாழ்வார்களில் முதன்மை பெற்று விளங்கிய பெரியாழ் வார் இறைவனைப் பல்லாண்டு வாழ்க எனப் பாடிய தனிச்சிறப்புமிக்கவர். இவர் இயற்றிய பிரபந்தங்கள் "திருப்பல்லாண்டு", "பெரி யாழ்வார் திருமொழி" என இரண்டாகும். திருமாலின் பத்து அவதாரச் செயல்கள் அனைத்தையும் தானே அனுபவிக்க விரும்பி அவ்வவதாரத்திலே மனதைப் பறிகொடுத்துத் தன்னையிழந்து கண்ணனின் வளர்ப்புத்தாய் யசோதையாக "அவன்பால் ஆறாத காதல் கொண்ட ஆயர்பாடிக் கோபியராகவும்" தமது பக்தி உணர்ச்சியைத் தத்துரூபமாக வெளிப்படுத்தியுள்ளார்.

பெரியாழ்வார் திருமொழியிற் கண்ணன் அவதாரத்தாற் கவரப்பட்ட மக்களின் நிலையை விளக்க வந்த இவர்; கண்ணன் பிறந்ததைக் கேள்வியுற்று மக்கள் சந்தோச மிகுதியினால் ஓடினார்கள், விழுந்தார்கள், மகிழ்ந்து ஆரவாரித்தார்கள். கண்ணனைச் சென்று கண்டு மகிழ்ச்சி மிகுதியினாற் பற்பல செயல் களைச் செய்த மக்கள் தெய்வக் கண்ணனை நீராட்டினர். அண்ணாந்து அவன் வாய்திறந்த போது கண்ணன் வாயினுள் வையமேழுங் கண்டனர்.

கண்டபின் இவன் தெய்வமெனத் தொழுதனர் என்று கூறுகின்றார்.

"பேதைக் குழவி பிடித்துச் சுவைத்து ண்ணும்
பாதக்கமலம் காணீரோ பவள வாயீர் வந்து
காரோ"

என்று தன் பச்சிளங்காலின் பெருவிரலைக் கையாற்தூக்கிப் பிடித்து வாயில் வைத்துச் சப்புக் கொட்டிச் சுவைத்துண்ணும் மழலைச் செல்வத்தின் அழகிலே மனதைப் பறிகொடுக் கும் ஆயர் பாடி மக்களைக் காட்டுவதன் மூலம் எம்மையும் அனுபவங்களோடு கலக்கும்படி செய்து விடுகின்றார். கண்ணன் இயல்பாகவே அழகு மிக்கவன், அதுவும் குழந்தைக் கண்ணனின் இளந்தளிர் போன்ற மேனியழ கினைச் சொல்லவும் வேண்டுமா? அத்திரு மேனியழகில் தம்மைப்பறிகொடுத்த ஆயர் பாடியினர் "வாக்கும் நயனமும் வாயும் முறு வலும் மூக்கும் இருந்தவா காணீரோ" எனப் படுவதன் மூலம் கண்ணனின் அழகைக் காண எம்மையும் அழைக்கிறார். பெரியாழ்வார்.

ஆயர் பாடியிலுள்ள ஆய்ச்சியர் கண்ண னைத் தாலாட்டிச்சீராட்டிப், பாலூட்டித், தேனூட்டி மகிழ்கின்றனர். ஆயர் பாடிப் பெண்களில் ஒருத்தியான யசோதையாகத் தன்னைப் பாவனை செய்துபாடும் ஆழ்வார் கண்ணனுடன் விளையாட வரும்படி அம்பு லியை அழைப்பது சாதாரண உலகியல் வழக் கினை இயல்பான உணர்வுகளுடன் வெளியிடு வதாக அமைகின்றது.

"தன் முகத்துச் சுட்டி தூங்கத்தூங்க
தவழ்ந்து போய் - பொன்முகக்
கிண்ணியார்ப்பப் புழுதியளைகின்றான்
என்மகன் கோவிந்தன்"

எனக் கண்ணன் புழுதி விளையாடு வதைப் பெரியாழ்வார் சுட்டிக்காட்டும் போது தாய்மையுணர்வு பளிச்சிடுவதைக் காணலாம். கண்ணன் தளர்நடை நடந்து

யசோதையையும் ஆயர் பாடியையும் மகிழ் விக்கின்றான்.

"இடங்கொண்ட செவ்வாயூறி யிற்றிற்று வீழ
நின்று கடுஞ்சேக் கழுத்தின் மணிக்குரல் போலு
டைக் கழல்களன் தடந்தாளினைக் கொண்டு
சாரங்கபாணி தளர்நடை நடவானோ..."

என ஆயர் குலத்தில் வந்துதித்த அஞ்சன வண்ணனின் தளர்நடையில் மகிழ்வதைக் காணலாம்.

"வைத்த நெய்யும்
காய்ந்த பாலும்
வடிதயிரும் நறுவெண்ணெயும்
இத்தனையும் பெற்றறியேன்
எம் பெருமான் நீ பிறந்த பின்னே"

எனக் கண்ணனை அன்போடு கடியும் தாய்மையின், உள்ளன்பினையும், பரிவினையும், பாசத்தையும் பெரியாழ்வார் பாடல்களிலே காண்கிறோம்.

மேலும் ஆயர் பாடிப் பெண்கள் கண்ணனுக்குக் காது குத்த வருகிறார்கள். குறும்புகள் செய்யும் அவன் ஓடி விடுகிறான். வருந்தி அழைக்கின்றனர். அவனை நீராட வரும்படி அழைக்கின்றாள் யசோதை. குறும்புகள் கொண்ட கண்ணன் "எண்ணெய்க்குடத்தை உருட்டி இளம்பிள்ளை கிள்ளி எழுப்புகின்றவன்" என்று யசோதை கூறும்போது, அத்தகைய சுட்டித்தனத்தில் அவளுக்கும் ஈடுபாடு உண்டென்பதை அறியமுடிகின்றது. வெண்ணை திருடும் கண்ணனுக்குக் குழல் வாரக் காக்கையை அழைக்கின்றனர். ஆயர் குலப்பெண்கள். அவனின் குறும்புகள் அத்தனையும் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஆநிரை மேய்க்கச் செல்லும் கண்ணனின் செயல்கள் ஆயர்பாடி மங்கையரைக் கவர்கின்றன. எல்லோரும் சிரிக்கும் படியாகப் பாவனையோடு பாலைப் பருகுகின்றான். கரிய மேகங்கள் கண்ணனைப் போன்றது எனக் கூறும் ஆயர் குலப் பெண்ணொருத்தி "புருவம் கருங்குழல் நெற்றி பொலிந்த முகிற்கன்று போல உருவம் அழகிய நம்பி உதித்தவை சூட்ட வாராய்" எனும் போது அவனின் இயற்கை அழகைக் காண்பதோடு பூச்சூட்ட அழைக்கும் பெண்ணுக்கு கண்ணனிடமிருக்கும் ஈடுபாட்டையும் பெரியாழ்வார் காட்டுகின்றார்.

அடுத்து வெண்ணெய் விழுங்கி என்ற பகுதியிலே கண்ணனின் குறும்புகள் மிகச் சுவையானவையாக விளக்கப்படுவதோடு ஆய்ச்சியரும் யசோதையும் அவன், குறும்பினாற் கவரப்படும் தன்மையும் சிறப்பாகக் காட்டப்படுகின்றது. அயல் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குத் தெரியாமல் வெண்ணை உண்டுவிட்டு வந்து விடுவான் கண்ணன். அயலவர்கள் யசோதைக்கு முறையிடுவார்கள். யசோதை "பரிவாரம் பேசத்தரிக்கிலேன் பாவி யேனுக்கிங்கே போதராயே" எனக்கூவியழைக்கின்றாள். ஒரு பெண் பாலைக்கறந்து அடுப்பில் வைத்துவிட்டு மகனையும் பக்கத்திலிருத்தி விட்டு நெருப்பு வாங்கப் பக்கத்திலிருத்தி ஒரு இமைப் பொழுதில் சென்று வரமுன்னர், கண்ணன் பாலைப் பருகி விட்டுச் சென்று விட்டான். இத்தகைய கண்ணனின் குறும்புகள் கேட்போர் மனதில் இன்பத்தை விளைவிக்கக்கூடியதாகும்.

இவ்வாறு கண்ணனின் பிறப்பும் அவன் லீலைகளும் வாலிப வசீகரமும் ஆயர்பாடியிலுள்ளோரைக் கவர்ந்ததாகப் பெரியாழ்வார் காட்டும்போது அவருக்குக் கண்ணன் மீது இருக்கும் பக்தி சிறப்பாகப் புலப்படுத்தப் படுகிறது எனலாம்.

**யூடிற்றா குருஸ்**
ஆரம்பக்கல்வி - E

# நல்ல ஆசானுக்கு...

அகத்திலே அன்புவேண்டும் - அதனை
முகத்திலே காட்ட வேண்டும்
ஆணவம் சிறிதும் இன்றி - நல்
ஆசானாய்த் திகழ வேண்டும்.

புதுமைகள் படைக்க வேண்டும் - கல்வியில்
புதுமைகள் புகுத்த வேண்டும்
பக்தியுள்ள ஆசானாய் - நாளும்
புரட்சியுடன் பேச வேண்டும்.

திட்டங்களை ஆக்க வேண்டும் - கல்லூரிச்
சட்டங்களை மதிக்க வேண்டும்
இட்டம் போல சாதி பேதம் - யார்க்கும்
இல்லாமலே நடக்க வேண்டும்.

கணிக்கும் போது நேர்மை வேண்டும் - என்னும்
கடமை உணர்வு தொழிலில் வேண்டும்
காலம் நேரம் விரயம் இன்றி - நாளும்
கற்பித்தலைச் செய்ய வேண்டும்.

படித்தவனாய் இருக்க வேண்டும் - சமுக
பண்பாட்டையும் மதிக்க வேண்டும்
படிக்காத மக்களுக்கும் - நாளும்
பகுத்தறிவைப் புகட்ட வேண்டும்.

நன்மை பலவும் செய்ய வேண்டும் - என்றும்
நல்லவராய் இருக்க வேண்டும்
நடு நிலைமை தானிருந்து இந்த
நாட்டுக்காக உழைக்க வேண்டும்.

**ஈஸ்வரநாதம் கலைமதி**
ஆரம்பக்கல்வி - C,

# புலன் இன்பமும் இறை இன்பமும்

நம் உயிருக்கு உருவம் ஏதும் இல்லை. ஆனால் அது உடலில் அடைபட்டு இயங்கும் நிலையில் அந்த உடலின் உருவத்தைப் பெறுகின்றது. அது உருவம் பெறுகின்றதோ இல்லையோ, உயிரை அந்த உடலின் உருவத்திலேயே நாம் காண்கின்றோம். உருவத்தைப் பெற்றதோடு மட்டுமன்றி, உடலின் தன்மைகளுக்கெல்லாம் உயிரும் உள்ளாகி விடுகின்றது. ஐம்பூதங்களில் ஒன்று காற்று. அதற்கு உருவம் இல்லை. ஆனால் ஒரு றப்பர் பலூனில் அடைத்ததும் பலூனுக்கு ஏற்றபடி உருண்டை வடிவமாகவோ, நீள் உருண்டை வடிவமாகவோ, அதை நாம் காண்கின்றோம். றப்பர் பொம்மையில் அடைக்கப்படும் காற்று அந்தப் பொம்மை வடிவத்தில் அமைந்து விடுகின்றது. உயிருக்கும் உடலுக்கும் உள்ள தன்மையை இவ் விளக்கத்தினால் ஊகக்குவிக்கலாம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளின் வழியாகவே உடலில் அடங்கியுள்ள உயிர், உருவத்தை அனுபவிக் கின்றது. இப்பொறிகளில் ஒன்று இல்லை யென்றாலும் கூட உலகவாழ்வு பூரணமாவ தில்லை. உடலை ஒரு தேராகவும், ஐம்பொறி களைத் தேரில் பூட்டப்பட்ட குதிரைகளா கவும் மனத்தைக் கடிவாளமாகவும், உயிரைத் தேரில் அமர்ந்து செலுத்தும் சாரதியாகவும் கூறுவதுண்டு, ஆனால் ஐம்பொறிகள் என்ற குதிரைகள் சாதாரணமானவை அல்ல. கடிவாளத்தையும் மீறிக்கொண்டு ஐம்பொறி கள் அவற்றின் விருப்பப்படியே இழுத்துச் சென்று விடுகின்றன.

இன்பத்தை நாடியே இந்த ஐம்பொறி களும் இயங்குகின்றன. இன்பவேட்கை இப் பொறிகளின் இயல்பாகிவிடுகின்றது. எந்தப் பொருள்களில் இன்பம் கிடைக்கின்றதோ அந்தப் பொருள்களை எல்லாம் இவை ஆர்வத்துடன் தேடிச் செல்கின்றன. உடலில் இணைந்துள்ள ஐம்பொறிகளின் வேட்கை வெள்ளத்தில் சிக்குண்டு தவிக்கின்றது. உடலோடு ஒன்றியுள்ள நம் உயிர் ஐம்புலன் களின் ஆதிக்கத்தால் அடக்கப்பட்டு அதன் மயமாகி விடுகின்றது. எனவே உயிரும் புலனின் பங்களை நாடுகின்றது. சிற்றின்பங்களைத் தேடிச் சீரழிகின்றது. இதனால் ஐம்புலன்களை அடக்கும் ஆற்றல் இயலாத தாகிவிடுகின்றது.

ஐம்புலன்களில் சிக்குண்டு இருக்கும் நாம் உடலுக்கும், உயிருக்கும் உள்ள வேறு பாடு தெரியாமல், இரண்டும் ஒன்று என்று மயங்கிவிடுகின்றோம். உடல்தான் உயிர் என்று நினைத்து, உடலின் தன்மைகளையும், வேட்கைகளையும் உயிரின் தன்மை எனக் கருதி விடுகின்றோம். இது எமது அறியா மையே ஆகும். எலும்பும், தசையும் கொண்ட இவ்வுடலின் தன்மை தூய்மையான நம் உயி ருக்கு உரித்தானது அல்ல. இந்த உண்மையினை நாம் உணர்ந்துகொள்ள மறப்பதால்தான் உடற்பொறிகளின் வயப்பட்டு நாம் உழலு கின்றோம் என்கின்றனர் ஞானிகள். "உரித் தன்று உனக்கு இவ்வுடலின் தன்மை உரைத் தேன் விரதமெல்லாம் தரித்தும் தவமுயன்றும் வாழா நெஞ்சே" நெஞ்சமே! உனக்கு உரித் தானதல்ல இந்த உடலின் தன்மை என்பதை நமக்கு உணர்த்தி நிற்கின்றது நாவுக்கரசரின் இந்த நல்வாக்கு.

ஐம்புலன்களும், ஐயுணர்வும் மனிதனுக்கு அவசியம் இருக்க வேண்டியவை. ஐயுணர்வின் துணை கொண்டுதான் மனிதன் இயற்

கையினைக் காண்கின்றான். இறைமையினை உணர்கின்றான். மெய்யுணர்வு பெறுவதற்கும் ஐயுணர்வுகளே ஆதாரமாகவும் உள்ளன. ஆனால், பெரும்பாலும் ஐயுணர்வுகள் பொய்யுணர்வு களையே தோற்றுவிக்கின்றன. இன்ப நாட்டங் களில் மனிதனை ஈடுபடச்செய்து இறுதியில் அவை இன்னல்களையே விளைவிக்கின்றன. புலனின்ப வேட்கையால்தான், புன்மையான பல செயல்களில் மனிதன் இறங்குகிறான். கள்ளுண்ணல், களவு, காமம் போன்ற செயல் களினால் ஒழுக்கத்தை விட்டு உயர்நிலை இழப்பதும், பண்பினை மறந்து பழிச்செயல் புரிவதும், இகழப்படும் வகையில் இழிநிலை எய்தலும், புலனின்ப் பொறியால் தான் விளை கின்றன. ஐம்புலன்களின் ஆதிக்கத்தினால் நாம் எய்தும் அல்லல்கள் எத்தனை எத்தனை.

அறிஞர்களும் கலைஞர்களும் அதி கௌரமிக்கவர்களும்கூட, புலன்வழிச் சென்று புல்லர்களாய் ஆவதை நாம் பார்க்கின்றோம். காரணம், நூலறிவாலும், நுண்ணறிவாலும் புலன்களை அடக்கி அவற்றை நெறிப்படுத்த அவர்களால் இயலுவதில்லை. இறைவன் திரு வருளால்தான் ஐம்புலன்களின் வெறியினை நாம் அடக்க முடியும். என்கின்றனர் ஆன்மீக சீலர்கள். புலனடக்கம் என்றால் உலக வாழ்வை வெறுத்துத் துறவியாகப் போவது அல்ல. புலன்களை வெல்ல முடியும் பல திறந் தாரையும் விட எல்லை கடவாத இயல்பான இல்வாழ்க்கை வாழபவன் மேம்பட்டவன் என்பார் திருவள்ளுவர்.

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை"

எல்லை கடவாத இயல்பான இல் வாழ்க்கை தான் அளவோடு வாழும் அற வாழ்க்கையா கின்றது. இன்ப நாட்டங்களை அளவோடு கொண்டு, வரம்பு கடவாமல் வாழ்வதே இயல் போடு இசைந்த இல்வாழ்க்கை ஆகும். இத்த கைய வாழ்வுக்கேற்ற புலனடக்கம் பெற வேண்டும் என்றுதான் நாம் இறைவனின் அருளை நாடுகின்றோம். அது எவ்வாறு சாத்தி யம் எனில் இறைவன் நம் இதயத்தில் வீற்றிருக் கின்றான். என்பதை நாம் முதலில் உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். "உய்ய என் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற மெய்யே" என்பார் மாணிக்கவாசகர். "சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச் சிந்தையின் உள்ளே சிவன் இருந்தானே" என்பார் திருமூலர். இறை வன் நம் ஊன் புகுந்து, உளம் நிறைந்த நம்முள் உறைகின்றானே. அதுவே அவன் நம்மை ஆட் கொள்ளுதல் என்று காண்போம். இறைமை யோடு நாம் இசைந்துள்ளோம் என்ற மெய்யு ணர்வு நமக்கு ஏற்பட்டதுமே நம் இதயத்தில் ஓர் இன்ப உணர்வு ஏற்பட்டு விடுகின்றது.

ஆதியும் அந்தமும் அரும்பெரும் சோதி யானவன் இறைவன். அற்பமான ஓர் உடலுக் குள் ஒடுங்கிக் கிடக்கும் உயிர் நாம். இத்தகைய இழிவான உடலுக்குள் இறைவன் புகுந்து நின்று, அருள்புரிகின்றான் என்பதை எண்ணும் போது, எல்லை இல்லாத பரம்பொருளோடு இழிவான நம் உயிர் இசைந்துள்ளது. என்பதை நாம் உணரும்போது அற்புதத்திற்கும் அற்புத மான இறைவனோடு அற்பமான நாமும் ஒன்றியுள்ளோம். என்ற உண்மையினை நினைந்து நினைந்து உள்ளம் உருகும் போது நம் உள்ளத்தில் பெருகும் இன்பமே எல்லை இல்லாத பேரின்பமாகும். அது வருணிக்க இயலாதது; வார்த்தையில் அடங்காதது.

இவ்வாறு நாம் எய்தும் இன்ப உணர்வு பரம ஞானிகள் எய்தும் இறைமை இன்பத்தில் கோடியில் ஒரு பங்காகவே இருக்கலாம். ஆயினும் ஒருமுகப்பட்ட சிந்தனையில் நாம் பயிலப் பயில இறைமையின் இன்ப உணர்வு பெருகிக்கொண்டே செல்லும். "வாக்கு இறந்த அமுதம் மயிர்க்கால்தொறும் தேக்கிடச் செய்தனன்" என இறைவனின் ஈடில்லா இன்பத்தை இயம்புகின்றார் மாணிக்கவாசகப் பெருமான். உடம்பில் உள்ள மயிர்க்கால்கள் தோறும் அமுதம் தேங்கி நின்றால் எத்தகைய

இன்பம் ஏற்படுமோ அத்தகைய அற்புதமான இன்பத்தை அருளுகின்றான். இறைவன் என்கின்றார் அடிகள்.

அந்தமில்லா ஆனந்தம் என்றும், ஆனந்தமா கடலே என்றும். தெவிட்டாத அமுது என்றும் இறை இன்பத்தை ஓதுகின்றனர் மெய்யடியார்கள். இத்தகைய ஈடில்லா இறையன்பத்திற்கும் ஐம்புலன்களால் நாம் அடையும் இன்பத்திற்கும் உள்ள வேறுபாட்டை நமக்கு உணர்த்துகின்றனர் ஞானிகள்.

நம் ஐம்புலன்களோ உடலோடு ஒட்டியவை, உடலுடன் அவையும் அழியக்கூடியவை. இவ்வாறு அழியக்கூடிய ஐம்புலன்கள் அழியத்தக்க உலகப் பொருள்களில் இருந்து பெறும் இன்பமே புலனுணர்வு இன்பமாக உள்ளது. ஆனால் இறை இன்பம் அழிவில்லாதது. இறைமையினைக் கருவாகக் கொண்ட நம் உயிரும் அழிவில்லாதது. என்றும் உள்ள இறைமையோடு என்றும் உள்ள உயிர் இசைந்து பெறும் இன்பமே இறையுணர்வு இன்பமாகிறது. எனவே புலன் இன்பம் அளவுடையது அழியத்தக்கது. இறை இன்பமோ அளவு கடந்தது. அழிவே இல்லாதது." இன்பம் இன்பம் இன்பம் இன்பத்திற்கோர் எல்லைகாணில் துன்பம் துன்பம் துன்பம்" என்பது ஐம்புல இன்பத்தின் இயல்பு அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பர். ஆனால் இறை இன்பமோ பொய்த்துப் போய் விடுகின்றன. அவை ஆதவன் முன்னால் வைத்த அகல் விளக்குப் போல் ஆகிவிடுகின்றன." புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவு அழிந்திட்டு ஐம்மேலுந்தி அலமந்தபோதாக அஞ்சேல் என்று அருள் செய்பவன்" இறைவன். அது அவனது அருட்கடாட்சமாக அமையும் போது ஐம்புலன்களால் உயிரும் உடலும் பெற்ற இன்பம் மாயை ஆகிவிடுகின்றது. எனவேதான் இறை இன்பத்தைப் பேரின்பம் என்றும், புலன் இன்பத்தைச் சிற்றின்பம் என்றும் நாம் கூறுகின்றோம்.

மனிதன் இன்பத்தைத்தேடி ஐம்புலன்களுக்கு அடிமையாகி விடுகின்றான். அதனால் தான் இன்ப வெறி கொண்ட ஐம்புலன்களும் மனிதனை ஆட்டிப்படைக்கின்றன. இறை இன்பத்தினை எள்ளளவாவது அனுபவித்து விட்டால், மனிதனுக்கு புலன் இன்ப நாட்டம் புளித்துவிடுகின்றது. ஈடில்லாத இன்பத்தை அளித்துப் புலன் இன்ப நாட்டத்தினை அடக்கிவிடுகிறான் இறைவன். இதனை பக்குவமடைந்த ஆன்மீக சீலர்கள் அனுபவித்தார்கள்.

"மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலனைந்தின் வழியடைத்து அமுதே ஊறி நின்று என் உள் எழு பரஞ்சோதி உள்ளவா காண வந்தருளாய்" என்பார் மணிவாசகர். இறை இன்பத்தால் புலன் இன்பங்கள் அடக்கப்பட்டு விடுகின்றது. என்பதனை இப்போது நாம் உணருகின்றோம். இறைமை ஒளி நம் உள்ளத்தில் புகுந்தவுடனேயே ஐம்புல வேட்கை அகன்று விடுகின்றது. இறை இன்பத்திற்கே இந்திரியங்களின் ஆதிக்கத்தை அடக்கும் ஆற்றல் உண்டு என்ற பேருண்மையை ஆன்மீக சீலர்களின் அனுபவத்தாலும் அருளுரைகளாலும் அறிகின்றோம்.

மெஞ்ஞானமாகிய இறை இன்பம் நம் மனத்தகத்தே குடிகொள்ளும்போது புலன் வழி நுகரப்படுகின்ற பொய்யான இன்பங்கள் எல்லாம் போய் அகன்று விடுகின்றன. உருகும் உலோகத்தில் இருந்து அழுக்குகள் அகல்வது போல், இறைவனைச் சிந்தித்து நம் உள்ளம் உருகும்போது உள்ளத்தின் உள்ளிருக்கும் புலன் வழியான கள்ள எண்ணங்கள் அகன்று விடுகின்றன. இதனை "உருகுவித்து என்னுள்ளத்தின் உள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி" என்று நாவுக்கரசர் சொல்ல" பொய்யாயின

வெல்லாம் போயகல வந்தருளி, மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" என்றார் மணிவாசப் பெருமான். இறைமை என்பது நம் ஐம்புலன்களுக்கும் அகப்படாததாக உள்ளது. ஐம்புலன்களுக்கும் அகப்படாமல் உள்ளத்து உணர்வாக உள்ள இறைவனை எவ்வாறு சொற்களால் வருணிக்க இயலும்? இயலாது? ஏனெனில் அவன் உணர்வின் மூர்த்தி இதனை நம்மாழ்வார் ஞானத் தமிழாலே நயமாகச் சொல்லுவார். "தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி" என்றார். இவ்வாறு உள்ளத்து உணர்வாக உள்ள ஒண் பொருளை ஐம்புலன்களால் அறியமுடியாது. ஓர்ந்து உணர்ந்துதான் அறிந்து தெளிய வேண்டும். அவ்வாறு தெளியும்போது ஐம்புல இன்பங்கள் தோற்கடிக்கப்படுகின்றன.

புலன் இன்பங்களை நாடுவது பாவம் என்றோ அது கூடாதது என்றோ ஐம்புலன் களையும் அரும்பாடுபட்டாவது அடக்க வேண்டும் என்றோ கூறவில்லை ஞானிகள். இறை இன்பமாகிய ஈடில்லாத அமுதத்தை இதயத்திலேயே நாம் உணர்ந்து அனுபவித் தவுடனேயே புலன்வழி இன்பங்கள் எல்லாம் பொய்த்துப்போய் விடுகின்றன. எவ்வித முயற் சியும் இல்லாமலே ஐம்புலன்கள் அடங்கி, ஒடுங்கி ஓய்ந்து விடுகின்றன. இவ்வாறு பேரின் பத்தைச் சுரந்து சிற்றின்பத்தை மறக்க வைக் கின்றான் இறைவன்.

ஒப்பில்லாத இறை இன்பத்தில் திளைப் பவர்கள் உடலின்பத்தை நாடுவதில்லை. புலன் இன்பத்தை மறக்கச் செய்து இறை இன்பத்தை நாடும் தாகத்தினைக் கூறும் மணிவாசகர் "தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே, நினைத்தொறும் காண் தொறும், பேசும் தொறும் எப்போதும் அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பி" என்றார். அகம்புகுந்து இறைவன் நம்மை ஆட்கொள்ளும் அற்புதத்தால் ஐம்புலன்களை அடக்கி ஆளும் ஆற்றலை நாம் பெறுகின்றோம். நம் இதயத்தின் உள்ளே புகுந்து இறைவன் அருளால் அகந்தை அழிந்து ஐம்புலன்களும் அடங்கி, அவனருளாலே அவன்தாள் வணங்கும் ஆனந்தப் பேறையும் பெறுகின்றோம். அந்த இறை இன்பத்தினைப் பெறும்போது ஐம்புலன்களும் அடங்கும் அற்புதத்தையும் நாம் காண்கின்றோம்.

**கீதாகிருஷ்ணன் தாமரைச்செல்வி**
*இந்துசமய நெறி*

---

தூரப் பிரதேசங்களில் உள்ள பிள்ளைகள் முகம் கொடுக்கும் இன்னல் களுக்குப் பரிகாரமாக அனைத்துப் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வண்ணம் ஆயிரம் இடை நிலைப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப் படுகின்றன. இவை தரம் 6 -13 வகுப்புக்களையே கொண்டிருக்கும்.

---

# மனித சமுதாயத்தின் முரண்பாடுகளும் அதற்கான தீர்வுகளும்

மனிதனின் சிந்தனை வளர்ச்சியின் விளைவாக தன்னிலும் வலிமை பொருந்திய இயற்கையைக் கட்டுப்படுத்தி அதனை வெற்றி கொண்டு விட்டான். அதன் விளைவாகப் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் தோற்றம் பெற்றதோடு, பல்வேறு ஆராய்ச்சிகளிலும் அவனது சிந்தனை வியாபித்து விட்டது. அவனது சிந்தனை பல அரிய சாதனையை நோக்கி இட்டுச் செல்வதோடு அழிவுக்கும் வழி வகுக்கின்றது. எனவே மனித சமுதாயத்தின் வளர்ச்சியே அவர்களுக்கிடையில் இருந்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்குக் காலாகின்றது.

மனித சமுதாயத்தில் கருத்துமுரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்களை முதலில் நோக்குவோம். ஒரு சமூகத்தில் பல்வேறுபட்ட இனங்கள் காணப்பட்டாலும் இனங்களுக்கிடையே புரிந்துணர்வு காணப்படாமையே இப்பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாயுள்ளது. நாம் இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் எமது சகோதரர்கள்" எனப் பரந்த நோக்குடன் ஒற்றுமையோடு ஒன்றுபட்டு சமூக வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும். அதன் மூலமே எமது சமுதாயம் ஆலவிருட்சம் போல தழைத்தோங்க முடியும். இதனை எமது தமிழ்ப்புலவர் பாரதியார் அவர்கள்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே"

எனப் பாடியுள்ளார்கள்.

அடுத்து சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வும் கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாயுள்ளது. ஆதி காலத்தில் தொழிலை அடிப்படையாகக் கொண்டே சாதிகள் தோற்றம் பெற்றன. ஆனால் இன்று மனித சமுதாயத்தில் சாதிபேதம் மேலும் வலுப்பெறத் தொடங்கிவிட்டது. இந் நிலையை அடியோடு தகர்த்தெறிய வேண்டும். மனித உடலில் ஓடும் இரத்தம் சிவப்பு நிறம் என்பதற்கிணங்க சாதி வேற்றுமை இல்லை என்பதை நோக்கமாகக் கொண்டு சகோதரத்துவத்துடன் ஒருவருக்கொருவர் உதவும் மனப்பான்மையுடன் எல்லோரையும் மதித்து நடத்தல் வேண்டும்.

சமுதாயத்தில் கல்வியில் சம வாய்ப்புக் கிடையாமையும் கருத்து முரண்பாடுகள் தோற்றம்பெற ஏதுவாகின்றது. சகலருக்கும் கல்வி இலவசமாக வழங்கப்பட்டபோதும் போதியளவு கல்வி வளங்கள் சமமாக பங்கீடு செய்ய உரிமையும் ஒரு பெரிய தலையிடியினைக் கொடுக்கின்றது. இதற்கு நிர்வாக சீர்கேடுகளும் காரணமாயுள்ளது. உயர் அந்தஸ்தில் இருக்கும் ஒரு சிலரே இவ்வாறான நிலமை ஏற்படக் காரணமாய் உள்ளனர். எனவே நிர்வாகத்திலிருக்கும் சீர்கேடுகளை நீக்கி கல்வி சகலருக்கும் சம வாய்ப்பில் கிடைப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும். சகலரும் இந்நாட்டுப் பிரஜைகள் என்ற பரந்த மனப்பாங்கை சகலரிடத்திலும் வளர்ப்பதன் மூலமே இந்நோக்கினை இட்டுச் செல்ல முடியும். அதற்குப் பாடசாலைகள் முன்வர வேண்டும். பாடத்திட்டங்களில் மாற்றங்கள் செய்வதனூடாக இளஞ்சிறார்களிடையே இத்தகைய மனப்பாங்குகளை வளர்த்தல் வேண்டும்.

அத்தோடு கற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில்லாமல் இருப்பதும் மனித சமுதாயத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாயிருக்கின்றது. வேலையற்றிருக்கும் இளைஞர்கள் தமது

காலத்தை வீணாகக் கழிப்பதற்கும் வாழ்க்கையில் விரக்தி அடைவதற்கும் வாய்ப்பாக அமைவதோடு திசைமாறிப் போவதற்கும் தூண்டுகோலாக அமைகின்றது. இதற்கு முக்கிய காரணம் ஒவ்வொருவரும் தாமே தமக்குரிய தொழிலைத்தேடிக்கொள்வதற்குரிய கல்வித்திட்டம் இல்லாமையே. அத்தோடு படித்து வெளியேறியதும் அவர்களுக்கு தொழிலிற்குரிய வசதிகள் கொடுக்காமையும் காரணமாக அமைகின்றது. தொழிலுக்குரிய கல்வித்திட்டத்தை வழங்கி அனைவரும் தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்தக் கூடிய வகையில் எல்லா இடங்களிலும் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அதாவது ஒருசில இடங்களில் மட்டும் தொழிற்சாலைகள் நிறுவப்படாது எல்லா இடங்களிலும் நிறுவப்படல் வேண்டும்.

மக்களிடையே பிணக்குகள் ஏற்படுவதற்கு ஆன்மீக சிந்தனை நிலை பெறாமையும் காரணமாகின்றது. மலையிலிருந்து ஊற்றெடுக்கும் பல ஆறுகள் இறுதியில் ஒரு கடலிலேயே சங்கமிக்கின்றன. அதேபோல்த் தான் ஒரு பரம்பொருளிலிருந்து தோற்றம் பெற்ற உயிர்களும் பல மத வழிபாட்டின் ஊடாக இறுதியிலொரு பரம்பொருளையே அடைகின்றன என்பதை உணர வேண்டும். மதங்கள் வேறுபடினும் அவை ஒவ்வொன்றும் ஒரே மத கொள்கைகளை உடையன என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். அன்பு, கருணை, சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், ஒத்துழைப்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு போன்ற நற்பண்புகளை வளர்த்தெடுக்கும் நோக்குடன் மக்களை ஆன்மீக சிந்தனையில் ஈடுபடச் செய்கின்றன.

மதங்கள் தற்போதைய காலகட்டத்தில் நாகரீக மோகம் காரணமாக நலிவடைகின்றன. எனவே மக்கள் மத்தியில் ஆன்மீக சிந்தனையை வளர்த்தெடுக்கும் நோக்குடன் கல்வி நிறுவனங்களும், மதப்பெரியார்களும் பல முயற்சிகளில் ஈடுபட வேண்டும். சில மதப் பெரியார்கள் தமது மதத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக ஏனைய மதக் கொள்கைகளைத் தூற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் அது தவறானது. எனவே தமது மதக் கொள்கையை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் அதே வேளை, ஏனைய மதக் கொள்கையும் மதிக்கும் மனப்பாங்கினை வளர்த்தெடுக்க வேண்டும். அதன் மூலமே சிறந்த நற்சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

மனித சமுதாயத்திடையே சீரிய நன்னடத்தைப் பண்புகளைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் எல்லோரும் இந் நாட்டு மக்கள், எல்லோரும் இந் நாட்டுப் பிரஜைகள், அனைவரும் ஒரே குலம், ஒருவனே தேவன் என்ற மனப்பாங்குடையவர்களாக வாழும் வகையில் பல முயற்சிகள் எடுத்தல் வேண்டும். மக்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்தி எல்லோருக்கும் சம அந்தஸ்து வழங்கி சகலருக்கும் சமவாய்ப்புக் கிடைக்கக் கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சமாதானம் சம வாழ்வுக்கு வழிவகுக்கும் என்ற இலட்சியத்தை முன்னெடுத்து மக்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நடவடிக்கைகளை திட்டமிட்டுச் செயற்படுத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தமது உரிமைகளை அனுபவிக்கும் போது மற்றவர்களுக்குத் தீங்கு ஏற்படாதவகையில் அனுபவிப்பதே அவனுக்குள்ள சுதந்திரம். எனவே சுதந்திரம் என்று சொல்லிக்கொண்டு மற்றவருக்குத் தீங்கு ஏற்படக்கூடிய செயல்களையோ நடவடிக்கைகளையோ மேற்கொள்ளக்கூடாது. சமுதாயத்தில் அரசியல் செல்வாக்கிற்கு இடம் கொடாது "மக்கள்பணியே மகேசன் பணி" என்ற தலையான நோக்கினைக் கருத்திற் கொண்டு தலைநிமிர்ந்து வாழும் சமுதாயம் வளர வழிவகை செய்தல் வேண்டும்.

**M.A. ஸ்மித்**
*கணித விஞ்ஞான நெறி*

# இதுவும் நியூட்டனின் விதியே!

*மண்டை ஓடுகள்;*
*எலும்புக் கூடுகள்*
*மகிமை பெற்ற*
*திருக்கேதீச்சரத்தைச்*
*சூழவர,*
*வண்டியாழ் செயும்*
*கேதுவரம் பெற்ற,*
*எண்டிசையும் புகழ்பெற்ற*
*கேதீச்சரநாதா!*
*இதுவும் கூட,*
*உன் திருவிளையாடலா?*
*அல்லது மாபாதக*
*மனிதர்களின் -*
*புதுப்புதுக் கண்டுபிடிப்புக்களா?*
*சுரை விதைத்தால் சுரை முளைக்கும்*
*விதை விதைத்தாலும் விதை முளைக்கும்*
*ஆனால் -*
*வினை விதைத்தால் எது முளைக்கும்?*
*அது-*
*வேறொன்றுமில்லை-*
*தன்வினை தன்னைத்தான்*
*கொல்லும்;*
*மண்டை ஓடுகளும்,*
*எலும்புக் கூடுகளும்*
*எங்கள் நாட்டையே*
*மீண்டும் சுடும்*
*ஏனெனில்-*
*ஒவ்வொரு விசைக்கும்*
*அல்லது வினைக்கும்*
*சமனானதும் எதிரானதுமான*
*விசை அல்லது வினை*
*என்று ஒன்றிருக்கும்*
*இதுவே*
*நியூட்டனின் விதியும்*
*அரசியல் பிழைத்தோர்க்கு*
*அறம்தான் என்றும்,*
*கூற்றாகும்.*

**ராஜா செல்வநாதன்**
*ஆரம்பக்கல்விநெறி - A*

# ஆரம்பக்கல்வி - A



**(இ - வ) இருப்போர் :-** திருமதி. யோ. தர்மினி. சி. சத்யதேவி. திருமதி. ஜெ. பஞ்சலிங்கம (வகுப்பு விரிவுரையாளர்), வீ.கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), ரா. செல்வநாதன், நா. பிரபாகரன் ந. நிரஞ்சன், சி. தெய்வரதி, **(இ - வ) 1ம் நிலை :-** திருமதி ப. அஜந்தா, சு.டெய்சி, செல்வி வை. துளசிமலர், ச. செல்வராணி, தி . தர்ஜினி, ச. புஸ்பராணி, செல்வி வி. துஸ்யந்தி, செல்வி செ. யாழினி, செல்வி ஸ்ரீ. சிறிவித்தியா, ச. ஸோபிகா, சி. உஷா, கோ. யான்ஷி

**(இ - வ) 2ம் நிலை :-** திருமதி ச. தீபா, கோ. புனிதநாயகி, ப. கௌசலா ,ஜ. சறோஜினி ,ஜ. சியாமளா, செல்வி சி. துரைராணி, கீ. துஷியந்தி, செ. ரோகினி, செல்வி ம. கீதாஞ்சலி, , செல்வி சி. ஸ்ரீகௌரி, க. சிவனேஸ்வரி **(இ - வ) 3 ஆம் நிலை :-** திருமதி. ஜெ. பிரியதர்சினி, செல்வி க. கஜேந்தினி , செல்வி செ. நிருபா, திருமதி .சு. பேபி, செல்வி ம. தமிழ்ச்செல்வி ச. விஜித்திரா இ. சைலஜா ச. கிருஸ்ணசுதா, ச. தயாநிதி, ம. நந்தா

**(இ - வ) 4ஆம் நிலை:-** திருமதி ஜெ. அனுராதா, சௌ. பத்மநிதி, செல்வி வே. யோகானந்தி.

# வசந்தகாலம்

கல்வி கரையில - எமது
கற்கை நெறிக்கோ நாட்சில
பாடங்கள் பல பல - நாம்
பட்ட கஸ்டமோ அளவில
தாளங்கள் பலவிதம் - எமது
ஆடல் அரங்கமோ அதில்சில.

முத்தமிழ் கல்வியும் - நாம்
முதுசமாய் பெற்றோமே
தேடிய உறவுகள் - எமது
தோழராய் மனத்தில் உறையுமே
வாடிய உள்ளங்களை - நாம்
வருடினோம் சில கணமே.

ஒப்படைகள் தந்துமே - எம்மை
ஓட ஓட விரட்டி விட்டார்
கற்பித்தல் பயிற்சி என - நாம்
களங்களையே கலக்கிவிட்டோம்
பாடவைத்து ஆடவைத்து - எம்மை
பம்பரமாய் ஆட்டிவிட்டார்

காலமது ஓடிவிட - எமது
கல்வி ஆண்டும் முடிந்துவிட
பாடமது மனம் பதிய - நாம்
பல முயற்சி செய்திட்டோம்
வாழ்க்கைப் பதிவேட்டில் - எமது
வசந்த காலம் இது தானே.

**சந்திரகாந்தன் சிவசுகுணா**
*ஆரம்பக்கல்வி நெறி - B*

# விம்பங்கள்

உருக்குலைந்து
உருவம் தொலைத்து
உண்ண உணவின்றி
உறங்க இடமின்றி
வாழ வழியின்றி
நிலை தடுமாறி
நிலை கெட்டு
பிணமாக ஒரு குழியில்
ஏங்கித் தவிக்கிறது
உள் மனது
பச்சிளம் முகங்களை
அள்ளிச் சுமக்க
யாருமின்றி அநாதையாக
தவிக்க விடப்பட்ட
குறை நிறை விம்பங்களானோம்
சுதந்திரமாய் நாம் வாழ
மண்ணைத் தொட முன்
மருந்தாலே மயானமாக்கி விட்டாய்
எமது உறுப்புக்களை.

**இராமசாமி மரியநீடா**
*மனைப்பொருளியல் நெறி*

## ஆரம்பக்கல்வி - B



**(இ - வ) இருப்போர் :-** திருமதி ச. சிவகுணா, ரா. சாரதா தேவி , தி மாலதி, யோ. தங்கமலர், செல்வி ப. மாலதி (வகுப்பு விரிவுரையாளர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்),வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) ச. ஏகாட்சரம், செ. சபேசன், கி. திருச்செல்வம் **(இ - வ) 1ம் நிரை :-** திருமதி ச. பாமினி, து. வசந்தி, தி. விஜயசிறி, செல்வி. சி. பிரியதர்சினி, ஜெ. தாட்சாயினி , ச. மஞ்சுளா செல்வி சு. இராஜேஸ்வரி, திருமதி ந. மதிவதனா, செல்வி இ. தாட்சாயினி, செல்வி இ. சந்திரகலா, செல்வி. த. ஜெயந்தி, தே. ஆனந்தகினி **(இ - வ) 2ம் நிரை :-** திருமதி வ. விஜயராணி, ச. மகேஸ்வரி, தே. தனுஜா, ர. நளாயினி, ர. காந்தலோஜினி, மு. கவிதா , நி. ராதாலெட்சுமி, கு. கோமளஸ்வரி, ரா. லூர்துமேரி , சி. ரெளரி, ச. சாந்தி **(இ - வ) 3ம் நிரை:-** திருமதி ச. தர்மலோகினி, ப. உமாதேவி, லி. விஜி, சு. சுபாஜினி, செல்வி. பெ. சிவதர்சினி, து. தெய்வமலர் , ஜெ. நிலானி, கோ. மனோகராணி , க. நிருபா , செல்வி .ப. சுகிர்தா **(இ - வ) 4ஆம் நிரை :-** திருமதி. ச. பாமினி, செல்வி கி. துஸ்யந்தி , சி. வனிதா, த. பாமா, ஜெ. லோகேஸ்வரி.

சிறுகதை

# அரிப்பு

இந்த இயந்திரமான வாழ்க்கையால் வரும் சோதனைகளை என்னவென்று சமாளிப்பது. அவசியம் எது? அநாவசியம் எது என அறியக்கூட ஞானமற்றுப் போயிற்றா?.. ஆழமாக யோசித்துப் பார்த்தால் நான் அப்படி நடந்து கொண்டதற்கு என்ன காரணம்? உணர்ச்சி மேலிடும் போது அறிவு மங்கிவிடும் அன்பர்களே... உண்மைதான்'

மிகுந்த பெருமூச்சுடன் 'சுந்தர்' ஆசிரியர் கடிகாரத்தை அடிக்கடி பார்த்தபடி நின்றார். நேரம் வேகமாய் ஓடுவதாய் இல்லை. 'வைத்தியசாலைக்குப் போனவர்கள் எத்தனை மணிக்கு வருவார்கள். நிமலன் உண்மையில் பாதிக்கப்பட்டானா? இல்லையா.... யாராவது ஏதும் சொல்லி...'

இப்படிப் பலவாறு மனக் கடிகாரம் சுழன்றுகொண்டிருந்தது. காவல் நிலையத் துக்குள் இருந்து பொலிசார் கோவைகளை காவிக்கொண்டு அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தனர். சுந்தர் ஆசிரியரின் எண்ணம் மறுபடியும் சுழல ஆரம்பித்தது.

பாடசாலையில் கூட்டம் முடிந்து வந்துசேர ஐந்து மணி ஆகிவிட்டது. மழையும் விடாது பெய்து கொண்டேயிருந்தது. சுந்த ரேசன் ஆசிரியரின் மூத்த மகள் அப்பா வர அவரின் பையையும், குடையையும் வாங்கி மேசை மீது வைத்தாள். துடைப்பதற்கு துணி ஒன்றைத் தந்துவிட்டு அம்மா கொடுத்த தேநீரைக் கொண்டுவர ஆசிரியர் உடைமாற்ற சரியாய் இருந்தது.

"அப்பா இந்தாங்க டீ....."

"மழை விட்டபாடில்ல... ஸ்கூல் போய் நனையாமல் வந்திட்டியா?"

"ஆமா அப்பா " ..... அப்பா லீசிங் கம்பனியால வந்தாங்க அடுத்த மாதம் ஐந்தாம் திகதிக்குள்ள காசைக் கட்டி விடட்டாம்"

லீசிங்கம்பனியில் கொடுத்துவிட்டு சென்ற கணக்குத் துண்டொன்றையும் நீட்டி னான். ஒரு கையில் தேநீருடன் மறுகையில் துண்டை வாங்கிப் பார்த்தார். முப்பத்து நான் காயிரத்து முப்பது ரூபாய், கட்ட வேண்டிய தொகை அழுத்தமாக எழுதப்பட்டிருந்தது.

என்ன செய்வதென்று தெரியாமல் கதிரை மேல் அமர்ந்தபடி நிமிர்ந்துபார்த்தார். அவர் வீட்டிற்காக வாங்கிய முப்பத்தாறு அங் குல தொலைக்காட்சியும், அலங்காரப் பொரு ட்கள் வைக்க வாங்கிய அடுக்கு மேசையும் அழகாகக் காட்சியளித்தது.

வீட்டில் இருந்த பதினான்கு அங்குல பழைய தொலைக்காட்சி இருக்க இதையும் ஏன் வாங்கினேன்? மனைவி எப்போதோ கேட்டது ஞாபகத்துக்கு வந்தது.

"இதெல்லாம் காசாய்க் கட்டிமுடிய எவ்வளவு காலம் போகும்...ஏங்க இது?"

"ஸ்கூல்ல எல்லோரும் வாங்குறாங்க மூனு பேர் சேர்ந்து எடுத்தாதான் இப்படி வாங்கலாமாம். டீச்சர்ஸ் இரண்டுபேர் கேட் டாங்க. இனி யார் கூட்டுச் சேருவாங்க அதான் நானும் சேர்ந்து வாங்கிட்டேன்"

"எப்படிக் கட்டப் போறீங்க?"

" கட்டி முடிக்கலாம், போன மாதம் எடுத்த பீறோவுக்கும் சேர்த்து பதினொ ராயிரம் தானே... கட்டலாம்"

மனைவியால் எதுவும் சொல்ல முடிய வில்லை. மகள் புதிதாக வந்த தொலைக்காட் சிப் பெட்டி அழகாய் இருப்பதாய் ஆனந்தப் பட்டாள். தன்னுடைய விளையாட்டுப் பொருட்களுக்காக ஒரு பகுதியை ஒதுக்கிக் கொண்டாள்.

இரவு சாப்பாட்டு வேளையின்போது மனைவியின் முணுமுணுப்பு அவருக்கு கோபத்தை ஏற்படுத்தி விட்டது.

"என்னங்க இந்த மாசம் வீட்டு சாமானு க்கு எட்டாயிரம் ரூபா போயிடுச்சி, லயிட்பில் அறுநூறு, உங்கட டீவிக்கும் மேசைக்கும் சேர்த்து பதினொராயிரம்...எல்லாமாக இரு பது ஆயிரம்... சம்பளம் போதாது என்ன பண்ணலாம்?"

"என்ன பண்ண சொல்றீங்க எல்லாம் தேவைதானே பார்க்கலாம்"

"இல்ல இந்த டீவிய திருப்பிக் கொடுத் திடலாம் நம்மகிட்ட இன்னொண்டு இருக்குத் தானே"

"உங்களுக்கு என்ன பைத்தியமா என்ன நம்பிக்கைத் துரோகம் செய்யச் சொல் லுறியா? என்ன நம்பித்தானே மத்த டீச்சர்சும் இதுல கால வச்சாங்க இப்ப போய் வேணாமுனா"

சுந்தர் ஆசிரியரின் கோபத்தால் இரவு சாப்பாடு அரைகுறையாய் முடிந்தது. அந்த துன்பமும் வந்து சேர மனம் நன்றாய் குழம்பிப் போய்விட்டது. இரவு பத்து மணிவரை வீட்டில் சுமுகமான சூழல் வரவில்லை. மகளும், மனைவியும் ஒன்றுமே பேசாமல் திரும்பிப் பாத்துக் கொண்டனர்.

அடுத்த நாள் காலை ஆராதனை முடிந்தது. சுந்தர் ஆசிரியரின் வகுப்பு அமைதி யாய் இருந்தது. முதல் நாள் நடந்த குழப் பத்தை மனதில் அடைத்துக் கொண்டு வகுப் பறைக்குச் சென்றார். பரீட்சை என்று முதல் நாள் அறிவித்தது அப்போது தான் நினைவிற்கு வந்தது.

"குட்மோர்னிங் சேர்...."

"குட்மோனிங் பிள்ளைகள்" இருங்கள் என சைகை செய்தார். அதற்கிடையில் நிமலன் சுந்தர் ஆசிரியரை நோக்கி சேர் எக்சேம்னு சொன்னீங்க சேர்... என்ன?

"உனக்கு மட்டும் வைக்கிறேன் இங்க வா"

பக்கத்தில் இருந்த பலகை ஒன்றால் நிமலனின் கை பதம்பார்க்கப்பட்டது. ஒரு நொடிக்குள் வகுப்பு நிசப்தத்தால் மூழ்கிக் கொண்டது.

வரவு பதிவு முடிந்து அடுத்த பாடத்தை எடுப்பதற்கு மனமில்லாதவராய் படிக்கட் டுக்களில் இறங்கினார்.

"சுந்தர் சேர்..." என்ன சேர் வழமையாய் பிள்ளைகளை அடிக்கமாட்டிங்க இன்று என்ன நடந்தது?"

"ஒன்றுமில்ல சேர்..."

எதுவும் சொல்ல முடியாமல் மௌன மாக அடுத்த வகுப்பிற்கு செல்வதா? இல் லையா? என யோசித்தவாறு இடையிலேயே நின்று விட்டார். அன்றைய தினம் மிகவும் மந்தமாய் முடிந்தது.

அன்று இரவு பாடசாலை அதிபரின் தொலைபேசியிலிருந்து அழைப்பு வந்தது. நினைக்க முடியாத விடயம் ஏன்,,,?

*வைத்திய சாலைக்கு போன பொலிசார் நிமலனின் தந்தையுடன் காவல் நிலையத்துள் வந்து சேர்ந்தனர். சற்று நேரத்துள் ஒருவர் வந்தார்.*

*"சுந்தர் சேர் யார்?"*

*"நான் தான்"*

*"உள்ள வாங்க"*

*"நானும் வரலாமா?" சுந்தர் சேருடன் பாடசாலை அதிபரும் செல்ல அனுமதி கேட்டார்.*

*"நீங்க ?"*

*"பிரின்சிபல்"*

*"இருங்க சேர் கேட்டிட்டு வாறன்...." இருவரும் உள்ளே சென்றனர். முப்பது வினாடிக்குள் அதிபரும் அழைக்கப்பட்டார்.*

*"என்ன நடந்து?" பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேள்வி எழுப்பினார். ஒரு மணிநேரத்திற்குப் பின் ஓரளவு சமரசமாக பிரச்சனை முடிந்தது.*

*மாலை நான்கு மணி மீண்டும் மழை தொடங்கிவிட்டது. கதிரையில் அமர்ந்தபடி தொலைக்காட்சியைப் பார்த்தவாறு அமர்ந் திருந்தார் சுந்தர் சேர். மனதுக்குள் பலவாறு எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது.*

*"எப்படி......?" என்ன செய்யலாம்?*

*தொலைக்காட்சியில் அண்மையில் உற் பத்தி செய்யப்பட்ட குளிர் சாதன பெட்டி தொடர்பான விளம்பரம் ஆடம்பரமாய் விரிந்துகொண்டிருந்தது.*

**சந்தனம் மோகன்ராஜ்**
*சித்திரநெறி*

---

* ஆயிரம் பாடசாலை செயற்றிட்டத்தின் ஊடாக

- * கல்வியில் சம வாய்ப்பை ஏற்படுத்தலாம்
- * பாடசாலை நிர்வாகத்தை திறம்படச் செயற்படுத்தலாம்
- * வளப் பண்பாட்டினை அதிகரிக்கலாம்
- * கிராமப் புறங்களில் பாடசாலைகள் மூடப்படுவதைக் குறைக்கலாம்
- * சமூக உறவினைக் கட்டி வளர்க்கலாம்
- * மாணவர் இடைவிலகலைக் குறைக்கலாம்

---

# கோவில்களும் நாட்டிய வளர்ச்சியும்

கலை கலாசாரம் என்பன காலத்தைப் பிரதிபலிப்பனவாய் அமைகின்றன. ஒவ்வோர் நாட்டிலும் அவ்வவ் நாட்டு மக்களுக்கு ஏற்ற தனித்துவமான கலைகள் மக்களால் உருவாக்கப்படுகின்றன. கலை என்பது மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அறிவையும் ஆற்றலையும் குறிக்கும். செயல் திறமை, அழகூட்டும் ஆற்றல்கள் சுவை பயக்கும் வல்லமைகள் என்பவற்றை கலை எனும் போது நாம் உணர்ந்து கொள்கின்றோம். கற்றுக் கொண்டு செய்யும் தொழில்கள் யாவும் கலைகள் எனில் மிகையாகாது. கற்றல் என்பது வெறும் புத்தகக் கல்வி மட்டுமல்ல, கண்ணால் பார்த்து, மனதால் உணர்ந்து செய்ய முற்படும் தொழில்களும் கற்றுக் கொண்டவையே. இதை மனங் கொண்டே கலைகள் அறுபத்து நான்கு என முன்னோர் கூறினர்.

கோவில்கள் கலைகளின் காப்பகங்களாக விளங்குகின்றன. இந்து மத நிழலிலே பன்னெடுங்காலமாக கலைகள் சமயத்துடன் மிக நேர்த்தியாக இணைந்து வளர்ந்து வந்துள்ளன. இந்து சமயத்திற்கும் கலைகளுக்கும் இடையே பிரிக்க முடியாத தொடர்பு நிலவி வந்துள்ளது. வேதாகம முறைப்படி கோயில்கள் அமைக்கப்பட்ட பின் கலைகளின் நிலைக்களமாக அவை திகழத் தொடங்கின. எனவே கோயில்கள் சமய உணர்வினையும் அறிவினையும் புகட்டும் நிலையங்களாக மட்டுமன்றி கவின்கலை மையங்களாகவும் மிளிரலாயின.

ஆடல், பாடல் வேதகாலம் தொட்டு இறைவழிபாட்டில் இடம்பெற்றுள்ளது. இறைவனை வழிபடுவதற்கு மலர், நைவேத்தியம் ஆகியவற்றிலும் பார்க்க நிருத்த தானமே சிறந்தது. கோவில்களில் இடம் பெறும் நித்திய நைமித்திய கிரியைகளில் ஆடலும் பாடலும் இடம்பெறுகின்றன. ஆகமங்கள் வேதங்களைப் போலவே மிகவும் பழமையானவை.

எனவே நம் முன்னோர்கள் மிகப் பழங் காலத்திலேயே நாட்டியக்கலை பற்றிய சிந்தனையை ஆலயத்துடன் இணைத்துள்ளனர், என்பது நன்கு புலனாகிறது. சிதம்பரத்திலுள்ள நடராஜர் ஆலயம் ஒரு பெரிய நடனக் களஞ்சியமாகும். இங்கு சிவனை ஆகாய லிங்க வடிவில் மக்கள் வழிபடுவர்.

சிவபெருமான் ஆடற்கரசனாக, நடராஜனாகப் பல்வேறு கலைகளின் தனிப் பெரும் வித்தகனாக விளங்குகின்றான். நடராஜர் வடிவம் இதற்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். சிலப்பதிகாரத்தில் மாதவி கற்றதாகக் கூறும் பதினொருவகை ஆடல்களும் வெவ்வேறு கடவுளர் ஆடியவை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே தெய்வங்களுக்குரிய கோவில்கள் கலைக்களஞ்சியங்களாக விளங்குவதில் வியப்பில்லை.

"ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே" என நாயன்மார்கள் பாடி ஆடல் பாடல் மூலம் ஆண்டவனை வழிபட்டு உய்யும் முறையினை நன்கு வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். முற்காலத்திலே ஆலயங்களில் இசை நடன நிகழ்ச்சிகளை அளிப்பதற்காகக் கலைஞர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர்.

ஆலயங்களிலே இடம்பெற்ற நித்திய நைமித்திய கிரியைகளில் ஆடலும் பாடலும்

நன்கு இடம்பெற்றன. ஆகம விதிப்படி அபிடேகம், ஆராதனை முதலியன முடிந்த பின்னர் இறுதி நிகழ்ச்சியாக நடனம் இறை யன்பனாக ஆடப்பட்டது. இதனைத் தொடர்ந்தே கோவில்களில் நவஸந்தி நாட்டியம் இடம் பெற்றது.

இலங்கையில் பொலநறுவ, தெவிநுவர போன்ற இடங்களிலிருந்து சைவ வைணவக் கோவில்களில் தேரடியார்கள் இருந்து இசை நடனம் பணிகள் புரிந்தமைக்கான சான்றுகள் உள்ளன. அண்மையில் அனுராதபுரத்தில் சிவன் சக்தி தாண்டவம்; லாஸ்யம் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய அர்த்தநாரீஸ்வரர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. பொலநறுவையில் ஆட்சி புரிந்த முதலாம் பராக்கிரமபாகு சரஸ்வதி மண்டபத்தினை நிறுவி இசை, நடனம் ஆகியவற்றையும் போற்றிப் பேணி வந்தான்.

கோவில்களிலே அவ்வவ் கடவுளர்க் குரிய கலை ஆர்வத்தையும் ஈடுபாட்டினையும் காட்டும் சிற்பங்களும் ஓவியங்களும் இடம் பெறலாயின. இதற்கு எடுத்துக்காட்டாக சிவனின் 108 கரணங்கள் கண்ணனின் வேய்ங்குழல் பற்றிய சிற்பங்களைக் குறிப்பிட லாம். கோவில் அமைப்பிலே நிருத்த மண்ட பம் என்ற ஒரு பகுதி நடனத்திற்காக ஒதுக்கப் பட்டிருந்தது.

ஆலய வழிபாடானது "ஷோடசோப சாரம்" எனக் கூறப்படும், 16 அங்கங்களைக் கொண்டது. இதில் கீத வாத்தியம் 14ஆவது அங்கம் எனவும் "நிருத்யோபசாரம்" 15ஆவது அங்கம் என்றும் ஆகம நூல்கள் கூறுகின்றன.

இவ்வாறாக கோவில்கள் நாட்டிய வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன.

**தேவகி விஸ்வகுமாரன்**

*நடனநெறி*

---

* இலங்கையில் கல்வித் திட்டங்கள் வெற்றியடைய உதவி வழங்கும் நிறுவனங்கள்
  * ஆசிய அபிவிருத்தி வங்கி
  * உலக வங்கி
  * கொய்கா
  * ஜெய்க்கா
  * யுனிசெப்

---

# அமிழ்தினும் இனிய தமிழ்

தமிழ் தமிழ் தமிழ்
அமிழ் அமிழ் அமிழ்

தமிழ் தமிழ் எனும் போதிலே - அது
அமிழ் அமிழ் தென்றாகுமே
தாயே எங்கள் தமிழே
உன்னைத் தலைமேற்
கொண்டே வணங்குவோம்.
(தமிழ் தமிழ் தமிழ்)

பொதிகை மலையில் பிறந்து வந்தாய்
புலவர் செந்நாவில் தவழ்ந்து வந்தாய்
மதுரை நகரின் மாடத்திலே
மங்கையாய் மலர்ந்து மணம் தந்தாய்
என்றும் குன்றா இளமையதால்
இன்றும் குமராய் இருக்கின்றாய்.
(தமிழ் தமிழ் தமிழ்)

அகநூல் புறநூல் அள்ளித் தந்தாய்
அறநூல் தனையும் நீ அளித்தாய்
இறைநூல் முறைநூல் என்றெல்லாம்
எத்தனை இலக்கியம் எமக்களித்தாய்
கதைகள் கூறும் காவியங்கள்
அணியாய் நீயும் சூடிக் கொண்டாய்
(தமிழ் தமிழ் தமிழ்)

ஆயிரம் ஆயிரம் மொழிகள் உண்டு
அவற்றுள் தனியிடம் உனக்கும் உண்டு
தண்மொழியாய் என்றும் வண்மொழியாய்
வாழ்ந்திடும் செம்மொழி நீயன்றோ?
இயலிசை நாடகம் ஈர்த்தளித்த
இனிய எம் தமிழ் மொழி வாழியவே
(தமிழ் தமிழ் தமிழ்)

விஜயதர்சினி தயாளன்
ஆரம்பக்கல்வி - D

# ஆரம்பக்கல்வி - C



**(இ - வ) இருப்போர் :-** திருமதி இ. பழனித்துரை, சு. பரமேஸ்வரன், சி. சிவம் , செல்வி அ. நிருபராணி (வகுப்புவிரிவுரையாளர்), வீ. கருணலிங்கம் (உப அதிபர்) வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) த. சகிலன், ஐ. சிவசங்கர லிங்கம், ச. நகுலேஸ்வரன் **(இ - வ)1ம் நிரல் :-** திருமதி த. சுரேஸ்குமார் ல. ஜெயக்குமார், உ. கிரிதரன் சீ. மௌசூனா, வ. நகுலராசா, பி. ரசிகுமார், சு. சிவசுதர்சன், சு. ஜோன்ஸ்டன், செல்வி. ஆ. மகேந்திரகுமாரி, முஹமட்சிறாஜ் சித்திஹலீமா, ஞா. சுதன், சு. சிவயோகன், இட -வலம் 2ம் நிரல் :- செல்வி இ. குமுதா, திருமதி கா. வித்தகன், சு. திலீபன், க. சிவநாதன் , ர. சுதாகரன், வ. விஜயப்பிரகாஷ், பி. திருநாவுக்கரசு, து. இராஜசங்கர், கோ. சக்திவேல், து. இரவிசங்கர், செல்வி சாஹீல்ஹமீட்ஜீமானுன் நஹார் **(இ - வ) 3ம் நிரல் :-** திருமதி க. தயானந்தன், அ. சிவகணநாதன், ரோ. கேதீஸ்வரன், செல்வி க. துர்க்காபாரா, செல்வி த. தயானி இ. இரஜனிகாந், செல்வி வ. ஷர்மிளா, செல்வி த. டலிதா, சி. இராசவிநாயகம்,ஜெ. நந்தகுமாரன்

**(இ - வ) 4ம் நிரல் :-** திருமதி சு. கமலதாஸ், ல. வருணராசன், க. சுமதீஸ்வரன்

# யார் நல்ல நண்பன்

*(திரை விலகமுன் காட்டில் உள்ள விலங்குகளின் ஒலி கேட்க வேண்டும், விலங்குகளின் ஒலி (சத்தம்) ஓய்ந்த பின் திரை மெல்ல விலகும் போது பாடுநர் நால்வரும் மேடையில் தோன்றுவர்)*

**பாடுநர்** - எல்லோருக்கும் வணக்கம் இது ஒரு அழகான காடு

**பாடு 2** - மரங்கள் எல்லாம் ஓடி வாங்கோ *(4 மரங்கள் தங்களைத் தாங்களே சுற்றிக் கொண்டு மேடையின் நடுவில் நான்கு பக்கமாக மரம் போல் வந்து நிற்பர்)*

**பாடு 3** - இந்தக் காட்டிலே ஒரு கதை நடக்கப் போகிறது.

**பாடு 4**- கதையெண்டா எனக்கு நல்ல விருப்பம் என்ன கதை?

**பாடு 3** - நல்ல நண்பர்களின் கதை

**பாடு 4** - நல்ல நண்டன் என்றால் யார்?

**பாடு 3**- ஆபத்து நேரத்தில் உதவுகிறவன் தான் நல்ல நண்பன்

**பாடு 1** - அதத்தானே, நாங்கள் இந்தக் காட்டில நாடகமாகப் பார்க்கப் போகிறம்

**பாடு 2**- நாங்கள் கொஞ்சம் ஒழித்திருந்து பார்ப்போமா?

**பாடு 1** - ஓமோம், ஓடி வாங்கோ ஒழிப்போம்

**பாடல்** நண்பனாரு நண்பனாரு
நல்ல நண்பன் ஆரு
ஊரு வேணாம் பேரு வேணாம்
மனசு வேணும் - நல்ல மனசு வேணும்
நல்ல நண்பன் மனசு வேணும்

*(பாடிக்கொண்டே பாடுனர்கள் மேடையின் ஓரத்தில் ஒழிக்கின்றனர்)*

*(மான் துள்ளித் துள்ளி மேடைக்குள் மேய்ந்து கொண்டிருப்பார். காகம் கா-கா என்று கத்திக்கொண்டே காகம் வெளியேறுவார். அப்போது நரியார் மேடையின் முன்பகுதியால் மெல்ல மெல்லப் பதுங்கிக் கொண்டே வருவார்)*

**பாடு 1** - ஐயோ, நரி வருது....... நரி வருது

**நரி** - *(திரும்பிப் பார்த்து)* உஷ்.......
*(பாடுனரை சைகையால் அமரச் செய்கின்றார். பின் தனக்குள்)*
ச்சா..... என்ன கொழுப்பு, என்ன இறைச்சி மூன்று நாளைக்கு தாராளம் நல்ல சாப்பாடு
*(மானின் அருகில் வந்து நரியார்)*

**நரி** - என்ன நண்பா நலமா?

**மான்** - *(திரும்பிப் பார்த்து)* யாரையா நீங்கள்?

**நரி** - நான் இந்தக் காட்டில் ஒரு தனி மரம் எனக்கு நண்பர்கள் யாருமே இல்லை. உறவு என்று சொல்லிக்க எவருமே இல்லை.

**மான்** - ஐயோ! பாவம்

**நரி** - உம்மைப்போல் எனக்கு ஒரு நல்ல நண்பன் இருந்தால் எவ்வளவு சந்தோசமாயிருக்கும்.

**மான் -** உம்மைப் பார்த்தால் பாவமாய் இருக்கிறது

**நரி -** ஓமோம் நான் பாவம் தான்.

**மான் -** சரி இன்று தொடக்கம் நீரும் எனக்கு நண்பன் சந்தோஷமா?

**நரி -** தங்யூ - மானாரே சந்தோஷம் சந்தோஷம்

**மான் -** சரி வா நம்முடைய இருப்பிடத்திற்குப் போவோம்

(இருவரும் நடக்க ஆரம்பிக்க, மரங்கள் நான்கும் தங்களையே சுற்றிக் கொண்டு இடங்கள் மாறி மாறி நிற்கின்றன. காகம் கத்திக் கொண்டு மேடைக்குள் வருகிறது)

**காகம் -** மானாரே, இன்று நல்ல புல் கிடைத்ததா?

**மான் -** புல்லும் கிடைத்தது கூடவே ஒரு நண்பனும் கிடைச்சது

**மான் -** இதோ (நரியைக் காட்டுதல்)

**காகம் -** இவரா? மானாரே யாரையும் ஆராயாமல் முன்பின் தெரியாதவர்களோடு நட்புக் கொள்ளக் கூடாது என நீர் படிச்சதில்லையா?

(மான் யோசித்துக் கொண்டிருக்க முழித்துக் கொண்டிருந்த நரி குறுக்கிடுகிறது)

**நரி -** நல்லவர்களைப் பார்த்தாலே தெரியாதா? இதற்குப் போய் ஏன் இத்தனை ஆராய்ச்சி?

**மான் -** அது தானே காக்கையாரே, நீர் எப்படி எனக்கு நண்பனோ, அப்படித்தான் இந்த நரியாரும் எனக்கு

**காகம் -** என்னவோ செய்யும் சரி வாரும் (மூவரும் உள்ளே போக பாடுனர்கள் கதைப்பர்)

**பாடு 1 -** என்ன நாடகம் முடிஞ்சுதா?

**பாடு 2 -** அவசரப் படாதேயும் இனித்தான் கதையே ஆரம்பம்

**பாடு 3 -** இனியென்ன நடக்கும்

**பாடு 4 -** சந்தர்ப்பத்திற்குப் பார்த்திருந்த நரியார் ஒருநாள் (நரியார் மேடைக்குள் வர - பாடுனர்கள் அமர்கின்றனர்)

**நரி -** மானாரே..... மானாரே.....

**மான் -** (துள்ளிக்கொண்டு) என்ன நண்பா?

**நரி -** ஒரு இடத்தில், நல்ல விளைச்சலோடு புல் வயல் இருக்கிறது. இன்று உமக்கு மட்டும் நல்ல விருந்து வாரும் காட்டுகிறேன்.

**மான் -** அய்யா....(துள்ளிக் கொண்டு நரியோடு போதல்) (இருவரும் மேடையின் ஓரத்திற்குச் சென்று)

**நரி -** இது தான் நான சொன்ன இடம்

**மான் -** சந்தோசத்தால் துள்ளி நரியாரின் கன்னத்தில் முத்தம் கொடுக்கிறார். பின் வயலில் வயிறு நிறையும் வரை உண்டு விட்டு நரியோடு தம் வீடு திரும்புகின்றார். (நரியாரும், மானாரும் உரையாடிக் கொண்டே வருகின்றனர்.)

**நரி -** எப்படிப் புல்?

**மான் -** (ஏப்பம் விட்டுக் கொண்டு) இது போல நான் சாப்பிட்டதே இல்லை. தங்கியூ நரியாரே..

**நரி -** இதெல்லாம் நண்பனுக்குச் செய்யிற உதவி. எதுக்கு இந்த நன்றி

(இருவரும் மேடையின் மறுபகுதியால் உள்ளே போக வயற்காரன் வருகின்றான்.)

**பாடுனர் -** இவர் தான் வயற்காரன்

**பாடு 2 -** முந்திரிக்கொட்ட, எல்லோருக்கும் தெரியும் நீர் இரும்.

(வயற்காரன் வயலைப் பார்த்துவிட்டு அதிர்கின்றான்)

**வயற்காரன் -** ஐயையோ கஸ்ரப்பட்டுப் பாது காத்த என்ர வயலை யாரோ அழிச் சுப்போட்டாங்களே. இனி நான் என்ன செய்வேன் (யோசித்து விட்டு) இனியும் இது நடக்காமல் இருக் கணும் எண்டா இதுக்கு ஒரே வழி சுருக்கு வைக்க வேண்டியது தான்.

(உள்ளே கயிறு அல்லது வலை கொணர்ந்து வயலில் சுருக்கு வைத்து விட்டுப் போகின் றான். மரங்கள் மீண்டும் சுழன்று நின்று மறு நாளைக் காட்ட வேண்டும். மானார் மீண்டும் துள்ளிக் கொண்டு வயலை நோக்கி ஓடுகிறார். வயலில் துள்ளுகிறார், பாடுகின்றார், மகிழ் கிறார், வயலில் உண்ணுகிறார் பின் சுருக்கில் அகப்பட்டுக் கொள்கிறார்.)

**மான் -** கடவுளே மாட்டிக் கொண்டோமே.... இந்த நேரம் பார்த்து நரியார் கூட இல்லையே....

(நரியார் விசிலடித்துக் கொண்டு மானின் பக்கத்தில் வருதல். மான் நரியாரைக் கண்டு மகிழ்ந்து கூறுகின்றார்)

**மான் -** நரியாரே! உம்மைத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன் உடனே இந்தக் கயிற்றை அறுத்து என்னைக் காப்பாற்றும்.

**நரி -** அய்யய்யோ இண்டைக்கு நான் விரதமாயிற்றே நாளைக்கெண்டா காப்பாற்றியிருப்பேனே; மானாரே! நான் போயிற்று வாறன். (சிறிது நேரம் சென்று நரியார்) இதுக்காகத்தான் இவ்வளவு நாளாப் பார்த்திருந்தன் வயற்காரன் வருவான் மானைக் கொன்று போட்டவுடனே சாப்பிட லாம். பொறுமையாக இருப்பம் ஓடிச் சென்று மரம் ஒன்றின் பின்னால் ஒழித்துக் கொள்கின்றார் நரியார். இதைப் பார்த்த மான்

**மான் -** (தனக்குள்) அண்டைக்குக் காக்கை யார் சொன்னார். நான் தான் கேக் கல்ல.... நரியார் என்னை ஏமாற்றி விட்டாரே.... (காக்கையார் பறந்து மேடைக்குள் வருகிறார் எங்கும் தேடுகிறார். மானாரைக் காணவில்லை. கவலையுடன் தேடி அலைகிறார்)

**காக்கை -** நெடுநேரமாகியும் இந்த மானைக் காணவில்லையே கூடப்போன நரி யாரையும் காணல்ல

(தேடியலைந்து இறுதியில் மானின் நிலையைக் காணுதல்)

**மான் -** காக்கையாரைப் பார்த்ததும் கண்ணீர் விட்டு உன் அறிவுரையைக் கேட் காமல் விட்டதுக்கு எனக்கு கிடை ச்ச பரிசைப் பார்த்தாயா?

**காக்கை -** எங்கே உன் நண்பன் நரி?

**மான் -** நண்பனா அவன் துரோகி, எப்போது நான் சாவேன் உண்ணலாம் என்று ஒழிஞ்சு கொண்டிருக்கிறான்.

(இந்த நேரத்தில் பெரிய தடியுடன் வயல்க் காரன் மேடையின் மறுபுறத்தில் இருந்து மானை நோக்கி வருகின்றான். உடனே காகம் மானிடம்.....)

**காகம் -** இஞ்ச பார் வயற்காரன் தடியுடன் வருகிறான். நீ செத்தவனைப் போல் மூச்சை அடக்கிக் கொண்டு கிட செத்த உன்னை அடிக்காமல் சுருக்கை அவிழ்த்து விடுவான் பிறகு நான் குரல் கொடுப்பேன் நீ ஓட்டம்பிடி, தப்பலாம்

**மான் -** சரி, சரி , நீ... ஓடு காகம் இன்னொரு மரத்தின் அருகில் ஒழித்துக்கொள்கிறது. வயற்காரன் தடியுடன் மானின் அருகில் வர அது இறந்து விட்டதைப் போல கிடக்கிறது.

**வயற்காரன் -** அடடே.... மான் செத்து விட்டதே.....

(தடியைக் கீழே போட்டுவிட்டு மானைச் சுருக்கில் இருந்து வெளியே எடுத்துவிட்டு சுருக்குக் கயிற்றை சுருட்டிக் கொண்டிருக்க காக்கையார் கத்துகிறார். உடனே மான் எழுந்து ஒரே ஓட்டமாக நரியின் அருகால் ஓடி மறைகிறார். இதனைக் கண்ட வயற்காரன் அருகில் இருந்த தடியை எடுத்து எறிகிறான்)

**வயற்காரன் -** மான் சாகவில்லையா? உன்னை என்ன செய்கிறேன் பார். தடியால் எறிகிறான். அது அருகில் ஒழிந்திருந்த நரியார் தலையில் போய்ப்பட ஐயோ என அலறிக்கொண்டு நரி நிலத்தில் விழுந்தது..

**வயற்காரன் -** ச்சே தப்பி விட்டதே அடுத்த முறை வரட்டும் கயிற்றை எடுத்துக் கொண்டு மேடையில் இருந்து வெளியேறுகிறான். வயற்காரன். மரங்கள் சுழன்று கொண்டிருக்க மான் மீண்டும் மேடைக்கு வந்து காகத்துக்கு கை குலுக்குகிறது.

**மான் -** ஆபத்துல உதவுகிறவன் தான் உண்மையான நண்பன். நன்றி காக்கையாரே! மிக்க மிக்க நன்றி

(பாடுனர் நால்வரும் மெல்ல எழுந்து கீழ்வரும் வரிகளை ஒவ்வொரு வரியையும் ஒவ்வொருவராகப் பாடிக்கொண்டு மேடைக்கு வருவார்)

**பாடுனர் -** ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்

**மரங்கள் -** ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்

**பாடுனர் 2 -** ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

**மரங்கள் -** ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

**பாடுனர் 3 -** மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்

**மரங்கள் -** மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்

**பாடுனர் 4 -** வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்

**மரங்கள் -** வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்

**காகம்**
**மான்** வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்

(எல்லோரும் வரிசையில் நின்றுகொண்டு மீண்டும் இறுதி வரியைப் பாடுவர்)

**எல்லோரும் -** வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்

(நரியாரும் துள்ளி எழுந்து இந்த வரியைப் பாடிக்கொண்டிருக்க திரை மெல்ல மூடிக் கொள்கின்றது.)

**சைலஷா இன்பகரன்**
ஆரம்பக்கல்வி - A

## ஆரம்ப நெறி - D



**(இ - வ) இருப்போர் :-** திருமதி க. ஜெகதீஸ்வரன், திருமதி க. இராசையா, செ. ரவிச்சந்திரன், சி. சிவகாந்தன், வீ. கருணைலிங்கம் (உப அதிபர்), வே.கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), பா. வாசுதேவன் (வகுப்பு விரிவுரையாளர்), அ. பிரதீபன், இ. கிருஷ்ண சேகரன், திருமதி வா. மகேந்திர ராசா செ. புவனேந்திர ராசா **(இ - வ) 1ம் நிலை :-** திருமதி க. எயுயீன்மசன்ட, கொ. செல்வரத்தினம் , தே. யோகேந்திரன் , ம. ஏபிரகாம், செல்வி அ. அருள்நாயகம், சு. ரவீந்திரன், திருமதி மே. செபமாலை, யா. சுதாகரன், க. ரமேஸ், ஆ. டெலிசியஷ்டெல்வின், ச. சுதர்சன், உ. யோகுகுமார். **(இ - வ) 2ஆம் நிலை :-** திருமதி .வி. சூரியபாலா, லி. நிமலகுமார், செ. சற்குணம் சு. அரவிந்தன், திருமதி ஜெ. உதயகுமார், திருமதி ஸ்ரீ . யோகராசா, த. சுதாகரன், திருமதி த. திருக்கேதீஸ்வரச் செல்வன் சு. குகநாதன், பு. பிரபாகரன்,திருமதி ஸ். யூட்வசந்தகுமார். **(இ - வ) 3ம் நிலை :-** திருமதி த. மோகனராஜா, செல்வி வி. அப்புத்துரை, திருமதி ட. இராகுலன், செல்வி ச. நாகராசா, செல்வி து. குமாரசாமி, திருமதி வி. தயாளன், திருமதி. சு. சின்னத்துரை திருமதி க. ரகுபதி, செல்வி அ. இரத்தினம்,செல்வி ச. விசுவாசம், திருமதி மே. அன்ரன் பிரேமதாஸ் பர்ணாந்து.

# MAKE LIFE EASY FOR OUR BRAIN

We are Living in the 21st century the modernized highly advanced world. We are busy and with this world in order to earn not only money but also a fame by success. In order to obtain so we must have a very healthy mind. Here is the shortcut to that.

Our amazing brain is like a super computer. The world's best computers have only a few thousand chips Our brain has brain cells 12 millions of them. This means that we are genius just waiting to discover ourselves. All we have to do is to learn how to get those brain cells working together and we'll not only do better at school but also we'll do our home work more quickly and there fore have more free time.

Our memory is like a muscle, magnificent memory muscle. If we do not use it, it will grow weaker. But, if we do keep it exercised it will grow stronger and stronger. Here are four tips for improving our memory muscle.

**1. Work for between 20 and 40 minutes at a stretch and then take a break.**

The break allows our memory Muscle to rest and let's the information sink in. This makes our memory muscle stronger for our next learning session.

**2. Go back areas over work**

If we wait for a little while after learning something and then look back at it later, we'll catch our brain at the top of the memory wave and remember even more.

**3. Make connections**

Our memory muscle becomes stronger when it can link things together. We can use our brain's amazing powers to conjure up a huge number of pictures and ideas at once to help us to remember information. Join the separate facts together in some way to make a picture and they'll come back to you all together in a flash.

**4. Think big**

Our memory muscle gets stronger if what is it trying to remember is special in some way so "think big" and make what you are learning brightly coloured funny, peculiar and special.

**5. Mind map**

When people go on holidays or picnics. they take maps to give them a general picture of where they are going and to help them find their way around when they get there. It is exactly the same with our memory and school work. If we have a "Map" of what we have to cover everything it will be easier. The mind map is a very special map. It helps us to find our way around a subject easily and quickly because it mirrors the way our brain works. Use it for organizing our work at school and at home, for taking notes and planning our home work.

1. How to draw a mind map?

Start in a middle of the page with the page turned sideways. This give our brain the maximum width of its thoughts.

2. Always start by drawing a small picture or symbol why?

Because a picture is worth a thousand words to our brain. And try to use at least colours, as colours help our memory even more.

3. Write or Draw our ideas on coloured branching lines connected to our control image. These key symbols and word are the head lines for our topic.

4. To Link ideas and thoughts on different branches use arrows, colours, underlinings and boxes.

**How can mind map help us?**
Mind maps can help us in many ways. They can help us to

* Be more creative
* Save time
* Solve problems
* Concentrate
* Dragging clearly our thinking
* Pass exam with good grades
* Remember better
* Study faster and more efficiently
* Survive
* Save trees
* Communicate
* Make studding breeze

When you start on a new book or topic there are several things we can do to help get our brain 'on line' faster.

1. Quickly scan through the whole book or topic. As we would do if we were in a shop deciding whether or not to buy a book or magazine. This gives our brain control.

2. Think of what already know about the subjects. We'll often find it a lot of more than we first thought of it. A good way of doing this is to do a quick mind map of every thing we know about the subjects after we have skimmed it.

3. Have a final Scan. Look through the book or topic quickly one more time. This will lodge it permernants to your memory banks. From the mind map knowledge we can prepare a concept map. First we have to write all concept map. First, we have to write all concepts of the subjects, units and syllabus in point form. Then organize them in the proper priority order. If necessary we must change the colour and size of the words. If we hang it in our bed room or reading room. we can take it to our brain without any heavy loading. Concept map is used as assessment tools. introduced by Department of Examination and Evaluation, in our schools.

Our brain is an amazing piece of equipment The more we understand and use it the more it will repay us. So use it much to get success in every step of our life.

**Maheswaran Sivamalar**
*Science Course*

# ஆரம்பக்கல்வி - E



(இ - வ) **இருப்போர்** :- செல்வி ப. கிறிஸ்ரின்பிறேமினி, திருமதி ஜெ.ரகீஸ்வரன், திருமதி மாவனாஹேவா அனுஷாசஜீவனி (வகுப்பு விரிவுரையாளர்) வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கணபதிப்பிள்ளை (அதிபர்), ப. சிறீசங்கர், செல்வி. கி. யூடிற்றாகுரூஸ், ஜெ. தோமஸ்அல்வின், ச. டென்சில்பீரிஸ் **(இ - வ) 1ஆம் நிலை** :- திருமதி. அ. சந்திரகுமார், ஜீ. ரஞ்சித், சு. வில்சன், செல்வி. ஞா. மேரி மெற்றில்டா, செல்வி. ஆ. பிரான்சிஸ்கம்மா, ம. நீகன், ர. ஜெயராசா, அ. சர்வேஸ்வரன், ஆ. அன்ரன்ஜெயராஜ், ரு. மார்க்ரெலன்ஸ், ஜெ. தெய்வநாயகம், அ. யேசுநேசன்குரூஸ் **(இ - வ) 2ஆம் நிலை** :- திருமதி ட. ஜெயராஜ், செல்வி. அ. பிறேமளா, ஜெ. மெனெசெஸ், செல்வி . யோ. றோஷானி, ம. கமலேஸ்வரன், செல்வி . அ. மேரிகீத்தா, செல்வி. ரா. ரஜனி, க. ம. அன்ரன்பீலிக்ஸ், செல்வி .அ. மேரிஜலின்குரூஸ், அ. பிரசாத், தி. நெல்சன்துரம், செல்வி. ச. மரியம்மான்

**(இ - வ) 3ஆம் நிலை** :- திருமதி. ம. யூட்நிக்ஷன், அ. சத்தியபாலன், அ.பி. சதீஸ்குமார், லூ. ம. ஜென்சின், மி.அ. அன்ரனிடியூறஸ், மே. அருள்தாஸ், ஜெ. லக்ஸ்மன், அ. தோமஸ், செல்வி. அ. டிசாந்தி, றெ. வரதகிறீஸ்துராஜா, று. றெஜிமோகனதாஸ்

# ஸப்தஸ்வரங்களின் இலட்சணங்களை அறிந்து கொள்வோம்

செவிக்கு இனிமையைத் தரும் த்வனிகளைப் பற்றிய கலை சங்கீதமாகும். லலிதகலைகளில் மேன்மை பொருந்திய சங்கீதம் அருந்த அருந்த தாகம் தீராத, தெவிட்டாத, வற்றாத அரும்பெருங்கடல் என்றால் மிகையாகாது. இறைவன் இசைவடி வானவர் . "ஏழிசையாய் இசைப்பயனாய்" எனச் சுந்தரரும், "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்று இறைவனை எண்ணி அப்பரும் உருகுகையில் இறைவனுக்கும் இசைக்கு மிடையிலான தொடர்பை உணர முடிகிறது. இதனாலே சங்கீதத்தை தெய்வீகக் கலை என்கிறோம்.

சங்கீதத்தின் இன்றியமையாத அம்சம் ஸ்வரங்களாகும். இயற்கையாவே ரஞ்சனையைக் கொடுக்கும் த்வனி ஸ்வரம் எனப்படும். ஸ்வரமானது கோவை, நரம்பு, தந்தி, கோல் எனப் பலவாறு அழைக்கப்படும். சங்கீதத்தைக் கடலுக்கு ஒப்பிட்டால் கடலிலுள்ள முத்துக் களே ஸ்வரங்களாகும். ஒவ்வொரு ஸ்வரமும் ஒரு தனிப்பட்ட அளவு கொண்ட இசை ஒலியாகும். முத்துக்கள் போன்ற ஸ்வரங்களை பல்வேறு வகையில் தொகுக்கும் போதே இனிய இராகங்கள் எனும் முத்துமாலை எமக்குக் கிடைக்கின்ற இசைக்குரிய அபூர்வ ஸ்வரங்கள் ஏழு. அவை ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் ஆகும் முறையே அவற்றின் குறியீடு ஸ,ரி,க,ம,ப,த,நி என்பன இவை சாமவேத காலத்திலேயே வகைப்படுத்தப்பட்டன. இவையே எல்லா நாட்டு இசைக்கும் பொது வாக உள்ளன. இவ்வேழு ஸ்வரங்களைப் பற்றி அறிவது இசைப்பிரியர்களுக்கு அவசியமே. இனி ஏழு ஸ்வரங்களுக்குமுரிய சிறப்பு இலட்சணங்களைப் பார்ப்போம்.

**01. ஸ - ஸட்ஜம்**

தமிழிசைப் பெயர் - குரல், பிறப்பிடம் - தொண்டை, இனம் - ஆண், மாத்திரை - 04, எழுத்து - ஆ, உறவு - முதல், சுவை - பால், மணம் - மௌவல், வாரம் - ஞாயிறு, ஆபரணம் - முத்து, மலர் - ஜாதி மல்லிகை, விலங்கு - மயில், தெய்வம் - அக்னி, முனிவர் - தட்சன், நட்சத்திரம் - சதயம், இராசி - கும்பம், இரசம் - வீரம், ஆயுதம் - கத்தி, கோத்திரம் - ஜமதக்னி, ஆடை - வெண்மை, வாகனம் - ஹம்ஸம், உணவு -தயிர்சாதம், வம்சம் - தேவர், ஜாதி - பிராமணர், தொழில் - படைத்தல்.

**02. ரி - ரிஷபம்**

தமிழிசைப் பெயர் - துத்தம், பிறப் பிடம் - நாக்கு, இனம் - பெண், மாத்திரை - 04, எழுத்து - ஈ, உறவு - இணை, சுவை - தேன், மணம் - முல்லை, வாரம் - திங்கள், ஆபரணம் - நீலம், மலர் - சம்பங்கி, விலங்கு - காளை, தெய்வம் - பிரம்மன், முனிவர் - அத்திரி, நட்சத்திரம் - சித்திரை, இராசி - துலாம், இரசம் - ரௌத்திரம், ஆயுதம் - குந்தம், கோத்திரம் - ஆத்ரேய, ஆடை - மஞ்சள், வாகனம் - சிம்மம், உணவு - பாயாசம், வம்சம் - முனிவர், ஜாதி -சத்திரியர், தொழில் - காத்தல்

**03. க - காந்தாரம்**

தமிழிசைப் பெயர் -கைக்கிளை, பிறப்பிடம் - அண்ணம், இனம் - ஆண், மாத்திரை - 03, எழுத்து - ஊ, உறவு - பகை, சுவை - தயிர், மணம் - கடம்பு, வாரம் - செவ்வாய், ஆபரணம் - வைரம், மலர் - சுரப்புன்னை, விலங்கு - ஆடு, தெய்வம் - சரஸ்வதி, முனிவர் - கபிலர், நட்சத்திரம் - கேட்டை, இராசி - விருச்சிகம், இரசம் -

சாந்தம்,, ஆயுதம் - கதை, கோத்திரம் - கௌதம, ஆடை - சிவப்பு, வாகனம் - பேரண்டப் பட்சி, உணவு - மோதகம், வம்சம் - தேவர், ஜாதி -வைசியர், தொழில் - காத்தல்

**04. ம. மத்திமம்**

தமிழிசைப் பெயர் - உழை, பிறப்பிடம் - தலை, இனம் - அலி, மாத்திரை - 02. எழுத்து - ஏ, உறவு - நட்பு, சுவை - நெய், மணம் - வஞ்சி, வாரம் - புதன், ஆபரணம் - வைடூரியம், மலர் - மல்லிகை, விலங்கு - கிரௌஞ்சம், தெய்வம் - சிவன், முனிவர் - வசிஷ்டர், நட்சத்திரம் - மகம், இராசி - சிம்மம், இரசம் - ஹாஸ்யம், ஆயுதம் - சக்கரம், கோத்திரம் - வசிஷ்ட, ஆடை - கருநீலம், வாகனம் - மான், உணவு - சித்ரான்னம், வம்சம் -தேவர், ஜாதி - பிராமணர், தொழில் - அழித்தல்.

**05. ப - பஞ்சமம்**

தமிழிசைப் பெயர் - இளி, பிறப்பிடம் - நெஞ்சு, இனம் - பெண், மாத்திரை - 04, எழுத்து - ஐ, உறவு - கிளை, சுவை - ஏலம், மணம் - நெய்தல், வாரம் - வியாழன், ஆபரணம் - மரகதம், மலர் - தாழம்பூ, விலங்கு - குயில், தெய்வம் - விஷ்ணு, முனிவர் - பிருகு, நட்சத்திரம் - உத்திரம், இராசி - கன்னி, இரசம் - சிருங்காரம், ஆயுதம் - ஈட்டி, கோத்திரம் - ஸ்ரீவத்ஸ, ஆடை - மஞ்சள், வாகனம் - வெள்ளைத் தவளை, உணவு - மாவு, வம்சம் - பித்ரு, ஜாதி - பிராமணர், தொழில் - மறைத்தல்.

**06. த - தைவதம்**

தமிழிசைப் பெயர் - விளரி, பிறப்பிடம் - நெற்றி, இனம் - பெண், மாத்திரை - 03, எழுத்து - ஓ, உறவு - பகை, சுவை - வாழை, மணம் - தாமரை , வாரம் - வெள்ளி, ஆபரணம் - கோமேதகம், மலர் - அரலிப்பூ, விலங்கு - குதிரை, தெய்வம் -சூரியன், முனிவர் - நாரதர், நட்சத்திரம் - பூராடம், இராசி - தனுசு, இரசம் - பீபத்சம், ஆயுதம் - பாணம், கோத்திரம் - பராசர, ,ஆடை - சித்திர வர்ணம், வாகனம் - கிளி, உணவு - சுத்தசோறு, வம்சம் - தேவர், ஜாதி - சத்திரியர், தொழில் - அருளல்.

**07. நி - நிஷாதம்**

தமிழிசைப் பெயர் - தாரம், பிறப்பிடம் - மூக்கு, இனம் - ஆண், மாத்திரை - 02, எழுத்து - ஔ, உறவு - இணை, சுவை - மாதுளை, மணம் - புன்னை , வாரம் - சனி, ஆபரணம் - புஷ்பராகம், மலர் - தாமரை, விலங்கு - யானை, தெய்வம் -கணபதி, முனிவர் - தும்புரு, நட்சத்திரம் - அனுசம், இராசி - விருச்சிகம், இரசம் - கருணை, ஆயுதம் - அங்குசம், கோத்திரம் - சாலங்காயர், ஆடை - கறுப்பு, வாகனம் - கழுகு , உணவு - அரிசி, வம்சம் - அசுரர், ஜாதி - வைசியர், தொழில் - ஐந்தொழில்.

சங்கீதத்தின் உயிர்நாடியான ஸ்வரங்கள் பற்றி அறிந்து உலகம் போற்றும் சங்கீதக்கலை சிறப்படைய, மென்மேலும் வளரச் செய் வோம்.

**தங்கநாதன் தீபஷோபனா**
*கர்நாடக சங்கீத நெறி*

# காயத்திரி மந்திரம்

காயத்திரி மந்திரத்தைக் கைக்கொள்ளுவதற்கு முன்பு நாம், காயத்திரி மந்திரம் என்றால் என்ன என்பதனைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். காயத்திரி மந்திரமானது, மனித குலத்தின் மிகப்பழைமையான சமய நூலாகக் கருதப்படுகிறது. வேதத்தில் உலகளாவிய பிரார்த்தனையாக அமைந்துள்ளது. எக்காலத்திலும் உலகின் எப்பகுதியிலும் ஆன்மீகத்திற்காகவோ அல்லது உலகியல் நன்மைக்காகவோ பயபக்தியோடு ஓதப்படவேண்டிய - உச்சரிக்கப்பட வேண்டிய பிரார்த்தனையே உலகளாவிய பிரார்த்தனை எனப்படும். இவ் வந்தஸ்தினை காயத்திரி மந்திரம் பெற்றுள்ளது.

காயத்திரி மந்திரத்தை உச்சரிக்கும் முறை கீழே தரப்படுகின்றது. அனைவரும் கீழ்க்கண்டவாறே உச்சரித்தல் வேண்டும்.

ஓம்
பூர் புவ ஸ்வா
தத் ஸவித்தூர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தீய் யோந ப்ரசோதயாத்

காயத்திரி மந்திரமானது பல்வேறு வகைகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. அவற்றில் ஒரு வகையை எடுத்து நோக்குவோமானால், "ஓம் மாதா முக்காலம் மூவுலகம் முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே, எனது புத்தியைக் கூர்மையடையச் செய்து சூர்யப் பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவது போல் எனது சகல அறியாமையையும் அகற்றி எனது புத்தியைச் சார்ந்த சித்தி நிர்மலமானதாகப் பிரகாசிக்கச் செய்யும்படி யான் உன்னைத் துதிக்கின்றேன்."

காயத்திரி மந்திரமானது விஸ்வாமித்திர முனிவரால் கண்டு பிடிக்கப்பட்டது. விஸ்வாமித்திரரே ஸ்ரீராமபிரானுக்கு 'ஆதித்திய ஹிருதயம்' என்னும் மந்திரத்தால் சூரிய வழிபாட்டின் மர்மங்களைத் தொடக்கி வைத்தார்.

விஸ்வாமித்திரர் பிரபஞ்சத்தின் பிறிதொரு தோற்றத்தை உருவாக்குவதற்கு இம் மந்திரமே மூலகர்த்தாவாகக் காணப்பட்டது. இம் மந்திரமானது பகவான் சூரிய நாராயணனின் சூரிய சக்தியை விளித்து ஓதப்பட்டது. காயத்திரி மந்திரத்தின் ஆற்றல் எல்லையற்றது. விதிமுறை தொடர்ச்சியானதாகக் காணப்படுகிறது. அதற்கு அளப்பரிய சக்தி உண்டு. இச் சக்தி ஆச்சரியமானது. ஏனெனில் சூரியனே அதற்குத் தலையாய தெய்வம் எனக் காரணமும் கூறப்பட்டுள்ளது.

காயத்திரி மந்திரமானது மனிதனின் ஆதியான வேதங்களில் காணப்படுகிறது. காயத்திரி மந்திரம் என்றவுடன் முதலில் யார் அந்த காயத்திரி என்ற எண்ணம் எங்கள் உள்ளத்தில் ஊசலாடும். அவள் தான் வேதங்களில் மாதா: அவளை காயத்திரி சந்தாசம் மாதா எனவும் அழைப்பர். இவள் காயத்திரி மந்திரத்தை ஓதுபவர்க்கு மீட்சி அளிக்கின்றாள். எங்கு இந்த மந்திரம் உச்சரிக்கப்படுகின்றதோ அங்கு காயத்திரி உதயமாகின்றாள். அவளுடைய வேறு திருநாமங்களாக காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி, என்ற மூன்று நாமங்கள் குறிப்பிடப்படுகின்றன. சொல், செயல், சிந்தனை ஆகியன தூயனவாக காணப்படுகின்றனவா என்பதை அறிந்தே அவள் நமது உள்ளத்தில் புகுகின்றாள் என்பதினை" மனம், வாக்கு, காயத்தால் தூய்மையும் இசையும் உள்ளவரில் காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி, உறைவார்கள் " எனும் கூற்றிலிருந்து நாமறியலாம்.

"யாரை விளித்து காயத்திரி மந்திரம் ஓதப்படுகின்றது" என்ற வினாவுக்குப் பதிலாக எங்கும் நிறைந்து எவற்றுக்கும் மேலான பரம்பொருளை விளித்து ஓதப்படுவதாக கூறப் பட்டுள்ளது. இப்பரம்பொருளுக்கு "சவிதா" என்னும் திருப்பெயரே கொடுக்கப்பட்டுள்ளது. இப் பெயர் இதனிலிருந்தே இவை யாவும் தோற்றம் பெற்றன என்ற கருத்தை வலியுறுத்து கிறது. காயத்திரி மந்திரம் மனிதனின் மனத் திறனை வளர்க்கவும் கூர்மையான அறிவைப் பெறவும் உதவுகிறது. காயத்திரி மந்திரம் அதனைத் தவறாது ஓதுபவர்களுக்கு நோய் களைத் தீர்த்து வைப்பதுடன் துக்கம், துன்பம் ஆகியவற்றை நீக்குகின்றது. சகல விருப்பங் களையும் நிறைவேற்றுகின்றது. இம் மந்திர மானது நான்கு மகா வாக்கியங்களை அல்லது நான்கு வேதங்களில் பொதிந்துள்ள நான்கு உண்மை வெளியீடுகளை வெளிப்படுத்து கின்றன. அந்த நான்கு மகா வாக்கியங்களாக பிரக்ஞானம் (பிரம்மா), அகம் பிரம் மாஸ்மி (நான் பிரம்மம்), தத்துவமஸி (அதுவே நீ), அய்யம் ஆத்ம பிரம்மம் ( இதுவே பிரம்மன்) என்பவை கூறப்பட்டுள்ளன.

காயத்திரி மந்திரம் ஓதப்பட வேண்டிய நேர காலங்களாக காலை, மத்தியானம், மாலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வேளை களை சந்தியகாலம், (பகலும் இரவும் கூடும் புள்ளி ) காலையும் மாலையும், பகலும் இரவும் என்றும் கூறுவர். இக் காலங்கள் ஆன்மீக சாதனைக்கு உகந்த வேளைகளாக குறிப்பிட் டாலும் இம் மூன்று காலத்தில் தான் ஓத வேண்டும் என்று கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. இதை எந்நேரமும் எல்லா இடங் களிலும் ஓதலாம். ஆனால் இம்மந்திரம் ஓதப் பட்ட பின் மூன்று முறை சாந்தி சொல்லப்பட வேண்டியது அவசியமாகும். அது எங்களுக்குச் சாந்தியை அல்லது மன அமைதியை உடலிற் கும் உள்ளத்திற்கும் அளிப்பதனாலேயே "சாந்தி" என்ற சொற்பிரயோகத்தை உச்சரிக்க வேண்டும். காயத்திரி மந்திரத்தை ஓதுபவர் தன் இருதயம் எந்நேரமும் தூய்மையாக இருப் பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் பின்பற்ற வேண்டிய நித்திய கட்டளை களாக உண்மைபேசுதல், நேர்மையை நீதியை செயற்படுத்தல், எண்ணத்திலும் சொல்லிலும் செயலிலும் தூய்மையையும் இசைவும் கொண் டிருத்தல், எப்பொழுதும் உதவி செய்தல், இறை வனுக்குச் செய்கின்ற அர்ப்பணிப்புக்களைக் கோபங்கொள்ளாமை, மக்கள் சேவையே மகே சன் சேவை என்று பணி புரிதல் போன்றவற் றைக் குறிப்பிடலாம். நாம் காயத்திரி மந்திரத்தை எம் வாழ் நாள் முழுவதும் ஓத வேண்டியது அவசியமாகும். இம் மந்திரத்தை சாதி, மத, பேதம் எதுவுமின்றி அனைவரும் இருதய சுத்தியுடன் ஓதிக்கொள்ளலாம். நாம் இடைவிடாது காயத்திரி மந்திரத்தை ஓது வதன் மூலம் எமக்கு வருகின்ற ஆபத்துக் களிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ள லாம். இதனை ஓதுவதன் மூலம் பிரம்ம பிரகாசம் அதாவது பிரஹ்மனின் பிரபை அல்லது சாந்தி எம்மீது இறங்கி வந்து எமது வாழ்க்கைப் பயணத்தை ஒளிமயமாக்கும். காயத்திரி மந்திரமானது எங்களுக்கு மூன்றா வது கண்ணாக (அஜ்ன சக்கர) அகக் காட்சியை வெளிப்படுத்த அமைந்து காணப்படுகின்றது. அந்த அகக் காட்சியினை நாங்கள் உருவாக்கிக் கொள்ளுவதன் மூலம் பிரம்மனை தெரியக் கூடிய நிலையை உருவாக்கித் தருகின்றது.

காயத்திரி மந்திரமானது இம்மையிலும் மறுமையிலும் மங்களத்தையும் நன்மையை யும் நல்குகின்ற அரிய பொக்கிஷமாக விளங்கு வதனால் அம் மந்திரத்தை நாமும் தேடிப் பெற்று அதனை வாழ்வில் நித்தியமும் ஓதி சகல சௌபாக்கியங்களையும் பெற்று நல்லதொரு மனிதனாக இப்பூவுலகில் வாழ்ந்து சகலருக்கும் வழிகாட்டியாக திகழ்வோமாக.

**நற்குணம் அகிலன்**
*தமிழ் நெறி*

## தமிழ் நெறி



(இ - வ) இருப்போர் :- வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை(அதிபர்), செல்வி விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் (வகுப்பு விரிவுரையாளர்)

(இ - வ) 1 ஆம் நிலை :- ஆ.டேவிற்ரென், திருமதி. சு. சிவபூசணி, இ. நந்தினி, க. சத்தியகலா, சு. ஜெயசுபாஜினி, இ.சகுந்தலை, ஒ.ச. துஸ்யந்தி, பொ. காண்டீபன் (இ - வ) 2 ஆம் நிலை :- ந. அகிலன், ந. சிறீதரன், க. செல்வரட்ணம், செ. மோகநாதன், சு. சுதேஸ், கு. ஜெயந்தன், மு. சதீஸ்

# ஆசிரியரின் வகிபாக மாற்றமும் பெற்றோரின் அங்கீகாரமும்

உயிர்த்துடிப்பான நற்பண்புகள் கொண்ட சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு கல்வி முக்கியமானதாகும். உலகிலே நடைபெறுகின்ற மனித செயற்பாடுகளில் முதன்மையானது கற்றலாகும். கற்கத் தூண்டுவதற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் கற்பிப்போராவார். கற்பிக்கும் கலை மிகவும் புனிதமானதாகும். ஆரம்ப காலத்தில் குரு சீடக் கல்வி முறை காணப்பட்டது. ஆனால் இன்று ஆசிரியரின் வகிபாகம் பல்வேறு கோணங்களில் மாற்றமடைந்து வருகின்றது. ஆரம்பக் காலத்தில் விரிவுரை ரீதியான கல்விமுறை காணப்பட்டது. ஆனால் இன்று கற்றல் உயிர்ப்பான செயற்பாடாகவும் ஆசிரியர் மாணவர் உறவிலிருந்தே ஊற்றெடுப்பதாகக் கூறப்படுகின்றது.

கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுகையில் ஆற்றல்கள், காலம், தேவையான வளம், தர உள்ளீடுகள், குறிக்கோள்கள், கற்றற் பெறுபேறுகள் ஆகியன தொடர்பாகவும் ஆசிரியர் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். நுட்பமுறை செயற்பாடுகளும், உயிர்ப்பான உயிர்த்துடிப்பான கற்றல் முறைகளைப் பயன்படுத்தி மாணவர் குழுக்களுடன் ஆசிரியரும் ஒரு அங்கத்தவராக மாறின், கற்றல்பங்கு பற்றுகை சார்ந்ததாகவும் வினைத்திறனுடையதாகவும் அமையும். இதனால் மாணவர் பகுப்பாய்வுகளில் ஈடுபடுவார். கருத்துக்கள், செயற்பாடுகளை ஆராய்வார். பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பார். கற்றவற்றைப் பிரயோகிப்பார். இதனால் உயிர்ப்பான கற்றல் துரிதமாக நிகழ்த்தப்படுவதுடன் தனியாக ஒவ்வொரு மாணவரிடமும் கற்றல் நிகழும். இதுவே சமூகம் ஆசிரியரிடம் எதிர்பார்க்கும் மிக முக்கிய அம்சமாகும்.

ஆசிரியர் ஒருவர் எப்போதும் ஒருவராக இருப்பதில்லை. அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட வகிபாகங்களை வகிக்கின்றார். ஆசிரியத்துவம் இன்றைய உலகில் மிகவும் சிக்கல் நிறைந்த சவாலான பணியாக மாறி வருகின்றது. அணுக்கதிர்வீச்சை நிகர்த்த வலுவும், கணினியை நிகர்த்த ஞாபகத்திறனும், தந்திரமிக்க ஒரு நாட்டின் தூதுவரை நிகர்த்த இராஜதந்திரமும் ஆசிரியப் பணியை சிறப்புறச் செய்ய முடியும். எனக் கூறப்படுகின்றது. இந்தவகையில் இன்றைய உலகளாவிய ரீதியிலான புதிய நவீன ஆசிரியப் பாத்திரங்களில் முகாமைத்துவப் பாத்திரம் முன்னணியில் உள்ளது. ஆசிரியர் முகாமையாளராக இருந்து சமூக மாற்றத்திற்கான முகவராகப் பாடசாலையிலும், சமூகத்திலும் பின்வரும் முகாமைத்துவப் பாத்திரங்களில் செயற்படுகின்றார். சமூகத்தலைவர் (Social Leader), (குழுப்பொறுப்பாளர் (Group Leader), ஆலோசனைகூறுபவர் (Counselor), இணைப்பாளர் (Coordinator), இணைந்து கருமமாற்றுபவர். (Collaborator), ஊக்குவிப்பாளர் (Motivator), திட்டமிடுபவர் (Planner), சிறப்பறிஞர் (Specialist), வசதிபடுத்துநர் (Facilitator), கணிப்பீட்டாளர் (Assessor), சமரசப்படுத்துபவர் (Negotiator) இவற்றையெல்லாம் விட மாணவர் விரும்பும் ஆசிரியராக மட்டுமல்லாது, பெற்றோர் விரும்பும் ஆசிரியராக இருப்பதே ஆசிரியருக்குப் பெரும் சவாலாகவுள்ளது.

மேலும் தமது பிள்ளைகளின் உடல், உள, ஆன்மீக விருத்தி சம்பந்தமாகக் கலந்துரையாட வரும் பெற்றோருக்கு மரியாதை செலுத்தி அவர்களது தேவைகளைப் பூர்த்தியாக்கல், பிள்ளைகளின் பலவீனங்கள், இயலாமைகள்

தொடர்பாகப் பெற்றோரை அழைத்து அடிக்கடி கலந்துரையாடல் வேண்டும். பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மட்டுமில்லாது அவர்களின் உடல், உளக் குறைபாடுகளையும் அவற்றைத் தீர்க்கும் நடவடிக்கைகளையும் பெற்றோருடன் உரையாடித் தீர்வு காண்பதுடன் புதிய கல்வி கணிப்பீட்டு அம்சங்களில் மாற்றங்கள் கல்வி அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்வுகளையும், பெற்றோருக்கு ஊட்டும் சிறந்த உயிர்த்துடிப்பான தொடர்பைப் பெற்றோருடன் ஆசிரியர் வைத்திருக்க வேண்டும். இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றி ஒழுகும் எந்த ஒரு ஆசிரியரும் நல்ல வாண்மைத்துவமுள்ள சமூகத்தில் மாணவர் விரும்புகின்றவராகவும், பெற்றோரால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியராகவும் மிளிருவார் என்பது திண்ணம்.

**தர்ஷினி சுதாகரன்**
ஆரம்பக்கல்வி - D

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

* ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பாடசாலைக்கு குறைந்தது 3 ஊட்டப் பாடசாலைகள் (ஆரம்பப் பாடசாலைகள்) இருக்கும். இதன்படி 5000 ஊட்டப் பாடசாலை கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

* பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் PSI எனப்படுவது பாடசாலையில் இருந்து வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்காக பாடசாலை ஆசிரியர்களும் பாடசாலை சம்பந்தமான வேறு அமைப்புக்களும் இணைந்து செயற்படுத்தும் ஒரு கூட்டு முயற்சி ஆகும். இத்திட்டத்தின் கீழ் பாடசாலையின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் கணிசமான பொறுப்பு பாடசாலை அபிவிருத்திக் குழுவை (SDS) சார்ந்தது ஆகும்.

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

# மாறும் உலகில் ஆசிரிய வாண்மை

உலகில் பத்தாண்டுக்கொருமுறை பல்வேறு புதிய கருத்துக்கள், பரிமாணங்கள் ஏற்படுவதனைக் காண்கின்றோம். இதனால் கல்வித்துறையிலும் இம் மாற்றங்கள் பெரும் தாக்கங்களைக் கொடுக்கின்றன. இதனாலேயே கல்விச் செயற்பாடுகளிலும், ஆசிரியரை மையமாகக் கொண்ட கல்வி, சமூகத்தை மையமாகக் கொண்ட கல்வி என மாறுதலுக் குட்பட்டு வளர்ந்துள்ளது. இந்நிலையில் எமது நாட்டின் தேசிய திட்டத்தில் கல்வியின் பங்களிப்பின் தன்மையை அறிந்து அதன் அடிப்படையில் கல்வித்திட்டங்களை வகுத்து அரசு செயற்படுகின்றது. இவ்வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட புகழ்மிக்க திட்டமே கலாநிதி C.W.W. கன்னங்கரா அவர்களால் **1945** இல் ஏற்பாடு செய்யப்பட்ட இலவசக் கல்வித்திட்டமாகும்.

இதைப் போல் பல்வேறு கல்வித் திட்டங்கள் செயற்பாட்டுக்கு வந்தமை எல்லோரும் அறிந்ததே. எனினும் இலங்கை யிற் கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப் படும் பொழுது, அரசியலாளர்கள் அதிகாரிகள் மட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்படும் வேளை வகுப்பறையில் கல்வியில் ஈடுபட்டி ருக்கும் ஆசிரியர்களின் மத்தியில் பரவலாகக் கருத்துக்களைக் கேட்பது அரிதாக இருப்பதி னாலோ என்னவோ எமது நாட்டின் கல்வித் திட்டங்கள் பூரண வெற்றியை அளிப்ப தில்லை. செய்யும் தொழிலின் வாண்மையை நன்கறிந்து செயற்படும் மருத்துவத்துறை, சட்டத்துறை, பொறியியற்துறை, கணக் காய்வுத்துறை போன்று ஆசிரியவாண்மைத் துறை வளர்ச்சியடைந்ததாக இல்லை என்றே கருதப்படுகின்றது.

ஆசிரிய வாண்மை என்பது மிக முக்கியமானது ஆசிரிய பண்புகள் என்று நாம் கருதும் பொழுது, சில முக்கிய அம்சங்கள் நமது மனதில் தோன்றும். கிராமங்களில் பல ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் ஒருவரை, பிறிதொருவர் "இவர் ஓர் ஆசிரியர்" என்று அறிமுகம் செய்யாமல் நாமாகக் கண்டு கொள்ளலாம். அவர்களின் பேச்சிலும், நடத்தையிலும் பண்பிலும் இவற்றைக் காணலாம். இன்றும் சில இடங் களில் இதைக் காணலாம். இவ்விதமான ஆசிரியர்கள் பெரியதொரு பொறுப்பு தம்மிடம் விடப்பட்டுள்ளது. என்றும் தம்மிடம் பயிலும் மாணவர்கள் தமது சொந்தப் பிள்ளைகளே என்றும்; சதா சிந்திப்பவர்களாகவே காணப் படுவர். இதனாலேயே "ஆசிரியத்தொழில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் தொழில்" எனக் கருதப்பட்டது.

வாண்மை என்பது குறித்த துறை தொடர்பான சிறப்பான அறிவையும், சுதந்திர மான அறிவையும், சுதந்திரமாகச் செயற்படும் தன்மையையும் பொறுப்பேற்கும் திறனையும் கொண்டதாக விளங்கும். இந்த வகையில் ஆசிரிய வாண்மையில் இங்கு குறிப்பிட்ட மூன்று அம்சங்களும் முக்கியத்துவம் பெறு கின்றன. வாண்மையாளர் எனப்படுவோர் தாம் மேற்கொள்ளும் தொழிற்துறையில் சிறப் புத் தேர்ச்சியைப் பெற்றிருத்தலும் அவசிய மாகும். சிறப்பான அறிவையும் தேர்ச்சியையும் கொண்டிராத துறைகள் வாண்மைத் துறைக ளாகக் கொள்ளப்படுவதில்லை. சாதாரண மக்களின் இயலுமைக்கு அப்பாற்பட்ட துறைகளே வாண்மைத் துறைகளாகக் கொள் ளப்படுகின்றன.

அறிவு, தன்னியக்கத்தொழிற்பாடு, பொறுப்புணர்வு, என்பவை வாண்மையின் அடிப்படைகளாகும். தன்னியக்கமாக முடிவுகளை மேற்கொள்ளும்போது அத்தகைய தீர்மானங்கள் பொறுப்புடன் மேற்கொள்ளப் படல் வேண்டும். என்பதுடன், அதற்கு வகை சொல்ல வேண்டிய பொறுப்பும் வாண்மையாளர்களுக்குண்டு என்பதில் கவனமாகச் செயற்படல் வேண்டும்.

கல்வியானது எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாக அமைவது, கற்போனை எதிர்கால அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் உருவாக்குவதோடு, உலகமயமாதலுக்கு முகம் கொடுக்கும் வகையிற் தயார்ப்படுவதும், சமூக இசைவாக்கத்துக்கு வேண்டிய திறன்களைப் பெற்றுக் கொடுத்தலுமாகும். இப்பணியை நிறைவு செய்யும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இவ்வகைச் சவால்களை எதிர் கொள்வதற்கு ஆசிரியர்கள் போதியளவு தேர்ச்சியையும் திறன்களையும் பெற்றிருத்தல் அவசியமாகும். இதற்குப் பொருத்தமான வகையில் ஆசிரிய வாண்மை தொடர்பான செயற்றிட்டங்கள் அமைந்திருத்தல் அவசியமாகும்.

ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் தொடர்பான மனப்பாங்குகளை விருத்தி செய்யும் முகவர்களாவர். ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் நேரானதும் எதிரானதுமான மனப்பாங்குகளை விருத்தி செய்யமுடியும். ஆசிரியர்கள், மாணவர்களிடையே கற்றல் தொடர்பான ஆர்வத்தையும் சுதந்திர உணர்வுகளையும் உயர்சிந்தனையாற்றல்களையும் விருத்தி செய்ய முடியும். முறைசார் கல்வியை நடைமுறைப்படுத்துபவர்கள் ஆசிரியர்களாவர். எனவே முன்குறிப்பிடப்பட்ட தேர்ச்சிகளை மாணவர்கள் மத்தியில் உருவாக்க ஆசிரிய வாண்மையில் உரிய பங்கு கொடுக்கப்பட வேண்டும் மாறும் உலகிற் பணியாற்றும் ஆசிரியர்கள் சர்வதேச வர்த்தமானங்களுக்கு உரியவாறு தமது வாண்மையை விருத்தி செய்தல் முக்கியமானதாகும். எனவே தான் இன்றைய கல்வி அமைப்பில் தொடருறு கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் தாம் பெற்ற கடந்த கால அனுபவங்கள், சமகாலத் தேவைக்கு ஈடுகொடுக்க முடியாது என்பது அறியப்பட்டுள்ளது. ஏனெனில் உலகம் வெகு வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. எனவே ஆசிரியர்கள் தம்மைப் புத்தாக்கம் செய்து கொள்ளல் தவிர்க்க முடியாததாகும்.

ஆசிரிய வாண்மையில் வெற்றியானது ஆசிரியர்களின் நியமனம், அவர்களுக்கான பயிற்சிமுறைமை ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சமூக அந்தஸ்து, பாடசாலை நிலைமை, பெற்றோரினதும் நலன் விரும்பிகளினதும் ஆசிரியர் கல்வி தொடர்பான மனப்பாங்கு ஆகியவற்றில் தங்கியுள்ளது. அத்துடன் ஆசிரியர்கள் தொழிலைச் செய்வதற்கான அறிவுடன் கூடிய திறனும் அவர்களின் நடத்தைப் பண்புகளும், தொழில் தொடர்பான எதிர் பார்ப்பும், ஊக்குவிப்புக்களும் ஆசிரிய வாண்மைக்குப் பங்களிப்புச் செய்கின்றன. இவற்றை ஆசிரியர்கள் உரியவாறு கொண்டிருக்கும் போதே மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் திறன்களை விருத்தி செய்ய முடியும்.

கடந்த காலங்களில் பாடசாலைக்கு வெளியே வறுமை, சண்டைகள், போதை வஸ்த்துத் தொடர்பான விடயங்கள் சமூகத்தில் இடம்பெற்றன. ஆனால் இவ் விடயங்களை சமூகத்தின் ஏனைய நிறுவனங்களால் பரிபாலிக்க முடியாத போது அவையும் ஆசிரியர்களால் கையாள வேண்டியுள்ளது. ஆசிரியர்கள் பழமைக்கும், புதுமைக்கும், எண்ணத்துக்கும், மனப்பாங்குக்கும் இடையிலான சமத்துவத்தைப் பேணவேண்டியுள்ளனர்.

காலத்துக்குக் காலம் ஆசிரியர்களின் பங்கும், பணியும், வேறுபட்டு வருவதை

அவதானிக்கின்றோம். ஆசிரியர் பணி என்பது, காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றம் அடைந்து செல்வதாகும். இதனால் ஆசிரியப் பணியின் வரைவிலக்கணமும் மீளமைக்கப்படுதல் தவிர்க்க முடியாததாகின்றது. எனவே ஆசிரியர் வாண்மை தொடர்பான புதிய கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு மாணவர்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு ஆசிரிய வாண்மை மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

மாற்றத்துக்குள்ளாகும் சமூகத்தின் தேவையை நிறைவு செய்வதற்கு கல்வி மறுசீரமைப்புக்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. அவ்வாறான புதிய செயற்பாடுகளில் உயரிய பயனைப் பெறுவதற்கு புதிய அறிவு, புதிய திறன்கள், நவீன தொழில்வாண்மை உத்திகளை ஆசிரியர்கள் உள்வாங்க வேண்டியவர்களாக உள்ளனர். புதிய கல்வி மறுசீரமைப்பில் கலைத்திட்டம், பாடசாலை மறுசீரமைப்போடு ஆசிரியர்களின் தொழில் வாண்மை தொடர்பான நடவடிக்கைகளிலும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. கல்வி மறுசீரமைப்பைப் பயனுள்ள வகையில் சமூகத்தில் பிரதிபலிக்க வேண்டுமாயின் ஆசிரிய வாண்மை விருத்தி இன்றியமையாததொன்றாகும்.

**சிவானந்தம் சிவதாஸ்**
இந்துசமய நெறி

* பாடசாலை மேம்பாட்டுத்திட்டத்தின் பங்குதாரர்கள்
  * மாணவர்கள்
  * ஆசிரியர்கள்
  * அதிபர்
  * பெற்றோர்
  * பழைய மாணவர்கள்
  * சமூகம்
  * கல்வி அலுவலக பிரதிநிதிகள்

* பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்கள்
  * பாடசாலை மீதான சமூகத்தின் உரிமை உணர்வை ஏற்படுத்தல்
  * தீர்மானம் மேற்கொள்வதில் அதிகளவான ஈடுபாடு
  * சிறந்த தரமான கல்வியை வழங்கல்
  * மாணவரின் அடைவினை உயர்த்தல்
  * பொதுநிதியைப் பயன்படுத்துவதில் விளைதிறனைக் கூட்டுதல்
  * வினைதிறனுள்ள முகாமைத்துவத்தை ஏற்படுத்துதல்

# தமிழர் வாழ்வில் திருக்குறள் காட்டும் விருந்தோம்பல்

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன்தோன்றிய மூத்த குடி"

வடக்கே வேங்கடம் முதல் தெற்கே கன்னியா ... குமரிவரையும் கிழக்கும் மேற்கும் கடலை எல்லையாகக் கொண்டு விளங்கிய நிலப்பரப்பினை நாடாகக் கொண்டு வாழ்ந்த தமிழர்கள் நாற்படைகள், கலம்; வானவூர்தி ஆதிக்கம்; அறம், பொருள், இன்பம் கல்வி கேள்வி கலை என சகல துறைகளிலும் சிறந்து விளங்கினர். இவர்கள் வாழ்விலே பண்பாடு, கலாசாரம், சீர்பெற்று விளங்கிற்று. வந்தோரை வரவேற்று வாழவைக்கும் நாடாம் தமிழ் நாட்டிலே பண்பாட்டின் சிகரமாய் விளங்கிய இவ் வாழ்விலே விருந்தோம்பல் பண்பு சிறப்புற்று விளங்கிற்று. உலகப் பொது மறையாம் திருக்குறள் இல்வாழ்வில் விருந்தோம்பல் பண்பினை எத்திறம் விளக்கிற்று என்று ஆராய்ந்து நோக்குவோம்.

முதற்கண் பண்பாடு என்றால் என்ன? என்பதனை நோக்கினால் "பண்பட்ட வாழ்வே பண்பாடு" ஆகும். அதாவது குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்க, வழக்கங்கள், நம்பிக்கைகள், கலைகள், சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகள், மக்களின் சிந்தனை வெளிப்பாடுகள் என்பவற்றைக் குறிப்பதாகும். ஆதியிலே வாழ்ந்த மனிதன் வேட்டையாடி மனம் போன போக்கிலே வாழ்ந்து வந்தான். அவன் அறிவுரை தன் வாழ்க் கையினை செம்மைப்படுத்தி இப்படித்தான் வாழ வேண்டும் இவ்வாறுதான் வாழ வேண்டும் என்கின்ற நெறியினை வகுத்து செம்மையான வாழ்க்கையை வாழத் தொடங்கினான்.

இதுவே பண்பட்ட வாழ்வாகும். அதாவது மண்ணை உழுது பண்படுத்தி பயிர்ச் செய்கையினை மேற்கொண்டாலே பயிர் நன்கு வளரும் அது போலவே மனிதனும் தன் வாழ்வினை வளப்படுத்தி ஒரு வளமான செம்மையான வாழ்க்கையை அமைத்து வாழ்ந்தால் அதுவே பணிவாகும்.

தமிழர் பண்பாட்டின் சிகரமாக விளங் குவது விருந்தோம்பலேயாகும். இது தமிழர்கள் இல் வாழ்விலே எவ்வாறு விளங்கிற்று என்ப தனை "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத்தறித்த குறள்" என ஔவை யாரால் புகழ்ந்துரைக்கப் பெற்ற உலகப் பொது மறையிலே காட்டுமாற்றினை நோக்குவோ மாயின்

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (அதி 8 கு.41)

அதாவது இல்லற வாழ்க்கையிலே இருப்பவர் அறத்தினை உடைய மூவரையும் காத்து வாழவேண்டும். அத்திறம் வாழ்பவன் எவ்வாறு இருக்க வேண்டுமாயின் அன்புடைய வர்களாக இருக்க வேண்டும். உலகத்தோடு ஒட்டவைப்பது அன்பு; வையம் செழிப்புற்று விளங்குவதற்கு மூல காரணமாக விளங்கு வதும் அன்பு. வாழ்வினை செவ்வனவே இயக்குவதும் அன்பு ஒன்றேயாகும். இவ்வன்பு உள்ளத்திலே இல்லாதவன் உயிரற்ற சடம் போன்ற நடமாடுகின்ற எலும்புக்கூடாகவே விளங்குவான் என அன்பின் சிறப்பினை தெட்டத் தெளிவாக்குகின்றார். திருவள்ளுவர்.

"அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

(அதிர் 8 கு.80)

தன்னலமில்லாமல் தனக்காகவும் பிறர்க்காகவும் வாழும் மனிதனை உருவாக்

குவது அன்பேயாகும். அத்திறமுடைய அன்பு எவ்வாறு ஒரு மனிதனை அடைகின்றது. இல்லறமாகிய குடும்ப வாழ்க்கையிலே மனைவி பிள்ளைகள் மீது கொண்ட பாசப் பிணைப்பு படிப் படியாக மாறி வையகத்தில் வாழ்வோர் மீது அன்பாகப் பரிமாணிக் கின்றது. அதிகார வைப்பு முறையும் இதனைத் தெட்டத் தெளிவாக்கி நிற்கின்றது.

"இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து
ஓம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"
(அதி - 9 குறள் -81)

மனைவி மக்களுடன் இல்லறத்திலே இருந்து கொண்டு பொருட்களைப் பேணி வாழ்க்கை நடாத்துகின்றமையானது நம்மை நாடி வருகின்ற விருந்தினரைப் பேணி நல்ல முறையிலே அவர்களுக்கு உபகாரம் செய்து விருந்தளித்து வாழ்க்கை நடாத்துவதற்காக வேயாகும். இவ்வாறு கிடைக்கின்ற உண வினைப்பகிர்ந்து கொடுத்து தானும் உண்கின்ற மையை அறங்கள் யாவற்றிலும் சிறப்புப் பொருந்திய அறமாக விளங்குகின்றது.

"பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"
(அதி 33 குறள் 322)

நம்மை நாடி வருகின்ற விருந்தினர் களுக்கு எப்படி விருந்தளிப்பது என்பதினை ஆராயுங்கள் வந்த விருந்தினர்கள் வெளியிலே இருக்கும் போது தேவர்களும், அசுரர்களும் பெறுவதற்குத் துடித்த சாவா மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் தனியாகத் தாம் உண்ணல் தகாது. விருந்தினர்க்கும் பகிர்ந்து கொடுத்தே புசிக்க வேண்டும். என்று கூறு கின்றார்

"விருந்து புறத்ததாற் தான் உண்டல் சாவா
மருந்து எனினும் வேண்டற்பாற் றன்று"
(அதி - 9 குறள். 82)

இவ்விதமாக தம்மை நாடி விருந்தின ராக வருகின்றவர்களை வரவேற்று உபசரித்து விருந்தளிப்பவர்களுக்கு ஒரு கெடுதியும் துன்ப ங்களும் வந்து வருத்தமாட்டாது. அதாவது தன்னிடமுள்ள உணவினைப் பிறருக்குக் கொடுத்து பகிர்ந்துண்ணுகின்றவர்களைப் பசி என்கின்ற பெரும் நோய் வந்து வருத்த மாட்டாது.

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீர்பிணி தீண்டல் அரிது" (அதி - 23 கு.227)

இவ்வாறு விருந்தினராக வந்தவர் களுக்கு கொடுக்கின்றதைப் பார்த்து இவ்வாறு பொருட்களைப் பிறர்க்குக் கொடுக்கின்றானே என்று பொறாமைப்படுகின்றவனுடைய உற வினர்கள் சுற்றங்கள் மானம் காக்கும். ஆடை யின்றியும் உண்பதற்கு உணவின்றியும் சீரழிந்து போவார்கள் என்கின்றார்.

"அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகம்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்" (அதி. 9 கு.84)

இவ்வாறு விருந்தினர்களை வரவேற்று உபசரித்து இன்மொழி பகர்ந்து விருந்தளிப் பவர். கழனியிலே விதை விதைக்க வேண்டிய தில்லை. அதாவது ஒரு விதை விதைத்தால் அது நூறாகப் பல்கிப் பெருகி பயன் கிடைக்கும். என்றுரைக்கின்றார். "கொடுத்தார்க்குக் குறை வில்லை" என்று எம் முன்னோர்களும் இச் சிறப்பினையே பழமொழியாக எடுத்தியம் பினார்.

தமிழ் வாழ்வில் இல்வாழ்க்கையிலே விருந்தோம்பலின் பண்பினைச் சொல்லுகின்ற வள்ளுவப் பெருந்தகை விருந்தினர்கள் வந்து விட்டார்கள் என்று வந்தோரை வரவேற்று உபசரித்து விருந்தளித்து அனுப்பி வைத்தல் போதுமென்று இல்லாமல் இவர்களை நல்ல முறையில் உபசரித்து விருந்தளித்து வழியனு ப்பி வைத்து விட்டு இன்னும் விருந்தினர்கள் வரமாட்டார்களா? அவர்களை நாம் உபசரி க்க மாட்டோமா? என்கின்ற உள்ளன்போடு உபசரித்து விருந்தோம்புகின்றவர்கள் தேவர் கள் வாழ்கின்ற வானுலகத்தின் நல்ல விருந்தின னாகப் போற்றப்படுவார்கள்.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு (அதி. 9 குற.86)

எல்லையின்றிப் பரந்து விரிந்து செல்கின்ற அன்பின் வழியிலே வந்த விருந்தோம்பலுக்கு எல்லையுண்டா? எவ்வளவு விருந்தோம்பவேண்டும்? இவ்வளவு தான் விருந்தோம்ப வேண்டும் என்கின்ற வரையறை இல்லை. அது விருந்தின் தகுதியெனவே அதாவது விருந்தினர்களுடைய சந்தோச எல்லை எனவேயாகும். இவ்விதம் விருந்தோம்புகின்றவன். விருந்தினர்களின் இன்பத்தினை தன் இன்பமாகக் கொள்கின்ற வகையில் விளங்கவேண்டும் என்று கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

விருந்தோம்பல் பண்பாட்டின் சிறப்புக்களை இதிகாச புராணங்கள், சங்கச் செய்யுள்கள், அறநூல்கள் எனப் பல இலக்கியங்கள் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். குழந்தைகளும் விளங்கிக் கொள்ளும் விதத்திலே குறுந்தொகையில் அதி வீராராம பாண்டியர்

"உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்"

என்று ஔவையார் இயற்றிய கொன்றை வேந்தனில் மருந்து என்றாலும் கொடுத்து உண்ணும்மாறு கூறுகின்றார்.

"மருந்தே ஆயினும் விருந்தோடு உண்"

என்று குழந்தைகளுக்கு விளக்கி இருக்கக் காண்கின்றோம்.

புறநானூற்றிலே வருகின்ற பாடலில் தமக்குக் கிடைக்கின்ற உணவினைப் பிறருக்கும் கொடுத்து உண்ணும் பண்பினைப் பேணுமாறும் உலகத்தினுடைய பழிக்கு அஞ்சி அறத்தின் வழி ஒழுங்குமாறு கூறப்படுகின்றது.

உண்டா லம்ம இவ்வுலகம்... இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும்... பெரிய புராணத்திலே விருந்தோம்பல் சிறப்பினை எடுத்துக்கூறுகின்றது.

இவ்வாறாக பல இலக்கியங்களில் பல சிறப்புக்கள் உள்ளபோதும் விருந்தோம்பல் பண்புக்கு சிறப்பாக ஒரு அதிகாரமோ கொடுத்து விளக்கிக் கூறியவர் வள்ளுவரே ஆவார்.

தமிழர் பண்பாட்டின் சிகரமாக விளங்குகின்ற இல்வாழ்விலே விருந்தோம்பல் பண்பினை அனைவரும் கடைப்பிடிக்கும் விதத்தில் சிறப்பான உவமைகளைக் கையாண்டு மிகச் சிறப்பாக தெள்ளத் தெளிவாக வள்ளுவர் எடுத்தியம்பி இருப்பது மெச்சுதற்குரியதாகும்.

**தில்லைநாதன் நடனசபை**
*இந்துசமய நெறி*

---

இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் 1989ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி முறை அறிமுகம் செய்யப்பட்டது. 1991 முதல் செயற்பட ஆரம்பித்த இக் கல்லூரி முறையை 1996 முதல் அரசாங்கம் நிறுத்தியது. மீண்டும் 2015 தொடக்கம் தொழில்னுட்பப் பாடத்துறைக்காகச் செயற்படுத்தவுள்ளது.

---

# இந்துசமய நெறி



(இ - வ) **இருப்போர்** :- வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே.கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), அ. பௌநந்தி (வகுப்பு விரிவுரையாளர்),
(இ - வ) **1ஆம் நிலை** :- செல்வி. இ. தாரணி, திருமதி. சி. கலைவாணி, சி. ஜெயசித்தி, செல்வி. ந. சிவரூபி, சி. ஜெ. ஞானச்செல்வி, த. வாசுகி, தே. நிர்மலாராணி,
இ. விக்னேஸ்வரி. கி. கலாசினி, பி.பிறேமலதா, ப. பகீதரன், (இ - வ) **2ஆம் நிலை** :- திருமதி. கீ. தாமரைச்செல்வி, யோ. சிவநந்தினி, ம.பிறேமலதா, ர. கமலாதேவி, ந. தர்சினி,
சு. ஜெயபானு, ஜெ. விஜயகலா, வ. அருணஜோதி, வி. பிரவீனா. (இ - வ) **3ஆம் நிரை** :- திரு. தி. நடனசபை, றெ. தேவசீலன்,
கா. சிவரஞ்சன், த. வித்தியானந்தன், சி. சிவதாஸ், சி. வதனராஜா, வி. பாலகுமார், பா. உமாமகேஸ்வரக்குருக்கள்.

# ஆசிரியர் தினம்

குரு என்பவர் மாசற்றவர்; குற்றங்களைக் களைபவர்; அறிவை வழங்குபவர், குருட்டை விலக்கி ஞான ஒளியைப் பாய்ச்சுபவர்; ஏணியென்றும், தோணியென்றும், எழுத்தறி வித்தவன் இறைவன் என்றும் போற்றப்படு பவர். பண்டைய காலங்களில் ஆசிரியர் அல்லது குரு என்பவர் எவ்வாறு வாழ்ந்தார் என்பதை நாம் கற்றறிந்துள்ளோம். எவ்வாறெனில் குரு இருக்கும் இடம் தேடி மாணவர்கள் சென்று, அவருக்குப் பணிவிடை செய்து, அவரது சேவகனாகி, எல்லோருக்கும் கல்வி என்று இல்லாது உயர் குலத்தவரே கல்வி கற்க முடியும் என்ற கட்டாயப்படுத்தலோடு மிகுந்த மரியாதையும், மதிப்பும் கொடுத்து கல்வி ஒளியைப் பெற்றார்கள், நல்ல நிலைக்கும் வந்தார்கள். குருசீட முறையிலும் சரி, திண்ணைப் பள்ளியிலும் சரி நன்றாகவே கல்வி கற்பிக்கப்பட்டது. வளர்ந்த சமூகமும், நாகரீகமும், பண்பாடும் நன்றாகவே காணப் பட்டன. பொருளாதார வசதி, வாய்ப்புக்கள் குறைவாக இருந்தாலும், "கடமையைச்செய் பலனை எதிர்பாராதே" எனும் வாக்கியத்திற்கு அமைய கடமைப் பொறுப்புக்கள் சரியாகவே இடம் பெற்றன. குருவிற்கு மாணவர்கள் கட்டுப்பட்டார்கள் குருவின் சொல்லே தாரக மந்திரம் என்பதற்கிணங்க செயற்பட்டார்கள். வெற்றியும் கண்டார்கள்.

இந்நிலையில் "ஆசிரியர் தினம்" கொண்டாடப்படுவதன் அவசியம் பற்றி நோக்குவோம். ஆசிரியர்கள் கல்விக்காகவும், விருத்திக்காகவும், ஆற்றிவரும் பணியை மெச்சும் நோக்கமாகவும், அவர்களைக் கௌரவிக்கும் வகையிலும் உலக ரீதியான கொண்டாட்டமொன்றை ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு அமைச்சு சிபார்சு செய்ததன் பயனாக **1994-10-05** தொடக்கம் உலக ஆசிரியர் தினம் கொண்டா டப்படத் தொடங்கியது. ஆனால் இன்றைய திகதியில் ஒரே நாளில் எல்லா நாடுகளிலும் கொண்டாடப்படுவதில்லை. ஒக்டோபர் ஆறில் கொண்டாடப்படும் இத்தினமானது வரவேற்கத்தக்கதுதான். மாணவர்கள் ஆசிரி யரைத் தமது ஆசான்களை கௌரவப்படுத்த எடுத்த முக்கிய நிகழ்வு தான் இதுவாகும்.

இந்நிகழ்வு ஆசிரியருக்கும், மாணவருக் கும் தற்காலத்தில் முக்கியமான தொன்றாகும். தற்காலக்கல்வி நிலையினை நோக்கினால் ஆசிரியருக்கு மாணவர்கள் கீழ்ப்படிவோ, ஒழுக்கத்துடன் நடப்பவர்களாகவோ இருப்ப தில்லை. பொருளாதாரம், வசதி, வாய்ப்புக்கள், சூழல் பின்னணிகள், நவீன தொடர்புச் சாதனங்கள் என்று பல்வேறு துறைகள் மூலம் கல்வி பெறப்படுகின்றது. பணம் கொடுத்தால் கல்வி என்ற நிலையில் "எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு" என்பது வரவேற்கப்பட்டாலும் ஆசிரியர் ஒரு மூலையில்தான். அன்றைய கல்வி ஆசிரியர் இல்லாமல் எதுவுமே இல்லை என்றாகியது. இன்று மாணவர் வீட்டுக்குச் சென்று கல்வி கற்பிக்க வேண்டிய நிலை.


வேலைப்பளுக்கள் நிறைவான மத்தியில் வாழ்க்கைச் செலவுகளுக்குப் போதிய பண வசதிகள் இல்லாமல் பெற்றோராய், பொறுப் பாளிகளாய் பெற்றோரைப் பேணும் காவலாளி களாய் மேற்படிப்புப் படிக்கும் மாணவராய் வீட்டிலே கணினி இயந்திரங்களாய் பாட சாலையில் பாடப்பதிவும், பாடப்புத்தகமு மாய், பிரம்பின்றி உள்ளத்திலே இருக்கும் ஆசைகள் சிதைக்கப்பட்ட நிலையிலே ஆசிரியர் கற்பிக்கிறார்.

கல்வி, சேவை என்ற நிலையிலிருந்து வணிகப் பொருளாக மாறிவிட்டது. அறிவைப் போதிக்கும் மனங்களும் மரணப்படுக்கையில் படுக்கும் ஒரு ஜீவனைப் போல். இவ்வளவு நிலையிலும் கற்பிக்கும் ஓர் ஆசிரியரை விட்டா வைத்தது சமூகம்? பருவப் பயிர்கள் போல் பருவ வயதில் தாம் செய்வதைச் செய்து விட்டு பாடசாலையிலும், ஆசிரியரிலும், குற்றம் சுமத்துவது எம் சமூகம். சில வேளை களில் ஆசிரியரும் தவறு விடுகின்றார்.

இவ்வகையில் ஆசிரியர் பல துன்ப துயரங்களோடு தமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களைச் சரிவரச் செய்ய வேண்டும் என்ற தீராத நோக்கோடு தமது பிள்ளைகளை விடத் தம்மிடம் கற்கும் பிள்ளைகள் நல்ல பெறுபேறுகளை அடைய வேண்டும். நல்ல பதவிகளுக்கு வரவேண்டும். நல்ல ஒழுக்க சீலர் களாகவும், விழுமியத்தைப் பேணும் இளைஞர் யுவதிகளாகவும் வந்தால் அவர்களுக்கு பெருமையும், சந்தோசமும் என நினைத்து கத்திக்கத்திக் குடல்நோய், வயிற்றுப்புண் என்பவற்றுக்கும் உள்ளாகின்றார்கள். இதனால் மனதிலும் களைப்பு; மணிப்பையிலும் வெற்றிடம் தான். இவ்வாறான ஆசிரியரை மதிப்பதற்கும், போற்றுவதற்கும் ஒரு நாள் போதாது. இருப்பினும் அவர்களுக்கு விழா எடுப்பதன் அர்த்தத்தைப் புரிந்து செயலாற்ற வேண்டும்.

மேலும் ஆசிரியர் தாயாகி, தாதியாகி, வைத்தியராகி, தோழியாகி, அறிவுச்சுடராகி பல வேடங்கள் புரிந்தே மாணவர்களை வழி நடாத்துகின்றார்கள். இவ்வகையில் அவர் களது சேவையின் மகத்துவத்தையும், தியாக உணர்வினையும் உங்கள் இதயத்தில் எடுத்து உலகில் நற்பிரஜையாக மிளிர மனதில் ஒவ் வொருவரும் நல்ல தீர்மானங்களை எடுத்து நல்லவழியில் நடந்து கொண்டு ஆசிரியர் தினத்தினைக் கொண்டாடுங்கள். இலை களானது தம் வழுவழுப்பையோ; பூக்களானது தமது நறுமணத்தினையோ வேர்களானது தமது வியர்வையினையோ; வெளிக்காட்டுவ தில்லை. அதே போலவே எம்சிறார்கள் கண்ணீர்த்துளியையோ இரத்தத்துளியையோ, சிந்தாது ஆசிரியர் தினத்தைப் போற்றி அதன் வழி நடப்போம். உயர்வான நிலை அடை வோம்.

**மகாலிங்கம் பிரேமலதா**
*இந்துசமய நெறி*



தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

- பாவேந்தர் பாரதிதாசன்

## கிறிஸ்தவ நெறி



(இ - வ) **இருப்போர் :-** வீ. கருணலிங்கம் (உபஅதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), திருமதி ப.ற.யுடெக்சியா பீரீஸ் (வகுப்பு விரிவுரையாளர்)
(இ - வ) **1ஆம் நிலை :-** திருமதி. கு. அன்ரன்ஜெனிற், பு. ஜெயதர்சினி, அ. ஜெ. தேவநாயகம், செல்வி. ஞா.மரியபுஸ்பமலர், மே. அல்மினல் சுரேன், த. சாம்சன்ஜெராட், செல்வி. யோ. ஜெராலின்தனுசியா, கி. பிறின்சன், செல்வி. ஞா. நிர்மலா, ஜெ. யூட்நிரஞ்சன் (இ - வ) **2ஆம் நிலை :-** திருமதி ஜெ. இ. அமலடண்ஸ்ரன் கூஞ்ஞ, ரா. யோகராசா, வ.பி. சாம்பெனற், தி. வினோத், அ. பத்மராஜன், ஜெ. பா. எமில்றாஜ், அ.சு. அன்ரனி, யூ. மனோறஞ்சன், தெ. ஜேன் பிரியதர்சினி, சு. முரளீதரன்
(இ - வ) **3ஆம் நிலை :-** தி. திவாகரன், அ. யஸ்ரீன், யே. தவக்குமார், ஞா. அன்ரன் செல்வராஜ், பா. டிகால், பொ. ஜெகநேசன்

# வள்ளுவர் காட்டும் கல்வி

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

மாணவப் பருவமாகிய இளமைப் பருவத்தில் பெறவேண்டிய ஒழுக்கம், கல்வி என்பன முக்கியமானது. இவ் இளமைப் பருவத்தில் கற்கின்ற விடயங்கள் பசுமரத்து ஆணி போலவும் கருங்கல்லில் செதுக்கிய சிற்பம் போலவும் வாழ்நாள் முழுவதும் நிலைக்கும். மனிதனை மனிதனாக வாழ வைப்பது கல்வியாகும்.

மாணவர்கள் கல்வியையும் ஒழுக்கத்தையும் இரு கண்களாகக் கொள்ள வேண்டும். ஒருவன் உயிரிலும் பார்க்க ஒழுக்கத்தை மேலானதாகப் போற்றிக்கொள்ள வேண்டும். இதனையே பொய்யா மொழிப் புலவர்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்று கூறியுள்ளார். கல்வி அறிவு மாணவர்களுக்குக் கூடுகின்ற போது பணிவு ஏற்பட வேண்டும். அதாவது நெற்கதிரானது முற்றுகின்ற போது அது நிலத்தை நோக்கிச் சரியும். அவ்வாறே மாணவர்களிடையேயும் பணிவு ஏற்படவேண்டும். சாதாரணமாக ஒரு மாணவன் குறைந்தது பதின்மூன்று வருடங்கள் பாடசாலைக்கல்வியைக் கற்கின்றான். அக்காலப் பகுதியிலே பல சக மாணவர்களைச் சந்திக்கின்றான். ஏனைய மாணவர்களுடன் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். கற்பித்த ஆசிரியர்களிடம் குருபக்தி உடையவர்களாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் ஒழுக்கமுடையவர்களாக வாழ்ந்தாலே பிறர் அவர்களைப் போற்றுவார்கள். ஒவ்வொரு மாணவனும் வாழ்க்கையில் ஒழுக்கத்தை உயிரிலும் மேலானதாகப் பேண வேண்டும். கல்வியானது அழிவில்லாதது. எவராலும் அபகரிக்கவோ, அழிக்கவோ முடியாதது. கல்வி கற்ற ஒருவன் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் வைக்கப்படுகின்றான்.

ஒரு நாட்டின் அரசனுக்கு அந்த நாட்டிலேயே சிறப்பு; ஆனால் கற்ற புலவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறுவார்கள். தமிழர்களது பூர்வீகச் சொத்து கல்வி. அதனை ஒவ்வொரு மாணவனும் பாதுகாக்க வேண்டும்.

பாடசாலை வாழ்க்கையிலே மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள் மட்டுமன்றி புறவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்குப் பாடசாலை ஒரு களமாகத் திகழ்கின்றது. விளையாட்டு மன்றங்களின் செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலம் ஒருவனிடையே தலைமைத்துவப் பண்பு ஓங்கி வளர்கின்றது. கல்வி வாழ்க்கை சென்றால் மீண்டும் ஒரு போதும் வராது. எனவே மாணவர்கள் கிடைக்கின்ற இனிய கல்விப் பருவத்தைப் பயனுடைய வகையில் கழிக்க வேண்டும்.

கற்கின்ற கல்வியினை ஏனையவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அப்போது அவனுக்கு மேலும் அறிவு விருத்தியடையும் இதனையே தெய்வப்புலவர்

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்று கூறியுள்ளார்.

வாழ்விலே அழியாத செல்வம் கல்விச் செல்வமாகும். இதனாலேயே...

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை"

எனக் கூறியுள்ளனர். ஒருவனுடைய ஏழேழு பிறப்பிற்கும் தொடருகின்ற பெருமை கல்வியையே சாரும். எனவே இன்றைய மாண வர்கள் நாளைய தலைவர்கள் சமுதாயத்தின் தூண்கள் எதிர்வருகின்ற காலத்தில் சமுதாயம் கல்வியறிவுடையவர்களாகத் திகழ வேண்டும் என மாணவர் சமூகம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

**ஜெனோவா ரகிஸ்வரன்**
*ஆரம்பக்கல்வி* - E

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

* PSI செயற்பாடு ஆனது
  பாடசாலை முகாமைத்துவ அணியையும் SMT
  பாடசாலை அபிவிருத்திக் குழுவையும் SDS சார்ந்திருக்கும்

* இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத் தப்பட்ட ஆண்டு 1945. அறிமுகப்படுத்தியவர் அப்போதைய கல்வி அமைச்சர் கலாநிதி C.W.W. கன்னங்கரா

* இலங்கையில் 06.10.1994இல் இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப் பட்டது. இதனால் அக்டோபர் 6ஆந் திகதி இலங்கையின் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. (சர்வதேச ஆசிரியர் தினம் அக்டோபர் 5)

* இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி முதன் முதலில் 1893ஆம் ஆண்டு மருதானையில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நாடு முழுவதும் 38 தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளன.

* இலங்கை கல்விச் சேவை (SLES) 1985ஆம் ஆண்டிலிருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை(SLEAS) என தரம் உயர்த்தப்பட்டது. இது வகுப்பு 1, வகுப்பு 2- 1, வகுப்பு 2 - 2, வகுப்பு 3 என நான்கு நிலைகளைக் கொண்டுள்ளது. இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை (SLTES) இதே போல சேவைத் தரங்களைக் கொண்டு SLEAS இற்கு சமாந்தரமான சேவையாக உருவாக்கப்பட்டுள்ளது.

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

# கல்வியும் ஆரோக்கிய வாழ்வும்

ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது" என்பது பழமொழி. கல்வியானது எம் நடைமுறையை மாற்றியமைத்துப் பண்படுத்துவதே அதன் சிறப்பு. ஒரு நல்ல சமுதாயத்தில் கல்விமான்களின் பங்கு கணிசமானது எனினும் கல்விமான்களை மட்டுமே கொண்ட சமுதாயம் சிறப்பாக அமையவும் மாட்டாது. கல்வியின் சிறப்பு உணரப்பட்டதன் காரணமாக உலகில் கல்வியறிவற்றோரின் வீதம் மிகமிகக் குறைந்து விட்டது.

நாளை கட்டப்படப் போகும் வளமான சமுதாயத்தின் சிற்பிகள் இன்றைய சிறார்களே. இவர்கள் உருவாக்கப்படும் களங்களாக வீடு, சமுதாயம், கல்விச்சாலைகள், என்பன விளங்குகின்றன. ஸ்தபஸ்விகளாக பெற்றோர், ஆசான்கள், சமூகப்பெரியோர், முதியோர் விளங்குகின்றார்கள். இன்றைய விஞ்ஞான யுகத்திலே இளம் சந்ததியினர் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது. விஞ்ஞானத்தின் வியத்தகு வளர்ச்சி பல்வேறு துறைகளிலும் சிறப்புக்கள் தந்தது மட்டுமல்லாமல் அவற்றிற்கே உரிய எதிர்மறை விளைவுகளையும் விட்டுள்ளது. ஆகவேதான் இன்றைய சந்ததியினரை உருவாக்கும் பெற்றோர், ஆசிரியர், பெரியோர் மிகமிக விழிப்புடன் செயலாற்ற வேண்டும். அரவணைப்புடன் கூடிய கண்காணிப்பு வேண்டும்.

ஒரு ஆற்றல் மிக்க மாணவ சமுதாயத்திடம் சிறந்த கல்வியறிவுடன் சுயசிந்தனை, சவால்களைத் தைரியத்துடன் எதிர்கொள்ளும் திறன், திறனுடன் கையாளும் ஆற்றல், நல்ல தேகாரோக்கியம், என்பன காணப்படல் வேண்டும். வளர்ந்த நாடுகளின் கல்வி முறைகளில் ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள், ஒரு சந்ததியிலிருந்து மறு சந்ததியினருக்கு வழங்கப்படுவது மட்டுமன்றி விழிப்புணர்வு சமூகப் பொறுப்புணர்வு தேவையற்ற கூச்சமின்மை பொருளாதார வளர்ச்சி பற்றிய விழிப்புணர்வு, மனச்சந்தோசம் என்பனவும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. எமது கல்விமுறை அன்று கலாசாரத்தோடு கூடியதாக இருந்துள்ளது. ஆனால் இன்றோ வளர்ச்சியடைந்த நாடுகளின் கல்வி முறைகளை அடிப்படையாகக் கொண்டு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களிடம் இரண்டுக்கும் இடைப்பட்ட குழப்பகரமான கலாசாரம் வளர்ந்து வருகின்றது. கலாசார சீரழிவுக்கும் இட்டுச் செல்கின்றது. இவற்றால் பெற்றோர் பிள்ளைகளை அவதானத்துடன் வழி நடாத்த வேண்டியுள்ளது. உதாரணமாக கைத்தொலைபேசிப் பாவனை, புகைப்படக் கருவிப்பாவனை, கம்பியூட்டர், தொலைத் தொடர்பு உபயோகம், திரைப்படங்கள் ஆகியன எதிர்மறையான வழிகளில் பிள்ளைகளை இட்டுச் செல்லலாம். இதனைப் பெற்றோர் கண்காணிக்கும் அவசியம் வருகின்றது. அன்புடனும் அரவணைப்புடனும் கூடிய கண்காணிப்பு ஆரோக்கியமானது.

இனி மாணவர்களின் ஆரோக்கியத்தைக் கருத்திற் கொண்டால் "ஆரோக்கியம்" என்பது உடல், உள, சமூக ஆன்மீக ஆரோக்கியத்தை உள்ளடக்கியதாகும்.

இவை ஒவ்வொன்றும் எவை? எவ்வாறு விருத்தி செய்யலாம்? என பாடவிதானங்களில் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது. எனினும் சிறு சிறு விடயங்கள் நாளாந்த வாழ்வில் தவறவிடப் படுகின்றன. உடல் ஆரோக்கியத்தில் போஷாக்கான உணவு, நற்சுகாதாரம், சுகாதாரப் பழக்க வழக்கங்கள் போன்றன பங்கேற்கின்றன.

தற்சுகாதாரம் பேணலில் உடற்சுகா தாரத்துடன், தலைமயிர், பிறப்புறுப்புக்கள், நகங்கள், பற்கள், தோல் என்பவற்றின் ஆரோக் கியம் பேணுவது பற்றி அறிவுறுத்தி ஆசிரியர் கள் மூலம் கண்காணிப்பது சிறப்பான பலன் தரும்.

தொற்று நோய்களின் பரவல் முறைகள் பற்றியும், மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும். அசுத்த உணவு நீர்மூலமும் நோய்காவிகள் மூலமும் பரவும் நோய்கள், பற்றியும் அவற்றின் பரவலைத் தடுக்கும் வழிகள் பற்றியும், சிகிச்சை முறைகள் பற்றியும் மாணவர்கள் தெரிந் திருப்பது அவசியமாகும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் பயப்பீதியை ஏற்படுத்தும் இன்னொரு நோயாக டெங்கு காணப்படுகின்றது. நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல், நுளம்பு கடிப்பதைத் தடுத் தல், போன்றவை தொடர்பில் சமூக நிறுவனங் கள் விழிப்புணர்வினை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமான பணியாகக் கருதப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே இலகு வாகவும், கவனயீனம் காரணமாகவும் தவற விடப்படும் இன்னொரு உயிர் கொல்லும் வைரஸ் நோய் நீர் வெறுப்பு நோயாகும். இது வருடாந்தம் தடுப்பூசி ஏற்றப்படாத செல்லப் பிராணிகளான நாய், பூனை, போன்றவையும் மர அணில், கீரி, குரங்கு, தெருநாய், பெருச் சாளி, வெளவால் போன்றவையும் கடிப்பத னால் ஏற்படலாம். உடனடியாக வைத்தியரின் ஆலோசனை பெற்று, தேவைப்படுமிடத்து தடுப்பூசி ஏற்றுவதன் மூலம் அநாவசிய உயிரி ழப்பைத் தடுக்கலாம்.

வீதிவிபத்துக்குள்ளாதல் இன்னோர் பிரச்சனையான அத்தியாயம். மாணவர்களின் ஆராய்ந்தறியும் இயல்பும் சமயத்தில் விரை வான முடிவுகள் எடுக்கும் திறன் விருத்தியடை யாமையும், பயமின்மை, அவதானமின்மை என்பன விபத்துக்களுக்குக் காரணமாகின்றன. வீதி விதிகளை அறிந்து நடைமுறைப்படுத்தல், தெரியாத பொருட்களைக் கையாளுதல், பரீட் சித்தல், போன்றவற்றைத் தவிர்த்தலும் கண் காணிப்பின்றி ஆபத்தான பாதுகாப்பற்ற நீர் நிலைகளில் நீந்துதல், குளித்தலைத் தவிர்த் தலும், கூரியபொருட்கள், நெருப்பு என்ப வற்றுடன் விளையாடுவதைத் தடுத்தலும் விபத் துக்களைத் தடுக்கும் சில எளிய வழி களாகும். இத்துடன் முதலுதவி பற்றி எல்லா மாணவர்களும் அறிந்திருத்தல் சிறந்தது. பெற் றோர்களும் விழிப்புணர்வோடு செயலாற்றல் அவசியம். இவ்வாறாக நாம் கல்வியறிவை பல்வேறு கோணங்களிலும் எம் சுகவாழ்வுக் குப் பிரயோசனப்படுத்துவது சிறப்பு.

**தேவராஜா நிர்மலராணி**
*இந்துசமய நெறி*

---

* தேசியப் பாடசாலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு - 1987

* இலவச பாடசாலைச் சீருடை விநியோகிக்கும் திட்டம் அறிமுகமான ஆண்டு - 1993

---

# வர்த்தக நெறி



**(இ - வ) இருப்போர் :-** சிறிகுமார், சி. சிவகாந்தன், வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்)
பொ. சற்குணநாதன் (வகுப்புவிரிவுரையாளர்) சி. சிவரூபன், ஆ. இராசநிதி. **(இ - வ) 1ம் நிலை :-** திருமதி. அ. றெஜீனா, திருமதி ர. ரதிதேவி, செல்வி. கோ. பத்மினி, ர. யசோத்தா, கு.தேன்மொழி,
ஜெ. தர்ஷினி, செல்வி. செ. செல்வரதி, செல்வி .ச. மேரி அனஸ்ரா, செல்வி செ. கோகிலம், செல்வி சோ. ரேணுகா **(இ - வ) 2ம் நிலை :-** திருமதி . த. நிருஜா, ச.பாரதி, அ. ஜெயசித்திரா, அ. நளாயினி,
க. அஜந்தினி, ஹ. புஷ்பரஞ்சினி, ர. பிரணவ சோபினி, மு. சகாயமேரி, சு. ரேணுகா, சு. சாந்தினி. **(இ - வ) 3ம் நிலை :-** திருமதி ச. பாலகௌரி, ந. நர்த்தனன்,
பூ. பிரகாஷ், பா. கிருஸ்ணரூபன், ச. ராஜ்குமார், பொ. ஆதவன், ஏ. சிறிரங்கன், த. சுபாஸ், திருமதி தூ. சோபனா.

# வாழ்நாள் கல்வியின் திறவுகோலாக ஆரம்பக்கல்வி

கல்வியின் திறவுகோல் ஆரம்பக் கல்வியே. திண்ணைப் பள்ளியிலிருந்து வகுப்பறைக் கல்விக்குள் முகம்கொடுக்கும் மாணவன் கற்பித்தல் செயற்பாட்டின் பரிணாம வளர்ச்சியின் அனுபவங்களுக்குள் பிரவேசிக்கின்றான். தற்கால விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியானது அவனின் கற்றல் தொழிற்பாட்டின் பிரதான பங்களிப்பைச் செய்கின்றது.

இங்கு ஆசிரியரின் வகிபாகம் கற்றலுக்கான புறநிலையைத் தோற்றுவித்து மாணவனின் கற்றல் செயற்பாட்டின் வழிகாட்டியாக அமைவதாகும். தற்போதைய ஆரம்பக் கல்வி முறையான மாணவன் சுயாதீனமாகத் தன் ஆற்றலை வெளிப்படுத்த வழியமைக்கின்றது. பரம்பரை வழிவந்த இயல்பாற்றலை விருத்தி செய்து கொள்ளும் களமாக ஆரம்பக் கல்வி அமைகிறது. ஆரம்பக்கல்வியில் ஒரு மாணவன் ஒலிவடிவங்கள், வரிவடிவங்கள், எண்கோலங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கு ஆளாக்கப்படுகின்றான். இசையின் இனிமையையும், ஒலிகளின் வேறுபாட்டினையும் ஊகித்து உணர்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தினையும் ஆரம்பக் கல்வி அவனுக்கு வழங்குவது மிக அருகியே காணப்படுகிறது. விருப்பத்திற்குரிய விளையாட்டுக்களில் அவனின் ஊகத்தை வளர்த்தெடுக்கும் சாத்தியங்கள் ஆரம்பக் கல்வியில் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆரம்பக்கல்வியில் ஆரம்பமாகும் முழு முயற்சிகள் அவனின் தனிப்பட்ட குறைபாடுகளிலிருந்து அவனை விடுபடவைக்கின்றது. இக்குழு செயற்பாடுகளின் மூலம் விட்டுக் கொடுத்தல், சேர்ந்து ஒற்றுமையாக தொழிற்படல் போன்ற நற்பண்புகள் வளரவும், குறைபாடுகள் விடுபடவும் செயற்படத் தூண்டுகிறது.

இலங்கைக் கல்விப்புலத்தில் ஆரம்பக் கல்வியின் பிறப்பிடம் முன்பள்ளி என்றாகி விட்டது. முன்பள்ளிக்குரிய அனுசரணைகளை அரசாங்கம் வழங்கிய போதும் கற்றலுக்குரிய புறச் சூழ்நிலைகளின் வளம் நலிவுற்றே காணப்படுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் கல்விப் புலன்களைத் தூண்டி விடத்தக்க உபகரணப் பயன்பாடுகள் ஆரம்பக் கல்வியூட்டலில் தனது வலுவான செல்வாக்கைச் செலுத்தி நிற்பதைக் காணலாம். உதாரணமாக இங்கிலாந்தில் முன்பள்ளியை பிளேஸ் கூல் (Play school) என அழைப்பர். இப்பிளே ஸ்கூலில் வயது 5ற்குக் குறைவான மாணவர்களே காணப்படுவர். அவர்கள் படம் வரைதல், வர்ணம், தீட்டுதல், விருப்பத்துக்குரிய விளையாட்டுக்களை விளையாடுதல் ஆகிய கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுவர். பிளே ஸ்கூலில் இருந்து வெளியேறும் மாணவர்கள் கனிஷ்ட பாடசாலைக்குச் செல்வர். அவர்கள் அங்கு எழுத்து, வாசிப்பு, கணிதம் ஆகிய கற்றற் செயற்பாட்டிற்கு முகம் கொடுப்பர். கனிஷ்ட பாடசாலையை நிறைவு செய்வோர் (Middle School) இடை நிலைப் பாடசாலை (Senior school) சிரேஷ்ட பாடசாலை தொடர்ந்து பல்கலைக்கழகம் என்பவற்றிற்குச் செல்வர்.

இலங்கையைப் பொறுத்தவரை முன்பள்ளிக்கு விடை கொடுத்த மாணவன் ஆரம்பப் பாடசாலையில் அனுமதிக்கப்படுகின்றான். இங்கு தாய்மொழி இரண்டாம் மொழிகள், கணிதம், சுற்றாடல், பொது அறிவு ஆகிய பாடங்களுடன் பாடவிதானத்திற்குப் புறம்பான நிகழ்ச்சி நிரலுக்குள்ளும் உள்வாங்கப் படுகின்றான். இங்கு இவன் தனது அடுத்த கட்டக் கல்விக்காக வழிநடாத்தப்படுகின்

றான். இங்குதான் இவனின் மகிழ்நிலைத் திறனை வெளிப்படுத்தும் முகமாக புலமைப் பரிசில் பரீட்சையையோ அன்றி அதை ஒத்த ஏனைய பரீட்சைகளை எதிர் கொள்கின்றான்.

உலகமயமாக்கல் என்னும் பொழுது நாமும் அதில் ஒரு பங்காளியாக மாறிவிடுகின் றோம். உலக மயமாக்கல் என்னும் எண்ணக் கருவுடன் நம்மை இணைக்கும் பொழுது இன்றைய நவீன விஞ்ஞான தொழில் நுட்பங் களுள் பிரவேசிக்க வேண்டியவர்களாகியுள் ளோம். மேற்குறித்த கல்வி முறைகளுடன் இன்றைய மாணவனுக்கு ஆரம்பக்கல்வி யிலிருந்தே தொலைத் தொடர்பு சாதனங்கள் கணினி, கைபேசி, இன்னோரன்ன, சாதனங் களைப் பற்றி அறிவூட்டல் தவிர்க்க முடியாத தாகி விடுகின்றது. ஆகவே இன்றைய கல்வி யூட்டலில் மேற்குறித்த சாதனங்கள் அவற்றின் பயன்பாடு, பயன்படுத்தும் முறைகள் என்பன வும் ஆரம்பக்கல்வியிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிட்டது. கல்விமான்கள் கல்விக் கொள்கை வகுப்போர் மேற்கூறப்பட்ட நவீன சாதனங்கள், சார்பான அறிவூட்டலையும் பாடவிதானத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பப் பாடசாலைகளின் வகிபாகம் பல்கலைக்கழகங்களை விட மாணவனுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு போராட்டக்களமாக அமைந்து விடுகின்றது. இங்கு ஊட்டப்படும் கல்விப் புலமை இவனின் வாழ்நாட் கல்வியின் திறவுகோலாக அமைய இடமளிக்கிறது. ஒருங்கிணைந்த பாடநெறிகளினூடாக இம் மாணவனின் கல்வித் திறனுக்கு ஊக்கமளிக்கப் படுகின்றது. இங்கு மாணவர்களின் திறன்கள் போட்டிகளைச் சந்திக்கின்றன.

மீத்திறன் மாணவன் இலகுவாகக் கையாளும் ஒரு கற்றல் முயற்சியை சராசரி மாணவன் கற்று முயற்சிப்பட்டே அடைகின்றான். சராசரி மாணவனின் அடைவுமட்டம் சிறப்பிடத் தைப் பெற வேண்டுமாயின் ஆசிரியர்களின் பங்களிப்பு ஆதீத கருசனையுடன் அமைய வேண்டும் சராசரி மாணவனும் முயற்சியின் மூலம் மீத்திறன் மாணவனுக்கீடாகத் தொழிற் படும் திறன் உடையவனே.

ஆரம்பப் பாடசாலைகள் மீத்திறன் மாணவர்களில் தங்கியிருக்காது. சராசரி மாண வர்களின் மேம்பாட்டில் தமது கடமையைக் கூர்மையுடன் நிறைவேற்றக் கடமைப்பட்டுள் ளனர். பரீட்சை மாதிரிகளுடன் நின்று விடாது பாடத்திட்டத்தை நிறைவு செய்து ஆரம்பக் கல்வி மாணவனை இடைநிலைக் கல்வி தகுதியுடையவனாக மாற்றும் கடமையும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிற் பாற்பட்டதே. இரண்டாம் மொழிகள் விடயத்திலும் மாண வர்களைத் தயார் செய்து அனுப்பும் கடமை யும் ஆரம்பப் பாடசாலைகளுக்கே உரித்துடை யது எனலாம்.

ஆரம்பக்கல்வியின் குறிகோள் ஒவ்வொரு குழந்தையும் சமுதாயத்துக்குப் பயனுள்ள பொறுப்புள்ள குடிமகனாக பயிற்சியளித் தலாகும். ஒரு பிள்ளைக்கு முறைசார் அமைப் பில் கல்வி வழங்கும் முதற்கட்டமே ஆரம்பக் கல்வி ஆரம்பப் பாடசாலை மாணவர்களை கற்றல் சூழலுக்குள் கொண்டு வருகின்றது. பிள்ளை மகிழ்ச்சியுடனும் சுதந்திரமாக உற்று நோக்கி ஆராய்ந்து இரசித்து சிந்தித்து ஆக்கித் தீர்வு கண்டு கற்கும் சூழ்நிலை நிறைந்தது ஆரம்பப் பாடசாலையாகும். பிள்ளையின் பல திறன்களும் சமனாக வளரச் செய்வதில் ஆரம்ப்க் கல்வி முக்கிய இடம் பெறுகிறது. பிள்ளைகளின் பலம் பலவீனங்களையும் சிறப்பு ஆற்றலையும் இனங்கண்டு குறித்த தேர்ச்சி களை அடையச் செய்வதற்கு ஆரம்பப் பாட சாலை கணிப்பீட்டு முறை ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது

பொதுவாக ஆரம்பக்கல்வி குடும்பக் கல்வி முறையில் பல பரிமாணங்களில் பிள்ளை பெற்ற கல்வியை முறைசார் அமைப்பில் குறித்துநிற்கும் சமநிலைக் கல்வித்திட்டத்தினூடாக பிள்ளைகளை மையப்படுத்தி நன்கு திட்டமிட்டு பிள்ளையின் தேவையை உணர்ந்து கற்றல் சூழலுக்குள் உட்படுத்தி கல்வியைப் புகட்டும் திறவு கோலாக அமைகிறது.

ஆரம்பக்கல்வி பற்றிய சிந்தனையாளர், கூறும் கருத்தை அவதானித்தால் (கொமினியஸ்) J.A comenius) குறிப்பிடுவது சகலரும் கல்வி கற்க வேண்டும். சமயம் கட்டாயமாக இடம் பெற வேண்டும். தாய் மொழி மூலம் கற்பிக்க வேண்டும். படங்களுடன் கூடிய பாடப்புத்தகம், சொற்களுக்குப் பொருட்கள் உபகரணங்களுடன் கற்பித்தல் புலக்காட்சி மூலம் பெறும் அனுபவங்கள் அடிப்படையானவை அடுத்து ரூசோ என்ற கல்விச் சிந்தனையாளரது இயற்கை வாதம் மூலம் மன வெழுச்சி காண்பது (Emotion) மனிதனது உண்மை இயல்பின் சிறந்த வெளிப்பாடாகும். குழந்தையிடம் தனிப்பட்ட தேவைகள் உள்ளன. என்பதை குறிப்பிட்ட பிள்ளைகளின் தேவைகளை அறிந்து சுயமாக செயற்பாடுகள் செய்து கற்றல் (Learing by doing) உற்று நோக்கல், அனுபவங்களைப் பெறுதல் என்பவற்றுக் கூடாகவே கல்வி பெறவேண்டும். என கூறுகிறது. குழந்தைகளிடம் காணப்படும் இயல்பான ஆற்றல் களைத் தேர்ந்தெடுத்து கலந்துரையாடி கற்பிக்க வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. அடுத்து புரோமாவின் கல்விச் சிந்தனையாளர் பிள்ளையின் திறன்களை வளர்த்திடும் நோக்கில் ஆக்கம், அழகியல், விளையாட்டுக்கள் மூலம் இயற்கைத் திறன் களை வளர்த்தார். ஜோன் ரூப்ஜி (John Dewey) குழந்தை மகிழ்சியாக வாழும் இடமாக அமைய வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இவர் பிள்ளையை மையமாகக் கொண்ட கல்வியை அறிமுகப்படுத்தியவர். பிளோட்டோ என்ற கல்வித் தத்துவவியலாளர் கல்விமூலம் பூரண ஒழுக்கம் நிறைந்த நபர்களை உருவாக்க வேண்டும். என வாழ்நாள் கல்வியை அறிமுகம் செய்தார். மகாத்மா காந்தி அடிகள், கல்வியானது உடல், நுண்மதி, ஆன்மீகப் பயிற்சி அடிப்படையில் அமைய வேண்டும் என்கிறார்.

இன்றைய ஆரம்பக்கல்வி மாணவர்களை மையமாகக் கொண்டு ஆசிரியர்களின் வழிகாட்டலில் அறிவுள்ள வளமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஆரம்பக் கல்வி ஒரு திறவுகோலாக அமைகிறது. என்றால் மிகையாகாது.

**புனிதநாயகி கோபாலகிருஷ்ணன்**
*ஆரம்பக்கல்வி நெறி - A*

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் அரசின் கட்டுப்பாட்டுள் வந்த ஆண்டு - 1979. (31.01.1979ஆம் திகதிய 28ஆம் இலக்க சுற்று நிருபம்)
பாடசாலை அபிவிருத்திக் குழு அமைக்கப்பட்ட ஆண்டு - 2008.

# பிரம்ம புத்திரர்கள்

செதுக்கப்பட்ட சிற்பிகள்
சிலை வடிக்க
சிலைகளிலே கலைபடைக்க
உயிர்கொடுக்கும்
கலையோடு
புறப்பட்டோம்
கற்பனைகள்
நிறைத்துக்கொண்டோம்
கனவுகள்
சுமந்துகொண்டோம்
இருட்டுக்குப்
பட்டைதீட்டி
நாளைய சூரியன்களை
நாம் படைப்போம்
ஏன் இப்படி என்கின்ற
வீண் பழி போக்கியே
அண்ணாந்து பார்க்கின்ற
ஏணிப்படி ஆகிடுவோம்
நடத்தைகள் சீராகும்
மாற்றங்கள் நேராகும்

ஏற்றம் ஒன்றே இலக்காக
வரிந்து கொண்டோம்
உண்மை நேர்மையும்
நன்மை நோக்கமும்
வாண்மை தீராமல்
ஆற்றுப் படுத்துவோம்
கடமை என்றல்ல
உடமை இதுவன்றோ
மடமை போக்கிடவே
திடமாய் உரமிடுவோம்
திரிகளும்
தூண்டுகோல்களும்
நாமாவோம்
தடம்மாறா ஒளியாகி
வழிகாட்டுவோம்
வாருங்கள் ஒன்றாக
சேருங்கள் நன்றாகும்
பாருங்கள் பயிர்களை
பார் உங்கள் கைகளில்.

**குகதாஸ் ஜெயந்தன்**
*தமிழ் நெறி*

# English Union



**Seated** :- Mr. J. Anton Lurgino (President), Mrs. S. Jeyarajah (Patron), Mr. V. Karunalingam (Vice principal), Mr. V.K.Kanapathipillai (principal) Miss R. Thambimuthu (Patron).Mr.S. Mohanraj ( Secretary )

**Standing** 01(Left to Right) :- Mrs. A.D.M. Angena, Miss S. Kohulam Mrs.T.A Jeyakumary, Mrs. R. Kamalathevi, Mrs. R. Sakunthalagini, P. Cavitha, J.Ganga, Miss.R. Kumutha, Miss. R.Abhyrami, Mrs T. Ananthakilee

**Standing** 02(Left to Right) :- Miss K. Thuvaraka, Mr. R. Selvanathan, T. Subhas, S. Saraththilakan, A.P Dihal( Treasurer), Mr. N. Ahilan, Mr. P. Srishankar, Mrs. S. Sasikala

# LEARNING IS A PLEASURE THAT FOLLOWS ITS OWNER EVERYWHERE

Education is considered to be the most valuable avenue for progress. It is regarded as a wealth that cannot be destroyed by any force. The role of education in the advancement of human civilization cannot be underestimated. Education and educators in this respect operate and control the world.

Unlike material wealth education is acquired by the mind through a psychological process. As a result unlike money and gold it can withstand external pleasure. It is a durable asset. It can be transmitted without much difficulty. What happens when education is transmitted from one person to another? When we teach people we find our understanding of what we teach. For a number of reasons we would not have learnt a topic in the right way. When we impart our knowledge to others we realize that we get more clear knowledge on the topic. When education is given to others it enhances the Knowledge of a giver.

In today's world the boundaries of education have been broadened. Education is not seen as a process that takes place inside schools, universities and other places of academic activities, instead it is treated as a process that every one undergoes as the move a head in their lives.

In this education process teacher plays an important role. A good teacher must have some special qualities such as knowledge, patience, and tolerance. She or he needs to enhance his or her general knowledge on culture, society, the world. and the various arts and sciences of the world. Besides a good teacher must be a person who is open to change. They must Know that the world is ever changing. For that the teacher has to be prepared for life long earning.

**Jegatheeswaran Ganga**
*Primary - D*

---

பாடசாலைகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கலைத் திட்டத்தின் பெயர் - தேர்ச்சிமையக் கலைத்திட்ட மாகும்.

---

# கபடி தோன்றிய வரலாறு

கபடி விளையாட்டின் பிறப்பிடம் இந்தியாவாகும். இங்குதான் இவ்விளை யாட்டு முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கபடி விளையாட்டானது இந்தியாவின் தேசிய விளையாட்டாக அன்றிலிருந்து இன்று வரை காணப்படுகின்றது. இவ் விளையாட் டானது இந்தியாவின் ஒவ்வொரு இடங் களிலும் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப் படுகின்றது. மேற்கிந்தியாவில் "ஹீடுடு" எனவும், கிழக்கு இந்தியாவில் "ஹாடோடோ" எனவும், வடஇந்தியாவில் "கனூன்பாடா" எனவும் அழைக்கப்படுகின்றது.

பண்டைக்கால இலங்கையில் சிங்கள மக்களால் இது "சடுகுடு" என்ற பெயரினாலும் தமிழ் மக்களிடையே "ஒப்பு" என்னும் பெய ராலும் அழைக்கப்பட்டு விளையாடப்படு கின்றது. இவ் ஒப்பு விளையாட்டு தமிழர் பாரம்பரியத்தில் கிராமிய விளையாட்டாகக் கருதப்படுகின்றது. எனினும் இவ் விளையாட்டுக் கென சட்டங்களோ மைதான அமைப்புக்களோ எதுவும் காணப்படவில்லை.

இந்திய உடற்கல்வி சம்மேளனத்தின் தீர்மானத்திற்கமைவாக ஒரே பெயரால் "கபடி" என அழைக்கப்பட்டு "மகாராஜா" மாநிலத்தில் போட்டிகள் நடைபெற்றன. 1923ஆம் ஆண்டு கபடி விளையாட்டு தொடர்பான சட்டங்கள் அமைக்கப்பட்டு விளையாட்டு நெறிப்படுத்தப்பட்டது. அத்தோடு மைதான அளவுத் திட்டமும் உருவாக்கப்பட்டு 1936ஆம் ஆண்டு பேர்லினில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி யில் முதன் முறையாக காட்சிப் போட்டியாக விளையாடப்பட்டது. 1950ஆம் ஆண்டு இந்தியாவில் கபடி சம்மேளனம் உருவாக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து 1952ஆம் ஆண்டு அகில இந்திய கபடிப் போட்டி சென்னை மாநிலத்தில் ஆண்களுக்கு நடாத்தப் பட்டது. 1955ஆம் ஆண்டு சில மாற்றங்கள் செய்யப்பட்டு பெண்களுக்கான கபடிப் போட்டி கல்கத்தாவில் நடாத்தப்பட்டது.

1961இல் இந்திய பல்கலைக்கழகங் களில் கபடி விளையாட்டு பிரதான விளை யாட்டாக அறிமுகம் செய்யப்பட்டது. 1962இல் இந்திய பாடசாலைகளுக்கிடையில் கபடிப் போட்டிகள் நடைபெற்றன. 1978ஆம் ஆண்டு ஆசிய கபடிச் சம்மேளனம் உருவாக்கப் பட்டது. 1980ஆம் ஆண்டு முதலாவது ஆசியக் கபடிப் போட்டி இந்தியாவின் கல்கத்தா என்னும் இடத்தில் நடாத்தப்பட்டது. இப் போட்டியில் இந்தியா, மலேசியா, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் தேசிய அணிகள் பங்குபற்றின.

1990ஆம் ஆண்டு ஆசிய கபடிச் சம் மேளனம் இலங்கையில் கபடியினை அறிமுகப் படுத்தியது. இதன் விளைவாக 1993ஆம் ஆண்டு இலங்கைக் கபடி சம்மேளனம் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகங்கள் பாடசாலைகளில் கபடிப் போட்டிகள் நடாத்தப்பட்டன. 2000 ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் பாடசாலைகளில் கபடி விளை யாட்டு அறிமுகம் செய்யப்பட்டது. இக் காலப்பகுதியிலிருந்து இங்கும் கபடிப் போட்டிகள் நடைபெறுகின்றன. அகில இலங்கை பாடசாலை கபடிப் போட்டிகளில் பலர் பங்குபற்றி வெற்றிகளையும் பெற்று வருகின்றனர். அத்தோடு 1993ஆம் ஆண்டு மாத்தளையில் கபடிப் போட்டி நடாத்தப் பட்டது என்பதும் குறிப்பிடத்தக்க விடய மாகும்.

**இன்னாசிமுத்து அன்ரன் விமலதாஸ்**
உடற்கல்வி நெறி

# சமூக விஞ்ஞான நெறி



(இ - வ) இருப்போர் :- வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே.கா.கணபதிப்பிள்ளை (அதிபர்) ஆர் எம். சத்தியகுமார் (வகுப்பு விரிவுரையாளர்)

(இ - வ) 1ஆம் நிலை :- ஜே. அன்ரன்லூர்ச்சினோ, திருமதி .ல. சிவதாஸ், மா. ரசிகரன், க. சத்தியேஸ்வரன், ம. பிரதாப், க. சந்திரமோகன், சி. ராஜ்குமார், பு. விஜேந்திரன், வா. ரமேஸ், ச. சி. லேனாட், இ. தினேஸ்குமார் (இ - வ) 2 ஆம் நிலை :- ச. பாலேந்திரன், ச. சரத்திலகன், இ. கார்த்திகேயன், பா. சதிஸ்வரன், வே. திருக்குமரன், யோ. அசோக்காந், சீ. சிவனேசன், த. சற்குணராசா, சி. ரஜனிகாந்.

# LEADER SHIP

A Leadership is a great responsibility
that man can hold
and it has a great ability
to force men to creativity

A Leader is some one who can hold
Responsibilities about his crew
and hold his team quietly and
Peacefully under his self-confidence

A Leader is some one who can talk
always against injustice
and talk last after studying
Ideas from his crew

A Leader is someone who can understand
his men's rhythms of heart
and can recognize troubles
before they evacuate their hearts

A Leader is someone who has
talking thinking and solving ability
and has good vision to
upgrade his social quality

A Leader is someone who can see the
future before hand
and see the past to
find answers for the present questions

And he is someone who can be
a leader in any situation
but can't be a boss
even for a while

**Kirushnan Kayalvili**
*Music - D*

# "திருத்தந்தை" என்ற சொல்லின் வரலாறு

போப் (Pope) என்ற சொல் Pappas என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து பிறந்ததாகும். இலத்தீனில் Papa எனப்படும் சொல்லுக்கு "தந்தை" என்று அர்த்தம். தொடக்க காலக் கிறிஸ்தவத்தில் குறிப்பாக கீழை நாடுகளில் அனைத்து ஆயர்களும், மூத்த குருக்களும் போப் என்றே அழைக்கப்பட்டனர். அலெக்சாந்திரியாவின் பேராயராகிய எகிப்தின் முதுபெரும் தலைவரே முதலில் போப் என்று அழைக்கப்பட்டார். நற்செய்தியாளர் புனித மாற்கு உருவாக்கிய அலெக்சாந்திரியத் திரு ஆட்சிப் பீடத்தின் பேராயர்ப் பதவிக்குரிய பெயராக இது இருந்து வந்தது. 3ஆம் நூற்றாண்டில் கி. பி. 232ஆம் ஆண்டு முதல் கி.பி. 249ஆம் ஆண்டுவரை அலெக்சாந்திரியாவின் முது பெரும் தலைவராக இருந்த ஹெராகிளேயுஸ் அவர்களே முதன்முதலாக "தந்தை ஹெரா கிளேயுஸ்" என அழைக்கப்பட்டார். எனவே எகிப்தை பூர்வீகமாகக் கொண்ட கிறிஸ்தவர் களான காப்டிக் கிறிஸ்தவர்களின் ஆன்மீகத் தலைவரே முதலில் போப் என்று அழைக்கப் பட்டு வந்தார்.

பின்னர் 6ஆம் நூற்றாண்டில் கி. பி. 523ஆம் ஆண்டு முதல் கி. பி. 526ஆம் ஆண்டு வரை பதவியிலிருந்த றோமன் கத்தோலிக்க ஆயராகிய முதலாம் ஜோன் தான், போப் அதாவது தந்தை என்ற அடை மொழியை முதலில் பயன்படுத்தினார். அதன் பின்னர் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர்கள் திருந்தந்தை என்று அழைக்கப் பட்டு வருகின்றனர். உரோமன் கத்தோலிக்கத் திருத்தந்தை தூய பேதுருவின் வழிவருபவர் என்ற முறையில் அனைத்து ஆயர்களும் நம்பிக்கையாளர்களின் கூட்டத்திற்கும் இடையே நிலவும் ஒற்றுமையும் நிலையான காணக்கூடிய ஊற்றாகவும், அடிப்படை யாகவும் விளங்குகின்றார் என இரண்டாம் வத்திக்கான் சங்கம் குறிப்பிடுகின்றது. (லூமென் ஜென்ஸியும் இல. 23)

கடவுள் ஒருவரே தூய்மையானவர். இவர் மனித உருவெடுத்து தொடர்ந்து மனிதர்களோடும் இருக்க விரும்பி தமது திரு அவையை உருவாக்கி அதன் முதல் தலைவராக தமது திருத்தூதர் பேதுருவை நியமித்தார். மனித உருவமெடுத்த நம் ஆண்டவர் இயேசு தமது விண்ணரசின் திறவு கோல்களைப் பேதுருவிடம் அளித்தார். அத்தோடு மண்ணுலகில் அவரின் பிரதிநிதியாக ஆளும் அதிகாரத்தையும் பேதுருவிடம் அளித்தார். (மத். 16 : 18) எனவே, கடவுளின் மண்ணுலகப் பிரதிநிதியாகிய புனித பேதுருவையும் அவரின் வழிவருபவர்களையும் மதித்துப் போற்றுவது கடவுளையே மதித்துப் போற்றுவதாகும். எனவே புனித பேதுருவின் வழிவருபவரை " ஹோலிஃபாதர் " (Holy Father) திருத்தந்தை எனத் திருச்சபை அழைக்கிறது.

**பத்மராஜன் அமலசெல்வி**
*கிறிஸ்தவ நெறி*

# அன்பே கிறிஸ்தவ வாழ்வின் சிகரம்

அன்பின் சிறப்பை எல்லா மதங்களுமே எடுத்துக் கூறுகின்றன. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" எனும் திருமூலர் மந்திரமும்," உன்னைப் போல் உன் அயலவனையும் நேசி" எனும் இயேசு பெருமானின் போதனையும், நபிகள் நாயகம் கூறும் சகோதரத்துவ தத்துவமும் அன்பைப்பற்றியே பறைசாற்றுகின்றன. திருவள்ளுவர் திருவாக்கிலும் "அன்பிலார் எல்லாம் தமக் குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற அன்பின் பெருமையே பேசப்படுகின்றது.

நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் வழியாக கடவுள் அன்பு நம் உள்ளங்களில் அருளப்பட்டது. ஏனெனில் நாம் பாவத்தால் வலுவற்றிருந்தபோதே குறித்த காலத்தில் கிறிஸ்து பாவிகள் மீட்படையும் பொருட்டு அவர் சிலுவை மரணத்தையும் ஏற்றார். அவர் நமக்காகத் தம் உயிரையே கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று நாம் அறிந்தோம். (1 யோவான் 4 : 7 ; 10)

நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்வோமாக. ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செய்கிறவன் எவனும் கடவுளிடமிருந்து பிறந்துள்ளான். அவனே கடவுளை அறிவான். அன்பு செய்தவனோ கடவுளை அறிவதில்லை. ஏனென்றால், அன்பே கடவுள். அவர் தம் ஒரே பேறான மகனின் வழியாக நாம் வாழ்வு பெறும் பொருட்டு அவரை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது.

மதங்கள் அனைத்தும் ஒரே இலக்கின் அடிப்படையிலே விளங்குகின்றன. சமயங்கள் பலவாயினும், வழிகள் பலவாயினும், அவை கூறும் கருத்துக்கள் ஒன்றே. மனித சமூகம் தனது கடமையில் விழிப்புணர்வுடன் செயற்படும்போது அது வாழ்க்கையின் இலட்சியத்தைக் காக்க வழி செய்யும். வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய ஆன்மீக நெறிகளைக் கூறும் சமயக் கல்வி, ஒரு வாழ்க்கை நெறிக் கல்வியாகும்.

இறையன்பு என்பது இறைவன் நம்மீது செலுத்துகின்ற அன்பு. நாம் இறைவனுக்கு செலுத்தும் அன்பு, ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப்போல் இறையன்பும் பிறரன்பும் ஒன்றிணைந்திருத்தல் வேண்டும். பிறரன்பு இல்லாத இறையன்பு செல்லாக் காசைப் போன்றது. கண்ணால் காணக்கூடிய சகோதரனை அன்பு செய்பவனே; காண முடியாத கடவுளை அன்பு செய்ய முடியும். (யோவான் 4 : 18 - 21)

கிறிஸ்து தம் பணிக்காலத்தில் ஒடுக்கப் பட்டவர்கள். பாவிகள், நோயாளர்கள், பேய் பிடித்தவர்கள் மத்தியிலே பணி செய்தார். அவருடைய சொல், செயல், வாழ்வு அனைத்தும் அன்பையே மையமாகக் கொண்டிருந்தது. அன்னை திரேசாவின் வாழ்க்கையே நாம் பார்க்கும்போது, அன்பிற்குப் பிரதி உபகாரம் கிடைக்குமிடத்தில் பணி செய்வதை விட, அன்புக்காக ஏங்குபவர்கள் மத்தியிலேயே பணி செய்வது சிறந்தது என்று தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தார்.

'பகைவனுக்கு அன்பு செய்' என்று கூறிய யேசு; "எங்களைத் துன்புறுத்துவோர், எள்ளி நகையாடுவோர், வெறுத்து ஒதுக்குவோர், புறம் பேசுவோர் அனைவரையும் மன்னித்து எம் சகோதரர்களாக ஏற்று" அன்பு செய்ய

முன்வர வேண்டுமென்கிறார். அன்பு இல்லை யேல் அகிலத்தில் ஒன்றும் இல்லை. அன்பற்ற வாழ்க்கை சாரமற்றது. பொருளற்றது. ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும் போலானது.

அன்பின் விரிவாக்கம் வாழ்வு. அன்பு தெய்வீகமானது. அன்பினை வளர்த்துக் கொள்ளும் எவரிடமும் இறைவன் தன்னை வெளிப்படுத்துவார். அன்பு மட்டுமே நிலையான பேரின்பத்தை வழங்குகின்றது. எங்களது செயலைப் போன்றதுதான் எதிர் செயலும் இருக்கும். ஒவ்வொன்றும் பிரதி செயல், எதிரொலி மற்றும் பிரதிபலிப்பே ஆகும். நமது நடத்தை செயல்கள் யாவும் நல்லவையாக இருத்தல் வேண்டும். அன்பினை எல்லோருக்கும் பகிர்ந்து வாழும் போது நம் இதயம் மகிழ்ச்சியால் நிறைந்தேயிருக்கும். அன்பை விட உயர்ந்த சக்தி இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை. அன்பு எக்காலத்திலும் நிலைத்து இருக்கும்.

அன்பு பொறுமையுள்ளது. தன்னலமற்றது. நன்மை செய்யும், இறுமாப்பு அடையாது தீங்கு நினைக்காது தீவினையில் மகிழ்வுறாது, மாறாக உண்மையைக் கண்டு உள்ளம் மகிழும். அனைவரிடமும் அன்பு இருக்கிறது. அதைக் கண்டு உள்ளம் மகிழும் அனைவரிடமும் அன்பு இருக்கிறது. அதை எந்த எதிர்பார்ப்புமில்லமல் பிறரிடம் விதைத்து, அதைப் பரவச் செய்யும் மனிதரே நல்லறிவு கொண்ட மனிதராவர். சமுதாயத்தை வளர்ப்பதும், சமுதாயத்தால் வளர்வதும் மனிதன்தான். மனித மேம்பாடுகள் நம் சமுதாய வாழ்வின் ஆரோக்கியத்தைக் காத்து அழகினைப் பேணுகின்றது. ஒவ்வொரு மனிதனும் சீரிய மனிதப்பண்புகளை தன்னகத்தே வளர்த்துக் கொண்டால் எமது வாழ்வை நிர்ணயிக்கும் மனம், எமது ஆன்மாவைப் படுகுழியில் புதையவிடாது. சாதி, மதம், இனம், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதமில்லா இறையன்பில் நிலைத்து வாழவும், இறைவனின் பாதச் சுவட்டில் நாமும் நடை பயிலவும் வழிகாட்டியாகும்.

விவிலியம் கூறும் அர்த்தமுள்ள ஆழ்ந்த இறைவார்த்தைகளை உற்று நோக்கினால், கிறிஸ்தவ வாழ்வின் சிகரம் அன்பு என்பது நமக்குத் துல்லியமாகின்றது. அர்த்தமுள்ள மனித வாழ்க்கையினை ஈடேற்றவல்ல, அனைத்தையும் உள்ளடக்கி ஆழ்கடலாக விளங்கும் சமயம் எமக்கு அமைதியின் சாஎரமாக விளங்குகின்றது.

ரோஜா மலரைக் கையில் வைத்திருக்கும் போது அதன் நறுமணம், அதனை வைத்திருப் பவருக்கு மகிழ்ச்சியைத் தரும். அதே போன்று, ஒவ்வொருவரது அறிவுத்திறனானது. பண்பு, மற்றும் தயையின் நறுமணத்தால் நிரம்பும் பொழுது, மற்றவருக்கும் நிறைவுக் களிப்பை அளித்திட வழிகோலும்.

அன்பெனும் இறைவனை - நம்
இதயத்தில் இருத்தி

சுடர்விடும் ஒளியாகிய மெழுகுவர்த்தியைப் போல் - நம் வாழ்வை மாற்றி உண்மை அன்பை நிலைநாட்டி அன்பு எனும் பலிபீடத்தில் தியாகம் எனும் பலிப்பொருளை அளிப்பவர்களாக வாழ - நாம் ஒவ்வொரு வரும் வழிகாட்டிகளாவோம்.

**ஜெராலின் தனுசியா யோன்பிள்ளை**
*கிறிஸ்தவ நெறி*

# இணையம்

மாற்றம் என்ற சொல்லைத் தவிர வேறெதுவும் நிரந்தரமற்றதாகிப் போய்விட்ட இன்றைய நவீன உலகத்தில் மரணித்தவர்களை உயிர்த்தெழச் செய்யும் மாயத்தை மட்டுமே அறிந்திராத மனிதன். தனது அறிவியலின் துணை கொண்டு பல்வேறு கண்டுபிடிப்புக்கள் மூலம் உலகைத் தன்வசப்படுத்தி அதன் பாவனையால் ஏற்பட்ட மிக ஆரோக்கிய நிலையை அலசி ஆராய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான். அந்த வகையில் உலகில் உள்ள அனைவரையும் ஒருங் கிணைக்கும் வித்தையை இணையம் எனும் சாதனம் புரிந்து வருகின்றது.

இணையமானது உலகையே ஒரு சிறு கிராமமாக்கும் அசுர வலைப்பின்னலாகும். பரந்து விரிந்திருக்கும் இவ்வுலகை எல்லைப் படுத்திக் காட்டிய பெருமை இணையத்தையே சாரும். எம் முன்னோர்கள் எவையெல்லாம் மனிதனால் சாத்தியமற்றவை என வரையறுத்த னரோ அவ் வரையறைகளையும் மீறி நவீன தொழில்நுட்பத்துடன் எம் கண்முன்னே சாதித்துக் காட்டுகின்றான்.

மாணவர் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் இணையமானது அனைத்தையும் அருளும் அமுதசுரபியாகும். மாணவர்கள் தமது வாழ்வில் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமதிப்பற்ற ஒரேயொரு சொத்து கல்வி யாகும். "சீமை சென்றாயினும் கல்வியைத் தேடு" என்ற கூற்று மாறி "இணையத்தை உபயோகித்தாவது கல்வியைத் தேடு" என்று கூறுமளவிற்கு இணையமும் கல்வியும் பின்னிப்பிணைந்துள்ளது. இணையத்தை மட்டும் உபயோகித்து ஒரு மாணவன் தனது கல்வியினைப் பூரணப்படுத்த முடியுமென் றால் அது மிகையாகாது.

மாணவர் கல்வியிலே இணையத்தின் வருகையானது ஒரு, மைல்கல் என்றே கூற வேண்டும். மாணவர்களின் கற்றல் செயற்பாடு தொடர்பான ஏராளமான விடயங்கள் இணையத்திலே குவிந்து கிடக்கின்றன. சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் காணொளி கள் என்பன மாணவர்களுக்கு அதனூடு கற்க வேண்டும் என்ற அவாவை ஏற்படுத்துகிறது. கற்றபின்பு உடனடியாகவே பரீட்சைகளிற்கு முகம்கொடுத்து எம்மை நாமே சுய மதிப்பீடு செய்து கொள்ளலாம்.

மறுபுறம் இணையம் என்றும் எமக்கு நன்மை மட்டும் பயக்கக்கூடிய சாதனமன்று. எத்தாக்கத்திற்கும் சமனும் எதிருமானதான மறுதாக்கம் இருக்கும் என்ற நியூட்டனின் கூற்றிற்கிணங்க இணையத்தின் நன்மைக்கு ஏற்றவாறு பாரதூரமான விளைவுகளும் இருக் கத்தான் செய்கின்றன. இணையத்தினை இடைவேளையின்றி தொடர்ச்சியாக உப யோகிப்பதால் மாணவர்கள் உடல் உளரீதி யாக பாதிப்புக்குள்ளாகின்றனர். கண்பார் வைக் கோளாறுகள், மூட்டுவலிகள், உளவியல் ரீதியான பாதிப்புக்கள் என்பனவற்றிற்கும் முகம் கொடுக்க நேரிடுகின்றது. இதனால் மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்படுகின்றது.

இன்று மாணவர் மத்தியில் சமூக வலையத்தளங்கள் பிரபலமாகி வருகின்றது. அதிலும் "முகப்புத்தகம்" எனும் சமூக ஊடகம் மாணவர்களை முற்றுமுழுதாக ஆக்கிரமித்து விட்டது எனலாம். இன்று வங்கிக் கணக் கொன்று இல்லாத மாணவர்களை இலகு வாகக் கண்டு கொள்ளலாம். ஆனால் முகப் புத்தகத்தில் கணக்கொன்று இல்லாத மாணவர்

களைக் காண்பது அரிதிலும் அரிதாகிவிட்டது. எதிர்ப்பாலருடன் அரட்டை அடிப்பது அவர்கள் பதிவேற்றும் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளிற்கு அறிக்கை விடுவது என்றெல்லாம் மாணவர் சமுதாயம் தமது பொன்னான காலத்தைக் குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறாக முகப்புத்தகத்தால் தமது வாழ்க்கையின் முகவரி தெரியாது வாழ்ந்து கொண்டிருப்பவர்களை இன்றைய பாடசாலைகளில் இனங்கண்டு கொள்ளலாம்.

இணையம் என்பது நாம் கண்டது காணாதது காணக்கூடாதது என்றெல்லாவற்றையும் எம் கண்ணெதிரே கணநொடிப் பொழுதினிலே காட்சிப்படுத்தி நிற்கின்றது. இணையத்தில் ஒரு விடயம் தொடர்பாக தேடிக்கொண்டிருக்கும்போது தற் செயலாகக் குறுக்கிடும் தவறான காட்சிகளுக்குள் மாணவர்களிடம் இயல்பாகவே காணப்படும் ஆராய்வூக்கம் காரணமாக அதற்குள் பிரவேசிக்க நேரிடுகின்றது. அவற்றில் காண்பிக்கப்படும் புலனுணர்வைத் தூண்டத்தக்க படங்களும் இரட்டை அர்த்த வாக்கியங்களும் மாணவர்களைக் கிளர்ச்சிக்குள்ளாக்கி திசை திருப்ப தூண்டுகோலாகின்றன. இதனால் அவர்களின் இலட்சியக் கனவும் தகர்க்கப்படுகின்றது. இணையத்தில் உலாவரும் தவறான மின்னஞ்சல்களுக்கும் முகப்புத்தக அங்கத்தவர்களின் ஆசை வார்த்தைகளுக்கும் மயங்கி தமது சுயத்தை இழந்து அல்லற்படுவதும் உயிரை மாய்த்துக் கொள்வதும் தற்போது அதிகரித்துள்ளமை நாம் அறியாத ஒன்றல்ல. இவ்வாறான வெளி ஆரவாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கல்வியின் மகத்துவத்தை உணர்ந்து பூரணமான கல்வியைப் பெறுவதற்கு இளமையிலிருந்தே அடித்தளம் இட்டு வருதல் வேண்டும்.

"இனிய உளவாக இன்னாதது கூறல் கனியிருக்கக் காய்கவர்ந்தற்று" எனும் பொய்யாமொழியின் வாக்கிற்கிணங்க இணையத்தால் எவ்வளவோ நன்மைகள் இருந்தும் மாணவர்கள் அதிலுள்ள தீமைகளையே நாடி தம்மைத்தாமே பாழாக்கிக் கொள்கின்றனர். மனிதர் நாம் விலங்குகளிலிருந்து பிரித்தறியப்படுவது எம் பகுத்தறிவினாலேயாகும். "அன்னமானது நீரை வேறாக்கி, பாலை மட்டும் பருகுவது போல" நாமும் எம் பகுத்தறிவினைப் பயன்படுத்தி தீமைகளைக் களைந்து நன்மைகளைத் தெரிந்து அறிவைப் பெருக்கி கல்வியிற் சிறந்தால் எதிர்காலம் நம் கண் முன்னே ஒளிமயமாகும்.

**ரத்தினகுமார் சகுந்தலை**
*தமிழ்நெறி*

ஆசிரியர்களின் நிலைமாற்ற வகிபாகம் மாணவர் மையமானது, தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. செயற்பாடுகளால் வழிப்படுத்தப்படுவது.

# கணித, விஞ்ஞான நெறி



**(இ - வ) இருப்போர் :-** வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), வ. குணசீலன் (வகுப்பு விரிவுரையாளர்), சி. குகன் (வகுப்பு விரிவுரையாளர்)
**(இ - வ) 1ஆம் நிரை :-** கா. சுதாகரன், திருமதி. ம. சிவமலர், ந. கஜானி, இ. சகுந்தலாஜினி, யூ. சிந்துஜா, ஹெ. மேரிறோசா, த. அருளரசி, செல்வி. ச. சிறிறஞ்சினி, க. பவானந்தி, செல்வி. செ. ஞானாம்பிகை, வி.நந்திவர்மன் **(இ - வ) 1ஆம் நிரை :-** ம. தவக்குமார், ச.தவராசா, ஸ்ரீ. ஸ்ரீபவான், இ. சுதாகரன், ம. அன்ரனிஸ்மித், சி. மகேஸ்வரன், த. ஜெயகரன், மு. பிரியந்தன், மா. ஜெயக்குமார், மு. சசிக்குமார்

# பாடசாலை மாணவர் மத்தியில் மென்திறன் பண்படுத்தல்

இன்றைய உலகளாவிய ரீதியில் தொழிற் சந்தையின் தேவையை நிறைவு செய்ய மாத்திரமன்றி உலகளாவிய பன்மைத்துவங்களினால் எழும் முரண்பாடுகளை வெற்றி கொள்ளவும், நிலைபேற்றுக்கான கல்விக்காகவும், ஒருவனிடத்தில் வளர்த்தெடுக்கப் பட வேண்டிய மிகமுக்கியமான திறனாக மென்திறன்கள் அமைந்து விடுகின்றன. பொது நிலையில் மென்திறன்களின் அவசியம் தொழில் வாய்ப்புகளுடன் இணைந்தே பேசப்பட்டு வருகின்றன.

இன்றைய மாணவன் தேர்ச்சி மையமான கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் தனது கல்வியை பெற்று வருகின்றான். அந்தத் திறன் வன்திறன்களாகவும், மென் திறன்களாகவும் அமையலாம். வன்திறன்கள் மற்றும் மென்திறன்களிடையே அவற்றை வரையறுப்பதில் தீர்க்கமான வேறுபாடுகள் உள்ள போதிலும் இவற்றைத் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது. ஏனெனில் ஒருவனிடத்தில் உள்ள வன்திறன்களின் பெறுமானம் அவனிடத்தில் வளர்க்கப்பட்ட மென்திறன்களால்தான் பாதுகாக்கப்படுகின்றன. இதனால் இவை ஒன்றை இன்னொன்று சார்ந்திருக்கும்.

வன்திறன் என்பது நமது முறைசார் கல்வியின் வழிவருவது எனப் பொதுவாகக் கூறலாம். வன்திறன்கள் வெளிப்படையாக அவதானிக்கத் தக்கவையாகவும் குறித்த சோதனைகளால் அளவிடக்கூடியவையாகவும் அமையும். ஒருவரின் வகுப்பறைச் சூழலிலும், தொழிற் சூழலிலும் வன்திறன்களைப் போதிப்பது இலகுவானதாகும். வன்திறன்கள் இயந்திரங்களை இயக்குதல், கணினிகளை இயக்குதல், கணினியின் சில மென்பொருட்களைக் கையாளுதல் வேற்று மொழி ஒன்றைக் கற்றுப் பேசுதல் போன்றவற்றை உள்ளடக்கியது.

மென்திறன்கள் காட்சிக்குப் புலனாகாதவையாகவும் அளவிடுவதில் கடினமானவையாகவும் விளங்குகின்றன. இவை பிறருடன் வினைத்திறன் மிக்கதான வேலைகளில் ஈடுபடுவதற்கான இயற்கையான திறன்களைக் கொடுக்கின்றன. பொதுவாக மென்திறன்கள் என்பவை தற்துணிவு, நெகிழ்ச்சித்தன்மை, நேர்மை, இணைந்து செயற்படல் வேறுபட்ட நோக்கு நிலையில் விடயங்களை அணுகுதல் நேர் நிலை எண்ணங்கள் போன்ற பல்வேறு உட்பிரிவுகளை உள்ளடக்கியவையாக அமைகின்றன.

இத்தகைய மென்திறன்கள் இருவகையில் நோக்கப்படுகின்றன. ஒன்று கட்டாயம் கொண்டிருக்க வேண்டிய திறன்கள் மற்றையது கொண்டிருந்தால் நல்லது என எதிர்பார்க்கும் திறன்கள். எவ்வாறாயினும் இவை தொடர்பாடற்திறன், சிந்தித்தல், மற்றும் பிரச்சனை தீர்த்தல் திறன்கள், குழுவேலைக்கான திறன்கள், வாழ்நாட்கல்விக்கும் தகவல் முகாமைக்குமான திறன்கள், முயற்சியாண்மைத் திறன்கள், ஒழுக்கம், நியமம், மற்றும் வாண்மைத்துவத் திறன்கள், தலைமைத்துவத் திறன்கள் என மேலெழுந்த வாரியாக வகைப் படுத்தப்படுகின்றன.

இங்கு குறிப்பிட்ட மென்திறன்கள் யாவும் ஆரம்ப வகுப்புக்கள் முதல் உயர்கல்வி வரை ஒரு மாணவனுக்குப் பல்வேறு வழிகளிலே கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகள்

உள்ளன. இது எதிர்காலத்தில் தேவைகளை முன்னுணர்ந்து கொள்ளும் கல்வியுலகத்தின் தீர்க்க தரிசனத்துடன் தொடர்புடைய பாரிய சவாலாகும். எனவே இச்சவாலை வெற்றி கொள்வதற்கான ஏற்பாடுகள் குறித்துப் பாடசாலைகளும் உயர்கல்வி நிறுவனங்களும் அதிகம் அக்கறை செலுத்த வேண்டியுள்ளன.

மாணவர்களுக்கான மென்திறன் விருத்தி தொடர்பில் சில சவால்கள் எதிர்கொள்ளப் படுகின்றன. அச்சவால்களாக, பாடசாலைச் சூழல் மற்றும் கவிநிலை என்பன எல்லா மாணவர்களுக்கு ஒரே மாதிரி அமை வதில்லை. இது பாடசாலையில் மாணவன் பயன் பெறக் காத்திருக்கும் வளம் தொடர் பான பிரச்சனையாகின்றது.

வகுப்பறைகளிலும் பாடசாலையின் ஏனைய வெளிகளிலும் நிலைக்கின்ற கற்றலுக் கான உதவிச் சாதனங்கள் மற்றும் தொழி நுட்பங்களின் கிடைப்பனவு கற்கின்ற மாணவர் களுக்குச் சமத்துவமாக அமைவதில்லை. கல்விக்கான செலவீனத்தில் எல்லாக் கல்வி நிறுவனங்களும் போதியளவு நிதி உள்ளீடு களைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இச் சவால்களை வெற்றி கொள்வதென்பது குடும் பம், சமூகம், கல்விக்கான ஏற்பாடுகள் என்ற பருநிலை அம்சங்களுடன் தொடர்புடையது. ஆயினும் நுண்நிலையில் மென்திறன் விருத்திக் கான சில தந்திரோபாயங்கள் குறித்துச் சிந்திக்க முடியும். அவையாவன ஆசிரியர்களும் பெற்றோர்களும் வழிகாட்டுனர்களும் மாணவர்களுக்கு நல்லதொரு முன்மாதிரியாக தொழிற்படுதல் அதாவது அவர்கள் மென் திறன்கள் வாய்க்கப்பெற்றவர்களாக தமது நடத்தையை வெளிப்படுத்தல். பாடசாலை கள், கல்வி நிறுவனங்கள் மென்திறன் விருத் திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை மாணவர் களின் கற்றலில் அறிமுகப்படுத்தல், விடுகதை முறைகளைக் கையாள்வதன் வாயிலாக மாண வர்களின் கூட்டுச் செயற்பாடுகள், போட்டிச் சூழல், பகுப்பாய்வுக்கற்றல் என்பனவற்றை அதிகரித்தல் மாணவர்களுக்கு பன்மைச்சமூக பண்பாட்டு நிலையிலான அனுபவங்களைப் பெற்றுத் தரக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத் தல். தொழிற்கூடங்கள் மற்றும் அமைப் பாண்மைகளைத் தரிசிப்பதற்கான வாய்ப்புக் களை ஏற்படுத்தல்.


கல்விசார் மற்றும் கல்விசாரா உறு துணை நிகழ்ச்சித்திட்டங்களைத் துணை கொண்டு நேரடியாகவும் மறைமுகமாகவும் மென்திறன் வளர்த்தல் விவகாரங்கள் மற்றும் பிரச்சனைகளை மையப்படுத்திய விடயங் களை ஆய்வுகள் வழியான கற்றலுக்குச் சந்தர்ப் பமளித்தல் மாணவர்களின் கலை, ஆர்வம், ஆக்கத்திறன் என்பவற்றுக்குப் போதுமான அளவு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத் தல். இவ்வாறு மேலும் பல மாற்று வழிகள் குறித்துப் பாடசாலை மட்டத்தில் சிந்திக்கும் போதுதான் மாணவர்களிடத்தில் இந்த மென்திறன் விருத்தி செய்யப்பட வாய்ப்பு ஏற்படும்.

இன்றைய உலகத்தின் மாற்றங்கள் மிக வேகமானவை. இந்த மாற்றங்கள் எல்லை களைக் கடந்து நிற்பவை. புதிய வகை அறிவு, பயிற்சி என்பவற்றை எதிர்பார்த்துள்ளன. திறன்கள் கூட நாம் வாழும் உள்ளூர் நிலைக்கு உரியவையாக மாத்திரமன்றி பிரபஞ்ச நிலைப் பட்டவையாக எதிர்பார்க்கப்படுகின்றன. இதனை உணர்ந்து மாணவர்கள் தங்கள் பாடசாலைக் காலத்தினைச் சரிவரத்திட்ட மிட்டு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எதிர்கால உலகிற்குத் தம்மைப் பொருத்தமான வர்களாக ஆக்கிக்கொள்ளவேண்டும். இதற்குப் பெற்றோர், ஆசிரியர், முறைசார் கல்வி ஏற்பாடுகள், சமூகம் என்பவை யாவும் உறுதுணையாக வேண்டும்.

**யோகேந்திரதாஸ் சிவநந்தினி**

*இந்து சமய நெறி*

# இறையியலில் குறுக்கெழுத்துப் புதிர்



**இடமிருந்து வலம்**

*01.* கேபா என்று அழைக்கப்பட்ட சீடன்

*03.* இதனைக் கொண்டு மீட்கப்பட்டீர்கள்.

*04.* இயேசுவால் சபிக்கப்பட்ட மரம்.

*07.* ஆவியின் கனிகளுள் ஒன்று.

*10.* விசுவாசமுள்ள ஜெபம் இவர்களை இரட்சிக்கும்.

*11.* இதனைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கின்றான்.

*14.* பேதுரு இலங்கார வாயிலில் இருந்த இவனைக் குணமாக்கினார்(குழம்பியுள்ளது)

*15.* குணசாலியான பெண் தன் புருஷனுக்கு இவ்வாறு இருக்கின்றாள். (திரும்பியுள்ளது)

*16.* பரலோக இராட்சியத்தின் நிமித்தம் தங்களை இவ்வாறு ஆக்கிக் கொண்டவர்களும் உண்டு. (மத்தேயு 19)

*17.* நியாயத் தீர்ப்பு நாளிலே ஒவ்வொருவரும் இதனை ஒப்புவிக்க வேண்டும்.

*18.* இயேசு நாயின் ஊருக்கு வந்தபோது இவளின் மகனை உயிரோடு எழுப்பினார்.

*20.* இப்படி இருக்கின்றவர்கள் பாக்கியவான்கள் (யாக்கோபு 5)

*22.* இவன் ஒரு சொப்பனக்காரன்.

*23.* இஸ்ரயேல் ஜனங்கள் இதனைக் கொண்டு போசிக்கப்பட்டார்கள்.

*26.* இறைவனின் பார்வையில் உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து நடந்தவனும்.

27. இவன் பனையைப் போல் செழித்து லீபனோனிலுள்ள (எபிரேயம் 9) வைப் போல வளருவான்.

28. இரத்தம் சிந்துதலில்லாமல் இது உண்டாகாது (எபிரேயம் 9)

**மேலிருந்து கீழ்**

01. நோவாவை இறைவன் ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்ற இதனைச் செய்யுமாறு கட்டளையிட்டார்.

02. நமது கண்ணீர் இறைவன் இதில் சேர்த்து வைத்திருக்கிறார்.

03. எல்லாம் மாயை என இது கூறுகிறது (தலைகீழ்)

05. மோசே இதை நீட்டிய போது செங்கடல் இரண்டாகப் பிளந்தது.

08. கர்த்தராகிய கிறிஸ்து எனும் இவர் தாவீதின் ஊரிலே பிறந்துள்ளார்.

09. இதன் கருத்து போதகர் ஆகும்.

12. ஏழைக் கைம்பெண் போட்ட இதனை இயேசு அங்கீகரித்தார்.

13. கானான் நாடு தேனும் இதுவும் ஓடும் நாடாகும் (தலைகீழ்)

19. யாக்கோப்பினால் இது கட்டப்பட்டது.

21. இயேசுவின் அன்பான சீடன் (தலைகீழ்)

24. முட்செடி நடுவிலிருந்து இவரோடு பேசினார். (தலைகீழ்)

25. இறைவன் என்னை இது உள்ள இடங்களில் மேய்க்கின்றார்.

## விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பேதுரு
03. கிருபை
04. அத்தி
06. சாந்தம்
07. சர்ப்பம்
10. பிணியாளி
11. பிரம்பு
14. சப்னியா
15. தூத்மு
16. அண்ணகர்
17. கணக்கு
18. கைம்பெண்
20. பொறுமை
22. யோசேப்பு
23. மன்னா
26. யோபு
27. நீதிமான்
28. மன்னிப்பு

**மேலிருந்து கீழ்**

01. பேழை
02. துருத்தி
03. கிங்சரபி
05. கோல்
08. இரட்சகர்
09. ரபி
12. காணிக்கை
13. ல்பா
19. கிணறு
21. ன்வாயோ
24. சேமோ
25. புல்

**கிறிஸ்ரா பிறின்ஸ்ரன்**

*கிறிஸ்தவ நெறி*

# உடற்கல்வி நெறி



(இ - வ) **இருப்போர்** :- க.மயில்வாகனம், வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), திருமதி. க. அன்பரசி (வகுப்பு விரிவுரையாளர்), தி. ஜெ. செ. செல்வச்சந்திரன்

(இ - வ) **நிலை** :- தி. நாகநாதன், ம. வினோகாந்தன், க. துற்ஜெயந்தன், ச. கருணாகரன், திருமதி ப. கவிதா, ஜே. யூட்நிரஞ்சன், சி. திருமாவளவன், இ. அன்ரன்விமலதாஸ், க. மோகனராஜா

# இலங்கை பற்றிய சிறப்பான தகவல்கள்

1) சிறப்புப் பெயர் - இந்துசமுத்திரத்தின் முத்து. இந்து சமுத்திரத்தின் நித்திலம்.

2) இலங்கையின் பழைய பெயர்கள் - தப்பர பேன், தம்பபன்னி, செரண்டிப், சீலது வீபம், சீலன், செயிலாவோ, சிலான், சிலோன், இலங்காபுரம், ஈழம்.

3) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட தகவல் கிடைக்கும் இடங்கள் - பொம்பரிப்பு, குரு கேகுகை, இம்பன்கட்டுவ, பாகியன்கல, இரவண எல்ல.

4) வரலாறு கூறும் நூல்கள் - மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம்,

5) சூளவம்சம் இயற்றியவர் - தர்மகீர்த்தி தேரர்.

6) பூர்வீகக் குடிகள் - இயக்கர், நாகர் என்ற திராவிட பரம்பரையினர்.

7) பூர்வீக மாகாணங்கள் - ரஜரட்ட, மாயரட்ட, றுகுணுரட்ட

8) ஒரு நாட்டின் பெருமை கௌரவங்களை பிரதிபலிப்பவை - தேசியக்கொடி, தேசியச் சின்னம், தேசிய கீதம்.

9) தேசியக்கொடி வாளேந்திய சிங்கம் (1950 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது)

* உருவாக்கியவர் கோர்ணல் ஒல்கோட்
* இனங்களும் நிறங்களும்
  தமிழர் - செம்மஞ்சள் இளஞ்சிவப்பு
  முஸ்லிம்கள் - பச்சை
  சிங்களவர் - சிங்கத்தைச் சூழவுள்ள இளஞ்சிவப்புநிறம்.

10) உருவங்களும் விளக்கங்களும்

சிங்கத்தின் தலை- நாட்டின் தலைவர்.
சிங்கத்தின் உடல் - வீரம்
சிங்கத்தின் வாள் - நீதி நேர்மையான ஆட்சி
சுற்றியுள்ள மஞ்சள் நிறம் - அறிவாற்றல்
நான்கு அரசமிலைகள் - சமய ஒற்றுமை

* 1950 - மஞ்சள் சேர்க்கப்பட்டது.
* 1972 சூழவுள்ள மஞ்சள் நிறத்துடன் வெள்ளரசு இலை சேர்க்கப்பட்டது.
* சிறி விக்கிரம இராஜசிங்கன் கண்டிக் கொடியை அடிப்படையாகக் கொண்டது.
* வெள்ளரசு இலைகள் - ஒவ்வொன்றும் அன்பு கருணை, அனுதாபம், சமத்துவம்.

11) தேசியக் கொடி ஏற்றப்படுவது - சுதந்திர தினம் போன்ற தேசிய நிகழ்வுகளின் போது

12) அரைக்கம்பத்தில் ஏற்றப்படுவது - தேசிய துக்க தினத்தின் போது

13) தேசிய சின்னம் பயன்படுத்தப்படுவது - 1972 குடியரசின் பின்னர்.

* உருவாக்கியவர் - மாபலகம விபுலா சாரஹிமி
* அடையாளங்களும் வெளிப்படுத்தும் விடயங்களும்
  சிங்கம் - வீரம்
  கலசம் -பூரண கும்பம்
  சந்திர சூரியன் - உலக நிலைப்பாடு
  நெற்கதிர் - தன்னிறைவு
  தர்மச்சக்கரம் - தர்மமும் நீதியும்
  தாமரை மலர் - தூய்மை
* தேசிய கீதம் - ஸ்ரீலங்கா தாயே நம் ஸ்ரீலங்கா நமோ நமோ நமோ நமோ தாயே (மூன்று மொழிகளிலும்)
* இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்
* ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் - C.W.W. கன்னங்கரா
* தமிழில் மொழி பெயர்த்தவர் - புலவர் மணி நல்லதம்பிப்பிள்ளை.

14) தேசிய மரம் - நாகமரம்

விஞ்ஞானப் பெயர் - அமசூவா நாக சூரியம்

15) தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்

16) தேசிய மலர் - நீலோற்பலம்

17) தேசிய மிருகம் - மர அணில்

18) குடியரசாக்கப்பட்டது - 1972.05.22

19) தேசபிதா - DS. சேனாநாயக்கா

20) போர்த்துக்கேயர் கைப்பற்றியது - 1505

21) ஒல்லாந்தர் கைப்பற்றியது - 1658

22) ஆங்கிலேயர் கைப்பற்றியது - 1815 முற்றிலும் கைப்பற்றியது.

23) தமிழ்மொழி ஆட்சி மொழியாக்கப்பட்ட மூலம் - 16 ஆவது திருத்தச்சட்ட மூலம்.

24) விஜயபாகு கொலை எனப்படுவது - 1521 ஆம் ஆண்டு கோட்டை இராச்சியத்தை அரச குமாரர்கள் மூவர் ஏழாவது விஜயபாகு வான தனது தந்தையை கொன்று கோட்டை இராச்சியத்தை மூன்றாகப் பிரித்துக் கொண்டமை.

25) இலங்கை சுதந்திரமடைய முன்னர் அறிமுகப் படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்கள்.

1833 - கோல்புறூக் கமறன் அரசியல் சீர்திருத்தம்.

1912 - குறு மக்கலம் யாப்பு சீர்திருத்தம்

1921 - மனிங் யாப்பு சீர்திருத்தம்

1924 - மனிங் டிவன்சியர் யாப்பு சீர்திருத்தம்

1931 - டொனமூர் அரசியல் யாப்பு

1947 - சோல்பரி அரசியல் யாப்பு

26) இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அறிமுகப் படுத்தப்பட்ட அரசியல் யாப்பு

1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பு.

1978 இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பு.

27) 1972ஆம் அரசியல் அமைப்பு பிரகாரம் இலங் கையின் முழுப்பெயர் - இலங்கை சோசலிச சனநாயகக்குடியரசு.

28) இரண்டாவது ஜனநாயக சோசலிச குடி யரசு யாப்பு நிறைவேற்றப்பட்டது - 1978

* இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப் பினர்களின் அல்லது ஆசனங்களின் எண்ணிக்கை 225.
* தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய் யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 29.

29) சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்திய யாப்பு - டொனமூர் யாப்பு.

30) இலங்கை அரசியல் யாப்பு மாற்றம் மற்றும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட வேண்டுமெனில் பாராளுமன்றத்தில் தேவையான பலம் 2/3 பங்கு.

31) மாகாணசபை ஆட்சிமுறைகள் ஏற்படுத்தப் பட்டது - 1987 ஆம் ஆண்டு. அங்கீகரிக் கப்பட்ட அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்த மாகாண சபை சட்டத்தின் கீழ்.

32) கிராமசபை, பட்டினசபை என்பவற்றை ஒன்றாக இணைத்து பிரதேச சபை என்னும் உள்ளூராட்சி அமைப்பு ஏற் படுத்தப்பட்டது - (1988)

33) கண்டியை ஆண்ட கடைசி மன்னன் - ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கன்

34) யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் - சங்கிலியன்.

35) ஜனாதிபதியின் பதவிக் காலம் - 6 வருடங்கள்

36) ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுக் கொள்ள வேண்டிய வாக்குகள் 50% இற்கு குறைவாயின் விருப்பு வாக்குகள் எண்ணப் படும்.

37) இலங்கை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப் பட்ட முதற் பெண்மணி - புளோரன்ஸ் சேனா நாயக்கா

38) உத்தியோக பூர்வ வதிவிடங்கள்

* ஜனாதிபதி - ஜனாதிபதி மாளிகை
* பிரதமர் - அலரிமாளிகை
* சபாநாயகர் - மும்தாஜ்மகால்
* பாராளமன்ற உறுப்பினர் - சிராஸ்வதி தங்குமிடம்
* இசுறுபாய - கல்வியமைச்சு
* செத்சிரிபாய - கல்வியமைச்சு
* கணிமைச்சு - சம்பத்பாய

39) இலங்கையின் தலைநகரங்கள் - அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனியா, யாப்பகூவா, குருநாகல், கம்பளை, கோட்டை

40) பௌத்தமதம் வளர வித்திட்டவர்- மகிந்ததேரர்.

**கிறிஸ்ரா பிறின்ஸ்ரன்**

*கிறிஸ்தவ நெறி*

# இசையுடன் இணைந்த பழமொழிகளை இனம் காண்போம்

ஒரு நாட்டில் நிலவும் கலாசாரம், பண்பாடு, பழமை, வரலாறு ஆகியவற்றை அந் நாட்டில் வழங்கும் பழமொழிகள், விடு கதைகள் மரபுச் சொற்றொடர்கள் மூலம் நமக்குத் தெளிவாக கூறிவிடும். இவ்வகையில் இசைத்துறைக்கே உரித்தான பழமொழிகளும் விடுகதைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**பாடல் (சாகித்தியம்) தொடர்பான பழமொழிகள்**

- ''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு சவாசகத்துக்கும் உருகார்''
- "விடிய விடிய இராமாயணம் கேட்டு விட்டு சீதைக்கு ராமன் சித்தப்பன் என்றானாம்''
- ''படிக்கிறது இராமாயணம் இடிக்கிறது பெருமாள் கோவில்''
- ''கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்''
- "பாடகக்காரியிடம் (மகா) பாரதம் பாடச் சொன்னால் பாரதத்தைப் பார்ப்பாளா பரதத்தைப் படிப்பாளா''

**இசை (சங்கீதம்) தொடர்பான பழமொழிகள்**

- அங்காடிக் காரியை சங்கீதம் பாடச் சொன்னால் வெங்காயம் கறிவேப்பிலை என்பாள்.
- இங்கிதம் தெரியாதவனுக்குச் சங்கீதம் தெரிந்து என்ன பயன்.
- குலவித்தை கல்லாமலே பாகம்பெறும்.
- வித்தைக்குச் சத்துரு விசனமும் தரித்திரமும்.
- தாரமும் குருவும் தலைவிதிப்படியே.
- எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். பாடியவன் (படித்தவன்) பாட்டைக் கெடுத்தான்.

**இசையியல் (இலக்கணம்) பற்றிய பழமொழிகள்**

- மாதா பிதா குரு தெய்வம்.
- சுருதி மாதா, லயம் பிதா
- பாடப் பாட ராகம், மூட மூட ரோகம்.
- இழுக்குடைய பாட்டுக்கு இசை நன்று.
- குரல் இல்லாதவனுக்கு விரல்.
- தீர்த்தங்களில் சிறந்தது காவேரி.
- இராகங்களில் சிறந்தது சாவேரி.

**இசைக்கருவிகள் பற்றி பழமொழிகள்**

- வீணை கோணினால் நாதம் கோணுமா?
- உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி.
- காரிகை கற்று கவிதை பாடுவதைவிட பேரிகை கொட்டிப் பிழைப்பதே நன்று.
- யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
- ஜால்ரா போடறான்.
- சங்கு ஊதுகிறான்.

**கிராமிய இசை தொடர்பான பழமொழிகள்**

- ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை. பூசாரிப் பாட்டுக்கு பின்பாட்டு இல்லை.
- வில்லுக்கு அடிச்சான் கோயிலிலே விளக்கு வைக்க நேரமில்லை.
- தக்க திம்மி தக்கிட்டா சட்டி சோறு திங்கட்டா.
- நெல்லு வகையை எண்ணினாரும் எண்ணலாம் பள்ளு வகையை எண்ண முடியாது.

**இசை தொடர்பான விடுகதைகள்**

- குரல் உண்டு உடல் இல்லை அது என்ன? (காற்று)

- காலும் கையும் இல்லாதவன் ஆடி ஆடி பாடுகிறான். அவன் யார்? (இசைத்தட்டு)
- தட்டும் தாளம் நின்று விட்டால் ஆட்டம் எதுவும் நடக்காது. அது என்ன? (இருதயம்)
- முச்சொல் அலங்காரம்
- ஆடோடு ஆடிய காடும் அரசனோடு ஆடிய ஊரும் அடிக்கடி தாய்வீடு ஓடிய பெண்ணும் இம்மூன்றும் பேயோடு ஆடிய கூத்தாம்.

**சங்கீத வாழ்த்து**

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி ஞானமுடன் எந்நாளும் நலமுடனே வாழ்ந்திருங்கள்.

**அமலோற்பவதாஸ் மேரிமக்டலின்**
*சங்கீத நெறி*

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

* கல்வி அமைச்சின் கீழ் உள்ள உத்தியோகத்தர் சேவைகளாவன:-
இலங்கை கல்வி நிர்வாக சேவை
இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை
இலங்கை அதிபர் சேவை
இலங்கை ஆசிரியர் சேவை

* பாடசாலைகளுக்கு இலவச பாடநூல் விநியோகிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு - 1980.
இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1989
(இதற்கு முன்னர் வறிய மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் 1956இல் அமுல்படுத்தப்பட்டது.)

* தேர்ச்சி என்பதற்கான வரைவிலக்கணம்
அறிவு, மனப்பாங்குகள், திறன்கள், ஆளிடைத் தொடர்புகள் ஆகியவற்றின் திரட்சியால் உருவாகும் வாழ்க்கைப் பரிச்சயமே தேர்ச்சி ஆகும். (ஐ. எல். கினிகே)

* தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பாடக் குறிப்பு (Notes of Lesson) எழுதுவதற்குப் பதிலாக பாடமையச் செயற்பாட்டுத் திட்டமே (Activity Lesson Plan) எழுதப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் ஆசிரியர்களும் நிலைமாற்ற வகிபாகத்தை (Transformation role) எடுத்துக்கொண்டு ஒரு வசதிப்படுத்துனராக (facilitator) செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

# சித்திர நெறி



(இ - வ) இருப்போர் :- வீ.கருணலிங்கம் (உப அதிபர்) வே.கா.கணபதிப்பிள்ளை (அதிபர்), திருமதி எஸ். ஆனந்தராஜா (விரிவுரையாளர்)
(இ - வ) 1ம் நிரல் :- திருமதி .ரா. ரேவதி, செல்வி சீ. சுலோசனா, கோ. புனிதச்செல்வி, திருமதி செ. சுபா, திருமதி அ. வாசுகி, திருமதி பர்வின்சராதீன், பெ. மல்லிகா, செல்வி . வி. மேரிசுரேக்கா (இ - வ) 2ம் நிரல் :- ப. சசிவண்ணன், ச. மோகன்ராஜ், சூ. பரம்சோதி, இ. வசீகரன், த. ரதீஸ்வரன், த. கதிர்காமநாதன், மா. நரேந்திரன், இ. ரமணன், சி. இந்திரராசா, சா. தயாபரன்

# ஏற்றத்தின் ஊற்றுக்கால் கல்வி

"கல்வி கற்றவரை எளிதில் திருப்பலாம், ஆனால் ஏமாற்ற முடியாது, எளிதில் ஆழலாம். ஆனால் அடிமைப்படுத்த முடியாது." எனும் அறிஞர் புறோகோவின் வாழ்க்கைத் தத்துவம் மனித வாழ்வில் நாம் கண்ணூடாக காணும் உண்மை. உயரிய நிலையை அளிக்கும் இக் கல்வியைப் பெறுவதனால் மனிதன் மாபெரும் அழிவில்லாச் செல்வம் உடையவனாகின்றான். அழிவில்லாச்செல்வமாகிய இக்கல்வியைக் கற்றவன் உயர்வான சிறப்பைப் பெறுகின்றான். அதனால் அவன் தனது தேசத்தில் மட்டு மல்லாமல் செல்லும் இடமெல்லாம் சிறப்புப் பெறுகின்றான். அரசனுக்கு தன் தேசத்தில் மட்டுமே சிறப்பு. பிறதேசத்தில் சிறப்பில்லை. இந்நிலையில் அரசனோடு அறிவுள்ளவனை ஒப்பிட்டுப் பார்க்கும் போது கல்வியறிவு உடையவனே சிறப்புக்குரியவன் இதனை

"மன்னனும் மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன் சிறப்புடையன்- மன்னற்குத்
தன்தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என்று நல்வழிப்பாடல் கூறுகிறது. இத்தகைய சிறப்பிற்குரிய இக்கல்வியைப் பெற்றவனை பொறாமை கொண்டவராலும் நெருப்பினாலும் அழித்துவிட முடியாது. அரசராலும் திருடராலும் அபகரித்துவிட முடியாதது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க நிறைவைத் தருவது. குறைவுபடாமல் பெருகுவது இது. ஒவ்வொருவரது உள்ளத்தி லும் நிறைந்துள்ளது என கூறுகிறது.

இச்செல்வத்தைப் பெறுவதால் தாழ் குடியில் பிறந்தவனும் உயர்குடியில் பிறந்த வனின் அந்தஸ்தைப் பெறமுடியும் இதனை

"களர் நிலத்து பிறந்த உப்பினை சான்றோர்
விளைந்த நிலத்து நெல்லின் விழுமிதாக்-கொள்வர்
கடைநிலத்தே ராயினுங் கற்றறிந்தோரைத்
தலை நிலத்து வைக்கப்படும்".

எனும் நாலடியார் பாடல் கூறுகிறது. மேலும் அப்பாடல் இழிந்த நிலத்தில் பிறந்த உப்பு எவ்வாறு நல்ல நிலத்தில் விளைந்த நெல்லின் அந்தஸ்தைப் பெறுகிறதோ அது போல கல்வி அறிவுடையவன் நல்ல குலத்த வனது அந்தஸ்தைப் பெற்றுவிட முடியும் எனும் கருத்தை நாம் இப்பாடலூடாக உணர முடி கின்றது.

உயர்வைத்தரும் அழிவில்லா இக்கல்வி யைப்பெறுவதற்கு மனிதனுக்கு புத்தி நல்ல தந்தையாகவும் பொறுமை சிறந்த மந்திரி யாகவும் அன்போடும் விருப்போடும் கற்றல் சிறந்த பாக்கியமாகவும் மனச்சுத்தி அதற்கு ஒழுக்கமாகவும் சிறந்த நல்ல குணங்களே அதற்கு சிறந்த துணையாகவும் இருத்தல் வேண்டும் என ஆசாரக்கோவை நமக்கு வழிகாட்டுகின்றது.

ஆனால் நம்மில் பலர் கல்வி கற்க வசதி இல்லை, பொருத்தமான அறிஞர் இல்லை என ஒதுங்கி விடுகின்றோம். ஆனால் பிச்சை எடுத்தாலும் கற்றலே சிறப்பானது. அக்கல்வி யைப்பெறாது விட்டால் உயர் குடியில் பிறந்த ஒருவன் தாழ்வான குடியில் பிறந்தவனாக ஆகிவிடுவான் என்பதை உணர்வதில்லை இவ் அரிய கருத்தை

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே".
(கொன்றை - 35)

"நற்பாற் குலத்தில் மேற்பாலொருவன்
கற்றிலனாகில் கீழிருப்பவனே".
(கொன்றை - 37)

எனும் கொன்றை வேந்தன் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன. இக்கல்வியை இளமையிற்பெறுவது சாலச் சிறந்தது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து " என்று ஔவையார் கூறுகின்றார். இக்கருத்தை "வாலிபந்தன்னில் வித்தை கற்க வேண்டும் கற்ற வழியிலே நிற்க வேண்டும் " என அறப்பாசுர சதகத்திலும் காணமுடிகிறது. இக்கல்வியைப் பெறுகின்றவன் தளர்வுற்று வீழ்ந்தால் எந்த நிலையிலும் அவன் மிக விரைவாக மீண்டெழுந்து விடுவான். ஆனால் கல்வி அறிவில்லாதவன் தளர்வுற்று வீழ்ந்தால் எழுகின்ற வழி அறியாமல் துன்பப்படுவான்.

" கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத
பேதையான் வீழ்வானேல் கால்முறியும்"

(நான்மணிக்கடிகை -72)

பாடல்மூலம் கற்றுக்கொள்ள முடிகிறது. இத்தகைய சிறப்பியல்வுகளுக்குரிய கல்வியைப்பெற ஒவ்வொரு மனிதனும் முயற்சிக்க வேண்டும். அக்கல்வியை கற்றபின் கற்றதன்படி ஒழுகுதல் வேண்டும். கற்ற கல்வியை பிறருக்குக் கட்டாயம் கற்பித்துக் கொடுக்க வேண்டும் எனப் பல அரிய கருத்துக்களாக ஆசாரக்கோவை கல்வி அறிவு இல்லாதவன் கல்வி அறிவு பெறாமல் இருப்பது குற்றம் என்றும் கற்றறிந்தவரை தேடிச்சென்று கற்காமல் இருப்பதும் குற்றம் என்றும் கூறுகிறது.

கற்றறிந்தோர் மற்றவர்களுக்கு கற்பியாமல் இருப்பது குற்றம். கற்றறிந்தவர்கள் கற்றது போலக் கடமையை உணர்ந்து நடவாமை குற்றம் எனும் கருத்தையும் ஆசாரக்கோவை எடுத்துக்கூறுகிறது. இக் கருத்தை

"கற்றறிந்தவர் கற்றறியார்க்குறக்
கற்பி யாமலிருப்பதும் குற்றமே
கற்றிலாதவர் கற்றறிந் தோரிடங்
கற்றிடாமல் லிருப்பதும் குற்றமே
கற்றறிந்தவர் கற்றவை போலவே
கடமையாய் நடவாமையுங் குற்றமே
தற்பதம் தனி வாய்ந்த முகமதுத்
தம்பிமாமரை காயசகாயரே"

(ஆசாரக்கோவை -05)

எனக் கூறுகின்றது.

மனித குலத்தின் விடிவிளக்காய் " கலங்கரை விளக்கு கடற்பயணிக்கு உதவுதல் போல கல்வியானது மனிதர்க்கு உதவுகிறது. அதனைப்பெற்றுக்கொள்ள வேண்டியது மனிதர் ஒவ்வொருவரது கடமையாகும். ஏனெனில்

இப்பிறப்புக்குப் பயன்தரக்கூடியது, பிறருக்குக் கொடுக்க குறைவு படாமல் பெருகும் தான் இருக்கும் இடத்தில் சிறப்புத் தரும். கல்வியை உணர்ந்து கொண்டால் அது அறியாமை மயக்கத்தைப்போக்கும் எல்லா உலகத்திலும் தேடினாலும் அறியாமையை நீக்க இதைப்போல் மருந்து இல்லை என்கிறது நாலடியார்.

மனிதனுக்கு அழகைத் தரவல்லது ஆடை, அவனது தலைமுடியும் அழகு கொடுக்கும், பெண்மைக்கு மஞ்சள் பூசுவதாலும் அழகு கிடைக்கிறது. ஆனால் இவை யாவும் அழகல்ல, கல்வியே அழகு என

"குஞ்சியழகும் கொடுத்தானை கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாமெனும் நடு நிலைமையாற்
கல்வியழகே அழகு. "

நாலடியாரில் கல்வி அதிகாரப்பாடத்தில் முதற்பாடல் கூறுகின்றது. எனவே நாம் கல்வியின் மகிமையை உணர்ந்து கற்று; கற்ற தன்படி ஒழுகி. கல்விக்கும் நமக்கும் சிறப்புத் தரும் வகையில் நமது மனித வாழ்வை அமைத்து இன்பமாய் வாழ்வோம். ஆயிரம் கோடி அன்னசாலை அமைத்து தான தருமங்கள் செய்வதைவிட ஏழை ஒருவனுக்கு கல்வி அறிவித்தல் ஆயிரம் கோடி புண்ணியம் என்ற பாரதியின் கருத்தை ஏற்று வாழ்வோம்.

**செல்வரட்ணம் மோகநாதன்**

தமிழ் நெறி

## சங்கீத நெறி



**( இ - வ ) இருப்போர்** :- ஆ. மாயகிருஷ்ணன், வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), கா. குகபரன் (வகுப்பு விரிவுரையாளர்), சி. சத்தியகாந்தன்

**( இ - வ ) நிற்போர்** :- திருமதி. ச. கயல்விழி, ஸ்ரீ. காந்திமதி, அ. மேரிமக்டலின், கோ. ஸ்கொலஸ்ரிகா றெஜினா, ஜெ. தீபஷோபனா, ஜீட். மலர்மகள்

# மொழியின் சிறப்பு

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே முன்தோன்றிய மூத்த குடி தமிழ்" எனப் புகழப்படும் செந்தமிழ்ப் பெருமை சொற்களில் அடங்காது. அத்தகைய சிறப்புமிகு மொழி ஆகிய நம் தமிழ்மொழி அன்று அவதரித்ததிலிருந்து இன்றுவரை "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாக வளர்ந்துகொண்டே இருக்கின்றது.

மொழி என்பது ஒரு பண்பாட்டுக் கருவூலம். அது வளர்வதும் வீழ்வதும் பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது. நம் தமிழ் மொழி எப்போது தோற்றம் பெற்றது என்பது குறித்து எவருக்குமே தெரியாது. அப்படியிருக் கின்ற வேளையில் தமிழ்மொழி என்றொரு மொழி இருந்துவந்ததை எப்படி நாம் அறிகின்றோம். மரபு வழியாக இது கடத்தப் பட்டு வந்ததாயினும் இதற்கு எழுத்துரு கொடுக்கப்பட்டதன் விளைவாகவே நாம் இதை அறிகின்றோம்.

இன்று தமிழ்மொழியின் பிரயோகம் மிகப் பரந்தது. விஞ்ஞானம், கணிதம், அரசியல், மருத்துவம், உளவியல், சட்டம், கணினி என்பவற்றைத் தமிழ் மொழியிலேயே கற்கும் தேவை ஏற்பட்டுள்ளது. இந்தப் புதிய சூழ்நிலையில் தமிழ்மொழிக் கருத்துக்களை வெளியிட நிறைவுடையதாகவும் நெகிழ்ச்சி யுடையதாகவும் உள்ளது.

நமது மொழி உயிர்த்துடிப்புள்ளதாக இயங்க மொழி வரம்புகளைப் பாதுகாக்கும் தேவை ஏற்படும்போது புதிய வரம்புகளை ஏற்படுத்துவதும் நம் தலையாய கடமை.

"நம் தமிழ்
காலமது வென்று, கருத்தினின் நின்று
பலர் வாழ்ந்த பாங்காய் இனிதாய் திறனுடனே
பங்கமின்றி வீறு நடைபோடுகின்றதெங்கள்
சங்கம் வளர்த்த தமிழ்"

ஒரு இனத்தினது பண்பாட்டு அடை யாளங்களில் மிக முக்கியமானது மொழியா கும். மொழியைச் சமூக நிறுவனம் என்ற முறை யில் நோக்கும்போது முழுச் சமூகத்தினதும் தொடர்புவாயிலாக அமைகின்றது. மொழி என்பது அகத்தூண்டலுக்கும் புறத்தூண்ட லுக்கும் அப்பாற்பட்டு மனித மனத்திலே வளர்கின்றது என்கின்றார்கள்.

ஒரு தனிப்பட்ட மனிதனையும் சமு தாயத்தையும் இணைக்கின்ற பாலமாக இருப் பது மொழியாகும். இலக்கண இலக்கிய ரீதியான மிகத் தொன்மை கொண்ட செம் மொழியாகிய தமிழ்மொழியை நாம் எம் தாய் மொழியாகக் கொண்டுள்ளோம் எனப் பழம் பெருமை வேரில் நின்று நாம் பெருமைப் பட்டுக் கொண்டாலும் நடைமுறை யதார்த் தத்தில் அதன் பிரயோக நிலையில் திறன் நிலையில் சந்ததி தாண்டிக் கடத்தப்படும் நிலையில் தமிழ்ப்பாடக் கற்றல், கற்பித்தல் நிலையில் இன்று எம் தாய்மொழியாகிய தமிழ் மொழி மிகப் பெரிய சவால்களைச் சந்திக் கின்றதோ என எண்ணும் படியான காட்சி களைக் காணக் கூடியதாக உள்ளது.

அறிவை வளர்த்துக் கொள்வதும் நாம் அறிந்ததைப் பிறர்க்கு அறிவிக்கவும் தலை சிறந்த கருவியாக இருப்பது மொழி. மனிதன் பயன்படுத்தும் தொடர்பாடல் ஊடகங்களில் மொழியே பிரதானமானது.

நமது அபிப்பிராயங்கள், உணர்வுகள், தகவல்கள் முதலியவற்றை பிறர் இலகுவில் அறிந்து புரிந்து கொள்ள உதவுவது மொழியே. புதுமையைத் தேடும் உணர்வு இன்றைய

மக்கள் சமுதாயத்திடம் காணப்படும் ஓர் பொது விடயமாகும். அரசியல், கலை, இலக்கியம், பண்பாடு ஆகியன இணைந்து செயற்படும் சமுதாயத்தில் பல்வேறு வகையான புறக் காரணங்களால் மொழியை வளர்க்கின்றனர். அறிவியல் தொழில்நுட்பம் மூலம் அறிவியல் சார்ந்துள்ள அறிவைப் பெற வேண்டும் என்ற துடிப்பு அனைத்து சமுதாயத்திலுமுண்டு. ஒவ்வொரு மனிதனும் தனது அடிப்படைத் தேவைகளிலிருந்து சகல வகையான தேவைகளுக்கும் அயல் நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். எல்லோருடைய கூட்டு முயற்சியிலுமே மொழி வளர்கிறது.

பல முறைகளில் பல காரண காரியங்களால் ஒரு மொழி இன்னொரு மொழியிலிருந்து சொற்களைப் பெற்றுக் கொள்கின்றன.

புதிய பொருட்களைப் பயன்படுத்தும் போது பிற மொழிச் சொற்கள் தாமே வந்து சேர்கின்றன. பிற மொழியிலும் வேறு மொழிகளைக் கற்கும்போதும் அம்மொழிச் சொற்கள் கையாளப்படுகின்றன. மொழி பெயர்க்கப்படும்போது அதற்குரிய தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடிக்காமல் அப்படியே சொற்களைக் கையாண்டு விடுகின்றனர்.

தமிழ் இனத்தையும் தமிழ் மொழியையும் மேம்படுத்த தனித்தமிழ் இயக்கம் தோன்றியது. தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்கள் பயன்படுத்த வேண்டிய தேவையும் பிற மொழிச் சொற்கள் வந்து சேர்வதற்கும் காரணம் அரசியல் பின்புலமேயாகும்.

மொழியாக்கத்தில் தகவல் தொடர்பு சாதனங்கள் சிறப்பாக செயற்படுகின்றன. மேலும் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் வருகையும் அதனூடாக ஏற்படுகின்ற மொழிப் பயன்பாடும் வித்தியாசமானவை. இவ் வானொலி, தொலைக்காட்சிகளுக்கு உலகம் முழுவதிலுமிருந்து பல்வேறு தரப்பட்ட செய்திகள் ஆங்கிலத்தில் வந்து கொண்டேயிருக்கும். அவற்றையெல்லாம் உடனுக்குடன் மொழி பெயர்த்து வாசகர்களுக்கு இனிமையாகத் தர வேண்டிய தேவைப்பாட்டில் வானொலி, தொலைக்காட்சிகள் உள்ளன.

மக்களுடைய அறிவு வளர்ச்சிக்கு வரையறையோ எல்லையோ இல்லை. அதே போலத் தான் மொழி வளர்ச்சிக்கும் வரையறையும் எல்லையும் இல்லை. அறிவை வளர்ப்பதும் அறிவால் வளர்வதும் மொழியாகும்.

மேலும் மொழிக்கல்வியிலும் தாய் மொழிக் கல்வியிலும் இன்றைய சமுதாயம் ஆர்வம் காட்ட வேண்டும். அவற்றிலுள்ள புதிய கருத்துக்களை உணர்த்த பெறுமதி வாய்ந்த பைந்தமிழ்ச் சொற்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பன்னாட்டுக் குறியீடுகள், சூத்திரங்கள், துணைச்சொற்கள் ஆகியவற்றைத் தமிழில் படைத்தற்கும் ஒரே சீரான முறையில் எடுத்தாள்வதற்கும் தக்க வழிமுறைகளை நெறி முறைகளை வகுக்க வேண்டும். இவற்றில் நாம் கவனம் செலுத்தினால் என்றென்றும் தமிழ் இனிதே வாழும்.

மேலும் நம் தமிழைப்பற்றி சிறு கவி குறிப்பிட்டேயாக வேண்டும். நம் தமிழின் வேகத்தைப் பற்றியும் அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும். அந்த வகையில்

தாய் பேசியது தமிழ் - என்
வாய் பேசியதும் தமிழ்

ஆதியும் அந்தமும் தமிழ்
நீதியில் வென்றதும் தமிழ்

சங்கம் வளர்த்ததும் தமிழ்
சங்கடம் தீர்ப்பதும் தமிழ்

ஆத்தி சூடி தந்தது தமிழ்
ஔவை சொன்னதும் தமிழ்
கொன்றை வேந்தன் தமிழ்
நாலடியாரும் தமிழ்

வள்ளுவன் வரிகள் தமிழ்
வள்ளியின் கணவனும் தமிழ்

கம்பனின் காவியம் தமிழ்
பாரதி பாடலும் தமிழ்

இயல் இசை நாடகம் தமிழ்
இனிய விருந்தோம்பல் தமிழ்

சீரிய மொழிநடை தமிழ்
சீர்மியம் காப்பதும் தமிழ்

பழம் பெருமை கூறும் தமிழ்
அதன் தனித்துவம் காப்போம் தினம்

இப்படியாக தமிழ் தமிழ் எனத் தமிழின் சிறப்புக்களைக் கூறிக்கொண்டே போகலாம். இப்படியாக நம் தமிழை வளர்க்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவோம்.

**திருத்துவராஜா திவாகரன்**
*கிறிஸ்தவ நெறி*

---

* 1879இல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் (ஆங்கிலேய அரசு) பாடநூலாக்கம் ஆரம்பிக்கப்பட்டது. (ஆரம்ப மற்றும் கனிஷ்ட வகுப்புகளுக்காக)

* 1956இல் அரச கரும மொழித் திணைக்களத்தின் ஒரு கிளையாக தாய்மொழி நூலாக்கப் பிரிவு நிறுவப்பட்டது.

* 1966 அக்டோபர் மாதம் 01ஆம் திகதி சுதந்திர இலங்கையின் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டது.

* 1980இல் அனைத்து மாணவர்களுக்குமாக இலவசப் பாடநூல் வழங்கப்பட்டது.

* 2002ஆம் ஆண்டில் பல்லினப் பாடநூல் முறைமை ஆரம்பிக்கப்பட்டது. (ஒரு பாடத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட பாடநூல்கள்)

* 2006இல் புதிய பாடத்திட்டத்திற்கமைய ஒரேவித பாடநூல் முறைமை அமுற்படுத்தப்பட்டது.

# ஒப்பற்ற செல்வம் இயேசு

அன்பால் அதிர்வுகளை ஏற்படுத்தி ஆச்சரியங்களை உண்டாக்கியவர் இயேசு. காலமும் இடமும் கடந்து எல்லையற்றுச் செல்கிறது. அவரது அன்பின் அதிர்வுகள் வலுப் பெற்று இன்றும் மனுக்குலத்தை பிரமிக்கவைக்கின்றன. இயேசுவின் வாழ்வும் போதனையும் இம் மண்ணிருக்கும் மட்டும் மாந்தருக்கு ஒளியும் வழியுமாக இருக்கும். இவரை அடைந்தவன் அனைத்தும் அடைந்த வனாவான். ஏனெனில் இவரே மனிதரின் வாழ்வும் மகிழ்வு மாகத்திகழ்கின்றார். இவரை இழந்தவன் எதைப் பெற்றிருப்பினும் சிறியவனே அவன் ஒரு சூனியம்.

இயேசு ஆயிரமாயிரம் விடியல்களுக்கு வித்திட்டவர். மனிதனை நேசிக்கச் சொன்ன மகான். அன்பை மனங்களின் வீதிகளில் தூவியவர். அன்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். இவர்தான் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் பவுலை சந்தித்தவர். இயேசுவால் ஆட்கொள்ளப்பட்ட பவுல் வேறு மனிதரானார். இயேசுவை ஒப்பற்ற செல்வமாகக் கண்டு தொழுதார். இயேசுவின் பக்தனாகவும் பித்தனாகவும் மாறினா ரென்றால் அது மிகையாகாது.

"நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக் காகவே நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பில 1: 2) என முழக்கமிடும் பவுல்" இனி வாழ்பவன் நானல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கின்றார்" (கொலோ 2 : 20) என அறிக்கை யிட்டார்.

கிறிஸ்துவில் மீட்பின் மகிழ்ச்சியை அறிவித்த பவுல் அவரை அறிவதை ஒப்பற்ற செல்வமாகக் கருதுகிறார். "கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள அனைத்தையும் இழந்துவிடுகின்றார். எல்லாவற்றையும் குப்பை எனக்கருதுகிறார். கிறிஸ்துவோடு இணைந்திருப்பதை அனைத்திலும் மேலான தாகக்கருதுகிறார். (பில 3 : 8 -9) இனி எண்ணும் எழுத்தும் எல்லாம் இயேசுவே என்ற நிலையில் ஆனந்தம் கொள்கின்றார். இப்படி இயேசுவே ஓர் ஒப்பற்ற செல்வமாகத் திகழ் வதை திருநூலின் வழியில் காண்கின்றோம். .இயேசுவில் விளங்கிய மூன்று பரிமாணங்கள் அவரை ஒப்பற்ற செல்வமாக மாற்றுகிறது எனலாம். மற்றவைகள் பற்றிக் கூற இங்கு இடமில்லை.

1. இயேசு ஓர் ஒப்பற்ற ஞானி
2. இயேசு ஓர் ஒப்பற்ற மனித நேயர்
3. இயேசு ஓர் ஒப்பற்ற இறைவாக்கினர்

**ஞானி :** இயேசுவின் போதனைகளும் அவரது செயல்களும் ஓர் ஒப்பற்ற ஞானியாக படம் பிடிக்கிறது. இயேசு மனிதனை, உலகை, உறவுகளை, உணர்வுகளை, அவனது ஏக்கங் களை காயங்களை அறிந்தவர். அவர் வாழ்வின் நுணுக்கங்களை, சமுதாய ஏற்றத் தாழ்வுகளை ஏழைகளின் பரிதாப நிலைகளை உணர்ந்தவர். அந்த ஏழைகளோடு பங்கு கொண்டவர். எனவே அவரது போதனைகள் புரட்சியை ஏற்படுத் தின.

**இயசேு மனித நேயர் :** இயேசு,மக்களை கடவுள் எந்த அளவுக்கு அன்பு செய்கிறார் என்பதைக் காட்டியவர். தனது போதனைகளில் அடுத்திரு ப்பவரை அன்பு செய்யப் பணிக்கிறார். தனது பணி முழுவதும் அவர் அன்பைப் பரிணமிக்கச் செய்தவர்.

ஏழைகளை நேசித்தார்
பாவிகளோடு உணவருந்தினார்
வரி தண்டுபவர் வீட்டிற்கு வலியவே போனார்

# மனைப்பொருளியல் நெறி



**(இ - வ) இருப்போர்** :- வீ. கருணலிங்கம்(உப அதிபர்) வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) திருமதி பௌ. பஞ்சலிங்கம் (வகுப்பு விரிவுரையாளர்)

**(இ -வ) நிற்போர்** :- செல்வி. பொ. டேனிற்றா டோமினிற்றா, திருமதி .செ. பத்மாசனி, திருமதி கி. ஸ்ரீதேவி, செல்வி இ. மரியநீடா, செல்வி அ. சசிகலா, திருமதி எ.எஸ்.எஸ். பரீஹா, திருமதி.எம் என். எப். பாஸிலா

விதவையின் மகளை உயிர்த்தெழச் செய்தார்
அன்பினால் அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்தார்.

இதில் இருந்து இயேசு மனிதனை, உலகை, உறவுகளை, உணர்வுகளை அவர்களது ஏக்கங்களை, காயங்களை அறிந்தவர். நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது மேலான அன்பு என்று சுட்டிக்காட்டி, இயேசு நமக்காக உயிரைத் துறந்தார். இதில் இருந்து அவரது மனித நேயப் பண்பு மேலோங்குகின்றது.

**இயேசு ஓர் இறைவாக்கினர் :** இறைவாக்கினர் இறைவனின் தூதுவர். இறைவன் கூறுவதைக் கூறுபவர். நீதி இவரது இடைக்கச்சை. உண்மையையும் நேர்மையையும் இவரில் சந்திக்கின்றன. இவர் தீமைகள், அநியாயங்கள், கொடுமைகள், அடக்குமுறைகள், ஒழுங்கீனங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

மரியாவின் மேன்மைமிகு பணியைச் செய்தவர்
ஏழை எளிய மக்களோடு உறவாடி
அவர்கள் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு
அவர்களின் குரலாக, ஏக்கமாக கனவாக
நம்பிக்கை வானமாகத் திகழ்ந்தவர்
வைகறையின் முதல் ஒளியாக எழுந்து ஏழைகளின்
விடியலாகத் திகழ்ந்தவர்.

பசியுற்றோருக்கு அப்பங்களைத் தந்தது மட்டுமன்றி, தன்னையும் உணவாகத் தந்த பெருமை இயேசு ஒருவருக்கே உரியது. இவ்வுணவின் வழியாக நிலை வாழ்வும் உயிர்ப்பு வாழ்வும் யாரும் எடுத்துவிட முடியாத நிறை மகிழ்வும் உங்களுக்கு அருள்வேன் என்றவரும் அதைத் தருபவரும் அவரே.

இவ்வுணவின் வழியாகத் தெய்வீக உறவுக்கு மனிதனை அழைப்பவரும் அவரே. நீ விருந்து கொடுக்க விருப்பமானால் ஏழைகளையும், உடல் ஊனமுற்றோரையும், பார்வையற்றோரையும் அழைத்து உணவு கொடு" என்பதை (லூக் *14 : 12-14)* வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை என்ற வள்ளுவர் வாக்கு மெய்ப்பிக்கிறது.

இயேசு தரும் உறவு அழியாதது. ஒயாதது. முறியாதது. இந்தத் தெய்வீக உறவிலிருந்து யாரும் என்னைப் பிரிக்க முடியாதென்பது பவுலின் அனுபவம் (உரோ *8 : 31-39)* இயேசுவே "அன்பைப் பெருக்கி என் ஆருயிரைக் காக்க வந்த இன்பப் பெருக்கே" என்று பாடத் தோன்றுகிறது.

இத்தகைய குருநாதனை பவுல், "என் ஒப்பற்ற செல்வம்" என்றதில் வியப்பில்லை.

**மரிய புஸ்பமலர் ஞானப்பிரகாசம்**
*கிறிஸ்தவ நெறி*

---

* கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 433 வகையான பாடநூல்களின் சுமார் 37 மில்லியன் பிரதிகளை அச்சிட்டு இலவசமாக வழங்கியது. (2011ஆம் ஆண்டுத் தகவல்)

# செய்ந்நன்றி நினைந்து...

நமக்கு உதவவேண்டும் என்ற கட்டாயம் மற்றவர்களுக்கு இல்லை. இருந்தும் உதவி செய்து விட்டாரே என்பதை நாம் உணர்கின்ற போது தான், நமக்கு நன்றி சொல்லத் தோன்றுகிறது. நமக்கு உதவிய அவரின் செயலினைப் பாராட்டி, நாமும் ஏதாவது திருப்பிச் செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் நமக்கு ஏற்படுகின்றது. இதுவே உணர்வுபூர்வமான நன்றியின் வெளிப்பாடாகும். உதவி செய்வதும் நன்றி செலுத்துவதும் ஒருபோதும் உங்களுடைய கௌரவத்தினைத் தாழ்த்திவிடாது. மாறாக உங்களுடைய பெருந்தன்மையை வெளிப்படுத்தும். உங்களுக்கு யாராவது சகாயம்செய்து அன்பு காட்டினால் அவர்கள் செய்த அந்தக் காரியங்களுக்காக உங்களுடைய இதயத்தில் நன்றியுணர்வு எதிரொலிக்க வேண்டும். ஒருவன் வாழ்க்கையில் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும், அவன் மதிக்கத்தக்கவன் ஆகமாட்டான். நன்றியின் அவசியத்தைப் பற்றி நீங்கள் சிந்தித்தால் நன்றி உணர்வு தானாகவே உங்களிடம் தோன்றிவிடும். அதன் பின் எது எதற்கு நன்றி சொல்ல வேண்டும் என்று நீங்கள் வரிசைப்படுத்தினால் அதுவே ஒரு நீண்ட பட்டியலாக வளரும்.

உங்களுக்கு உரிமையில்லாமல் கிடைக்கின்ற நன்மைகளையும் நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். முடியுமானால் வாய்ப்பு ஏற்படும் போது பிரதி உபகாரமும் செய்ய வேண்டும். பணத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு வெறும் வார்த்தைகளால் நன்றி சொல்வது உங்களுக்குப் பெரிதாக உதவியவர்களுக்கு எந்த விதத்திலும் பயன்படாது. சில வகையான அன்புக்குப் பிரதி உபகாரம் செய்வது சாத்தியம் இல்லை. உதாரணத்திற்கு தாயாரின் அன்பைச் சொல்லலாம். உங்களுக்குச் செய்யப்படுகின்ற நன்மைகளைப் பாராட்டுகின்ற மனோபாவமாவது உங்களுக்கு இருக்க வேண்டும். நீங்கள் காட்டுகின்ற நன்றி எப்படிப் பட்டதென்பது முக்கியமில்லை. அது உங்களுடைய இதயத்தில் இருந்து வருகிறதா என்பதுதான் முக்கியம்.

"என்னைத் தடுத்து நிறுத்தியதற்காக நான் உங்களுக்கு நன்றி சொல்கின்றேன்". இந்த வார்த்தையைச் சொன்னவன் 19 வயது இளைஞன். வேகமாகக் கார் ஓட்டியதற்காக மறுநாள் அவன் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டான். தன்னைக் கைது செய்த இரண்டு பொலிஸ்காரர்களுக்கும் அவன் நன்றி சொன்னான். அவர்கள் அவனைத் தடுத்து நிறுத்தி இருக்காவிட்டால் அவன் காரை வேகமாக ஓட்டிச் சென்றபோது ரயர் வெடித்து கார் விபத்துக்குள்ளாகி இருக்கும். நல்ல வேளையாக அவன் தடுத்து நிறுத்தப் பட்ட பின், மெதுவாகச் சென்றபோது ரயர் வெடித்தது. இம் மாதிரிச் சம்பவங்கள் கூட நடந்திருக்கின்றன. சிந்திக்க வைத்திருக்கின்றன. இதன் மூலம் தடைகள் கூட சில வேளையில் நன்மை பயப்பனவாய் உள்ளன. அவை நன்றிக்குரியதாகவும் அமைந்து விடுகின்றன என்பதைக் காண்கின்றோம். முதலில் கடவுளின் அன்பிற்கும் கருணைக்கும் நன்றி சொல்ல வேண்டும். கடவுளின் எல்லையற்ற அருளிற்கு நன்றி சொல்ல வேண்டும். நம்மை நேசிக்கின்ற இதயங்களுக்காக கடவுளுக்கு நன்றி சொல்வோம். கஷ்டங்களை அநுபவிப்பதற்கு நாம் பெற்றிருக்கும் பலத்திற்காக கடவுளுக்கு நன்றி சொல்வோம். நாம் அநுபவிக்கின்ற சந்தோஷங்களுக்காக கடவுளுக்கு நன்றி சொல்வோம். கடவுள் நமக்கு அளித்திருக்கும் நம்பிக்கைகளுக்காக நாம் அவருக்கு நன்றி

சொல்வோம். கடவுளை நாம் நன்றியுணர்வுடன் நேசித்தால் கடவுளும் நம்மை நேசிப்பார். நம் மனநிறைவைப் பெறுவதற்கு இதைவிட வேறொன்றும் தேவையில்லை.

எமக்கு இவ் உடம்பையும், கருவி உபகரணங்களையும், உலகத்தையும், நுகர்வுப் பொருட்களையும் தோற்றுவித்தவர் இறைவன். அத்தனையும் தந்த இறைவனுக்கு நாம் நன்றிக்கடன் செலுத்த வேண்டியவர்கள். தினந்தோறும் நாம் மனத்தால் நினைந்து வாக்கினால் துதித்து உடம்பினால் வணங்குவதற்குக் கடமைப்பட்டுள்ளோம். எந்த நாளும் அவருக்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடனும் அதுவேயாகும். "என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே" என அழகாகத் திருமந்திரம் கூறும். நாம் இறைவனை வணங்காமலும், வாழ்த்தாமலும், இருக்குமாயின் நன்றி மறந்த பாவத்திற்கு உள்ளாகுவோம். உயரிய மானிடப் பிறவியின், பிறவிப் பயனை அநுபவிப்பதற்காக சகல வளங்களையும், நமக்குத் தந்த தலைவனைத் தினந்தோறும் ஒருகணமேனும் சிந்திப்பதும், வந்திப்பதும் நமது கடன். "தலையே நீ வணங்காய்" என்பார் அப்பர் பெருமான். அவ்வாறு இறைவணக்கம் புரியாதவன் தன் கடமையை மட்டுமன்றி நன்றியையும் மறந்து பாவத்திற்கும் பெரும் துன்பத்திற்கும் ஆளாவான். இறை வணக்கம் புரியாதவர்கள் எப்பாடுபடுவர் என்பதைப் பட்டினத்தார் கூறும்போது.

"ஆற்றோடு தும்பையணிந் தாடும் அம்பல வாணர் தமைப்
போற்றாதவர்க் கடையாள முண்டேயிந்தப் பூதலத்திற்
சோற்றாவியற்று, சுகமற்று, சுற்றத் துணியு மற்றே
யேற்றாலும் பிச்சை கிடையாமலே ஏங்குற்றி ருப்பார்களே"
என்கின்றார்.

ஆதலால் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ நினைப்பவன் இறைவனை இயலுமான வரை வணங்க வேண்டும். "வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனல்லவா இறைவன்". இறைவனுக்கு நன்றியறிதல் உடையவனாக வாழும் ஒருவனுக்கே, கண்கண்ட தெய்வங்களுக்கான தாய் தந்தையர்கு அவர்கள் நம்பொருட்டுச் செய்த தியாகங்களை நினைத்துத் தன் கடமைகளைச் செய்யமுடியும். ஒவ்வொருவரும் தம் வாழ்நாள் முழுவதும் செய்நன்றியறிதல் என்ற விழுமியப் பண்பைப் பேணிக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். இதிலிருந்து ஒருபோதும் பின்நின்றுவிடக் கூடாது. நாம் பிறருக்கு உதவி செய்யும்போது கைமாறு கருதாமலும் அவற்றிற்கு ஈடாக எவ்வித பயனையும் எதிர்பாராமலும் செய்தலே உத்தமமாகும். "பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்பார் வள்ளுவர். அன்பின் மிகுதியாலும், இரக்க மேலீட்டினாலும் செய்யப்படுகின்ற பணியே தொண்டு என்றும், சேவை என்றும் கூறப்படுகின்றது. பெயர், புகழ், விளம்பரம், வேறு நன்மைகள் கருதிச் செய்யப்படும் பணிகள் அறப்பணிகள் ஆகா. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் அப்பர் பெருமான். "கடமையைச்செய் பயனை எதிர்பார்க்காதே" என்கின்றது கீதை. "ஐயம் இட்டுண்" "ஈதல் அறம்" என்பதெல்லாம் உணர்வுபூர்வமான தமிழ் வாசகங்களாகும்.

கொடுப்பதில்தான் மகிழ்ச்சி இருக்க வேண்டுமே ஒழிய, பெறுவதில் அல்ல என்பது மரபுக்குரிய சிந்தனை ஆகும். பயன்கருதாமல் செய்யப்படுகின்ற பணி இறைபணியேயாகும். அது மக்கள் சேவையாகி நம்மை மகேசன் சேவைக்குரியவனாக்கிவிடுகின்றது. நாம் மறக்கக் கூடியதும் உண்டு. மறக்கக்கூடாததும் உண்டு. ஒருவர் நமக்குச் செய்த தீமையே உடனே மறந்துவிடுவதுதான் பெருங்குணம். அதனால் பெரும் நன்மையும் உண்டாகும். மகாபாரதத்தில் வருகின்ற கர்ணன் நன்றி மறவாமைக்கு எடுத்துக் காட்டாக உள்ளான். அவ்வாறே தருமர் தனக்கு இழைக்கப்பட்ட

தீமைகளை உடனுக்குடன் மறந்து தீமை செய்தவர்களையும் மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்வதிலும் உதாரண புருஷராக விளங்கினார். துரியோதனன் முதலியோர் தமக்குச் செய்த தீமைகளை மறந்து அவர்கள் வனத்தில் பகைவர்களால் சிறைப்பிடிக் கப்பட்டபோது அவர்களை மீட்டு உணவும் உடையும் கொடுத்து அரண்மனைக்கு அனுப்பி வைத்தார் தருமர் என்பது வரலாறு.

கொடும் பாதகங்களைச் செய்தால் கூட பிராயச்சித்தம் மூலம் அவற்றை நீக்கி பாவி விமோசனம் பெறுவதற்கு நூல்கள் வழிகூறு கின்றன. ஆனால் செய்நன்றி கொன்றவர்க்கு கழுவாயே (பிராயச்சித்தம்) கிடையாது என அறநூல்கள் குறிப்பிட்டுள்ளன. அதனால் ஒருவர் செய்த உதவியை மறத்தல் அதாவது நன்றி மறத்தல் என்பது எத்துணை பாதக மானது என்பது புலனாகின்றது. நன்றி மறந்த தால் வரும் பெருங்கேட்டினை சூரபத்மன் வரலாறு மூலமாகக் கந்தபுராணம் காட்டி நிற்கின்றது.

எந்தையும் தாயும் எமக்காகச் செய்த நன்மைகளோ கணக்கற்றவை. அவர்களை ஓம்புதல் நன்றிக்கடன். பெற்றோர் செய்த தியாகங்களையும் நன்மைகளையும் மறந்தவர் கள் வாழ மறுப்பவர்களாகவும் வாழ்வைத் தொலைத்தவர்களாகவும் ஆகின்றனர். அவர் கள் வாழ்வில் உயர்வுமில்லை உய்வுமில்லை.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என வள்ளுவம் அழகாகக் கூறும்.

மற்றவர்களின் துன்பங்களைப் பார்த்தும் பார்க்காதது போல் செல்வதும் இன்றைக்கு உள்ள மிகப்பெரிய சோகமாகும். வெறுப்பை விட அலட்சியமே பெரிய அளவில் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்த அலட் சியம் ஆபத்தானது. ஏனெனில் அலட்சியத்தில் இருந்துதான் வெறுப்பு தோன்றி வளர்கின்றது. ஒவ்வொருவருக்கும் தன்னுடைய சகோதர னைப் பாதுகாக்கின்ற கடமை இருக்கின்றது. இதனைச் செய்யாதபோது மனச்சாட்சி உறுத்து கின்றது. அதைத் திருப்தி செய்வதற்கு எத்தனையோ நியாயங்களைத் தேடவேண்டி இருக்கின்றது. எதிலும் தலையிட நான் விரும்பவில்லை எனச் சொல்லித் தப்பித்துக் கொள்வது இன்றைய சமுதாயத்தில் ஒரு வழக்கமாகிவிட்டது. இவ்வாறனவர்களிட மிருந்து மனிதநேயம் விலகிச்செல்வதை உணருகின்றோம்.

பொதுஜன நன்மைக்காகச் செய்யப் படுகின்ற காரியங்களுக்கு எவரும் நன்றி சொல்லுவதில்லை அதில் காணப்படுகின்ற குறைபாடுகளை சுட்டிக் காட்டுவதிலேயே அதீத அக்கறையுடன் இருக்கின்றோம். வேலை செய்வோரும் வேலைவாங்குவோரும் ஒருவருக்கொருவர் நன்றியுணர்வுடன் இருப் பதில்லை. இரண்டு குழுக்களும் ஒருவருக்கு ஒருவர் நன்றி சொல்லிக்கொள்வதில்லை. சம்பளம் கொடுப்பது முக்கியம் இல்லை. செய்த வேலையை அங்கீகரித்துப் பாராட்டு வது முக்கியமான அம்சமாகும். ஒரு நிறுவனம் வெற்றி பெறுவதற்கு தொழிலாளர்களின் ஒத்துழைப்பு எவ்வளவு அவசியம் என்பதைப் புரிந்து கொண்டால் நிர்வாகிகளுக்கு நன்றியுணர்வு தானாகவே வந்துவிடும்.

விலைகொடுத்து வாங்க முடியாத பொருள்களில்தான் விலை மதிக்க முடியாத வாழ்க்கை அழகு இருக்கின்றது. நம்மைச் சுற்றிலும் நாம் இரசிப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. சூரிய உதயம், அஸ்தமனம், பசுமை படர்ந்த புல்வெளி சிறகடித்துப் பறக்கும் பறவைக் கூட்டம், மலைகள், ஆறுகள், குளிர்நிலவு, கடற்கரைக் காட்சிகள் இவை எல்லாம் இறைவனால்

நமக்காக உருவாக்கப்பட்டு இயக்கப்படுவன. நம் வாழ்வுக்கு ஆதாரமாகவும் அவை இருக்கின்றன. இதற்காக இறைவனுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமல்லவா?

மற்றவர்களின் மகிழ்ச்சியால் உங்கள் இதயத்தை நிரப்பிக் கொள்ளும் போது அது அன்பு நிறைந்த இதயமாகி விடுகின்றது. மற்றவர்களை மதிக்கின்ற போதுதான் சகோதரத்துவம் தோன்றும்., மனிதநேயம் வளரும். நீங்கள் பூமியில் பிறந்ததன் அர்த்தம் பூர்த்தியாக வேண்டுமானால் அடுத்தவர்களுக்கு உதவி செய்யுங்கள். ஒவ்வொருவரும் கடவுளின் குழந்தைகள். அவர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் ஆண்டவனுக்கே நீங்கள் தொண்டு செய்தவர்கள் ஆகின்றீர்கள். அதன் மூலம் பாக்கியம் பெற்றவர்கள் ஆகின்றீர்கள். இந்தப் பாக்கியத்தைப் பெறுவதற்கு சந்தர்ப்பம் அளித்த அந்த உள்ளங்களுக்கு நன்றி சொல்லும் மனப்பக்குவம் உங்களுக்கு ஏற்பட வேண்டும். அப்போது ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். உலகத்தைவிட மிகப் பெரியதாக மதிக்கப்படுவது காலம் அறிந்து ஒருவர் செய்யும் உதவியே ஆகும். "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது" என்பது குறளாகும். இவ்வாறான உதவிகளைப் பெற்ற பின்பும் நன்றியுணர்வற்றவர்களாய் வாழ்பவர்களுக்கு ஒருபோதும் உய்வில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்வோமாக மற்றவர்களுக்கும் உணர்த்துவோமாக.

**பிரவீணா நற்குணசிங்கம்**
*இந்துசமய நெறி*

---

* இலங்கையில் கல்வி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்
மாகாணக் கல்வித் திணைக்களம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
தேசிய கல்வி நிறுவகம்
தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைச் சபை
இலங்கைத் தேசிய நூலக அபிவிருத்திச் சபை
இலங்கை யுனஸ்கோ தேசிய ஆணைக்குழுச் சபை

* இலங்கை கல்வி அமைச்சின் நோக்கு -
இலங்கையின் அடையாளத்தின் பங்களார்களாக திறமை வாய்ந்த பிரஜைகள் ஊடாக சர்வதேச சமூகத்தின் அதி சிறந்த நிலையை எட்டுதல்.

---

# அனைவருக்கும் கல்வி

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றார் வள்ளுவர். சொல்பவன் எதனைக் கூறினாலும் கேட்பவன் அதனை அப்படியே நம்பக் கூடாது. ஏனெனில் பொய்யுடைய ஒருவன் சொல் வன்மையினால் பொய்யானது மெய்போலத் தோன்றும். ஆகவே ஒருவன் சொல்வதை ஆராய்ந்து அது உண்மையா பொய்யா என்பதை உணர்தல் அவசியம். வாக்குச்சாதுரியத்தில் மயங்கி பொய்யை உண்மையென்று கொண்டால் அதன் மூலம் துன்பத்திற்கு ஆளாக நேரிடும். ஆகவே சொல்லப்படுவனவற்றை நன்கு ஆராய்ந்து தெளிந்திடல் வேண்டும். அதற்கு இன்றியமை யாதது அறிவாகும். அறிவுடையவன் பொய்யில் மயங்க மாட்டான். ஏமாற்றங் களுக்கும் கேட்டிற்கும் ஆளாக மாட்டான். எனவே தான் "அறிவு அறங்காக்கும்" என்றார். அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது கல்வி. "மணற்கேணியைத் தோண்டும் தோறும் நீர் சுரக்கும் அதேபோல் நூல்களைக் கற்குந் தோறும் அறிவு பெருகும். அதன் காரண மாகவே "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றார் ஔவைப்பாட்டி. "குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல. ஒருவர்க்கு நடுவு நிலைமை யினால் வந்த கல்வி அழகே அழகு" என்று நாலடியார் கூறுகிறது.

ஆகவே ஒவ்வொருவரும் முயன்று கற்க வேண்டும். கண்ணில் லாதவன் பார்க்கும் சக்தி அற்றவன். அவனுக்கு எல்லாமே இருளாகத் தான் தோன்றும். பள்ளமும் தெரியாது. திட்டியும் தெரியாது. எந்தப் பொருளையும் அவனால் பார்க்க முடியாது. ஆகவே அவன் வழி செல்லுங்கால் தடுக்கி விழுந்தும் பிற பொருட்களுடன் முட்டி மோதியும் பெரும் துன்பத்திற்கு ஆளாவான். அதுபோல் கல்வி அறிவு இல்லாதவனும் அறியாமை இருள் நிறைந்தவனாய் நல்லது தீயதை உணராத வனாய் துன்பங்களுக்கு ஆளாகி வருந்துவான். எனவேதான் "கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்" என்றார் வள்ளுவர். அவ்வாறு கூறியது மட்டுமன்றிக் " கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக " என கற்க வேண்டியதின் அவசியத்தைக் கூறியதுடன் கற்றபின் செய்யக் கூடியது யாது என்பத னையும் வற்புறுத்தியுள்ளார். கல்வியின் முக்கி யத்துவம் முன்னைய காலம் முதல் இன்றுவரை வளர்ந்தது மட்டுமன்றி மனிதனுக்கு இம்மை யிலும் மறுமையிலும் கூடி வரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமே.

கல்வியறிவுடைய மக்கள் வாழ்க் கையில் இன்பம் உடையவராவர். ஆகம ஒழுக்க சீலராய் மிளிர்வதுடன் மற்றவரையும் நன்னெறிப்படுத்துவார். கல்வி நலம் உடை யார் யாவரும் இன்புற்றுவாழ வழிகாட்டி யாவார். சமூகம் உயர்வடையக் கல்வி அவசியம். தாழ்வுற்று வறுமை விஞ்சி விடு தலை தவறிக் கெட்டு பாழ்பட்டுக் கிடப்பதற் குக் கல்வியின்மையே காரணம். தீண்டாமை, சாதிப்பாகுபாடு, மூடநம்பிக்கை அடிமை, மோகம், நவீனத்துவம் என்பவற்றால் சமூகம் சீர்கெடுக்கிறது. இந்நிலை மாறிச் சமூகம் மிளிரவேண்டுமாயின் அனைவருக்கும் கல்வி அவசியம். இதனால் தான் தாயின் கருவறை யில் இருக்கும் போதே குழந்தையின் கல்வி வளர்கிறது என பிள்ளைப் பருவத்திலும் அறிகை வாதிகளின் கருத்துக்களின் படியே கற்றல் என்பது வாழ்க்கைக்கல்வி என்பது வாழ்வு, வழியின் திசைகாட்டி. "வாழக்கல்"

என்றும் கல்வியின் மூலம் வாழ்வாதாரம் வளரும். இதனால் அனைவருக்கும் கல்வி அவசியம் என ஐ. நா. சபை கல்விக்கான துரித நடவடிக்கைகளிலும் மேம்பாட்டுக் கல்விசார் விருத்தியிலும் Unesco உடன்பாட்டுக் கொள்கை மூலம் வழிகாட்டியது.

எல்லோரும் கல்வியறிவு உடையோ ராய் விளங்க வேண்டும். இதனையே பாரதி "உள்ளத்தில் கவிப் பெருக்கம் கலைப் பெருக் கம் மேவுமாயின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடராய் விழிபெற்று பதவி உயர்வர்" என்று கூறினார். கல்வி ஒரு சிலருக்கு மட்டுமே உரியதாக இருந்தது அந்தக் காலம்: அதனை ஒழித்தார் பாரதி. ஊர்கள் தோறும் பள்ளிகள், அன்னசத்திரங்கள், கல்லூரிகள் அமைக்கப் பட வேண்டும். "ஏழைக்கு எழுத்தறிவித்தலே சிறந்த அறமாகும்" என்று யாவருக்கும் கல்வி வேண்டும் என்று பாரதி கல்வியைப் புகட்ட பல பாடல்களைப் பாடினார். இவரின் பின்பு எத்தனையோ பெரியார்கள் அறிஞர்கள் தோன்றினார்கள். இருப்பினும் கல்விப் புலத் தில் இன்றும் சில தாழ்வுகள் காணப்படுகின் றன. காரணம்; நாட்டுச் சூழல் சமமின்மை, இயற்கை அனர்த்தங்களின் மக்கள் மன அழுத்தம், கல்விக்கூடங்கள் அழிக்கப் பட்டமை, பாடசாலையில் தஞ்சம் புகுந்து மக்கள் வாழ்வு அங்குமிங்கும் ஓட்டம் இதனா லும் கல்வியின் பாதிப்புக்கள் ஏற்பட்டன.

ஆனாலும் அனைவருக்கும் கல்வி ஏதோ ஒருவகையில் தற்காலச் சூழலில் வழங்கப் பட்டுக் கொண்டுதான் வருகிறது. சமூக முன் னேற்றம் அதிகரித்தது நவீன கல்வித்திட்டங் கள், கலைத்திட்டம் வளர்ந்து சிறியோர் முதல் முதியோர் வரையான கல்வி வளர்ச்சி பெற்றது டன் தொழிற்கல்வியும் எல்லாத் துறைகளுக் கும் பொருத்தமாக அமைந்து விருத்தியடைந் துள்ளது.

விஞ்ஞானம், அறிவியல், விவசாயம், மருத்துவம், கலைத்துறை என்று எல்லாம் பரிணமித்த இந்தக் காலத்தில் முற்காலக் கல்வி நிலை மாறி வீட்டில் இருந்தபடியே கல்வி கற்றுப் பட்டங்கள் மேல்நிலைக்கற்கை நெறி களை முடிக்கும்படியான வளர்ச்சியும், தொழில்சார் முன்னேற்றம் பல்வேறு மொழி யாற்றல், எழுத்தாற்றல் என்று யாவும் வளர்ச்சி கண்டுள்ளது. இந்நிலையிலும் கல்விதான் மனிதனுடைய நன்னடத்தையின் வழிகாட்டி யாக என்றும் இருப்பது.

"பழையன கழிந்து புதியன புகுதலும்" கல்வியின் பாரம்பரியம் பேணப்படுகிறது. அன்றைய ஆத்திசூடியை இன்றும் வழிகாட் டல் பாடமாக ஆரம்ப மாணவர் கற்கின்றனர். நீதிநூல் இலக்கியங்கள் மகாபாரதம், இராமா யணம் போன்ற இதிகாச புராணக்கதைகளும் காலம் கரைந்து ஓடிச்சென்றாலும் அழியாது பேசப்படுகிறது. வளரும் சமூகம் கற்கின்ற பாடநூலாக கலைத்திட்டத்தில் வடிவமைக் கப்படுகின்றது. எனவேதான் கல்வி கொடுக்கக் கொடுக்கவோ, அள்ள அள்ளவோ, பருகப் பருகவோ குறையாது பெருகிக் கொண்டே செல்லும். செல்வமாகக் கருதப்படுகின்றது. இதனால் தான் "கல்வி கரையில கற்பவை நாட்சில" மெல்ல நினைக்கில் பிணிபல எனக் கூறுவர். "கற்பது கைமண் அளவு கல்லாதது உலகளவு" என்பர். கல்வியின் அளவு; கடல், கடலுள் ஆழ்ந்து அமிழ்ந்துசெல்ல காலம் எமக்குப் போதாது.

இருப்பினும் இயன்றளவு முயன்று முனைந்து சொல்வோம். கல்விப் படிக்கல் நோக்கி, அனைவருக்கும் கல்வி என்றும் வேண்டுமே. அவனி சிறப்புறவே நாம் அனை வரும் கல்விப்படியில் ஏறி மேல்நோக்கி சென்றிடுவோம். எமது வாழ்வின் பயன்களை வென்றிடுவோம்!

**பேபி சுதாகரன்**
*ஆரம்பக்கல்வி - A*

# வேலைநேரமும் கல்வியும்

இன்று முன்னேறிய நாடுகளைக் கவனித்தால் ஒரு முக்கியமான செய்தி நமக்குப் புலப்படும். இந்த நாடுகளில் பள்ளிக் கூடங்கள் எல்லாம் அதிகாலை 7.30 மணிக்குத் தொடங்கிவிடும். அதுபோல் அரசாங்க அலுவலகங்கள் 8.30மணிக்குத் தொடங்கிவிடும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கூடம் அனுப்பி விட்டு தாங்கள் வேலைக்குச் செல்வதற்கும் வசதியாக இருக்கும்.

குழந்தைகளும் அதிகாலை படிப்பைத் தொடங்குவதால் படித்தவை அனைத்தும் மனதில் நிற்கும். நன்றாகப் படிக்கும் குழந்தைகள் பிற்காலத்தில் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றமும் தகுதியும் அடைவதால் வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்ல பிரஜையாக வாழ முடியும்.

அதைவிட முக்கியமான விடயம் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும் என்பதால், இரவில் நேரகாலத்துடன் நித்திரைக்குச் சென்றுவிடுவார்கள். தேவையற்ற TV நிகழ்ச்சிகளைப் பார்த்து மூளை மழுங்கடிக்கப்படுவது தவிர்க்கப்படுகின்றது. அதிகாலையில் எழுந்து பள்ளிக்கூடம் செல்வதால் 7.30 மணிக்கு பாடசாலை என்றால் 6.30 இற்கு வீட்டில் இருந்து செல்ல வேண்டும். இவர்கள் 5 மணிக்கு எழுந்து தயாராக வேண்டும். குழந்தைகளுக்கு படிப்பு படிப்பு என்று படிப்பை மட்டும் சொல்லிக் கொடுக்காமல் மற்றையவர்களுடன் எப்படிப் பழக வேண்டும் பொது இடங்களில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் போன்ற வெளிப் பழக்க வழக்கங்களையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறாக செயற்படுவோமானால் வளமான கல்வியை நாட்டில் நிலைநிறுத்த முடியும் என்பதோடு வளமான சமூகத்தைத் தோற்றுவிக்க முடியும்.

**புண்ணியமூர்த்தி ஜெயதர்சினி**
*கிறிஸ்தவப்பிரிவு*

---

தெற்காசிய நாடுகளின் ஆசிரியர்களின் வாண்மையை விருத்தியுறச் செய்ய தேசிய கல்வி நிறுவகத்தின் மீட்பே நிலையம் தெற்காசிய ஆசிரிய பயிற்சி மத்திய நிலையமாக பெயர் மாற்றப்பட்டுள்ளது.

## நடன நெறி



(இ - வ) இருப்போர் :- வீ. கருணலிங்கம் (உப அதிபர்), வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்), செல்வி. சி. ரஜிதா (வகுப்புவிரிவுரையாளர்)

(இ - வ) நிற்போர் :- திருமதி த. ரவீந்திரன், பு. பிரதீபன், ச.சசீகலா, திருமதி. தே. விஸ்வகுமாரன், செல்வி ஜெ. ஜெரோமியா, திருமதி. ந. சசிதரன்.

# பரீட்சையை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்களுக்கு சில ஆலோசனைகள்

1200 பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தை முழுமையாக படித்து முடிக்க எவ்வளவு நேரம் தேவைப்படும்.

எழுத்தாளனுக்கு : 3 நாட்கள்
மருத்துவனுக்கு : 10 நாட்கள்
ஆசிரியருக்கு : 15 நாட்கள்
விஞ்ஞானிக்கு : 6 நாட்கள்
மாணவனுக்கு ஒரு இரவு போதும்.

நகைச்சுவையாக இருந்தாலும் இதில் உண்மையும் இருக்கிறது. சிலவேளை உங்களுக்கும் இந்த அனுபவம் கிடைத்திருக்கலாம். எப்போது பரீட்சைக்கு முதல் நாள் தீவிரமாகப் படிக்கும் பழக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்பதுதான் ஆலோசனை.

**பதற்றம் வேண்டாம்.**

பதற்றம் எமக்குள் இருக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்யும். அதனால் முழு நம்பிக்கை இருந்தாலே போதும் சாதித்து விடலாம்.

**பரீட்சைக்கு அதிக நேரம் ஏன்?**

முழு நேரத்தையும் ஒதுக்காமல் மூளையைக் கொஞ்சம் ஆறவிடுங்கள். அப்போது தான் அடுத்தகட்ட பாடத்தைத் தொடங்க புத்துணர்ச்சியாக இருக்கும். நீங்கள் விரும்பின் ஒரு அட்டவணை ஒன்றைத் தயாரியுங்கள் அதாவது காலையில் எழும்புவது முதல் இரவு படுக்கைக்குச் செல்லும் வரை.

**இந்நேரம் முதல் இரவு வரை**

* வீடு திரும்பியபின், வானொலி கேட்டு ஓய்வு எடுங்கள்.
* வீட்டுப்பாடம், சுயபடிப்பு சிறிது ஓய்வு.
* ஒவ்வொரு நேரமும் இடைவேளை எடுத்துக் கொள்ளுங்கள்.
* தொலைக்காட்சியில் பரீட்சை சம்பந்தமான நிகழ்ச்சிகளைப் பாருங்கள் அல்லது கணினியைப் பயன்படுத்தலாம். ஆனால் அதிக நேரம் செலவிட வேண்டாம்.
* சில நிமிடம் உங்கள் குடும்ப உறுப்பினருடன் உரையாடுங்கள். அப்போது நம்பிக்கையான ஊக்குவிப்பான வார்த்தையை நீங்கள் பெறக்கூடும்.

**உடலில் அக்கறை கொள்ளுங்கள்**

* படிப்பில் உடல்நலத்தைக் கவனிக்காமல் விட வேண்டாம். ஏனெனில் பரீட்சை நடக்கும் நேரங்களில் தொந்தரவு தரலாம்.
* நல்ல ஆரோக்கியமான உணவுகளான காய்கறிகள், கீரைகள், நல்ல பழங்கள், மீன், முட்டை போன்ற போஷாக்கு உணவுகளை உண்ணலாம்.
* பால் போன்ற ஆரோக்கியமான பானங்களை படிக்கும்போது அருந்துங்கள்.
* நேரத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
* நொறுக்குத் தீன்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
* தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். குறைந்தது 20 நிமிடத்தையாவது ஒதுக்கிக் கொள்ளுங்கள்.
* யோகாசனத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

இந்த ஆலோசனைகளைக் கடைப்பிடித்து பரீட்சையில் வெற்றி பெறுங்கள்.

**ஜெயசீலி யூட் நிரஞ்சன்**
*கிறிஸ்தவநெறி*

# ஆசிரியரும் உரிமை உடையவரே

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்றும் "இன்றைய சிறுவர்களே நாளைய நாட்டின் கண்கள்" என்றும் வெறுமனே கூறிக்கொண்டு சிறுவர்களை துஷ்ப்பிரயோகங்களுக்கு உள்ளாக்கி அவர்களின் எதிர்காலத்தையே அழித்தொழிக்கும் இக் கலியுகத்தில் சிறுவர் "உரிமைகளைப் பற்றி நோக்குவது சாலப்பொருந்தும். அதிலும் சிறுவர் உரிமைகளைப் பேணுவதில் பெற்றோருக்கு அடுத்து பெரும்பங்களிப்பு செய்ய வேண்டிய ஆசிரியர்கள் இவ்விடயம்பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியமே ஆகும்.

ஒரு தாயின் வயிற்றில் உருவான கரு; வைத்தியரால் பிள்ளை என உறுதிப்படுத்தப் பட்ட தினத்தில் இருந்து சிறுவர் என்னும் வரையறைக்குள் வந்து விடுகின்றது. ஐக்கிய நாட்டு சிறுவர் சாசனத்தின்படி கருவில் இருந்து 18 வயது முடியும் வரை உள்ள அனைவரும் சிறுவர்களே. பிள்ளைப்பருவமானது மானிட வாழ்வின் மிக முக்கியமான காலகட்டமாகும். எனவே ஒரு பிள்ளை அப்பருவத்திலே தான் அனுபவிக்க உரித்துடைய அனைத்து உரிமைகளையும் உரியவாறு அனுபவிப்பதற்கான உரிமைகளைப் பெற்றிருக்கின்றது.

அதாவது பிறப்புரிமை, வாழும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, பேச்சுரிமை, செயற்படும் உரிமை, சிந்திக்கும் உரிமை என பல்வேறு உரிமைகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன. ஒரு பிள்ளை பெற்றாரின் அல்லது சட்ட பூர்வ பாதுகாவலரின் இனம், மதம், மொழி, பால், சமூகநிலை, அரசியல் கொள்கை மற்றும் வேறு எத்தகைய வேறுபாடுகளையும் கொள்ளாது தான் அனுபவிக்க உரித்துடைய சகல உரிமைகளையும் அனுபவிக்கும் உரித்துடையது. அதாவது உலகிலுள்ள ஒவ்வொரு சிறுவர்களுக்கும் உயர்வு தாழ்வு, ஏழை பணக்காரன் என்ற எந்தவித வேறுபாடுமின்றி இவ்வுலகில் சுதந்திரமாக வாழவும் உரிய வயதில் கல்வி கற்கவும், ஓய்விலும், பொழுதுபோக்கிலும், கலாசார விவகாரங்களில் ஈடுபடவும் உரிமை உண்டு. இன்னும் பங்கேற்கும் உரிமையில் கருத்துக்களை வெளியிடவும், தகவலைப் பெற்றுக்கொள்ளல், வெளியிடல், சிந்தித்தல், மனச் சாட்சியின்படி நடத்தல், விரும்பிய மதத்தைப் பின்பற்றுதல், சமூகத்தில் பொறுப்புக்களை வகித்தல் போன்ற அனைத்திற்கும் உரிமை உண்டு.

ஆனால் இன்று எவ்வளவு தூரம் இவ்வுரிமைகள் சிறுவர்களால் அனுபவிக்கப்படுகின்றன. சமூகத்தில் பாதுகாக்கப்படுகின்றன என்பது பெரும் கேள்விக் குறியாகும். இன்று எங்கு பார்த்தாலும் கருவை அழித்தல், சுதந்திரம் பறிக்கப்படல், பெற்றோரைப் பிரித்தல், கல்வியை இடைநிறுத்தல், வேலைக்கு அமர்த்துதல், பாலியல் வல்லுறவுக்குட்படுத்துதல், தண்டித்தல், உளரீதியாக பாதிப்புக்குள்ளாக்குதல் எனப் பல்வேறு வழிகளில் சிறுவர்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் 1995 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி சுமார் ஒருலட்சம் சிறுவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

பிள்ளைகளது உரிமைகளை அவர்களிடமிருந்து பறித்துக்கொள்வோர் அவ்வுரிமைகளைப் பாதுகாப்பதில் பொறுப்பாளியான வளர்த்தோரேயாவார். சிறுவர் உரிமைகள், வீட்டில், பாடசாலையில் வேலைத்தளங்களில் மற்றும் பல்வேறு இடங்களில் பல்வேறு

சந்தர்ப்பங்களில் மறுக்கப்படுகின்றன. இங்கு வளந்தோர் என்பது பெற்றோர், மூத்த சகோதர சகோதரியர், உறவினர், அயலவர்கள், ஆசிரியர்கள், பாதுகாவலர்கள், வளர்ப்புப் பெற்றோர், வேலை கொள்வோர் போன்றோரையும் சாரும்.

எனவேதான் சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து நாளைய நற்சமுகத்தை உருவாக்க வென ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் அநேக நாடுகளில் யுனிசெப் போன்ற இணை நிறுவனங்களில் உதவியுடன் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குதல், சிறுவர் உரிமைகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற முயற்சிகள் அரசினாலும் அரசு சாரா நிறுவனங்களினாலும், உள்ளூர் அமைப்புக்களாலும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. என்றாலும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்ற தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

எனவே வீட்டிலிருந்து ஆரம்பிக்கக் கூடிய " பாரபட்சம் காட்டாமை " வலுப் பெறக்கூடிய அடுத்த இடமாக ஆரம்பப் பாடசாலை கள் அமைகின்றன. சிறுவர் உரிமை மீறல் களைத் தடுக்கக் கூடியவர்களாக ஆரம்ப ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். "இங்கு சகல பிள்ளைகளும் இன, மத, மொழி, சாதி, பொருளாதார வேறுபாடுகள் இன்றி சமத்துவமாக நடத்தப்படல் வேண்டும்."

பிள்ளைகளின் உரிமைகளை வழங்குவதிலும் பாதுகாப்பதிலும் ஆசிரியர்கள் மிக முக்கிய பொறுப்பு வாய்ந்தவர்கள். ஆசிரியர்கள் பிள்ளைகளை உடல், உள ரீதியாக வளர்த்து ஆளாக்குபவர்கள். கண்காணிப்பவர்கள் ஆவார். பெற்றோருக்கு சமமான உரிமைகள் பல பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்களிடம் உண்டென்பதை சட்டம் ஏற்றுக்கொள்கின்றது. பிள்ளைகளது எதிர்காலத்தை நெறிப்படுத்துவதில் தீர்மானம் மேற்கொள்ளும்போது ஆசிரியர்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள், பெற்றோரது பொறுப்புக்களையும் தாண்டிச்செல்லும் பலம் பொருந்தியது.

எனவே ஆசிரியர்கள் சிறுவர் உரிமைகளைத் தெளிவாக அறிந்து அதன்படி அவர்களுக்கு உரிமைகளை வழங்குவதோடு மட்டுமன்றி அவர்களது உரிமைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை அவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், சமூகத்திற்கும் வழங்கி சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து அவர்களைப் பாதுகாத்து ஆரோக்கியமான நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பெரும் பணியாற்ற வேண்டியவர்களாவர்.

**முஹமட்கிறாஜ் சித்தீஹலீமா**
ஆரம்பக்கல்வி - C

* மகிந்தோதய ஆய்வுகூடம் எனப்படுவது....
சகல இடைநிலைப் பாடசாலைகளிலும் மகிந்தோதய ஆய்வு கூடத்தை நிறுவ அரசு எதிர்பார்த்துள்ளது. அதில் சகல வசதிகளும் கொண்ட கணித, விஞ்ஞான ஆய்வு கூடம், மொழியியல் ஆய்வு கூடம் மற்றும் நெனச தொலைக்காட்சி கல்விப் பிரிவுகளைக் கொண்ட பல்வகை அம்சங்கள் இருக்கும்.

# நம் முன்னோர்களின் எல்லாச் செயல்களும் ஒரு தெளிவான சிந்தனையை நோக்கியே பயணித்துள்ளன....

இன்று நாம் அற்புதமான ஓர் அறிவியல் சார்ந்த விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அறிவே வளம், அறிவே பலம், அறிவே அனைத்தும் என்பதே இந்த நவீன யுகத்தின் அசைக்க முடியாத சித்தார்ந்தமாக இருக்குதென்றால் நம் முன்னோர்களின் வழிகாட்டல்கள், செயல்கள், தூய சிந்தனைகள் கண்டுபிடிப்புக் களெல்லாம் பல சவால்களுக்கும் ஈடுகொடுத் தமையே ஆகும். இதனாலேயே பொறியியல், புவியியல், வானவியல் போன்ற பல்வேறு துறைகளிலும் மெய்சிலிர்க்கும் வண்ணம் தமது செயல்களை முன்னெடுத்துச் சென்று இன்று இவை அனைத்தும் விருட்சமாக வளர்ந்து நிற்பதனை நாம் உணர முடிகிறது.

இந்த வகையில் நம் தமிழரின் பண்பாட்டையும் கலாசாரத்தையும், பெருமைகளையும் உலகுக்கு எடுத்துக் காட்டுகின்ற கோயில்களில் ஒன்றான சிதம்பரம் பொறியியல், புவியியல், வானவியல் போன்றவற்றின் உச்சக்கட்ட நுட்பமாக மிளிர்கின்றது. சிதம்பரக்கோயில் இந்தியாவில் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் என்னும் ஊரில் உள்ளது. இத்தலமானது பஞ்ச பூதத்தலங்களில் ஆகாயத் தலமாகும். "மனிதனின் உடம்பும் கோயில் என்பதை விளக்கும் வகையில் சிதம்பரம் அமைந்துள்ளது. மனித உடலில் ஒன்பது வாசல் இருப்பதைப் போல இக் கோயிலுக்கும் ஒன்பது வாசல்கள் உள்ளன. இக் கோயிலின் சிறப்புக்களில் ஒன்று யாதெனில்; பஞ்சபூத தலங்களில் காற்றைக் குறிக்கும் காலஹஸ்தி ஆலயமும், நிலத்தைக் குறிக்கும் காஞ்சி ஏகாம்பரரேஸ்வரர் ஆலயமும், இவ் ஆலயமும் ஒருமித்து ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளன. அதாவது சரியாக $79^{\circ}$ $49^{\circ}$ தீர்க்க ரேகையில் அதாவது கிழக்கு நெட்டாங்கு அமைந்துள்ளது. அத்துடன் உலகில் பூமத்திய ரேகையின் மையப் பகுதியிலேயே சிதம்பரக் கோயில் அமைந்துள்ளது."

இந்த ஆலயத்தின் விமானத்தின் மேல் இருக்கும் பொற்கூரை 21600 தங்கத் தகடுகளைக் கொண்டது. இது மனிதன் ஒரு நாளைக்குச் சராசரியாக 21600 தடவைகள் சுவாசிக்கின்றான் என்பதைக் குறிக்கின்றது. இந்த 21600 தகடுகளை 72000 ஆணிகளால் அறையப்பட்டுள்ளன. இந்த 72000 ஆனது மனித உடலில் இருக்கின்ற மொத்த நாடிகளின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. உடலிலுள்ள சகல பகுதிகளுக்கும் இரத்தத்தைக் கொண்டு செல்லும் அனைத்து நாடிகளும் அடங்கும். எமது உடலில் இதயமானது இடது பக்கம் சாய்ந்துள்ளது. அதே போல் இவ்வாலயத்தில் மூலவர் கருவறையின் நடுப்புள்ளியில் இல்லை. சற்று இடது புறமாக அமைந்துள்ளது. இந்த இடத்தை அடைய ஐந்து படிகள் ஏற வேண்டும். இந்தப் படிகளை "பஞ்சாட்சர படி" என அழைப்பர். சிவாயநம என சிந்தித்தால் இறைவனை அடையலாம் என்பதனையே இது குறிக்கின்றது. கனகசபை எனைய கோயில்களைப் போன்று நேரான வழியாக இல்லாமல் பக்க வாட்டில் வருகிறது. இந்த கனகசபையானது நான்கு தூண்களால் தாங்கப்படுகிறது. இவை நான்கு வேதங்களையும் குறிக்கின்றது.

1. கருவறையில் 28 தூண்கள் உள்ளன. இவை 28 சிவாகமங்களையும், சிவனை வழி

படுகின்ற 28 வழி முறைகளையும் குறிக்கின்றன. இத் தூண்கள் 64 மேற்பலகைகளைக் கொண்டுள்ளன. இது 64 கலைகளைக் குறிக்கின்றது. இதன் குறுக்கில் செல்லும் பல பலகைகள் உடலில் ஓடும் பல இரத்த நாளங்களைக் குறிக்கின்றது. பொற் கூரையின் மேல் இருக்கும் 9 கலசங்கள் 9 வகையான சக்தியைக் குறிக்கின்றன. அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள் 6 சாஸ்திரங்களையும், அர்த்த மண்டபத்தின் அருகில் உள்ள மண்டபத்தில் 18 தூண்கள் 18 புராணங்களையும் குறிக்கின்றன. இந்த ஆலயத்தின் நான்கு திசைகளிலும் ஏழு அடுக்குடைய கோபுரங்கள் உள்ளன. மேற்கு மற்றும் கிழக்கு கோபுரத்தில் 160 அடி உயர முடையவை. இதில் கிழக்குக் கோபுரத்தில் பரத நாட்டியத்திலுள்ள 108 தோற்றங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

அணுத்துகள் விஞ்ஞானத்தை விளக்க வந்த உலகின் மிகப் பெரும் பௌதிகவியல் விஞ்ஞானி டாக்டர் பிரிட்ஜாஃப் காப்ரா நடராஜரின் நடனத்தைக் கண்டு அதிசயித்திருந்தார். அணுத்துகள்விஞ்ஞானம் கற்க விரும்புவோர் முதலில் நடராஜரின் நடனம் பற்றி அறிய வேண்டும் என்றார். நவீன உபகரணங்கள் மூலமாக அணுவில் உள்ளே துகள்கள் நடனமிடும் அற்புதக் காட்சியைப் படம் பிடித்து அதை அப்படியே நடராஜரின் நடனத்துடன் ஒப்பிடும் காட்சியைப் பார்த்த விஞ்ஞானிகள் வியந்தனர். ஆக விஞ்ஞானம் வியக்கும் மெஞ்ஞானம் நடனம் நம் சிதம்பர நடராஜரின் நடனம் என்பதை அறியும் போது நம் மெய் சிலிர்க்கின்றது அல்லவா!

2. நம் தமிழரின் பெருமைகளை அறிந்து கொள்வதற்கு எத்தனையோ படைப்புக்கள் இருந்த போதிலும் சிறந்த எடுத்துக்காட்டாக தில்லை நடராஜர் ஆலயத்தைக் குறிப்பிடலாம். இந்தத் தகவல்களின் அடிப்படையில் நம் முன்னோர்களின் பொறியியல், புவியியல், கணிதவியல், மற்றும் உயிரியல், வானவியல் பற்றி எந்த அளவிற்கு அறிந்திருந்தார்கள் என்பது தெரிகிறது. எனவே தான் நம் முன்னோர்களின் எல்லாச் செயல்களும் ஒரு தெளிவான சிந்தனையை நோக்கியே பயணித்துள்ளன. என்பதற்கு சிதம்பரக் கோயிலின் அமைப்பு ஒரு சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

**ஜெயசீலி யூட் நிரஞ்சன்**
*கிறிஸ்தவநெறி*

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

* ஆசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்படும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளின் மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம், தாய்மொழி மற்றும் இரண்டாம் மொழிக்காக கற்றல் சந்தர்ப்பங்களை வழங்கும் வகையில் **நெனச** என்ற கல்வித் தொலைக்காட்சிச் சேவை தொடங்கப்பட்டுள்ளது.
* தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் அடிப்படையில் வருடம் ஒன்றுக்கு 85,000 மாணவர்கள் புலமைப் பரிசில் வழங்குவதற்காக தெரிவுசெய்யப்படுகின்றனர்.

(தகவல் - கல்வி அமைச்சு 2012)

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

# "அடக்கம் அமரருள் உய்க்கும்"

அடக்கம் அமரருள் உய்க்கப்படும் என்கிறது நீதிநூல். வையத்து வாழ்வாங்கு வாழ்கின்ற ஒருவன் எவ்வாறு அடக்கம் உடையவனாக வாழ்கிறானோ அவன் இம்மை மறுமைப் பயன்களை அடைய முடியும். இவ்வுலகிலே போற்றப்படுகின்ற ஒருவராக வாழ்வதற்கு அடக்கம் அவசியமாகின்றது. இதனாலேதான் உலகப் பொதுமறையாகிய திருக்குறளைத் தந்த பொய்யாமொழிப் புலவனாகிய வள்ளுவன் தனது 133 அதிகாரத்தில் ஒரு அதிகாரத்தை அடக்க முடமை எனும் தலைப்பிலே தந்துள்ளான்.

குறளிலே நாவடக்கம் முதன்மை பெறுகின்றது. வள்ளுவனும்

"யாகாவார் ஆயினும் நாகாக்க - காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு"

என்றார். நாம் எதனைக் காக்கா விட்டாலும் நாவடக்கத்தைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்கா விட்டால் தீராத பழிக்கு ஆளாக வேண்டும். அடக்கமின்றி நாம் பேசுகின்ற பேச்சானது வடுப்போல் அழியாது இழி நிலையை ஏற்படுத்தும். இதனை வள்ளுவர்

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் - ஆறாதே
நாவினால் சுட்ட வடு

என்று கூறுகின்றார். இது போலவே சிலப்பதிகாரத்தில் பாண்டியனுடைய அடக்கமின்மையே கோவலன் கொல்லப்படக் காரணமாயிற்று. கோவலன் இறந்த செய்தியைக் கேட்ட கண்ணகி பொறுமை காக்கமுடியாதவளாகி வெஞ்சினம் கொண்டதாலே பாண்டி மாநகர் பற்றி எரிந்தது. இவை எல்லாம் அடக்கமின்மையால் ஏற்பட்ட அழிவாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது.

இராமாயணத்திலே கூட அடக்கமின்மை யினால் ஏற்பட்ட அழிவுகள் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. சிவன் நெறி தவறாத இராவணன் இராமனுடைய சொல் கேட்டு அடக்கமுடன் வாழ்ந்திருந்தால் இலங்கை வேந்தனாகவே இறுதி வரை வாழ்ந்திருக் கலாம். மானவீரன் கும்பகர்ணன் மடியாமல் இருந்திருக்கலாம். விபிஷணன் போல ஆட்சியைப் பெற்றிருக்கலாம்.

மற்றொரு இதிகாசமாகிய மகாபாரதம் கூட அடக்கமுடைய பாண்டவர்கள் பல்வேறு இடர்களை சந்தித்த போதும் இறுதியில் வெற்றி பெற்றதையும், வெஞ்சினம் கொண்டு யுத்தத்துக்குத் துணிந்த கௌரவர்கள் வீழ்ந்து மடிந்ததும் அடக்கமின்மையே காட்டுகின்றது. கிருஷ்ண பரமாத்மாவிடம் உதவி வேண்டிச் சென்ற துரியோதனனும், அர்ச்சுனனும் ஒரே நேரத்தில் சென்ற போது அர்ச்சுனன் பொறுமை காத்தவராய் கிருஷ்ணபரமாத்மாவை தன்னுடன் இணைத்துக் கொண்டான். அடக்கமின்றி அவசரப்பட்ட துரியோதனன் ஆயுதங் களையே கோரி நின்றான். ஆகவே அதுவே அழிவுக்குக் காரணமாகின.

நாலடியாரில் கூட எவை பயனற்றவை எனக் கூறும் போது

ஆபத்துக்கு உதவாப் பிள்ளை
அரும்பசியைத் தீரா அன்னம்
தாகத்தைத் தீரா தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டீர்
கோபத்தை அடக்காத வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாவத்தைத் தீரா தீர்த்தம்
பயனில்லை இவ் எழும் தானே

என்ற பாடல்கள் மூலம் ஒரு நாட்டை ஆட்சி செய்கின்ற அரசன் கோபத்தை அடக்கி

ஆட்சி செய்யாவிட்டால் நாடு அழியும் என்று கூறப்படுகின்றது.

சங்க இலக்கியங்களிலே கல்வி அறிஞர் களது அடக்கம்; முற்றிய நெற்கதிர்களுக்கு ஒப்பிடப்படுகின்றது. நெற்கதிரானது வளர்ந்து முற்றி தலை சாய்த்து இருப்பது போல அறி ஞர்கள் அடக்கமுடையவராக இருப்பார்கள் என்று கூறப்படுகின்றது.

அது போலவே தாட்சாயினியின் பொறு மையும் அடக்கமுமே அவள் சிவனை அடை வதற்குக் காரணமாயிற்று.

பெரிய புராணத்திலும் நாயன்மாரது அடக்கம் அவர்களைத் தெய்வ நிலைக்கு உயர்த்தியது.

சுந்தரருடைய திருத்தொண்டர் தொகை அடக்கத்துக்கு சிறந்த அணிகலனாக விளங் கியது. தான் ஓர் பிராமணராக இருந்தும் எல்லா சாதி அடியவர்க்கும் அடி பணிந்து திருத்தொண்டர் தொகையைப் பாடியிருந் தார். இதனைத் திருத்தொண்டர் தொகையில் காண முடிகின்றது. எடுத்துக் காட்டாக

'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கு
அடியேன்'

என்ற பாடல் மூலம் இதனைக் காண முடிகின்றது. எனவே இத்தகைய இலக்கி யங்கள் எல்லாம் ஒவ்வொரு மனிதனும் அடக்கமுடன் வாழ்வதற்கு வழிகாட்டி யாகவே அமைந்தவை என்றால் மிகை ஆகாது. எனவே ஒவ்வொருவரும் பெரியோர்களை மதித்து, கீழ்ப்பணிந்து அடக்கம் எனும் பண்பை இறுதிவரை கடைப்பிடிப்போமானால் வாழ்க் கையில் வெற்றி பெறலாம்.

**தாரணி இராஜேந்திரம்**
இந்துசமயநெறி

* தேசியக் கல்வியியற் கல்லூரிகள் ஊடாக வருடாந்தம் 3200 பேர் 25 பாடநெறிகளுக்காகத் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

* நாடெங்கும் 104 ஆசிரிய பயிற்சி மத்திய நிலையங்கள் உள்ளன. (Teacher Centre) இவை தொடர்ச்சியான ஆசிரிய பயிற்சி வேலைத் திட்டங்களை அமுற்படுத்துகின்றன.

# நினைவுப் பெருவெளி

*கார்காலம் கதவருகில்*
*துளிர்த்து சிலிர்க்குது*
*நினைவு மழை...*

*சுருள்வதும் வளைவதுமாய்*
*தேநீராவி ... அதனோடு*
*கனதியற்று மிதந்து*
*செல்லும் கனவுமுகில்!*

*விஞ்ஞானியாக பிரபஞ்சத்தில்*
*பிறப்பெடுப்பு... பின்பும்...*
*ஈர்ப்புவிசை காற்றமுத்தம்*
*இரண்டும் ஒன்றாய்...*

*இதயம் இறகு கொள்ளும்!*
*நினைவுப் பெருவெளியில்...*
*வாழ்வோடையின் நினைவுப்பூக்கள்*
*புரண்டோடும் காலவெள்ளம்*

*புதரைமூடும் புழுதிமூட்டமாக*
*நினைவலை சுருளும்*
*வானக் கண்கள் பனிக்கும்*
*புழுதியடங்கும் போதில்*
*மீண்டும் துளிர்த்துச் சிலிர்க்கும்*
*நினைவு மழை...*

**ஸ்ரெல்லா ஜீவநாயகி யூட்ஸ் வசந்தகுமார்**
*ஆரம்பக்கல்வி - D*

## முதலாம் வருட மாணவர்கள்



**( இ - வ ) இருப்போர் :-** திருமதி. ஜ. வசிலா. , திருமதி. அ. நஜீமா , வீ. கருணலிங்கம் ( உப அதிபர் ) வே. கா. கணபதிபதிப்பிள்ளை (அதிபர்), அ. மு. மொஹமட் பஜ்மீர், திருமதி. ச. அம்பிகாதேவி, திருமதி. செ. அன்பரசி,

**(இ - வ ) நிற்போர் :-** திருமதி. சி. மேரியன் டினோளி, திருமதி. ஜோ சுபாஷினி, திருமதி பிரான்சிஸ் மேரிஜுலீயட், திருமதி. நி. ரேணுகா, செல்வி தே. ரமணி, திருமதி. பா. ஞானசெல்வி, திருமதி தி. மிருணாளினி, திருமதி. சு. மலர்வதனி

**சமூகமளிக்காதோர் :-** திருமதி. மொ. அஸ்மியா

# சிறுவர் கலைகளும் உளவியலும்

உளவியல் என்பது மனித நடத்தை மற்றும் உளக்கோலங்கள் பற்றிய விஞ்ஞான பூர்வக்கற்கை ஆகும். உளவியலின் பண்புகள், வடிவங்களைக் கொண்டு உளவியல் பலவாறு பிரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் குழந்தை உளவியலானது என்றும் இல்லாத அளவிற்கு இன்று உன்னத நிலையைப் பெற்று வருகின்றது. இன்றைய மனித நடத்தையில் குழந்தை உளவியல் பாரிய செல்வாக்குச் செலுத்துவது போல் எதிர்கால சமூகத்தின் வாழ்விலும் வளத்திலும் குழந்தை உளவியல் முக்கியமானதாக உணரப்படுகின்றது.

குழந்தை உளவியலானது பிரயோக நிலைக்கப்பாற்பட்டது. குழந்தையின் வளர்ச்சியிலும் நேரடியாக பங்களிப்புச் செய்கின்றது என்பதனை குழந்தைச் சித்திரங்களை ஆராய்ந்த உளவியலறிஞர்கள் கருத்துக்களிலிருந்து புலனாகின்றது. மேலும் பல்நிலை செயற்பாடுகளூடாகவும் இது வெளிப்படுகின்றது. அக் கலைகளானது

- ♦ விளையாட்டு
- ♦ ஆக்கம்
- ♦ அழகியல்
- ♦ மொழித்திறன்

எனப் பலவாகும். குழந்தைகளின் உடல், உள, மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சிகளில் விளையாட்டுக் கலையானது சிறந்த இடத்தை பெறுகின்றது. "வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்" என்பது எம் மத்தியில் வழங்கிவரும் உளவியற் பொருண்மை கொண்ட முதுமொழியாகும்.

நவீன உளவியலாளர் குழந்தைகளின் விளையாட்டுக்கள் குழந்தைகளுக்கான விளையாட்டுக்கள் முதலிய துறைகளில் விரிவாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள். சிறுவர்களின் விளையாட்டுக் கலைகளைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம். இயல்பான உடல், உள எழுச்சி இயக்கங்களோடு இணைந்த விளையாட்டுக்கள் அதாவது தாமாகவே ஆடுதல், துள்ளுதல், சிரித்தல் கற்பனை செய்தல் முதலியவற்றோடு இணைந்த விளையாட்டுக்கள்.

**பாவனை விளையாட்டுக்கள்**

அதாவது பிறரின் செயல்கள் நடவடிக்கைகள் போன்றவற்றைத் தாமே செய்து விளையாடி மகிழ்ச்சியடைதலும் இசைவாக்கம் செய்தலும்.

**நாடகப்பாங்கான விளையாட்டுக்கள்**

தமக்குப் பிடித்தவற்றை மீளநடித்தல், பாத்திரங்களை ஏற்று நடித்தல் விளையாடுதல் முதலியவை இப் பிரிவில் அடங்கும்.

**நட்பை உண்டாக்குவதற்கான விளையாட்டுக்கள்**

இவை தொடர்பாடல் விளையாட்டுக்கள் என்றும் விளக்கப்படும். அதாவது பிறருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் புரிந்துணர்வை வளர்ப்பதற்கும் குழந்தைகள் மேற்கொள்ளும் விளையாட்டுக்கள்.

**தனிமை நாட்ட விளையாட்டுக்கள்**

குழந்தைகள் ஏனைய குழந்தைகளைக் கருத்திற்கொள்ளாது தாமாகத் தனித்து விளையாடுதல்.

**பங்குபற்றா விளையாட்டுக்கள்**

ஏனைய குழந்தைகள் விளையாடும் போது அவற்றிலே பங்குபற்றாது பார்வையாளராக இருந்து அனுபவிக்கும் விளையாட்டுக்கள்.

**இடைவினை பெறாத விளையாட்டுக்கள்**

அதாவது இயங்காத பொம்மைகளுடன் விளையாடும் விளையாட்டுக்கள்.

**கூட்டுறவுப் பாங்கான விளையாட்டுக்கள்**

அதாவது பிறருடன் சேர்ந்தும் விட்டுக் கொடுத்தும் உதவி செய்தும் தமது சந்தர்ப்பத் துக்காகப் பொறுத்திருந்தும் மேற்கொள்ளும் விளையாட்டுக்கள்.

**நடிபாங்கு ஏற்கும் நாடகப் பாங்கான விளையாட்டுக்கள்**

தாமே தனித்து நடித்தல், பிறருடன் இணைந்து நடித்தல் முதலிய விளையாட்டுக் கள் இதில் அடங்கும்.

எனவே, மேற்கூறப்பட்ட விளையாட்டுக் களினூடாக அறவொழுக்கம், கட்டுப்பாடு, ஆண், பெண் வேறுபாடுகள் உணர்ச்சி வெளிப் பாட்டிற்குரிய சொற்கள் துணை நிற்கின்றன. தம்மைப் பற்றிய தற்காட்டுதலை வளர்த்துக் கொள்வதற்கும் விளையாட்டுக்களே துணை செல்கின்றன. மேலும் சரியான நடத்தைகள் நேர்மீள வலியுறுத்துவதற்கும் பிழையான வற்றுக்கு எதிர் மீளவலியுறுத்தல் வழங்கு வதற்கும் இவ் விளையாட்டுக்கள் துணை போகின்றன. இவற்றின் காரணமாக நடத்தை உருவாக்கத்திற்கு விளையாட்டுக்கள் பெரிதும் துணை நிற்கின்றன. அடுத்து சிறுவர்களின் ஆக்கத்திறன் கலையானது கல், கடதாசி, தடிகள் முதலியவற்றை வைத்து கடை விளை யாட்டு நடத்துதல் சிறுவர்களின் படைப் பாற்றல் மலர்ச்சியை வெளிப்படுத்தும் கிறுக்கல் சித்திரங்கள், படங்களை வரைந்து கற்பனை யாற்றலைக் கூறுதல் போன்றனவும் சிறுவர் களின் ஆக்கக் கலையை வளப்படுத்துகின்றன.

ஆடல், பாடல், அபிநயத்தல் போன்ற வற்றின் மூலம் அழகியற்கலைகள் விருத்தி யடைகின்றன. இயல்பாகவே ஆடிப் பாடி மகிழ்வர். மன வெழுச்சிகளை அடக்கும் திறன், திசை, திருப்பும் திறன் போன்றவை வளர்ந் தோரிடம் காணப்படலாம். ஆனால் சிறாரைப் பொறுத்தவரை மனவெழுச்சி வெளிப்பாடு கள் கட்டுப்பாடுகளற்ற வெளிப்பாய்ச்சலாகக் காணப்படும்.

மனவெழுச்சி இரண்டு வகையாக நோக் கலாம். பயம், கோபம், பொறாமை, பதகளிப்பு, மகிழ்ச்சிதராத மனவெழுச்சிகள் ஆகும். மகிழ்ச்சி, அன்பு, உற்சாகம், காதல் என்பன மகிழ்ச்சி தரும் மனவெழுச்சியாகும். சிறார் நிலையில் உண்டாகும் பயம், நிலை கொள் பயமாக மாறி, வளர்ந்தோர் நிலையிலும் விருத்தியடைந்து சென்றுள்ளமை ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளன.

எனவே மேற் கூறப்பட்ட விடயங் களைத் தொகுத்து நோக்கும்போது சிறுவர் கலைகளுக்கும் உளவியலுக்கும் நெருக்கமான பிணைப்புக் காணப்படுகின்றமையை, குழந் தைச் சித்திரங்களை ஆய்வு செய்தோர் வெளிப் படுத்தியுள்ளனர்.

**செல்வநாயகம் சுபா**
*சித்திரநெறி*

* இலங்கையின் எழுத்தறிவு வீதம்

| | |
|---|---|
| 1994 இல் | *87.2%* |
| 2005 இல் | *91%* |
| 2011இல் | *96.4%* |

# USES OF SONGS AND RHYMES FOR THE PRIMARY CHILDREN

Children learn a language faster than adults. They learn through fun activities. At the primary level in order to appeal to young learners learning styles songs and rhymes can be very effective tools for teaching a language. These tools can be used in primary classes to utilize young learners natural ability to learn a language.

Songs and rhymes play an important role in the development of primary children. songs and rhymes are used in language teaching classrooms all over the world. Now we'll see how they are useful for the primary children. Songs and rhymes are helping to improve the listening skills and pronunciation. They help in the teaching of vocabulary and sentence structures. An advantage of using songs and rhymes in the primary classroom is their flexibility. They help to improve young learners speaking skills.

The greatest use of songs and rhymes in the primary classrooms is that children can be fun. They reflect culture in the language songs and rhymes which are enjoyable. In primary classes most children enjoy singing them. They stimulate interest and attention songs and rhymes which can help maintain classroom motivation. They can help to create a relaxed and informal atmosphere that makes the classroom a non - threatening environment. Songs and rhymes are good entertainment.

Songs and rhymes are valuable teaching tools. The teacher needs to take care in selecting a suitable one for primary children. They develop language learning.

Primary children can get these uses through songs and rhymes. They are valuable learning tools. Children can improve their listening, vocabulary, sentence structures etc. So, songs and rhymes are very enjoyable tools for the primary children.

**Ratinam Abhyrami**
*Primary - D*

* இலங்கையின் தகவல் தொழில்நுட்ப அறிவு வீதம்

| | |
|---|---|
| 2005இல் | *16%* |
| 2011இல் | *38%* |

# சாரணர் வாழ்க்கை

பாடசாலைக் காலத்தில் இருந்தே இளைஞர்களிடம் ஓர் ஆற்றல் காணப்படு கிறது. அதற்கு சிறந்த ஓர் அமைப்பாக 1907ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆரம்பித்த சாரண அமைப்பு விளங்குகிறது. அதன் தந்தையாக பேடன் பவல் பிரபு சிறிய வயதில் தனது வாழ்க்கைக் காலத்தில் அனுபவித்த படகோட்டம், மலையேற்றம், வனவாசம் சமையற்கலை இயற்கையை இரசித்தல் என அற்புதமான இயற்கையோடு ஒன்றித்த வாழ்க்கையை ஏனைய இளைய சமுதாயத் திற்கும் விட்டும் சென்றுள்ளார். இன்று 250 நாடுகளுக்குமேல் பல கோடி இளைஞர்கள் சாரணியத்தைப் பின் பற்றுகின்றனர்.

சாரண அமைப்பில் அங்கத்துவம் பெறும் பாடசாலை மாணவர்கள் எவ்வித தடைகளும் அற்ற சிறப்பாக தொடர் சேவைகளைப் புரிந்து வருகின்ற போது இறுதியில் தேசிய ரீதியிலான பதக்கத்தினைப் பெறுகின்றனர். இதன் மூலம் பெறும் ஜனாதிபதி விருது தேசிய ரீதியானதும் பல்கலைக்கழகத்திற்கு உள் நுழைவதற்குரிய (கட்டவுட்) தடையில் 20 வீத புள்ளியை மேலதிகமாகப் பெற்றுக் கொடுக்கின்றது.

சாரண ஆசிரியர் எவ்வாறு உருவாவது? மாணவர்களை எவ்வாறு உருவாக்குவது? அவர்களை எப்படி வழி நடாத்துவது? என பல் வேறு கேள்விகள் உங்கள் மனதில் இருக்கும் அவ்வாறான மன நிலையைப் போக்கும் ஒரு ஆக்கமாக இக் கட்டுரை அமைகிறது.

சாரண பிரிவுகள் வயது அடிப்படை யில் அமைந்தன இவை

- ☆ குருளைச் சாரணன் (CUB SCOUT) - 07 வயது தொடக்கம் 11 வயது வரை.
- ☆ சாரணன் (SCOUT) - 11 வயது தொடக்கம் 18 வயது வரை.
- ☆ திரிசாரணன் (ROCER SCOUT) - 17 வயது தொடக்கம் 24 வயது வரை.

- ▼ இவ்வயதுகள் பிறந்த ஆண்டு திகதியுடன் ஒப்பிட்டுக் கணித்து அவர்கள் உள்ள வயதில் இணைக்க வேண்டும்.

ஆரம்பக்கல்வி மட்டும் உள்ள பாட சாலையில் 7 வயது பூர்த்தியான (ஆண்/ பெண்) மாணவர்களை சாரணியம் எனும் அமைப்பில் இணைத்தல் அவர்களை குழுவாகவும் அல்லது அணியாகப் பிரித்தல் (06 பேர் கொண்டதாக) அவற்றில் தலைவர், செயலாளர், பொருளாளர் என கடமைகளை வழங்கல் அவர்களுக்கு குருளைச் சாரண பாடவிதானத்தை வழங்கி அதன் மூலம் அவர்களை வழிப்படுத்தவும் தேவை ஏற்படின் மாவட்ட சாரண ஆணை யாளரைக் கொண்டு உதவிகள் பெறலாம்.

**குருளைச் சாரணர்கள்**

- ▼ வெண்கல தாரகை
- ▼ வெள்ளி தாரகை
- ▼ தங்க தாரகை பெற முடியும்.

ஆரம்பக்கல்வி தவிர்ந்த ஏனைய பாட சாலையின் சாரண அமைப்பில் 11 வயது முடிந்த மாணவனை இணைக்க முடியும். இவர்கள் 18 வயது வரையும் சாரண அமைப் பில் அங்கத்துவம் பெறலாம்.

**சாரணர்கள்**

**படிநிலை - 01**

அங்கத்துவ சின்னம் (Membership Badge) புதிதாக இணைந்த 2 மாதங்களின் பின்னர் வழங்குதல்

**படிநிலை - 02**

சாரணர் விருது (Scout Award) இச் சின்னம் அங்கத்துவம் பெற்று குறைந்தது 06 மாதத்திற்குப் பின்னர் பெறமுடியும். 02 கலைச் சின்னம் பெற வேண்டும். வயது எல்லை 12 - 18 ஆகும்.

**படிநிலை - 03**

மாவட்ட ஆணையாளர் நாடா (District Commissioners Cord) இச்சின்னம் 12 வயதிற்குப் பின்னர் சாரணர் விருது பெற்று குறைந்தது 09 மாதத்திற்குப் பின்னர் பெற முடியும். வயது எல்லை 14 - 18 ஆகும். 04 கலைச்சின்னம் பெற வேண்டும்.

**படிநிலை - 04**

வினைத்திறன் அலங்காரம் 15 வயதிற்குப் பின் 18 வயது வரை பெறமுடியும். அதி கூடிய நடை பயண சின்னம் பெற வேண்டும்.

**படிநிலை - 05**

பிரதம ஆணையாளர் விருது (Presidents Scout Award) இச்சின்னம் 15 வயதின் பின்னர் மாவட்ட ஆணையாளர் நாடா பெற்று 06 மாதத்திற்குப் பின்னர் பெற முடியும். வயது எல்லை 15 - 18 ஆகும். 06 கலைச்சின்னம் பெற வேண்டும்.

**படிநிலை - 06**

ஜனாதிபதி சாரணர் விருது (Presidents Scout Award) 16 வயதின் பின்னர் பிரதம ஆணையாளர் விருது பெற்று 06 மாதத்திற்குப் பின்னர் இவ் விருதினைப் பெற முடியும். வயது எல்லை 16 - 18 ஆகும். 06 கலைச்சின்னம் பெற வேண்டும்.

இவ்வாறான 06 படிநிலைகள் ஊடாக பயணிப்பானாயின் ஜனாதிபதி சாரண விருதைப் பெற முடியும். இதனை சாரண ஆசிரியரும் உயரிய பயிற்சியினைப் பெற்றுத்தான் மாணவனை வழிப்படுத்த வேண்டும். அப்போது தான் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடாக அமையும்.

**ஆசிரியர் பயிற்சி நெறி**

| | |
|---|---|
| கலைக்கூறு 01 | - சாதாரண 2 நாட்கள் கொண்ட பயிற்சி (பகல்) |
| கலைக்கூறு 02 | - 3 நாட்கள் கொண்ட பயிற்சி (பகல், இரவு) |
| கலைக்கூறு 03 | - ஒப்படை தயாரித்தல் நேர்முகத்தேர்வு நடைபெறும். (மாணவனைக் கொண்ட செயற்பாடு) |
| கலைக்கூறு 04 | - உயர் பயிற்சி 6 நாட்கள் கொண்டதாக அமையும் (இரவு பகல்) |
| கலைக்கூறு 05 | - ஒப்படை (புத்தக வடிவம்) மாணவரைக் கொண்டு சேவை தொடர்பான ஒரு ஆய்வு, நேர்முகத்தேர்வு நடைபெறும். |

வெற்றிகரமாக கலைக்கூறு 01 முடித்தால் நியமன கடிதம் வழங்கப்படும். தொடர்ந்து 2 மாதங்களுக்குப் பின் இரண்டு வருடங்களுக்குள் கலைக்கூறு 02 முடிக்க வேண்டும். இதன் மூலம் நியமன ஆணைப்பத்திரம் வழங்கப்படும். பின்னர் 6 மாதங்களுக்குள் கலைக்கூறு 03 ஒப்படை தயாரித்து கலைக்கூறு 04 இல் பங்கு பற்ற வேண்டும். இது ஓர் உயர் பயிற்சி ஆகும். 2 ஆண்டுக்குள் கலைக்கூறு 05க்குரிய செயற்பாட்டை செய்து புத்தகம் (ஒப்படை) சமூக சேவை பற்றியது கொடுக்க வேண்டும். இதன் மூலம் தரு சின்னம் (Wood Badge) கிடைக்கும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் தடைகளைத் தாண்டாது விடுவதன் மூலம் மீள முதல் இருந்து அதாவது ஆரம்பத்தில் இருந்து பெறவேண்டும்.

நியமன ஆணைப்பத்திரம் பெற்ற ஒரு சாரண ஆசிரியரே சாரணர்களுக்குத் தலைமை தாங்கும் தன்மையும் அங்கீகாரமும் கிடைக்கும். (இவ் ஆணைப்பத்திரங்களுக்கு நேர்முகத் தேர்வில் புள்ளிகள் உண்டு).

**இலங்கையில் சாரண அமைப்பு**

ஆரம்பத்தில் ஆண்கள் மட்டும் என்றிருந்த சாரண அமைப்பு தற்போது பெண்களும் இணைந்த சாரண அமைப்பாக செயற்படுகின்றது. தற்போது இலங்கையில் சாரண அமைப்பானது நூற்றாண்டைக் (2012) கடந்து ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட சாரணர்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இச் சாரண அமைப்பில் சாரணர்கள், கடற்சாரணர்கள், விமானசாரணர்கள், குதிரைப்படை சாரணர்கள் என பல உட்ப்பிரிவுகளையும் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இத்தோடு கைதிகளாக உள்ளவர்களையும் நன்நிலைப்படுத்தும் நோக்குடன் அனேகமான சிறைச்சாலைகளில் சாரண அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அந்தந்த பிரிவுகளுக்கேற்ற வகையில் அவர்களுக்கென்ற தனி பாடப்பரப்புடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும்.

**சாரண பாசறை**

சாரணர்களுக்கு மனமகிழ்வினை ஏற்படுத்தக்கூடிய ஒரு செயற்பாடு சாரணப் பாசறையாகும். தாங்களாகவே கூடாரம் அமைத்து 3 நாட்கள் தனியொரு இடத்தில் சமையல், வனவியல், குறியீடுகள், படம் வரைதல், சைகைகள், நடைபயணம் என இன்னோரன்ன செயற்பாடுகளைக் கொண்டது. இங்கு அதிகாலை எழுதல், உடல் அப்பியாசம், விளையாட்டு உணவு முறை என வித்தியாசமான ஒரு வாழ்க்கை முறையினை இளைய தலைமுறைக்கு இட்டுச்செல்லும். தாங்களாகவே தங்கள் வேலைகளை சிறுவர்கள் செய்து கொள்ளப் பழகும் ஒரு இடமாக பாசறை வாசம் அமைகின்றது.

**தீப்பாசறை**

இவை பாசறை வாசத்தில் முக்கியமான ஒன்றாகும். இங்கு கலை நிகழ்வுகள் ஆடல், பாடல் என 1.30 மணித்தியாலம் தீயை நடுவில் கொழுத்தி சுற்றிவர வேடுவ வாழ்க்கை முறையுடன் கூடியதாக அமையும். இங்கு கோசம் விளையாடல் என பல்வேறு கோணங்களில் அனைவரும் இணைந்து ஒன்று கூடி மகிழ்வுறும் நிகழ்வாகும்.

**கலைச் சின்னங்கள்**

இவை சமூகசேவை, விளையாட்டு, பொதுச் சேவை, கல்வி, கலைத்துறை, மருத்துவம், இலத்திரனியல் போன்ற துறைகளில் உள்ள பல்வேறுபட்ட சின்னங்கள் 60இற்கு மேற்பட்ட கலைச்சின்னங்களை சாரணன் 15 நாட்களுக்கு உட்படாமல் ஒவ்வொரு சின்னமாகப் பெறவேண்டும். ஒவ்வொரு விருதுகள் பெறுவதற்கும் கட்டாய கலைச் சின்னங்கள் என்பன உள்ளன. அவற்றைப் பெற்றால் தான் சாரணன் அவ் உயரிய விருதினைப் பெறலாம். இக் கலைச் சின்னங்களைப் பெறுவதற்கு பரீட்சகர் என்பவர் உள்ளார். அங்கீகரிக்கப்பட்ட பரீட்சகர்களைக் கொண்ட பட்டியலை மாவட்ட ஆணையாளரிடம் பெற்று அதன் மூலம் சாரணனை வழிப்படுத்த முடியும்.

# பாடசாலையும் சாரண அமைப்பும்

அதிபர் (குழுச்சாரணத் தலைவர்)

↓

பொறுப்பாசிரியர் (சாரணத் தலைவர்)

↓

ஆசிரியர்கள் 2 பேர் (உதவி சாரணத் தலைவர்)

↓

துருப்புத் தலைவர் (அணித்தலைவர் சபைத்தலைவர்)

↓

உதவித் துருப்புத் தலைவர் (உதவி அணித் தலைவர் சபைத் தலைவர்)
ஐந்து அணி 8 பேர் கொண்டது

அணி 1 | அணி 2 | அணி 3 | அணி 4 | அணி 5

- அணித்தலைவர் - 01
- உறுப்பினர் - 06
- உதவி அணித்தலைவர் - 01

**மாவட்டமும் சாரண அமைப்பும்**

தலைவர் (G.A) மாவட்டத்திற்கு ஒன்று (01)
எல்லே தலைவர் - 01
செயலாளர் - 01
பொருளாளர் - 01
உறுப்பினர்கள் 6 பேர் (இவர்கள் சீருடை இல்லாதவர்கள் மாவட்டத்திற்கு உதவி செய்ய)

மாவட்ட ஆணையாளர்கள்

↓

உதவி மாவட்ட ஆணையாளர் - நிர்வாகம், பயிற்சி, நிகழ்ச்சி, குருளைச் சாரணர், பெண்கள், திரிசாரணர், தொடர்பாடல் எனவும்

↓

மாவட்ட சாரணத்தலைவர் எனவும் உள்ளார்கள்.

**பாடசாலையும் மாவட்டமும்**

பாடசாலையில் சாரண அங்கீகாரம் பெற்ற சாரணத் தலைவர் (ஆசிரியர்) இருந்தாலும் அவர் மாணவனை மாவட்ட ஆணையாளர் நாடா பெறுவதற்கும் கலைச் சின்னம் பெறுவதற்கும் மாவட்டத்தோடு இணைத்துத் தான் பெற வேண்டும். பரீட்சகர் உயர் சின்னம் என்பவற்றை மாவட்ட ஆணையாளரே தீர்மானித்து பாடசாலைகளுக்கு ஒழுங்குபடுத்தித்தருவார். சாரண அமைப்பு பாடசாலையுடன் நின்று விடாது வெளிச் செயற்பாடுகளுடனும் தொடர்புபட்டதாக அமைகின்றது.

**தற்போதைய மாவட்ட ஆணையாளர்கள் (வலயரீதியாக)**

- யாழ்ப்பாணம் - (தீவகம், யாழ் கல்வி வலயம் உட்பட்டதாக)

- காங்கேசன்துறை - (வலிகாம கல்வி வலயம் உட்பட்டதாக)
- பருத்தித்துறை - (வடமராட்சி கல்வி வலயம் உட்பட்டதாக)
- கிளிநொச்சி - சாவகச்சேரி கிளிநொச்சி வலயம் உட்பட்டதாக)
- முல்லைத்தீவு - (முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயம் உட்பட்டதாக)
- வவுனியா - (வவுனியா வடக்கு தெற்கு கல்வி வலயம் உட்பட்டதாக)
- மன்னார் - (மன்னார் மடு கல்வி வலயம் உட்பட்டதாக)

**சாரண அங்கத்துவம்**

புதிதாக இணைந்த சாரண மாணவன் தனது அங்கத்துவத்தினைப் பெற வேண்டும். வருடா வருடம் தேசியரீதியில் அங்கத்துவப் பணமாக 100 ரூபா பெற்று ஆசிய சாரணத் தலைமையகத்துக்கு அம் மாணவனின் பெயருக்கு அங்கத்துவம் பெற வேண்டும். மேலும் ஒவ்வொரு வருடமும் தமது அங்கத்து வத்தினைப் புதுப்பிக்க வேண்டும். இதற்கு தேசிய ரீதியான சின்னம் (ரைக்) ஆண்டு பொறிக்கப்பட்டது வழங்கப்படும். இதனை மாவட்ட ஆணையாளர் ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவார்.

**வருடாந்த வேலை வாரம்**

ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் 2வாரங்கள் சாரண வேலை வாரம் நடை பெறும். இதற்கு தேசிய தலைமையகத்தில் இருந்து வேலை வார அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அதனை சாரண அணி பெற்று அவ்வேலைவாரத்தைச் சிறப்பாக மேற் கொண்டு நிதியை சேகரிக்க முடியும். அவ் நிதியில் இருந்து

- பாடசாலைக்கு 55%
- மாவட்ட சாரண சங்கத்திற்கு 20%
- தேசிய தலைமையகத்திற்கு 25%

**முடிவுரை**

ஒட்டுமொத்தமாக சாரண செயற் பாட்டினை நோக்கும்போது மாணவனை நல்வழிப்படுத்தி தமது எதிர்காலச் செயற்பாடு களுக்கு தாங்களே தங்களின் கடமைகளை நிறைவேற்றுபவர்களாகவும் தமது குடும்ப சமூகம் தேசியம் என பற்றுள்ளவர்களாக வாழ வழிகாட்டுவதாகவும் சாரண அமைப்பு செயற் படுகின்றது.

**கந்தசாமி துற்ஜெயந்தன்**
உடற்கல்வி நெறி

சுதந்திரமானவான இரு, எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே, நான் உறுதியாகச் சொல்வேன், உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால், நீ வீணாக எப்போதும் மற்றவர்களிட மிருந்து உதவியைப்பெற முயற்சி செய்ததையும் அப்படி எதுவும் வராமற் போனதையும் தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள்ளிருந்தவையாகத்தான் இருக்கும்.

- சுவாமி விவேகானந்தர்

# HOW DOES NEWS PAPER READING HELP A TEACHER?

During the prevailing situation it is very important to know what's going on in the world. There are so many sources like television. Internet , etc... to know the situation of the world. Among those sources, News papers is one of the vital source. This source can be reached by all the level of the people those who are educated or un educated or rich or poor. Not only that it is the easiest way of transmitting. The importation to each and every corner.

We all have to induce the children to read newspaper. In order to get to know the situation of the world. They have to be updated with the fresh information since they are directly handled by the teachers by giving education, teachers is the one who has responsible to encourage them reading News paper. As a teacher, he/she should be aware of what's happening around us, then only he/she can deliver the information to the students. Teacher will sometimes not be able to access the internet, radio, television, but... the newspaper is the most available source to know the all kinds of news paper (political, General sports, weather forecast, specially education).

The teacher should know the fresh information by reading Newspaper to update the students. Beyond the giving educational syllabus, teachers can get more tips related to education like general knowledge, history and teach them to their students. And also the teacher is able to clear the students doubts. In case if a student asks any questions regarding general issues, it is a very easy tool to clarify the doubts.

The teacher receives the students from various cattergarry In that case the teacher should have broad knowledge of general issues other than the educational, scheme. Then only the students can properly be cleared by the teacher when any question from the students arrises there fore reading helps the teacher to have a broad knowledge with the updated. Information to guide and advise. The students to be have accordance with a present situation of the world.

**Mary Geetha Arulnathan**
*Primary - E*

# What is Life?

*Life is a challenge, meet it.*

*Life is a gift, accept it.*

*Life is an adventure, dare it.*

*Life is a sorrow, overcome it.*

*Life is a tragedy, face it*

*Life is a duty, perform it.*

*Life is a game, play it.*

*Life is a mystery, unfold it.*

*Life is a song, sing it.*

*Life is an opportunity, take it.*

*Life is a promise, fulfil it*

*Life is a journey, complete it.*

*Life is a love, enjoy it*

*Life is a spirit, realize it.*

*Life is a struggle, fight it.*

*Life is a puzzle, solve it.*

*Life is a goal, achieve it.*

# மன்ற அறிக்கைகள்

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை
# விரிவுரையாளர் கழக அறிக்கை

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திரு. வே. கா.கணபதிப்பிள்ளை (அதிபர்) |
| தலைவர் | : | திரு. வ.சி.குணசீலன் |
| உபதலைவர் | : | திரு. அ. பௌநந்தி |
| செயலாளர் | : | திரு. சி. குகன் |
| பொருளாளர் | : | செல்வி சி. ரஜீதா |

"WE CARE & SHARE FOREVER" என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு விரிவுரையாளர்களிடையே ஒத்துழைப்பு, கூட்டுறவு, நட்புரிமை பேணல், ஒவ்வொருவரும் சக விரிவுரையாளர்களின் நலன்களில் தனிப்பட்ட அக்கறை செலுத்தல் என்பவற்றின் மூலம் விரிவுரையாளர்களை ஒன்றிணைத்து மகிழ்ச்சிகரமான கலாசாலைக் குடும்பமாக இயங்க வேண்டும் என்ற நோக்கில் விரிவுரையாளர் கழகம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது.

அந்த வகையில் விரிவுரையாளர் ஒன்றுகூடல்களை ஒழுங்கமைத்தல், சக விரிவுரையாளர்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்கெடுத்தல், சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக ஆசிரியர் தினம் விரிவுரையாளர் கழகத்தால் கொண்டாடப்பட்டது. இத்தினத்தில் விரிவுரையாளர்கள் அனைவரினதும் பங்கேற்புடன் அரங்கேறிய பல்சுவைக் கதம்பநிகழ்ச்சி அனைவரினதும் பாராட்டைப் பெற்றது.

கலாசாலையில் இடம்பெறுகின்ற கருத்தரங்குகள், செயலமர்வுகளில் பங்கு பற்றும் வளவாளர்களுக்கு விரிவுரையாளர்களை அறிமுகப்படுத்தும் ஒன்று கூடல்களும் தவறாது இடம்பெறுகின்றமை யாவரும் அறிந்ததே. அந்த வகையில்

| | | |
|---|---|---|
| வைத்திய நிபுணர் | : | S. சியாமளன் அவர்கள், |
| மாவட்ட நீதிபதி | : | சி. கணேசராஜா அவர்கள், |
| சட்ட வைத்திய அதிகாரி | : | சி. சிவரூபன் அவர்கள், |
| வைத்திய நிபுணர் | : | S. சிறீகரன் அவர்கள், |
| அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் | : | S. ரவி அவர்கள் |

ஆகியோருக்கு எமது விரிவுரையாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

வாரத்தில் ஒருமுறையாவது விரிவுரையாளர்கள் ஒன்று கூடுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் விரிவுரையாளர்களிடையே ஆரோக்கியமான உறவு நீடித்து நிலைபெற உதவுகின்றது எனலாம். இந்த வகையில் எமது விரிவுரையாளர் கழகம் முன்மாதிரியாக நட்புறவுடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரிய மாணவர் மன்றம்

| | |
|---|---|
| பெருங்காப்பாளர் : | திரு. வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) |
| காப்பாளர் : | திரு. பொ. சற்குணநாதன் |
| தலைவர் : | திரு. சி. சிவரூபன் |
| தலைவி: | திருமதி சௌ. பத்மநிதி |
| செயலாளர்: | திரு. க. துற்ஜெயந்தன் |
| செயலாளர்: | திருமதி ஜெ. நிரஞ்சன் |
| உபதலைவர்: | திரு. ஆ. டேவிற்சன் |
| | திரு. கி. திருச்செல்வம் |
| உபதலைவி: | திருமதி. வி. வத்சலா |
| | திருமதி ஹெரால்ட் மேரிறோசா |
| பொருளாளர்: | திரு. சி. சிவகாந்தன் |
| அங்கத்தவர்கள்: | திரு. க. செல்வரத்தினம் (தமிழ்) |
| | திரு. சி. சிவதாஸ் (இந்துசமயம்) |
| | திரு. சி. ரஜனிகாந் (சமூகவிஞ்ஞானம்) |
| | திரு. P. சிறிசங்கர் (ஆ.க - E) |
| | திரு. சி. சத்தியகாந்தன் (சங்கீதம்) |
| | திருமதி அ. சசிகலா (மனைப்பொருளியல்) |
| | திருமதி ப. பாத்திமா பர்வின் (சித்திரம்) |
| | திருமதி பி. புஸ்பகுமாரி (நடனம்) |

ஆசிரிய மாணவர்களின் நலன் பேணும் வகையில் மன்றம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கு ஒத்துழைப்பு நல்கும் யாவருக்கும் எமது நன்றி.

எமது கலாசாலையின் மாணவர் மன்றமானது "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய ஆளுமைக் கூறுகளை மேம்படுத்துவதனூடாக உயர்வான ஒழுக்கமும் விழுமியமும் மிக்க ஆசிரியர் சமூகமொன்றை உருவாக்குவோம்" எனும் இலக்கை அடைந்து கொள்வதற்காக கீழ்வரும் குறிக்கோளுடன் இயங்குகின்றது.

* தலைமைத்துவப் பண்பையும் தலைமைத்துவத்திற்குப் பணிந்து செயலாற்றும் மனப்பாங்கையும் விருத்தி செய்தல்.
* வளாகச் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு தொடர்பான நேர் மனப்பாங்கை மேம்படுத்தல்.
* இணைப் பாட விதானச் செயற்பாடுகளில் மாணவர்களின் உயிர்ப்பான பங்குபற்றலை ஊக்குவித்தலும் ஒழுங்கமைத்தலும்.
* கலாசாலைக் கலைத்திட்ட அமுலாக்கத்தின் பங்குதாரர்களாதல்.
* மாணவர்களின் ஒழுக்கக் கோவை அமுலாக்கத்தில் உயிர்ப்பான பங்குபற்றல்.
* மாணவர்கள் அனுபவிக்கத்தக்க உரிமைகள் மற்றும் சலுகைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
* மாணவர்களின் சுக நலன்களிலும் இன்பதுன்பங்களிலும் அக்கறை கொள்ளல்.
* தொழில் வழியையும் ஆலோசனையும் பெற்றுக் கொடுத்தல்.
* வாண்மை விருத்திகளை சந்தர்ப்பங்களை உருவாக்கல்.
* நிறுவன கல்வி நடவடிக்கைகளை வினைதிறனாக்குவதில் பங்கெடுத்தல்.

இவற்றிற்குச் சான்றாக எமது தொழிற்படு காலத்தில் கீழ்வரும் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் அனைத்து ஆசிரிய மாணவர்களையும் பயனாளிகளைக் கொண்டு கருத்தமர்வுகள் நடாத்தப்பட்டன.

# கணித விஞ்ஞான மன்றம்

| | |
|---|---|
| பெருங்காப்பாளர் : | திரு. வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) |
| காப்பாளர் : | திரு. வ.சி. குணசீலன் (விரிவுரையாளர்) |
| தலைவர் : | திரு. சிவசாமி மகேஸ்வரன் |
| உப தலைவர் : | திரு. மனோகரன் அன்ரனிஸ்மித் |
| செயலாளர் : | திருமதி அருளரசி தயானந்தன் |
| உப செயலாளர்: | திரு. முத்தையா பிரியந்தன் |
| பொருளாளர் : | திரு. ஸ்ரீஜெகநாதன் ஸ்ரீபவான் |
| வகுப்பு உறுப்பினர் : | |
| கணிதம் : | திரு. கார்த்திகேசு சுதாகரன் |
| விஞ்ஞானம் : | திருமதி சிந்துஜா யூட்றொபேட்நேசன் |

எமது கலாசாலையின் கணித விஞ்ஞான மன்றமானது கணித, விஞ்ஞான ஆர்வலர்களையும் மனப்பாங்கையும் மேம்படுத்துவதனூடாக கணித விஞ்ஞான அறிவார்ந்த மாணவர் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவோம் எனும் இலக்கை

அடைந்து கொள்வதற்காக கீழ்வரும் குறிக்கோள்களுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

* கணித விஞ்ஞானத்தில் ஆர்வத்தை வளர்த்தல்.
* அண்மைக்கால கணித விஞ்ஞான வளர்ச்சியையும் விளைவுகளையும் அறியச் செய்தல்.
* போட்டி மனப்பான்மையை வளர்த்தல்.
* படைப்பாற்றலை ஏற்படுத்தல்.
* கணித விஞ்ஞான முறையில் பயிற்சி வழங்குதல்.
* கணித விஞ்ஞான மனப்பாங்கை வளர்த்தல்.
* புதிதாக ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் புத்தாக்க உத்வேகத்தை வளர்த்தல்.
* துணைக் கருவிகளைச் சுயமாக ஆக்கும் ஆற்றலை வளர்த்தல்.
* ஓய்வு நேர விஞ்ஞான விருப்பவேலைகளை வளர்த்தல்.
* நாளாந்த வாழ்க்கையில் தாம் கற்ற கணித விஞ்ஞான அனுபவங்களைப் பிரயோகிக்கும் அறிவை வளர்த்தல்.

| திகதி | வளவாளர் | கருத்தரங்குத் தலைப்பு |
|---|---|---|
| 25.09.2013 | வைத்திய கலாநிதி சச்சிதானந்தம் சியாமளன் | "குடும்ப சுகாதாரமும் பெண் நோயியலும்" |
| 07.11.2013 | வைத்திய நிபுணர் சி. ஸ்ரீகரன் | "நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு" |
| 14.11.2013 | சட்ட மருத்துவ அதிகாரி Dr. சின்னையா சிவரூபன் | "சூழலும் சவால்களும்" |

மாதாந்தக் கருத்தமர்வுகளுடன் கலாசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்தைப் பயனுறுதி வாய்ந்ததாக மாற்றியமைத்தல், மாதாந்தச் சிரமதான நிகழ்வு, வகுப்பறையைச் சூழ தோட்டமமைத்தல் போன்ற செயற்றிட்டங்களும் எமது மன்றத்தினால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

## சமூக விஞ்ஞான மன்றம்

எமது கலாசாலையின் சமூக விஞ்ஞான மன்றமானது 'உலகளாவிய ரீதியில் ஏற்படுகின்ற புதிய மாற்றத்தினை ஏற்றுக் கொள்ளலும் மரபு மற்றும் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாத்தலும் எனும் இலக்கை அடைந்து கொள்வதற்காக கீழ்வரும் குறிக்கோள்களுடன் செயற்பட்டு வருகின்றது.

* சமூக மயமாதல் திறன்களை விருத்தி செய்தல்.
* சவால்களுக்கு முகங்கொடுத்தலும் ஆக்கபூர்வமான பிரச்சினை தீர்த்தல் நுட்பங்களையும் பிரயோகித்தலும்.
* நேரிய மனப்பாங்கு மாற்றத்திற்கான உந்துதல்களை நடைமுறைச் சாத்தியமாக்குதல்.
* எதிர்காலச் சந்ததியினருக்கு ஒழுக்கம் மற்றும் விழுமியப் பண்புகளை கையளிப்புச் செய்தல்.
* சமாதான மற்றும் புரிந்துணர்வு எண்ணக்கருக்களை விருத்தி செய்தல்.

இவற்றிற்குச் சான்றாக எமது தொழிற்படு காலத்தில் கீழ்வரும் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

* சமூக விஞ்ஞானப் போட்டி
* உலக சிறுவர் தினம்
* உலக ஊழல் நாள்
* ஐ. நா. தினம்
* சர்வதேச பெண்கள் தினம்
* சமூக விஞ்ஞான வள நிலையம் அமைத்தல்
* கண்காட்சி

# உடலாளர் மன்றம்

| | |
|---|---|
| பெருங்காப்பாளர் : | திரு. வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) |
| காப்பாளர்கள்: | திருமதி சி. ராதாகிருஷ்ணன் |
| | திருமதி க. அன்பரசி |
| | திரு. பா. வாசுதேவன் |
| உடலாளர் மன்றத் தலைவர் : | திரு. க. மயில்வாகனம் |
| உப தலைவர் : | திருமதி டெய்சி சுவேந்திரகுமார் |
| இணைச் செயலாளர்கள்: | திரு. ம. விநோகாந்தன் |
| | திருமதி க. பரமேஸ்வரன் |

| | |
|---|---|
| மெய்வல்லுநர் தலைவர்: | திரு. சி. திருமாவளவன் |
| தலைவி: | திருமதி. ஜேன் பிரியதர்ஷினி தெய்வேந்திரராஜா |
| பொருளாளர்கள் : | திரு. T. G. செல்வரட்ணம் செல்வச்சந்திரன் |
| | திருமதி சகாயநேசன் பாலகௌரி |

**வகுப்புப் பிரதிநிதிகள்**

*01)* செல்வி தமிழ்ச்செல்வி மகாலிங்கம்
*02)* திருமதி முகுந்தன் கவிதா
*03)* திரு. ஐயாத்துரை சிவசங்கரலிங்கம்
*04)* திரு. இராசா கிருஸ்ணசேகரன்
*05)* திருமதி. லூட்ஸ்மரியா ஜென்சின்
*06)* செல்வி ஜெரோமியா ஜெகநாதன்
*07)* திருமதி சத்தியசீலன் கயல்விழி
*8)* திரு. றெஜினோல்ட் தேவசீலன்
*09)* திரு. தங்கராசா ஜெயகரன்
*10)* திருமதி அப்துல் சமது சம்சுல் பரீஹா
*11)* திரு. பாலசுந்தரம் சதீஸ்வரன்
*12)* திரு. நற்குணம் அகிலன்
*13)* திருமதி சுதாகர் ரேணுகா
*14)* திரு. சந்தானம் மோகன்ராஜ்
*15)* திரு. பொன்னுத்துரை ஜெகநேசன்

**விளையாட்டு நிகழ்வுகளுக்குப் பொறுப்பானவர்கள்**

| | |
|---|---|
| *1)* அணிநடை | : திரு. தம்பிநாயகம் நாகநாதன் |
| *2)* வீதியோட்டம் | : திரு. சங்கரப்பிள்ளை கருணாகரன் |
| | திரு. ஏகாம்பரநாதன் சிறிறங்கன் |
| *3)* காற்பந்தாட்டம் | : திரு. ஜேம்ஸ் யூட் நிரஞ்சன் |
| *4)* வலைப்பந்தாட்டம் | : திருமதி ஜேன் பிரியதர்ஷினி தெய்வேந்திரராஜா |
| *5)* கரப்பந்தாட்டம் | : திரு. சிவகுமார் திருமாவளவன் |
| | செல்வி செல்வராசா செல்வரதி |
| *6)* மேசை வரிப்பந்தாட்டம் | : திரு. கந்தையா மோகனராஜா |
| *7)* கிரிக்கெட் | : திரு. பாலசுந்தரம் சதீஸ்வரன் |

8) பூப்பந்தாட்டம் : திரு. இன்னாசிமுத்து அன்ரன் விமலதாஸ்
9) டெனிஸ் : திரு. கந்தசுவாமி துற்ஜெயந்தன்

2012 - 2014 கல்வியாண்டில் மாணவர்களின் உடற்திறனை மேம்படுத்து வதற்காகவும் அதனை வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றுவதற்குப் பின்வரும் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

1) மாணவர்களை இனங்காணல்
2) வீதியோட்டத்திற்கான மருத்துவ முகாம்
3) வீதியோட்டம்
4) மெய்வல்லுநர் போட்டி
5) உள்ளக விளையாட்டை மேம்படுத்தல்
6) பெருவிளையாட்டுப் போட்டி
7) தேசிய விளையாட்டில் பங்குபற்றல்
8) டெனிஸ் விளையாட்டை மேம்படுத்தல்
9) செயலமர்வுகள்

**1) மாணவர்களை இனங்காணல் :**

முதற் செயற்பாடாக வருகை தந்த அனைத்து மாணவர்களையும் இனங்காண்பதற் காக நான்கு பிரிவுகளாகப் பிரித்து **2012.09.11** ஆம் திகதியிலிருந்து **2012.09.28** வரை மெய்வல்லுநர் போட்டிகள் நடாத்தப்பட்டன.

**2) வீதியோட்ட மருத்துவமுகாம் :**

வீதியோட்டத்திற்கான மருத்துவ முகாம் **2013.01.16** ஆம் திகதி Dr. இ. பரமேஸ்வரன் அவர்களின் தலைமையில் 430 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை இடம் பெற்றது. இதன் மூலம் மேலதிக மருத்துவ உதவி தேவையான மாணவர்கள் இனங் காணப்பட்டமை விசேட அம்சமாகும்.

**3) வீதியோட்டம்:**

வீதியோட்ட நிகழ்வானது **2013.01.24** ஆம் திகதி **340** மாணவர்கள் பங்குபற்றினார் கள். இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக லயன்ஸ் வைத்திய கலாநிதி வை. தியாக ராஜா அவர்கள கலந்து சிறப்பித்தார்கள். அனைத்து மாணவர்களும் வீதியோட்டத் தைப் பூர்த்தி செய்தார்கள்.

**4) மெய்வல்லுநர் போட்டி :**

19.02.2013 ஆம் ஆண்டிற்கான மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியின் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. S. உதயகுமார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வானது நன்கு திட்டமிட்டு சிறந்த

முகாமைத்துவத்துடன் நடைபெற்றதாக தனது உரையில் தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது.

**5) உள்ளக விளையாட்டை மேம்படுத்தல்:**

உள்ள விளையாட்டை ஊக்குவிக்கும் முகமாக மேசைப்பந்தாட்ட கூடமானது 2013.05.06 ஆம் திகதியில் எமது கல்லூரி அதிபரால் திறந்து வைக்கப்பட்டது. உள்ளக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

**6) பெரு விளையாட்டுப் போட்டி:**

பெரு விளையாட்டுகளில் கரப்பந்து, வலைப்பந்து, கிரிக்கெட், காற்பந்து, எல்லே போன்றவை இல்ல ரீதியாக நடைபெற்றன.

**7) தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றல்:**

ஆசிரியருக்கான தேசியப் போட்டியில் ஆசிரிய மாணவர்கள் இரண்டு வருடங்கள் பங்கு பற்றி பெற்ற தங்கப் பதக்கங்கள் - 16, வெள்ளிப் பதக்கங்கள் - 20, வெண்கலப் பதக்கங்கள் - 16 பெற்றமை விசேடமான அம்சமாகும்.

**8) டெனிஸ் விளையாட்டை மேம்படுத்தல்:**

2013.12.05 ஆம் திகதி டெனிஸ் மைதானம் எமது கல்லூரி அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

**9) செயலமர்வுகள்:**

மெல்வல்லுநர் தொடர்பாக செயலமர்வு 08.01.2014இல் நடைபெற்றது. இச் செயலமர்விற்கு வளவாளராக செல்வி அ. ராதை அவர்கள் வருகை தந்தார்.

காற்பந்து தொடர்பான பயிற்சி முகாமானது 2014.01.16இல் விளையாட்டு அதிகாரியான திரு. பா. முகுந்தன் அவர்களினால் நடாத்தப்பட்டது. 2014.01.27 ஆம் திகதி டெனிஸ் தொடர்பான செயலமர்வு திரு. B. L. மோகனகுமார் அவர்களால் நடாத்தப்பட்டது.

# ஆரம்பக் கல்வி மன்றம்

| | |
|---|---|
| பெருங்காப்பாளர் : | திரு. வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) |
| காப்பாளர்: | செல்வி க. விக்னேஸ்வரி |
| துணைக்காப்பாளர்: | திருமதி. M.H.A. சஜீவனி |
| தலைவர் : | திரு. T. சகிலன் |

| | |
|---|---|
| உப தலைவர் : | திருமதி T. ஜேன் பிரியதர்ஷினி |
| செயலாளர்: | திருமதி. N. லிந்துஜா |
| உபசெயலாளர்: | திரு. S. சிவனேசன் |
| பொருளாளர் : | திரு. S. ஏகாச்சரம் |
| போட்டி இணைப்பாளர்: | திரு. S. சிவகாந்தன் |
| பத்திராதிபர்: | திருமதி. M. ஹலீமா |
| துணைப் பத்திராதிபர்: | திரு. S. மோகன்ராஜ் |

**வகுப்புப் பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| ஆரம்பக் கல்வி A | : திரு. N. பிரபாகரன் |
| ஆரம்பக் கல்வி B | : திருமதி K. நிருபா |
| ஆரம்பக் கல்வி C | : திரு. M. ஹலீமா |
| ஆரம்பக்கல்வி D | : திருமதி S. தர்சினி |
| ஆரம்பக்கல்வி E | : செல்வி A. ஜலீன்குருஸ் |
| தமிழ் | : திருமதி R. நந்தினி |
| உடற்கல்வி | : திரு. K. மோகன்ராஜ் |
| சமூகவிஞ்ஞானம் | : திருமதி R. வான்மதி |
| நுண்கலை | : திருமதி S. காந்திமதி |
| வர்த்தகம் | : திருமதி A. நளாயினி |
| கணித விஞ்ஞானம் | : திருமதி M. பிரியந்தன் |
| இந்துசமயம் | : திருமதி K. தாமரைச்செல்வி |
| கிறிஸ்தவம் | : திருமதி N. ஜெயசீலி |

எமது கலாசாலையின் ஆரம்பக்கல்வி மன்றமானது மாறும் உலகில் ஏற்படுகின்ற சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவையான உடல், உளம்சார் மனப்பாங்குத் திறன்களை இனங்கண்டு ஆளுமைத் திறன்களை மேம்படுத்துவோம் எனும் இலக்கை அடைந்து கொள்வதற்காக கீழ்வரும் குறிக்கோள்களுடன் செயற்பட்டு வருகின்றது.

* புத்தாக்கத் திறன்களை விருத்தி செய்தல்.
* அழகியல் உணர்வுகளையும் திறன்களையும் கற்றல், கற்பித்தலில் பிரயோகித்தல்.
* சூழலை இனங்கண்டு சூழல் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் திறனை விருத்தி செய்தல்.

* குழந்தைகளிடையே மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் சூழலைக் கட்டியெழுப்பல்.
* பிள்ளை நேய வகுப்பறையை உருவாக்கும் திறனை வளர்த்தல்.

இவற்றிற்குச் சான்றாக எமது தொழிற்படு காலத்தில் கீழ்வரும் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

எமது மன்றத்தினால் *2013.09.23* அன்று கழிவுப் பொருளினைக் கொண்டு குறித்த நேரத்தில் கைவினைப் பொருளினை ஆக்கும் போட்டி நிகழ்வும் *2013.09.14* அன்று ஆரம்ப நெறி மாணவர்களுக்கே உரிய ஐம்பது வினாக்கள் கொண்ட பொது அறிவுப் பரீட்சையும் இடம்பெற்றது.

*25.09.2013, 26.09.2013, 01.10.2013* ஆம் திகதிகளில் ஏனைய புத்தாக்கங்களை வெளிப் படுத்தும் போட்டிகள் இடம்பெற்றன. இப்போட்டிகள் யாவும் ஆரம்ப நெறியினர்க்குத் தனியாகவும், விசேட நெறியினர்க்குத் தனியாகவும் நடாத்தப்பட்டன. *03.10.2013* அன்று சஞ்சிகை ஆக்கமும் கணித விஞ்ஞான எண்ணக்கரு ஆக்க செயற்பாடுகளும் இடம்பெற்றன. *07.10.2013* அன்று ஆங்கில மொழிச் செயற்பாடுகளும் சிங்கள மொழிச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

போட்டிகளின்போது வெற்றி பெற்றோருக்குப் பல வகையான நூல்களும் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. *29.10.2013* அன்று நடாத்தப்பட்ட பொம்மலாட்ட நாடக விழாவிற்கு திரு. S. நந்தகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சிக் கல்வி வலயம்) அவர்களும், திரு. ம. இராஜேஸ்வரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி, வடக்கு மாகாணம்) அவர்களும் இனிய விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

*31.10.2013* அன்று நடைபெற்ற ஆரம்பக் கல்வி விழாவிற்கு திருமதி சுகந்தி செபஸ்ரியன் (உதவிச் செயலர், கல்விப் பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு) அவர்களும், அருட்சகோதரி ம. ஜீவந்தி (அதிபர், புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) அவர்களும் இனிய விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். *22.11.2013* அன்று ஆரம்பக் கல்வி மன்றத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட சிறுவர் நூல் வெளியீட்டு விழாவிலே திரு. M. S. பத்மநாதன் (அதிபர், வவுனியா வடக்கு, தமிழ் மத்திய மகா வித்தியாலயம், முன்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு வலயம்) அவர்கள் வருகை தந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிட்த்தக்க அம்சமாகும்.

# இந்துமா மன்றம்

| | |
|---|---|
| பெருங்காப்பாளர் : | திரு. வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) |
| காப்பாளர்: | திருமதி த. கோபாலகிருஷ்ணன் (விரிவுரையாளர்) |
| ஆலயப் பூசகர்கள் : | சிவத்திரு சி. ஸ்ரீக்குமார் (வர்த்தகம்) |
| | சிவத்திரு பா. உமாமகேஸ்வரன் (இந்துசமயம்) |

**இந்துமாமன்ற நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| தலைவர் : | திரு. தி. நடனசபை (இந்துசமய நெறி) |
| உப தலைவர் : | திரு. த. ஸ்ரீபவன் (கணித நெறி) |
| செயலாளர்: | திரு. த. கதிர்காமநாதன் (சித்திர நெறி) |
| உப செயலாளர்: | திருமதி பே. சுதாகரன் (ஆரம்பக் கல்வி A) |
| பொருளாளர் : | திரு. த. வித்தியானந்தன் (இந்துசமய நெறி) |

**வகுப்புரீதியான பிரதிநிதிகள் விபரம்**

| | |
|---|---|
| ஆரம்பக் கல்வி B | : திரு. செ. சபேசன் |
| ஆரம்பக் கல்வி C | : திரு. ச. நகுலேஸ்வரன் |
| ஆரம்பக் கல்வி D | : திருமதி. சு. அரவிந்தன் |
| ஆரம்பக்கல்வி E | : திருமதி றெ. வரதகிருஷ்ணராசா |
| உடற்கல்வி | : திரு. த. நாகநாதன் |
| தமிழ் | : திரு. ந. அகிலன் |
| சமூகவிஞ்ஞானம் | : திரு. யோ. அசோக்காந் |
| வர்த்தகம் | : திருமதி ந. அரவிந்தன் |
| சங்கீதம் | : திரு. சி. சத்தியகாந்தன் |
| நடனம் | : திருமதி ச. முரளீந்திரகுமார் |
| மனைப்பொருளியல் | : திருமதி ஸ்ரீ. ரவிச்சந்திரன் |
| கிறிஸ்தவம் | : திருமதி கூ. ஜெ. இ. அமலடன்ஸ்ரன் |

எமது கலாசாலையின் இந்து மாமன்றமானது சைவ சமய அறிவையும் விழுமியங் களையும் மேம்படுத்துவதனூடாக ஒழுக்கமுள்ள சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பு கிவோம் எனும் இலக்கை அடைந்து கொள்வதற்காக கீழ்வரும் குறிக்கோளுடன் செயற்படுகின்றது.

* ஆசிரிய மாணவர்களிடம் சைவ விழுமியங்களைப் பின்பற்றும் நேர் மனப் பான்மையை விருத்தி செய்தல்.
* பெற்றுக் கொண்ட சைவ சமய ஆற்றல்களையும் திறன்களையும் பாடசாலைக்கு எடுத்துச் சென்று நடைமுறைப்படுத்துவதனூடாக பாடசாலை மாணவர்களிடையே சைவசமய அறிவு, திறன் மனப்பாங்குகளை விருத்தி செய்தல்.
* கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்துவதனூடாக சமூக ஒழுக்கம் நெறியை விருத்தி செய்தல்.

இவற்றிற்குச் சான்றாக எமது தொழிற்படு காலத்தில் கீழ்வரும் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

1) நாளாந்தம் காலை இறைவழிபாட்டை மேற்கொள்ளலும், நற்சிந்தனை வழங்கலும் நிறைவேற்றப்பட்டன.
2) ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஆலய வழிபாட்டை நெறிப்படுத்தி நற்சிந்தனை வழங்குதல், திருமுறைப் பாடல்களை ஓதும் திறன் விருத்தி செயற்பாடு என்பன நிறைவேற்றப்பட்டன.
3) ஆண்டு தோறும் வழமையாக மேற்கொள்ளப்படுகின்ற நகுலேஸ்வர ஆலய 3ஆம் நாள் திருவிழா மேற்கொள்ளப்பட்டது. 2013.02.25
4) இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ 3ஆம் திருவிழா வழமைபோல நிறைவேற்றப்பட்டன. (23.05.2013)
5). வழமையாக திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு வழங்கப்படும் அன்னதான நிகழ்வுகளை அன்பளிப்பு வழங்கப்பட்டது.
6) இளவாலை க. சிவலோகமதி, (கனடா) அவர்களால் எழுதப்பட்ட "அருளாளர் தொண்டு" எனும் நூல் எமது மன்ற ஆதரவுடன் வெளியிடப்பட்டது. நூலாசிரியரும்/

யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத்தலைவர் திரு. வேதநாதன் அவர்களும் சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆசாரியர் ஜாக்கிர சைதன்ய சுவாமிகளும் இறைபணியின் பொருட்டு கௌரவிக்கப்பட்டனர்.

7) 2013.04.12 ஆம் திகதி மணிவாசகர் குருபூசை வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

8) இரு வருடங்களிலும் வாணி விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் எமது கலாசலையின் முன்னாள் பிரதி அதிபர் கலாநிதி செ. திரு நாவுக்கரசு அவர்கள் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டார். பல்வேற சைவப் பண்பாடு சார்ந்த போட்டிகளான மாலை கட்டுதல், பண்ணிசை ஓதல், சைவசமய அறிவுப் போட்டி என்பன நடாத்தப்பட்டு பரிசில்களும் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வைசப் பண்பாட்டை விருத்தி செய்வதற்காகன ஊக்கம் வழங்கப்பட்டன. பல்வேறு இயல், இசை, நாடக நிகழ்வுகளும் பயிற்றுவிக்கப்பட்டு நடாத்தப்பட்டன.

9) இரு வருடங்களும் பண்டிகைகள் தொடர்பான விழுமியப் பண்பை விருத்தி செய்யும் நோக்குடன், தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்புத் தினங்களில் விசேட வழிபாடுகளும் பொங்கலும் செய்யப்பட்டன.

# கிறிஸ்தவ மன்றம்

## நிர்வாக அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| பெருங்காப்பாளர் : | திரு. வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்) |
| காப்பாளர்: | திருமதி பயஸ் ரதி யுடெக்சியா பீரிஸ் |
| தலைவர் : | திரு. யேசுதாசன் தவக்குமார் |
| செயலாளர்: | திருமதி மேரிமக்டலின் அமலோற்பவதாஸ் |
| பொருளாளர்: | திரு. பரராஜசிங்கம் ஸ்ரீசங்கர் |
| உபதலைவர் : | செல்வி ஜெராலின் தனுசியா ஜோன்பிள்ளை |
| உபசெயலாளர் : | திரு. ஜேம்ஸ் யூட் நிரஞ்சன் |

**வகுப்புப் பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| ஆரம்பக் கல்வி A | : திரு. க. வாசுதேவன் |
| ஆரம்பக் கல்வி B | : திருமதி லூர்துமேரி ராஜ்மோகன் |
| ஆரம்பக் கல்வி C | : செல்வி காசினிதேவி நடராசா |
| ஆரம்பக்கல்வி D | : திருமதி கற்பக வதனம் எயுயீன் டி மசெனட் |
| ஆரம்பக்கல்வி E | : திருமதி A. யேசுநேசன் குரூஸ் |
| கிறிஸ்தவ பிரிவு | : திரு. அகுஸ்தீன் யஸ்ரீன் |
| சித்திரம் | : திரு. சூசைமுத்து பரஞ்சோதி |
| நடனம் | : செல்வி ஜெறோமியா ஜெகநாதன் |
| சங்கீதம் | : திருமதி கொலஸ்ரிக்கா கோபாலசிங்கம் |
| வர்த்தகம் | : திருமதி தர்சினி ஜெயவிந்தன் |
| உடற்கல்வி | : திரு. ஜெ. செ. செல்வச் சந்திரன் |
| சமூகவிஞ்ஞானம் | : திரு. ஜேம்ஸ் அன்ரன் லூர்ஜினோ |
| மனைப்பொருளியல் | : திருமதி மரியநீடா |
| தமிழ் | : திருமதி ஒகஸ்ரின் சத்தியசீலன் |
| இந்துசமயம் | : திருமதி யமுனா பகீரதன் |
| கணிதம், விஞ்ஞானம் | : திருமதி மேரிறோசா ஹெரால்ட் |

எமது கலாசாலையின் கிறிஸ்தவ மன்றமானது "அறிவுடன் சேர்ந்த ஆன்மீகத்தை விருத்தி செய்வதனூடாக ஒழுக்க விழுமியங்களைப் பேணி எதிர்காலச் சந்ததியினருக்கு அவற்றைக் கையளிப்போம்" எனும் இலக்கை அடைந்து கொள்வதற்காக கீழ்வரும் குறிக்கோளுடன் செயற்பட்டு வருகின்றது.

* கிறிஸ்தவ மனப்பான்மையை வளர்ப்பதன் மூலம் பல் சமய கலாசாரங்களை மதித்து பொருந்தி வாழக் கற்றல்.
* தாம் வாழும் சூழலில் மனித பண்பு, மனித நேயத்தை மதிக்கக் கற்றல்.
* சமய அனுஸ்டானங்களைப் பின்பற்றுவதன் மூலம் மாணவர்களிடையே பக்தி உணர்வைத் தூண்டுதல்.
* கலாசார செயற்பாடுகளினூடாக ஒன்றிணைப்பை ஏற்படுத்துதல்.

இவற்றிற்குச் சான்றாக எமது தொழிற்படு காலத்தில் கீழ்வரும் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

* வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் திருப்பலி வகுப்பு ரீதியாக நடாத்தல்.
* ஒளி விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடுதல். இதன்போது பின்வரும் போட்டிகள் நடாத்துதல்.

1. கவிதைப் போட்டி
2. ஓவியப்போட்டி
3. ஆக்கத்திறன் போட்டி
4. வினா விடைப்போட்டி

இதில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்குதல்.

* ஒளி விழா அன்று கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தல், கலை நிகழ்வுகள் நடாத்துதல்.
* சிற்றாலயத் திருவிழா கொண்டாடுதல்.
  1. நற்கருணை வழிபாடு
  2. குணமாக்கல் வழிபாடு
* தவக்காலத் தியானம் நடாத்துதல்
* யாத்திரை ஸ்தலங்கள் தரிசித்தல்
  1. பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயம்
  2. சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயம்
  3. வவுனியா கல்வாரி யாத்திரை ஸ்தலம்

மேற்படி செயற்றிட்டமிடல்களில் 2012.12.05 ஆம் ஆண்டிற்கான ஒளிவிழா மிகச் சிறப் பாகக் கொண்டாடப்பட்டது. கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ் வின் பிரதம விருந்தினராக புனித வளனார் சிறிய குருமட அதிபர், அருட்பணி செ. அன்புராசா omi அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

13.05.2013 அன்று பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை யாத்திரை ஸ்தலங் களுக்குச் சென்றோம். இந்நிகழ்வில் மன்றக் காப்பாளரும் 60 இற்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

27.10.2013 சிற்றாலயத் திருவிழா இடம்பெற்றது. இதில் அருட்பணி அ. அகஸ்ரின், அருட்பணி மௌலீஸ், அருட்பணி வென்சஸ்லஸ் omi, அருட்பணி சுமன் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

2013.12.05 ஆம் திகதி ஒளி விழா கொண்டாடப்பட்டது. அருட்பணி ஜெயந்தன் பக்சேக் omi, அருட்பணி ஜெறோம் omi, அருட்பணி அ. அகஸ்ரின், அருட்பணி வென்சஸ்லஸ் omi ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அருட்பணியான அ. அகஸ்ரின் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

* இவற்றைவிட மேலதிக செயற்பாடுகளாக யாழ். மறை மாவட்ட ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட தினத்திற்குச் சென்று வாழ்த்துப் பா வழங்கினோம்.

* யாழ். மறை மாவட்டத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட மறைக் கல்விப் பரீட்சை வினாத்தாள்கள் மதிப்பீடு செய்து உதவினோம்.

# வணிக மன்றம்

## நிர்வாக உறுப்பினர் விபரம்

| | |
|---|---|
| பெருங்காப்பாளர் : | திரு. வே. கா. கணபதிப்பிள்ளை (கலாசாலை அதிபர்) |
| காப்பாளர்: | திருமதி ச. றஞ்சித் (விரிவுரையாளர்) |
| தலைவர் : | திரு. சி. சிறிகுமார் |
| உபதலைவர்: | திருமதி ச. பாலகௌரி |
| செயலாளர்: | செல்வி ச. மேரி அனஸ்ரா |
| உப செயலாளர் : | திரு. சி. சிவகாந்தன் |
| பொருளாளர்: | திரு. பா. கிருஸ்ணரூபன் |
| பத்திரிகை ஆசிரியர்: | திரு. ச. றாஜ்குமார் |
| உறுப்பினர்கள் : | திரு. ந. நர்த்தனன் |
| | திரு. த. சுபாஸ் |
| | திருமதி. அ. நளாயினி |
| | திருமதி . ச. பாரதி |
| | செல்வி சோ. ரேணுகா |

**எமது மன்றம் பின்வரும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியவை.**

| | | | |
|---|---|---|---|
| **1. கருத்தமர்வு** | - | தலைப்பு | - **'பங்குச் சந்தை முதலீடு'** |
| | | திகதி | - 10.06.2013 |
| | | வளவாளர் | - திரு. மு. திலீபன்<br>முகாமையாளர்,<br>யாழ். மாவட்டக்கிளை,<br>கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் |
| **2. களகற்கை** | - | திகதி | - 11.11.2013 |
| | | விரிவுரையாளர் | - திருமதி. ச. றஞ்சித்<br>திரு. பா. வாசுதேவன் |

பார்வையிட்ட இடங்கள் - தொழிற்சாலைகள்
மத்திய வங்கிக் கிளை
முயற்சியாண்மைகள்
கோப்பாய் பிரதேச செயலகம்

3. கருத்தமர்வு - தலைப்பு - 'சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்போம்'
திகதி - 23.10.2013, 09.01.2014
வளவாளர்கள் - திரு. A. றெஸ்லின்
முகாமையாளர்,
யாழ். மாவட்டக் கிளை,
நாமல் கம்பனி.
- திரு. S. புவிறாஜ்
முகாமையாளர்,
யூனியன் வங்கி,
யாழ்ப்பாணம்.

4. கருத்தமர்வு - தலைப்பு - 'தரமான பொருட்களை நுகர்வதன் மூலம் ஆரோக்கிய வாழ்வைப் பெறுவோம்'
திகதி - 29.01.2014
வளவாளர்கள் - திரு. க. சத்தியகுமார்,
இணைப்பாளர்,
யாழ். சர்வோதயம்,
- திருமதி. ர. விமலா
தலைவர்,
சர்வோதய மகளிர் இயக்கம்,
கொழும்பு.
- திருமதி. சு. அன்னபூரணி,
பிரதான செயலாளர்,
சர்வோதய மகளிர் இயக்கம்.

எமது மன்றச் செயற்பாடுகளுக்கு வலுவூட்டிய அனைவருக்கும் நன்றி.

# முத்தமிழ் மன்றம்

## நிர்வாக அங்கத்தவர்கள்

**பெருங்காப்பாளர் :** திரு. வே. கா. கணபதிப்பிள்ளை (அதிபர்)
**காப்பாளர்:** திரு ச. லலீசன்
**துணைக்காப்பாளர்:** திரு. அ. பௌநந்தி
**தலைவர் :** திரு. கந்தசாமி சுதேஸ்

| | |
|---|---|
| **உபதலைவர்:** | திருமதி. மலர்மகள் யூட் |
| **செயலாளர்:** | திரு. இளையதம்பி ரமணன் |
| **உப செயலாளர்:** | திருமதி விஜயதர்சினி தயாளன் |
| **பொருளாளர்:** | திரு. பொன்னுத்துரை காண்டீபன் |

**வகுப்புப் பிரதிநிதிகள்:**

| | |
|---|---|
| கிறிஸ்தவம் | : திரு. கிருத்துவராஜா திவாகரன் |
| சித்திரம் | : திரு. பரஞ்சோதி சசிவண்ணன் |
